# தொல்காப்பியம்

## உரைவளம்

# சொல்லதிகாரம்

# உரியியல்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

பதிப்பாசிரியர்:

ஆ. சிவலிங்கனார்

# தொல்காப்பியம்-சொல்லதிகாரம்

## (உரைவளம்)

## உரியியல்

பதிப்பாசிரியர் :
ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
டி.டி.டி. ஐ., தரமணி, சென்னை—600 113.

தொல்காப்பிய உரைவள வெளியீட்டுத் திட்டம்
வெளியீடு. 19

## Bibiliographical Data

| | | |
|---|---|---|
| Title of the book | : | Tolkappiyam Uriyiyal |
| Author | : | A. SIVALINGANAR<br>International Institute of Tamil Studies,<br>T.T.T.I., Tharamani, Madras-600113. |
| Publisher | : | International Institute of Tamil Studies,<br>T.T.T.I., Tharamani, Madras-600 113. |
| Publication Number | : | 134 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | Oct, 1987 |
| Paper used | : | White Print 14.2 Kg. |
| Size of the book | : | 21×14cms. |
| Printing Type used | : | 10 Point |
| Number of Copies | : | 1200 |
| Number of Pages | : | xx+184 |
| Price | : | 20/- |
| Printers | : | Sri Gomathi Achagam,<br>41, Soorappa Mudali Street,<br>Triplicane, Madras-600005.<br>Phone . 844554 |
| Binding | : | Card board |
| Artist | : | Eswari |
| Subject | : | Grammar |
| Summary | : | Commentaries on Tolkappiyam Uriyiyal |

# பதிப்புரை

தொல்காப்பியச் சொல்லதிகார உரியியல் உரைவளம் என்னும் இந்நூல் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டத்தின் மூலம் வெளிவரும் 19ஆம் வெளியீடாகும்.

இதில் இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார் நச்சினார்க்கினியர் ஆகியோர் உரைகளும் வெள்ளை வாரணனார், ஆதித்தர் ஆகியோர் உரைகளில் தேவையான குறிப்புகளும் இக்கால அறிஞர் பெருமக்களின் கருத்துரைகளும் பதிப்பாசிரியர் கருத்துரைகளும் உள்ளன. டாக்டர் சி. இலக்குவனார், டாக்டர் தே.ஆல்பர்ட் ஆகியோரின் உரியியற் சூத்திரங்களுக்கான ஆங்கில மொழிபெயர்ப்புகளும் சேர்க்கப் பட்டுள்ளன.

நூல் வெளிவர உதவியவர்கள் டாக்டர் வை. இரத்தின சபாபதி, புலவர் க.வா.சச்சிதானந்தம்ஆகியோர். அச்சாகுங்கால் துணைபுரிந்தோர் டாக்டர் பூ. சுப்பிரமணியம்,நிறுவன டாக்டர் பட்ட ஆய்வாளர் திரு. பெ. அனந்தசயனம் ஆகியோர். இவர் தமக்கு யான் என்றென்றும் கடப்பாடுடையேன்.

உரைவள வெளியீட்டுத் திட்டத்தைத் தொடங்கி வைத்து என்னைத் தமிழுலகுக்குச் சிறப்பாக அறிமுகப் படுத்தியவரும் நிறுவன முன்னாள் இயக்குநரும் ஆம் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கட்குப் பெரிதும் நன்றியுடையேன்.

இந்நாள் இயக்குநர் டாக்டர் அ. நா. பெருமாள் அவர்கள், அத்திட்டத்தைத்தொடர்ந்து செயல்படுத்தி மேலும் சிறப்புச் செய்து வருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் பெருந் தன்மைக்கு என்றும் கடப்பாடுடையேன்.

நிறுவனத் தலைவரும் தமிழகக் கல்வி அமைச்சரும் ஆம் மாண்புமிகு சி. பொன்னையன் அவர்கட்கும் அழகுற அச்சிட் டுதவிய கோமதி அச்சக உரிமையாளர் சி. சரவணகுமார் அவர் கட்கும் நன்றி.

ஆ. சி.

சென்னை 20-10-87

டாக்டர் **அ. நா. பெருமாள்,**
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை—*113.*

# முன்னுரை

தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் இதுவரை 18 நூல்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் வெளிவந்துள்ளன. 'உரியியல்' என்ற இத்தொகுதி 19 ஆவது உரைவள நூலாக வெளிவருகிறது. இதனை நல்லறிஞர் ஆ. சிவலிங்கனார் சிறப்புறப் பதிப்பித்து விளக்க உரைகளுடன் தந்துள்ளார். அவருடைய பணி பாராட்டுதற்குரியது.

இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் போன்ற பழைய உரையாசிரியர்களின் விளக்கத்துடன் தற்கால அறிஞர்களான வெள்ளைவாரணர், சுப்பிரமணிய சாஸ்திரியார், அ. கு. ஆதித்தர், தே. ஆண்டியப்பன், தே. ஆல்பர்ட், வை. தங்கமணி, சி. இலக்குவனார் போன்ற பலருடைய விளக்கங்களையும் இணைத்து மிகச் சிறப்பாக இந்நூலைப் பதிப்பாசிரியர் உருவாக்கியுள்ளார். சில இடங்களில் தன்னுடைய சிந்தனைக் குறிப்புகளையும் தந்துள்ளார். பெரும் முயற்சியோடு இந்த உரைவளத்தை ஆக்கித் தந்த பதிப்பாசிரியரின் முயற்சியை நிறுவனம் சிறப்பாக மதிக்கிறது.

நிறுவனப் பணிகளுக்கு நல்ல ஆக்கமும், ஊக்கமும் தந்துதவும் மாண்புமிகு நிதியமைச்சர், டாக்டர், நாவலர். இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கும், மாண்புமிகு கல்வியமைச்சர் சி. பொன்னையன் அவர்கட்கும், தமிழ் வளர்ச்சி உயர் நிலைக்குழுத்தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கட்கும், நிர்வாகக் குழுத் தலைவர் டாக்டர் வ. செ. குழந்தைசாமி அவர்கட்கும், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறைச் செயலர் டாக்டர் அவ்வை நடராசன் அவர்கட்கும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் நிறைந்த நன்றியைச் செலுத்துகிறது.

நூலை அழகுற அச்சிட்டுதவிய ஸ்ரீ கோமதி அச்சக உரிமையாளர் சி. சரவணகுமார் அவர்கட்கும், நூலைப் பார்த்துக் கருத்துரை வழங்கிய அறிஞர் பெருமக்களுக்கும் நன்றி.

**அ. நா. பெருமாள்**
*12—10—1987*

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | iii |
| பதிப்புரை | iv |
| பொருளடக்கம் | v |
| System of Transliteration | vi |
| சுருக்க விளக்கம் | vii—viii |
| உரிச்சொல் | ix—xx |
| உரியியல் விளக்கம் | 1—6 |
| உரிச்சொற் பொது விலக்கணம் | 6—18 |
| பொருள் கூறப்படும் உரிச்சொற்கள் | 18—21 |
| உரிச்சொற்கள் (சூத்திரங்களும் விளக்கங்களும்) | 21—150 |
| உரிச்சொற்களுக்குப் புறனடை | 150—156 |
| பொருட்குப் பொருள்... | 156—159 |
| பொருட்குத்திரிபில்லை... | 159—162 |
| உணர்ச்சி வாயில்... | 162—163 |
| மொழிப் பொருட்காரணம்... | 163—166 |
| எழுத்துப்பிரிந்திசைத்தல்... | 166—169 |
| உரியியற் புறனடை | 169 —176 |
| பயன்படுத்தப் பெற்ற நூல்கள் | 177—178 |
| சூத்திர முதற்குறிப்பகராதி | 179—180 |
| சொல், தொடர் அகராதி | 181—183 |
| பிழை—திருத்தம் | 184 |

# SYSTEM OF TRANSLITERATION

## உயிரெழுத்துகள் — Vowels

அ — a
ஆ — ā
இ — i
ஈ — ī
உ — u
ஊ — ū
எ — e
ஏ — ē
ஐ — ai
ஒ — o
ஓ — ō
ஔ — au

## மெய்யெழுத்துகள் — Consonants

இலக்குவனார் & ஆல்பர்ட்

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| க்—k | ங்—ṅ | ய்—y |
| ச்—s | ஞ்—ñ | ர்—r |
| ட்—t(d) | ண்—ṇ | ல்—l |
| த்—th(t) | ந்—n | வ்—v |
| ப்—p | ம்—m | ழ்—ḻ |
| ற்—ṟ | ன்—ṉ | ள்—ḷ |

## சுருக்க விளக்கம்

அகம்—அகநானூறு
ஆதி—ஆதித்தர்
ஆ.மொ—ஆங்கில மொழிபெயர்ப்பு
இல—இலக்குவனர்
இல.வி—இலக்கணவிளக்கம்
இ.ள்—இதன் பொருள்
உ.ம்—உதாரணம்
உயிர்ம—உயிர்மயங்கியல்
எச்ச—எச்சவியல்
எ.டு—எடுத்துக்காட்டு
எழு, எழுத்—எழுத்ததிகாரம்
எ.று—என்றவாறு
ஐங்—ஐங்குறுநூறு
கலி—கலித்தொகை
களவழி—களவழிநாற்பது
கிளவி—கிளவியாக்கம்
குறுந்—குறுந்தொகை
குற்றி—குற்றியலுகரப்புணரியல்
குறள்—திருக்குறள்
சிலப்—சிலப்பதிகாரம்
சிவ—சிவலிங்கனார்
சிறுபாண்—சிறுபாணாற்றுப்படை
சீவக—சீவகசிந்தாமணி
சுப்—சுப்பிரமணிய சாஸ்திரியார்
சூ—சூத்திரம்
செய்—செய்யுளியல்
சொல்—சொல்லதிகாரம்
தொல்—தொல்காப்பியம்

தொன்—தொன்னூல் விளக்கம்
நச்—நச்சினார்க்கினியா
நற்—நற்றிணை
நன்—நன்னூல்
நா்லடி—நாலடியார்
நான்மணி—நான்மணிக்கடிகை
நூன்—நூன்மரபு
நேமி—நேமிநாதம்
பதிற்—பதிற்றுப்பத்து
பி.இ.நூ—பிற்கால இலக்கண நூல்கள
பி.கு—பிற்குறிப்பு
புணரி—புணரியல்
புள்ளி—புள்ளிமயங்கியல்
புறம்—புறநானூறு
பூவ—பூவராகம் பிள்ளை
பெய, பெயரி—பெயரியல்
பெரும்பாண்—பெரும்பாணாற்றுப்படை
பொருந—பொருநராற்றுப்படை
மலைபடு—மலைபடுகடாம்
முத்து—முத்துவீரியம்
வினை—வினையியல்
வீர—வீரசோழியம்
வெள்—வெள்ளைவாரணனார்
வேற்—வேற்றுமையியல்
வேற்.ம—வேற்றுமை மயங்கியல்

# உரிச்சொல்

(ஆ. சிவலிங்கனார்)

**உரிச்சொல்லின் பொது இலக்கணம் :-**

உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும்
பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்

என்பது உரிச்சொல் இயல்பு கூறும் தொல்காப்பிய உரியியற் சூத்திரம். இதன் கருத்து வருமாறு :

"உரிச்சொற்கள் என்பன இசை பண்பு குறிப்பு எனும் மூன்றனுள் ஒன்றன் அடிப்படையில் தோன்றும். பெயர்ச் சொல்லிலோ வினைச் சொல்லிலோ அல்லது இரண்டிலுமோ தம்வடிவம் திரிந்து வரும்; அல்லது திரியாமல் பெயரையோ வினையையோ அடைமொழியாகச் சார்ந்து வரும். ஒரு சொல் ஒரு பொருளுக்கோ பல பொருளுக்கோ உரிமையாக வரும். பல சொற்கள் ஒரு பொருளுக்கு உரிமையாக வருவதும் உண்டு. வெளிப்படையிற் பொருள் விளக்காமல் ஒரு சொல்லுடன் — பழகிய சொல்லுடன் சார்த்தப் பட்டே பொருளுணர வரும்" என்பதாம். இச்சூத்திரப் பொருளைக் கொண்டு உரிச்சொல் இலக்கணம் பற்றி உரையாளர்களும், ஆய்வாளர்களும் தத்தம் கருத்துக்‍கேற்றவாறு மாறுபடுகின்றனர். அவர்தம் மாறுபாடு களுள் உரிச்சொற் பெயர்க் காரணம் பற்றியும், உரிச்சொல் குறைச்சொல் எனக் குறிக்கப்படுவது பற்றியும், உரிச்சொல் சொற்பிறப்புக்குரிய வேர்ச்சொல்லாகுமா என்பது பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாம்.

---

* தமிழ்க்கல்வி இயக்கக் கட்டுரைகள் (பக்கம் 215-221)
உலகத்தமிழ்க் கல்வி இயக்கம்
33, திருமலை நகர் இணைப்பு
பெருங்குடி, சென்னை 600 096

**பெயர்க் காரணம் :**

பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் ஆகியவற்றுக்கு வழங்கற்பாடு பற்றி இடப்பட்ட பெயர் 'பெயர்ச்சொல்' எனப்பட்டது.

பொருளின் புடைபெயர்ச்சியைக் கூறும் சொல் 'வினைச் சொல்' எனப்பட்டது.

பெயர்ச்சொல் வினைச் சொற்களின் இடமாக வரும் சொல் 'இடைச்சொல்' எனப்பட்டது.

இவ்வாறு மூன்று சொற்களுக்குக் காரணம் கூறுவது போல, 'உரிச்சொல்' என்பதற்குக் காரணம் எளிதில் கூற இயலவில்லை. உரையாசிரியர்களும், ஆராய்ச்சியாளர்களும் அவரவர்க்குத் தோன்றிய காரணங்களைக் கூறினர். அவை வருமாறு :

1. உரிச்சொல்லாவது பொருட்கு உரிமைப்பட்டு நிற்பது- இளம்பூரணர்.
2. இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருட்குத் தாமே யுரியவாய் வருதலின் உரிச்சொல் - சேனாவரையர், நச்சினார்க்கினியர்.
3. ஒரு வாய்பாட்டாற் சொல்லப்படும் பொருட்குத் தானும் உரித்தாய் வருவது - தெய்வச்சிலையார்.
4. செய்யுட்கே யுரித்தாய் வருதலின் உரிச்சொல்–நன்னூல் உரைகாரர்கள்.
5. பெயர் வினைகளுக்கு உரித்தாய் வருதலின் உரிச்சொல்- சடகோபராமாநுசாசாரியர்.
6. பண்புக்கு உரிமை பூண்ட சொல் உரிச்சொல் சிவஞான முனிவர், வீரமாமுனிவர்.
7. உலக வழக்குப் பொருள் ஒன்றாக இருக்க இலக்கியக் கருத்தாக்கள் தனியுரிமையுடன் தரும் தனிப் பொருள் கொண்ட சொல் உரிச்சொல்–ஆதித்தர்.
8. சொல் பிறப்பதற்குரிய சொல் உரிச்சொல்- இலக்குவனார் முதலியோர்.
9. பொருட்கு உரிமைப் படுத்தப்பட்ட சொல் உரிச்சொல்- சிவலிங்கனார்.

**எது நன்று :–**

1. மேற் காட்டிய கருத்துகளுள் முதல் மூன்று கருத்துகளையும் பொருளுக்கு உரிமை பூண்டு வருவது உரிச்சொல் என்னும் கருத்தில் ஒன்றாகக் கொள்ளலாம். பொருள் என்பது ஒரு சொல் உணர்த்தும் பொருளைக் குறிக்கும் எனக் கொண்டனர் இளம்பூரணர் தெய்வச் சிலையார் ஆகியோர். சேனா

வரையரும் நச்சினார்க்கினியரும் ஒரு பொருளைக் குறிக்கும் ஒரு சொல். இசை.பண்பு குறிப்பு என்பவற்றுள் ஒன்றன் அடிப்படையில் அமைதலின் பொருள் என்பது இசை, குறிப்பு, பண்பு என்பனவற்றுள் ஒன்றைக் குறிக்கும் எனக் கொண்டனர். மிகுதி என்னும் பொருளை 'உறு' என்பது குறிக்கும் உரிமையுடைமையின் அவ்வுறு உரிச்சொல் என்பது இளம்பூரணர் கருத்து. உறு கால் என்புழிக் காற்றின் மிகுதியை 'உறு' என்பது குறிப்பால் உணர்த்துதலின் அது மிகுதிக் குறிப்புக்கு உரிமை பூண்டு உரிச்சொல் ஆயிற்று என்பது சேனாவரையர் போல்வார் கருத்து.

மிகுதி என்பது ஒரு சொல். அச்சொல் உணர்த்தும் பொருளை நாம் எளிதில் உணர்வோம். அம்மிகுதி என்னும் வாய்பட்டால் (சொல்லால்) உணர்த்தப்படும் பொருளுக்கு 'உறு' என்பதும் உரிமை பூண்டு நிற்றலின் அது உரிச்சொல் ஆயிற்று என்பது தெய்வச் சிலையார் கருத்து.

இளம்பூரணர் சேனாவரையர் தெய்வச் சிலையார் ஆகியோர் பொருள் என்பதை எவ்வாறு கருதினாலும் முடிவில் சொல்லால் உணர்த்தப்படும் பொருளையே சார்தலின் 'பொருட்கு உரிமை பூண்டு நிற்றலின் உரிச்சொல்லாயிற்று, என்னும் கருத்தில் மாறுபடவில்லை எனலாம். இக்கருத்து ஏற்புடையதே. ஆதித்தர் கருத்தும் இதுவே.

''பொருளுக்கு உரிமை பூண்டது என்ற கருத்தில் உரிச்சொல் என்ற பெயர் வந்துளது என்னலாம்'' என்று தெ.பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் கூறி, இலக்கணப் பொருள் அல்லாத பொதுப் பொருளை உடைத்தாகும் உரிமையே இங்குளது; எனவே இந்த நோக்கில் சொல்லின் கருவாக அமையும் அடிச் சொல்லையே உரிச்சொல் குறிக்கின்றது என்றும் கூறினார் அவர் பொருள் என்றது வேர்ச்சொற் பொருளையாம். (இலக்கண ஆய்வுக் கட்டுரைகள், பக் 122, 123)

2. செய்யுட் குரித்தாய் வருதலின் உரிச்சொல் எனப் பட்டது என்னும் காரணம் ஏற்புடையதாகுமா என்பதைப் பார்ப்போம்.

செய்யுட்குரிய சொற்களாகத் தமிழ் இயற் சொல் தமிழ்த் திரிசொல், திசைச் சொல், வட சொல் என நான்கு கூறினார் தொல்காப்பியர். அவற்றுள் தமிழ் இயற் சொற்கள் வழக்கிலும் செய்யுளிலும் வருவன. மற்றையன வழக்கில் இல்லாதன; அல்லது அரிதாக வருவன. தமிழ்த் திரிசொற்கள் புலவரால் திரித்துக் கொள்ளப் படுவன. இயற்சொல்லையே திரித்துக் கொள்வர். திரித்துக் கொள்வது செய்யுளில் ஆளவேண்டி

யாதலின் திரிசொற்கள் செய்யுளுக்கே யுரிமையுடையனவாம் அதனால் அத்திரி சொற்களையும் உரிச்சொற்கள் என்னல் வேண்டும்;என்னாமையின் செய்யுட்கு உரிமை பூணும் காரணம் காட்டி உரிச்சொல் என ஒரு பிரிவைக் கூறவேண்டுவதில்லை. அன்றியும் உரிச்சொற்களும் உலக வழக்கில் வட்டார வழக்காக ஆங்காங்கே காணப்படுதலும் உண்டு. கடி என்னும் உரிச்சொல் விரைவுப்பொருளில் 'கடிய வா' என்பது போலும் தொடர்களில் செங்கல்பட்டு, வடார்க்காடு, தென்னார்க்காடு, சென்னை மாவட்டங்களில் ஆளப்படுகின்றது காணலாம்.

நன்னூலார், 'செய்யுட்குரியன வுரிச்சொல்' (நன். 442) என்றார். அதற்குச் சங்கர நமச்சிவாயர், 'செய்யுட்குரியவாய்ப் பொருட்கு உரிமை பூண்டு வருவன உரிச்சொல்லாம்'' என்று உரையெழுதினார். இவ்வுரையால் இவர் தடுமாற்றம் புரி கின்றது. ஆனால் இவரே பின்னர் ''செய்யுட்குரியனவாதலின் இவற்றிற்கு உரிச்சொல் எனக் காரணக்குறி போந்தது என்ப தூஉம்... உணர்த்தியவாறு'' என எழுதினார். இதனால் பொருட்கு உரிமை என்பதினும் செய்யுட்குரிமை என்பதே சங்கர நமச்சிவாயர் கொண்டனரோ எனக் கருத வேண்டி யுளது.

> பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
> ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர் வினை
> ஒருவா செய்யுட் குரியன உரிச்சொல் (நன் 442)

என்னும் நன்னூற் சூத்திரத்தில் 'செய்யுட் குரியன உரிச்சொல், என்பதை மட்டும் கொண்டு யாவரும் உரிச்சொற் காரணம் கூறினர்.பல்வகைப் பண்பும் பகர்பெயராகி உரியன உரிச்சொல்; ஒரு குணம் பல குணம் தழுவியுரியன உரிச் சொல்; பெயர் வினை ஒருவா உரியன உரிச்சொல்; செய்யுட்குரியன உரிச்சொல் எனத் தனித்தனிக் கூட்டி உரிச்சொல் இலக்கணம் காண்போமாயின், கூறப்பட்ட யாவற்றுக்கும் உரிமை பூண்டன உரிச்சொல் எனக் கொள்ளலாம். அதனால் செய்யுட்கே யுரிமை பூண்ட காரணம் மட்டும் கூறுவது பொருந்தாது. நன்னூலார் கருத்தும் 'செய்யுட் குரிமை பூண்ட காரணத்தால் உரிச்சொல் லாயிற்று என்பதன்று' என்னலாம.

3. 'பெயர் வினைகளுக்கு உரித்தாய் வருதலின் உரிச்சொல் ஆயிற்று' என்னும் கொள்கையும் ஏற்புடைத் தன்று.

இடைச் சொற்களும் பெயர் வினைகளுக்குரியனவே.''பெயர் வினைகளின் பண்பையுணர்த்தி அவற்றுக்கு உரிமை பூண்டு நிற்பதால் உரிச்சொல் எனக் காரணப் பெயர் பெற்றது'' (முதற் சூத்திர விருத்தி) எனச் சிவஞான முனிவர் கூறுவது ஓரளவுக்கே

பொருத்தம். செய்யுளுக்கும் பொருளுக்கும் உரிமை பூண்டிருப்பதைத் தள்ள இயலாது. நன்னூலார் 'பல் வகைப் பண்பும் பகர் பெயர் ஆகி' என்றமையாலும், 'பெயர்வினை ஒருவா' என்றமையாலும் அவர்க்கு, உரிச்சொல் பெயரேயாம் என்பதும், அது பெயரிலும் வினையிலும் வரும் என்பதும் கருத்தாதலின், உரிமை,பெயர்க்கா பெயர் வினைகளுக்கா என்பதில் தடுமாற்றம் ஏற்படுகின்றது. தொல்காப்பியர் உரிச்சொல் பெயராகும் எனக் கூறவில்லை. பெயரிலும் வினையிலும் தடுமாறும் எனக் கூறினார் (உரி. 1). அவர் இரண்டில் ஒன்றற்கோ இரண்டுக்குமோ உரிமைப்படுத்திக் கூறவில்லை.

4. பண்புக்கு உரிமை பூண்ட சொல் உரிச்சொல். இக் கருத்தும் ஏற்பதற் கில்லை. பண்புக்கு உரிமை பூண்ட சொல் பெயர்ச் சொல். பண்பு என்பது பொருட் பண்பும் தொழிற் பண்பும் குறிக்கும். அதனால் 'பல்வகைப் பண்பும்' என்றார் நன்னூலார். அப்பண்புகளைக் குறிக்கும் சொற்கள் பெயர்ச் சொற்கள் எனவே படும். அதனால் நன்னூலார் பல்வகைப் பண்பும் பகர் பெயராகி வரும் உரிச்சொல் என்றார். பண்பை யுணர்த்தும் சொல் பண்புப் பெயர்ச் சொல் எனப்படுமே யன்றி உரிச்சொல் எனப்படாது.

5. "உலக வழக்குப் பொருள் ஒன்றாயிருக்க இலக்கியக் கருத்தாக்கள் தனியுரிமையுடன் தரும் தனிப் பொருள் கொண்ட சொல் உரிச்சொல்" என ஆதித்தர் கூறுவதும் (தொல். சொல். உரி-1. ஆதித்தியம்) ஏற்க இயலாது. அவர் தரும் உதாரணம் 'உரு' என்பது உலக வழக்கில் உருவம் எனப் பொருள்பட, அதனைப் புலவர் உட்கு (அச்சம்) என்ற பொருளில் தம் தனியுரிமையால் ஆண்டனர் என்பது. தொல்காப்பிய உரியியற் சூத்திரங்களில் வந்துள்ள உரிச்சொற்களுக்கு அவ்வாறு உலக வழக்குப் பொருளும் புலவரின் தனியுரிமைப் பொருளும் உதாரணங்களாகக் காட்டிய அவர், சில சொற்களுக்கு உலக வழக்குப் பொருள்கள் வலிந்து காட்டுவதும், சில சொற்களுக்குக் காட்டாமலே போவதும் காணலாம். 'உறு' எனும் சொல் 'உற்றான்' என்னும்போது வினைச்சொல் முதல் நிலையாகும். 'உறுகால்' என்னும்போது உரிச்சொல் ஆகும், எழுத்து வடிவில் உறு என இருந்தாலும் பொருளளவில் வினைச் சொல்லாகவும், உரிச்சொல்லாகவும் வேறுபடுதலின் தனித்தனிச் சொற்களாகவே கொள்ளல் வேண்டும்.

6. சொல் பிறப்பதற்குரிய சொல் உரிச்சொல் என்னும் கருத்துக்கேற்பு "உரிச்சொல் என்பன வினையும் வினைக்குறிப்பு

மாகிய சொற்களுக்கெல்லாம் பகுதியாகிய வேர்ச் சொற்கள்'' என்பர் வெள்ளை வாரணனார். (தொல்காப்பியம்-பக். 6ü)

உரிச்சொல்லின் தோற்றம் இசை, குறிப்பு, பண்பு என்னும் மூன்றளவில்தான் அமையும் என்பதைத் தொல்காப்பியர்''இசை யினும் பண்பினும் குறிப்பினும் தோன்றி'' என்பதால் தெளிவு படுத்திவிட்டார். அன்றியும் பெயரினும் வினையினும் மெய் தடுமாறும் என்றும் கூறினார். எனவே இசை பண்பு குறிப்பை விட்டு வெளிப்படையில் பொருள் தருவன பெயரும் வினையும் என அறியலாம்.அதனால் பெயர்வினை வேறு உரிச்சொல் வேறு என்பதும் புலப்படும். உரிச்சொல் என்பது தனிச்சொல் என்பதால்தான் பெயரினும் வினையினும் சார்த்தல்வேண்டிற்று.

'பொன்னன்' என்பது பொன்னையுடையவன் என்னும் பொருளில் வரும்போது குறிப்பு வினையாகும். அதன் பகுதி பொன் என்பது. பொன் என்பதிலிருந்து பொன்னன் என்பது உருப்பெற்றது. அதனால் பொன் உரிச்சொல் ஆகுமா? அது பொருட் பெயர்ச் சொல் அன்றோ? அது இசை, பண்பு, குறிப்பு என்னும் மூன்றனுள் எதில் அடங்கும்?

7. பொருட்கு உரிமைப் படுத்தப்பட்ட சொல் உரிச்சொல் லாம் என்பதே நன்று என்னும் கொள்கைக்கு யான்தரும் விளக்கம் வருமாறு:

யாப்பிலக்கணத்தில் மாச்சீர், விளச்சீர்கள் ஆசிரியப்பாவிற் கும் காய்ச்சீர்கள் வெண்பாவிற்கும், கனிச்சீர்கள் வஞ்சிப் பாவிற்கும் உரிமைப் படுத்தப்பட்டு முறையே ஆசிரிய வுரிச்சீர், வெண்பாவுரிச்சீர், வஞ்சியுரிச்சீர் எனப்பட்டன. உரிமைப் படுத்தப்பட்ட சீர் உரிச்சீராயிற்று

அகப் பாடல்களில் திணையுணர்தற்கு முதற் பொருள்,கருப் பொருள், உரிப்பொருள் என மூன்றுள்ளன. முதலிரண்டும் திணை மயங்கியும் வருவன. ஆனால் உரிப்பொருள் திணை மயங்குதல் இல்லை. அதனால் திணையுணர்தற்குப் பாடலின் கருத்துப் பொருளே உரிமைப் படுத்தப்பட்டது. அதனால் கருத்துப் பொருள் உரிப் பொருள் எனப்பட்டது.

உரிச்சீர், உரிப்பொருள் போலவே உரிச்சொல் என்பதற்கும் காரணம் காணுதல் வேண்டும். பெயர்ச் சொல்லும், வினைச் சொல்லும் தெளிவாகப் பொருள் தருவன-உரிச்சொல் தெளி வாகப் பொருள் தருவதில்லை. அதனால் அதனைப் பொருளுக்கு உரியதாக்குதல் வேண்டும. அதனைப் பெயரிலோ வினையிலோ சார்த்தி—அல்லது பெயர் போலவோ வினை போலவோ திரித்துப் பொருளுக்கு உரிமைப்படுத்தல் வேண்டும். அப்படி உரிமைப் படுத்தப்படும் சொற்களே உரிச்சொற்களாம். எனவே, ''உரிச்

சொல்லாவது பெயர்ப்பொருளுக்கு அல்லது வினைப்பொருளுக்கு உரிமைப் படுத்தப்படுஞ் சொல்''என்பதாம்.

**உரிச்சொல் குறைச்சொல் — காரணம்:-**

தொல்காப்பியர் 'குறைச்சொல்' என்னும் தொடரை இரண்டிடங்களில் ஆள்கிறார். ஓரிடத்தில் 'குறைந்த சொல்' எனத் தன்வினைப் பொருளிலும் (செய்வினையிலும்) (எழுத்து-குற்றிய 77). பிறிதோரிடத்துக் 'குறைக்கும் சொல்' எனப் பிறவினைப் பொருளிலும் (செயப்பாட்டு வினையிலும்) (தொல். சொல். எச்ச. 57) ஆண்டுள்ளார்.

தன்வினை — செய்வினைப் பொருளில் ஆளப்பட்ட 'குறைச் சொல்' என்பது உரிச்சொல்லைத்தான் குறிக்கும் என்பதை, ''குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி நெறிப்பட வாராக் குறைச்சொல்'' (குற்றிய. 77) எனக் கூறியவாறே, உரியியல் முதற் சூத்திரத்திலும் ''உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை இசையினுங் குறிப்பினும் பண்பினும் தோன்றி'' வரும் என்றமையால் அறியலாம்.

இனி, உரிச்சொல்லைக் 'குறைச்சொல்' என்றது ஏன் எனக் காண்போம்.

'நெறிப்பட வாராக் குறைச்சொல்' என்றதனால், நெறிப்பட வாராமையே குறை' என்னலாம். நெறிப்பட வாராமையாவது உயிரீற்றுச் சொல்லா மெய்யீற்றுச் சொல்லா என அறிய முடியாதபடி வருவது என நச்சினார்க்கினியர் கருதினார். குறைச் சொல் என்பதற்குச் சொல் தன்மை குறைந்த சொல் என்றார். அவர் கூற்று:-

''கன் விண்ண வினைத்தது, விண் வினைத்தது — இவை குறிப்புரிச்சொல்;

ஆடை வெள்ள விளர்ந்தது, வெள் விளர்ந்தது — இவை பண்புரிச்சொல்;

கடல் ஒல்ல ஒலித்தது — ஒல் ஒலித்தது — இவை இசையுரிச் சொல். இவை உயிரீறாயும், புள்ளியீறாயும் நிற்றலான் ஒன்றன்கண் அடங்காமையின் நெறிப்பட வாரா என்றார். விண்ண வினைத்தது — தெறிப்புத் தோன்றத் தெறித்தது என்றும் விண் வினைத்தது — தெறிப்புத் தெறித்தது என்றும் ஆம். இங்ஙனம் நிற்றலின் தன்மை குறைந்த சொல்லாயிற்று.'' உரியியல் 1 உரை)

இக்கூற்றிலிருந்து தெறிப்பை யுணர்த்துஞ் சொல் 'விண்ண' வெனும் உயிரீற்றுச் சொல்லா, 'விண்' எனும் மெய்யீற்றுச் சொல்லா என அறிய முடியா நிலைமையில் சொல் தன்மை

குறைந்த காரணததால் குறைச்சொல் என உரிச்சொற்குப் பெய ராயிற்று என்பது புலப்படும்.

உரு,[3] உறு, தவ முதலிய உயிரீற்றுச் சொற்களும், பேண், வியல், கமம், வாள் முதலிய மெய்யீற்றுச் சொற்களும் ஈற்றுத் தெளிவுடையன வாதலின் அவை குறைச் சொல் எனப்படா. அதனால் நச்சினார்க்கினியர் கருத்து சிறவாது.

இனிக் குறைச் சொற் காரணம் பின் வருமாறு காணலாம். இருதிணை ஐம்பாற் பெயர்களை அவற்றின் ன், ள், ர், து, அ முதலிய இறுதி எழுத்துக்களால் உணர முடியும். பொருளிடம் காலம் சினை குணம் தொழிற் பெயர்களை இறுதி எழுத்துக் களா லன்றி வெளிப்படைப் பொருள்களால் உணர முடியும். ஆனால் உரு, கலி, ஒற்கம் முதலிய சொற்கள் பெயர்ப் பொருள் களைத் தந்தாலும் ஈற்றெழுத்துகளாலோ வெளிப்படைப் பொருள்களாலோ பெயர்ச் சொல் என அறிய முடியவில்லை, அதனால் அவற்றைப் பெயர்ச்சொல் என்பதற்கில்லை. நம்பு, படர், புலம்பு போலும் சொற்கள் வினைப்பொருள் தருவது. ஆனால் இருதிணை ஐம்பால் உணர்த்தும் வினையிறுதி எழுத்து கள் (ன், ள், ர், து, அ) இன்மையாலும் வெளிப்படையாகவும் வினைப் பொருள் உணர்த்தாமையாலும் அவற்றை வினைச் சொற்கள் என்பதற் கில்லை. எனவே பெயரிலும் வினையிலும் சேராக்குறை அவற்றுக்குண்டு. எனவேதான் உரிச்சொல் குறைச்சொல் எனப்பட்டது.

**உரிச்சொல் வேர்ச்சொல்லா?**

பெயர் வினைகளின் வேர்ச்சொற்களே உரிச்சொற்கள் என்பர் தெ. பொ. மீ. போல்வார். (இலக்கண ஆய்வுக் கட்டுரை பக். 123). "உரிச்சொற்களையெல்லாம் வேர்ச்சொற்கள் என்றோ வினை வேர்கள் என்றோ கூறுதல்பொருந்தாது" என்பர் மோ. இசரயேல் (இடையும் உரியும் பக்.123). தெய்வச்சிலையார் உரிச்சொற்களைத் தாது என்று கூறியது முதலாமவர்க்கு உறு துணை. ஆசிரியர் தொல்காப்பியர்க்கு, வேர்ச்சொற்களே உரிச் சொற்கள் என்னும் கருத்தில்லை என்பதை அவர் உரிச்சொற் களைக் கூறிய வகைகளால் அறியலாம்.

பெயர்ப் படுத்தியோ, வினைப்படுத்தியோ அறிய முடியாத தவ, நனி, ஏ, மழ, குழ போலும் சொற்களையும், பகுதி விகுதி களாகப் பிரித்துக் காணக் கூடிய கூர்ப்பு, கழிவு, வார்தல் போலும் சொற்களையும், 'நிழத்த யானை' எனப் பெயரெச்ச மாகத் திரித்தற் கேற்ற தாயினும் பெயரெச்ச உருபாகிய 'அ' என்பதை நீக்கின் பகுதியை இனனதென வரையறுக்க இயலாத 'நிழத்தல்' என்னும் சொல்லையும், தொழிற் பெயராகப்

படர்தல் எனவும் வினைமுற்றாகப் படர்ந்தான் எனவும் எச்சங்களாகப் படர்ந்த, படர்ந்து எனவும் சொற்களை ஆக்கிக் கோடற்குரிய பகுதியாக வரும் 'படர்' போலும் சொற்களையும், உடன் பாட்டுச் சொல் இல்லாத எய்யாமை எனும் எதிர்மறைச் சொல்லையும், மறுதலைச் சொல் இல்லா நன்று எனும் சொல்லையும் ஆசிரியர் வேர்ச்சொல் நிலையில் கூறாமல் பல வாய்பாடுகளில் கூறியிருத்தலால் அவர் கருத்து வேர்ச்சொல் ஆகாது என்பதை அறியலாம். இலம்பாடு என்பது உரிச்சொல் (உரி. 62) என்ற ஆசிரியர் அதனை 'இலமென் கிளவிக்குப் படு வரு காலை' (புள்ளி மயங்கியல். 21) எனப் புணர்ச்சி விதி கூறியதாலும் நாம் நன்கு அறியலாம்.

**தொகுப்புரை:**

இதுகாறும் கூறியவற்றிலிருந்து தெரிய வருவன:

1. உரிச்சொல் என்பதன் பெயர்க் காரணம் பலவாறாகக் கூறப்படினும் பொருளுக்கு உரிமைப் படுத்தப்படுதலின் உரிச்சொல் என்பதே சிறக்கும்.
2. பெயரினும் வினையினும் சேராக் குறைபாடுகாரணமாக உரிச்சொல் குறைச்சொல் எனப்படும்.
3. உரிச்சொல் என்பது பெயர்ச் சொல். வினைச் சொற்களின் வேர்ச்சொல் அன்று.

**உரிச்சொற் பொருள் உணருமாறு**

பெயர்ச்சொல் என்பது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்களுள் ஒன்றனை யுணர்த்துவது; ஆதலின் பொருள் வெளிப்படையில் விளங்குவது. திரிசொல் ஆயினும் அரிதுணர் பொருளதாய்ப் புலப்படும்; அதாவது பொருள் இடம் முதலியவற்றுள் ஒன்றைப் புலப்படுத்தும்.

வினைச்சொல் என்பது பொருளின் புடைபெயர்ச்சியாதலின் காலத்தைக் கொண்டதாய்ப் பொருளைப் புலப்படுத்தும்.

இடைச்சொல் தனக்கெனப் பொருளுடையதன்று; பெயர் வினைகளின் பொருள் புலப்பாட்டுக்குத் துணைபுரிவது.

உரிச்சொல்லானது பொருள் இடம் முதலியவற்றை அல்லது அவற்றின் புடைபெயர்ச்சியை யுணர்த்துவதன்று; இசை, பண்பு, குறிப்பு என்னும் இவற்றுள் ஒன்று பற்றித் தோன்றுவது; தோன்றிய பின்னர்ப் பெயராகவோ வினையாகவோ மாற்றம் பெறுவது; அதனால் அதன் பொருள் இன்னதென்று வெளிப்படையிற் புலனாவ தில்லை. அப்படியானால் உரிச்சொற் பொருள் உணருமாறு யாங்ஙனம்?

உரிச்சொல் இசை, பண்பு, குறிப்பு என்பனவற்றுள் ஒன்றன் அடிப்படையிற்றோன்றுவதாதலின் அஃது உணர்த்தும் பொருளும் அம் மூன்றனுள் ஒன்றாகவே அமையும். 'உறு' எனும் உரிச்சொல் உணர்த்தும் பொருள் 'மிகுதி' என்பது. மிகுதி என்பது இன்னது எனக் காட்ட இயலாதது; மனத்தால் குறித்து உணரப்படுவது. 'மல்லல்' என்னும் உரிச்சொல் 'வளம்' என்னும் பொருள் தருவது. 'வளம்' என்பதும் இன்னது எனக் காட்ட இயலாதது; மனத்தாற் குறித்து உணரப்படுவது. 'இரங்கல்' என்னும் உரிச்சொல் 'ஒலி' என்னும் பொருள் தருவது. 'ஒலி' என்பது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்பனவற்றுள் அடங்காதது; தொழிற்பண்பில் நாம் அடக்க லாம்; அவ்வளவே. 'இரங்கல்' என்பது வருந்துதல் என்னும் பொருட்கும் உரியது. வருத்தம் உள்ளத்தைப் பொறுத்த பண்பு; உள்ளத்தால் குறித்து உணரப்படுவது. இப்படியே பிற உரிச் சொற்களுக்கும் கொள்க.

உரிச்சொற்கள் வெளிப்படையாகப் பொருள் உணர்த் துவன, வெளிப்படையாகப் பொருள் உணர்த்தாதன என இருவகைப்படும். மிகுதி, வளம் முதலியன வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும் உரிச்சொற்கள். உறு, மல்லல் முதலியன வெளிப்படையாகப் பொருள் உணர்த்தாதன. ஆசிரியர் தொல்காப்பியர் வெளிப்படையிற் பொருள் உணர்த்துவன வற்றை விட்டு வெளிப்படையிற் பொருள் உணர்த்தாத 120 சொற்களுக்கு உலகவழக்கு செய்யுள் வழக்கு ஆகியவற்றைக் கொண்டு பொருள் உணர்த்தினார். எனினும் எல்லாச் சொற்கும் உணர்த்தினாரில்லை. அதை அவரே புறனடைச் சூத்திரத்திற் கூறியுள்ளார். (உரியியல்95). அப்படிப் பொருள் உணர்த்தாத சொற்களுக்குப் பொருள் உணருமாறு யாங்ஙனம் என்பதை ஆசிரியர், உரிச்சொற்கள் வந்துள்ள இடங்களில் முன்னும் பின்னும் உள்ள சொற்களைக் கொண்டு உணர வேண்டும் என்றார் (உரி. 92) உதாரணமாகப் 'புரை' என்னும் உரிச்சொல்லை எடுத்துக் கொள்வோம். 'புரை' என்பது 'உயர்வு' என்னும் பொருள் தரும் என்றார் ஆசிரியர் (4). அப்பொருளில் 'புரைபட வந்த மறுத்தல்' (களவியல் 16) என அவரே ஆண்டுள்ளார். ஆனால், 'புரைதீர் கிளவி தாயிடைப் படுப்பினும்' (களவியல் 23) என்னுமிடத்தில் அப்பொருளில் ஆளவில்லை. அவர்; 'குற்றம்' என்னும் பொருளில் ஆண்டுள் ளார். ஆசிரியர் தாம் உரிச்சொற் பொருள் உணர்த்திய இடத்திற்கூறாத பொருளைத் தாமே யாண்டு தம் புறனடைச் சூத்திரத்துக்கு (உரி. 92) உதாரணம் உடம்பொடு புணர்த்தலால் அமைத்தார்.

தாம் உரியியலில் எடுத்து மொழியாத உரிச்சொல்லையும் உரியியற் சூத்திரம் ஒன்றில் ஆண்டுள்ளார். அச் சூத்திரம் 'மொழிப்பொருட்காரணம் விழிப்பத் தோன்றா' (உரி. 97) என்பது. அதில் 'விழிப்ப' என்பது 'விளக்கம்' என்னும் பொருள் தருவதாம். காரணம், தோன்றா என்பன வந்தன கொண்டு 'விழிப்ப' என்பதற்கு 'விளங்க' என்னும் பொருள் கொள்ள நேர்ந்தது.

### பொதுமையே தனியுரிமை

பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களுக்கும் பொதுவான சில கருத்துகள் உரிச்சொற்களுக்குச் சிறப்பாக அமைவனவாகும். அதனால் பொதுமைக் கருத்துகள் உரிச்சொற்களுக்குத் தனியுரிமைக் கருத்துகளாகும் என்னலாம்.

உரிச்சொல் ஒன்றற்குப் பொருள்கூறின் அப்பொருட்குப் பொருள் யாது என வினவின் அதற்குப் பொருள் கூற இயலாது; கூறினும் அதற்குப் பொருள் யாது என இப்படியே செல்லும். ஆதலின் பொருட்குப் பொருள் தெரிய எண்ணினால் அதற்கு வரம்பு இராது. 'உறு' என்னும் சொற்குப் பொருள் 'மிகுதி' என்பது. 'மிகுதி' என்பதன் பொருள் யாது எனின் கூற இயலாது. இக்கருத்து பெயர்வினைச் சொற்களுக்கும் பொருந்தும். அதனால், 'பொருட்குப் பொருள் தெரியின் அது வரம்பின்று '(உரி. 93)' என்னும் கருத்து நால்வகைச் சொற்களுக்கும் பொதுமைக் கருததே.

ஒரு சொற்குப் பொருள் கூறுமிடத்து விளங்கும்படிக் கூறினால் கேட்போனுக்கு மயக்கம் இராது. அப்படித் தெளிவாகக் கூறல் வேண்டும் (உரி. 96) 'கடி' என்னும் சொல் பல பொருள் தருவது. 'கடிநகர்' என்றவிடத்தில் பலபொருள்களுள் 'காவல்' என்னும் பொருளே பொருந்தும் என்பதை விளக்கினால் — அதாவது கூர்மை, அச்சம், விரைவு முதலிய பொருள்கள் பொருந்தாமல் காவல் என்னும் பொருளே பொருந்தும் என்பதை விளக்கினால் கேட்போன் நன்கு விளங்கிக் கொள்வான். எனவே கேட்போன் உணருவது சொல்வோன் உணர்த்தும் திறமையைப் பொறுத்தது. (உரி. 94) இக்கருத்தும் நால்வகைச் சொற்களுக்கும் பொருந்தும் பொதுமைக் கருத்தே. ஆனால், இயற்சொற்களாகிய பெயர் வினைகளுக்குப் பெரும் பாலும் வழக்குச் சொற்களானமையால் பொருள் உணர்த்தல் வேண்டிய இன்றியமையாமையில்லை. ஆனால் உரிச்சொற்கள் இசை, பண்பு குறிப்புப் பற்றியனவாதலின் எளிதிற் பொருள் உணரப் படாமையின் இன்ன சொல் இன்ன பொருள்தரும்

என்று கூறல் வேண்டும். அப்பொருளும் இசை, பண்பு, குறிப்புப் பற்றியமைதலின் சொல்வோன் விளங்கக் கூறல் வேண்டும். ஆதலின் இப்பொதுமைக் கருத்தும் உரிச்சொற்களுக்குத் தனியுரிமைக் கருத்தாகும்.

சொல்லுக்குரிய பொருளை ஒருவன் சொல்லும்போது கேட்போன் உணரும் ஆற்றல் உள்ளவனாயின் உணர்வான். சொல்வோன் எவ்வளவுதான் ஆற்றலுடன் சொன்னாலும் கேட்போன் உணரும் ஆற்றல் இலனாயின் பயன் இல்லை. (உரி.95) இக்கருத்தும் பொதுமையானதாயினும் மேலே கூறியது போன்று உரிச்சொற்களுக்குத் தனியுரிமைக் கருத்தாகும்.

பெயர்வினைச் சொற்களுக்குப் பெரும்பாலும் காரணம் தோன்றும்; இடுகுறிப் பெயராயின் காரணம் தோன்றாது. அதனால் ஒவ்வொரு சொற்கும் பொருட்காரணம் காண்போமாயின் விளங்காது. (உரி.96) இக்கருத்தும் பொதுமைக் கருத்தே. எனினும் உரிச்சொற்களுள் யாதொன்றற்கும் பொருட்காரணம் காண இயலாது. ஆதலின் இக்கருத்தும் உரிச்சொற்களுக்குச் சிறப்பானதாகும். மேலும் இடுகுறி காரணப்பெயர் வினைகளன்றிப் பொருள் இடம் காலம் முதலியவற்றாற் தோன்றும் பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களும் எழுத்துகளைப் பிரித்துக் காணுதற்குரியன. ஆனால் உரிச்சொற்களுள் எதுவும் எழுத்துகளைப் பிரித்துக் காணற்கு இயலாது. (உரி.97)

எனவே நால்வகைச் சொற்களுக்கும் உரிய பொதுமைக் கருத்துகளே உரிச்சொற்களுக்குத் தனியுரிமைக் கருத்துகளாம் என்னலாம்

# தொல்காப்பியம்—சொல்லதிகாரம்

## (உரைவளம்)

### *உரியியல்

#### இளம்பூரணர்

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், உரிச்சொல் உணர்த்தினமையின் உரிச்சொல் ஒத்து என்னும் பெயர்த்து.

#### சேனாவரையர்

நிறுத்த முறையானே உரிச்சொல்லுணர்த்திய வெடுத்துக் கொண்டார்; அதனான் இவ்வோத்து உரியியல் என்னும் பெயர்த்தாயிற்று.

தமக்கியல்பில்லா விடைச்சொற்போலாது இசை, குறிப்பு, பண்பென்னும் பொருட்குத தாமே யுரியவாதலின் உரிச்சொல் லாயிற்று. பெரும்பானமையும் செய்யுட்குரியவாய் வருதலின் உரிச்சொல்லாயிற்றென்பாருமுளர்.

#### தெய்வச்சிலையார்

இவ்வோதது என்ன பெயர்த்தோ வெனின், உரிச்சொல் ஒத்து என்னும் பெயர்த்து; உரிச்சொல் உணர்த்தினமையாற் பெற்ற பெயர்.

உரிச்சொல் என்பது யாதோவெனின், ஒருவாய்பாட்டாற் சொல்லப்படும் பொருட்குத் தானும் உரித்தாகி வருவது. அதனா னேயன்றே, ஒருசொற் பலபொருட்குரிமை தோன்றினும், பல சொல் ஒருபொருட்குரிமை தோன்றினும் என ஓதுவாராயினர்.

---

* உரிச்சொல்லியல்—பாடம். (நச்.)

எழுத்ததிகாரத்துள் இதனைக் 'குறைச்சொற்கிளவி' என்று ஓதினமையால் வடநூலாசிரியர் தாது என்று குறிப்பிட்ட சொற்களே இவையென்று கொள்ளப்படும்; அவையும் குறைச்சொல்லாதலான்.

அஃதேல் தொழிற்பொருண்மை யுணர்த்துவன வெல்லாம் இதனுள் ஓதினாரோவெனின், வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா, வெளிப்பட வாரா உரிச்சொல்மேன (உரி. 2) என்றாராகலின், வழக்கின்கட்பயிற்சி இல்லாத சொற்கள் ஈண்டு எடுத்து ஓதப்படுகின்றன என்க.

தொழிலாவது வினையும் வினைக்குறிப்பு மாதலின், அவ்விரு வகைச் சொற்கும் அங்கமாகி வெளிப்படாதன ஈண்டுக் கூறப்படுகின்றன.

## நச்சினார்க்கினியர்

இது தமக்கியல்பில்லா இடைச்சொற்போலாது இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருட்கு உரியவாய் வருதலின் 'உரிச் சொல்லோத்து' என்னும் பெயர்த்தாயிற்று. ஈறுபற்றிப் பலபொருள் விளக்கலும் உருபேற்றலும் இன்றிப் பெயரையும் வினையையுஞ் சார்ந்து பொருட்குணத்தை விளக்கலின் உரிச் சொல், பெயரின் வேறென்றுணர்க.

## வெள்ளைவாரணனார்

உரிச்சொற்களின் இலக்கணம் உணர்த்தினமையால் இஃது உரியியல் என்னும் பெயர்த்தாயிற்று. இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருளையுடையவாகிப் பெயர் வினைகளைப் போன்றும் அவற்றிற்கு முதனிலையாகியும் வருவன உரிச்சொற்களாம்.

............... ............... ...............

இவ்வியலிலுள்ள சூத்திரங்களை 99 ஆக இளம்பூரணரும், 100 ஆகச் சேனாவரையரும் தெய்வச்சிலையாரும், 98 ஆக நச்சினார்க்கினியரும் பகுத்து உரை கூறியுள்ளார்கள். இவ்வியல் முதற்சூத்திரத்தால் உரிச்சொற்கு இலக்கணம் உணர்த்திய தொல்காப்பியர், உரிச்சொற்களின் பொருளை யுணருங்கால் அவை பெயரும் வினையும் போல ஈறுபற்றி உணர்தலாகாமையின் பொருள் வெளிப்படாத உரிச்சொற்கள் பொருள் வெளிப்பட்ட சொல்லோடு சார்த்தி அச்சொற்களையே எடுத்தோதி ஈண்டுப்பொருள் உணர்த்தப்படும் என இவ்வியல் இரண்

டாஞ் சூத்திரத்துத் தோற்றுவாய் செய்து கொண்டு,இவ்வியலில் 3 முதல் 91 வரையுள்ள சூத்திரங்களால் 'உறு' என்பது முதல் 'எறுழ்' என்பதீறாக நூற்றிருபது உரிச்சொற்களை எடுத் தோதிப் பொருளுணர்த்துகின்றார். 92 முதலாக இவ்வியலின் பின்னுள்ள சூத்திரங்களால் உரிச்சொற்களின் பொருளுணரு முறையும் பொருளுணர்த்து முறையும் முதலாயின உணர்த்தப் பெறுகின்றன.

## ஆதித்தர்

உரிச்சொல் பற்றிச் சொல்லும் இயல் உரியியல். உரிச்சொல் லாவது என்னை? தனியுரிமை பெற்ற சொற்கள். என்ன தனி யுரிமை? விளக்குதும்.

சொற்கள் பெயர் வினை என இருவகைப்படும் அவற்றோடு இடம் பெற்றுப் பொருள் தரும் சொல் இடைச்சொல் எனப்படு கிறது. பெயர் வினை இடை மூன்றும் இன்றி, மொட்டை மரம போல நிற்கும் சொற்கள் சில தெளிவான பொருளுடையன. ஆனால் முடிந்த பொருளுடையனவல்ல. ஆயினும் தனிச் சொல் லாகக் கருதப்படுகின்றன. இஃது அவற்றின் தனிச்சிறப்பு; தனி யுரிமை. இவ்வுரிமையால் அவை உரிச்சொல் என்று பெயர் பெற்றன.

எறுழ், கதழ், கமம், கய, குழ, கெழு, தட , துய, துனை, நளி, நனி, பணை, புனிறு, பேம், மல்லல், மழ, முழு, யாணர், யாண், வய, வியல்—இவை பெயர்ச்சொற்களோ? அல்ல. இவற்றுக்குப் பொருள் உண்டோ? உண்டு. அஃதே இவற்றின் தனியுரிமை, இவை பெயர்ச்சொல் வினைச் சொற்களுக்கு அடைமொழியாக நிற்கும் தனிச்சொற்கள். இது ஒரு தனியுரிமை.

இன்னும் கூறுவாம்.

| சொல் | | வெளிப்படைப் பொருள் | | இலக்கிய உரிமைப் பொருள் |
|---|---|---|---|---|
| அமர் | — | உட்கார் | — | மேவுவது |
| அரி | — | கத்தியால் அரி | — | மெல்லிய |
| உசா | — | வினாவு | — | சூழ்ச்சி |
| உறு | — | சேர்க | — | மிக்க |
| கடி | — | வாயால்கடி | — | காவலுற்ற |
| கவவு | — | வளைத்துப்பிடி | — | மேலிட்ட |
| கழி | — | நீக்கு | — | மிகுந்த |

இவ்வாறு உலகவழக்குப் பொருள் ஒன்றிருக்க, இலக்கியக் கருத்தாக்கள் தனியுரிமையுடன் தரும் தனிப்பொருள் கொண்ட சொல் உரிச்சொல். உரிச்சொற்களை இரு விதமாகப் பிரிக்கலாம். 1. அடைமொழி 2. நடைமுறை. அடைமொழி, நடைமுறை உரிமை கொண்ட சொற்களை ஆசிரியர்விளக்குமுறையை இனிக் காண்பாம்.

## தே. ஆண்டியப்பன்

தொல்காப்பியர் உரிச்சொல்லை அறிமுகப்படுத்துவதின் நோக்கம் வேறு என்பதைப் பெயரியல் அமைப்பால் அறியலாம். பெயர் வினை இரண்டையும் திணை அடிப்படையில் பாகுபடுத்துவதை இங்கு நினைவுபடுத்திக் கொள்வது நல்லது.

> **உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே**
> **அஃறிணை யென்மனார் அவரல பிறவே**
> **ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே**

என்று சொற்கள் இருதிணைவழி ஐம்பாலாக இசைப்பதைக் கூறுகிறார். அப்போது வினையில் தோன்றும் பாலறி கிளவியும் பெயரில் தோன்றும் பாலறி கிளவியும் மயங்கல் கூடா மரபின என்பதை எடுத்துரைத்துச் சொற்றொடரில் பால் இட திணை இயைபு இருக்க வேண்டிய அவசியத்தை நினைவுபடுத்துகிறார். எனவேதான் பெயர்வினை இரண்டையும் உயர்திணைக்குரியன, அஃறிணைக்குரியன, ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமைய என்று மூவகைப்படுத்தினார்.

உயர்திணை என்றாலும் அஃறிணை யென்றாலும் சுட்டிக் காட்டப் பெறும் பொருள் (+Concrete) ஆகும். குணப்பண்பும் தொழிற்பண்பும் சுட்ட இயலாதவை. (—Concrete) ஆதலின் இத்திணைப்பாகுபாட்டில் அடங்குவதில்லை. மரம் செடி கொடி மண் வலை மனிதன் என்பனவற்றை நாம் சுட்டி யுணர்த்துவது போல், அன்பு தனிமை கறுப்பு புதுமை முதலிய பண்புப் பெயர்களையும், வார்தல் ஒழுகல் தீர்த்தல் தீர்தல் முதலிய தொழிற் பெயர்களையும் சுட்டி உணர்த்த இயலாது. அதனால் திணை அடிப்படையில் விளக்க இயலாது போயிற்று. தனியியல் ஒன்று தேவைப்பட்டுவிடுகின்றது. (காப்பியர் நெறி—சொல்லியல். பக். 122. முத்துப் பதிப்பகம், மதுரை. 1977.)

## வை. தங்கமணி

பொருளைக் குறிப்பதால் பெயர். தொழிலைக் குறிப்பதால் வினை. பெயர் வினைகளின் இடையில் வருவதால் இடை.

சார்ந்துள்ள சொல்லின் பொருள் சிறப்படைய முழு உரிமையை ஏற்று உயர்வடையச் செய்வதால் உரிச்சொல்.

பெயர் வினை என்ற சொற்களில் எச்சொல்லைச் சார்ந்துளதோ அச்சொல்லுக்கு முன்பின் ஏதாவது ஓர் இடத்தில் நின்று இசைப் பொருள், குறிப்புப்பொருள், பண்புப் பொருள் என்ற இடப் பொருட்களுள் ஏதானும் ஒரு பொருள் தர ஏனை சொற்களைவிட சார்ந்துள்ள சொற்களுக்கு உரியதாய் அமைவதால உரிச்சொல்லாயிற்று.*

## சிவலிங்கனார்

யாப்பிலக்கணத்தில் மாச்சீர், விளச்சீர் எனும் ஈரசைச் சீர்கள் ஆசிரியப்பாவுக்கு உரிமைப்படுத்தப்பட்டு ஆசிரியவுரிச் சீர் எனப்பட்டன. காய்ச்சீர் வெண்பாவுக்கு உரிமைப்படுத்தப் பட்டு வெண்பாவுரிச்சீர் எனப்பட்டது. கனிச்சீர் வஞ்சிப்பா வுக்குரிமைப் படுத்தப்பட்டு வஞ்சியுரிச்சீர் எனப்பட்டது. (கலிப்பாவுக்கு என உரிய சீர் இல்லை.) பாக்களுக்கு உரிமைப் படுத்தப்பட்ட காரணத்தால் உரிச்சீர் எனப்பட்டன.

அகப்பாடல்களில் முதற் பொருள், கருப்பொருள், உரிப் பொருள் என மூன்று பொருள்கள் உண்டு ஓர் அகப்பாடலை இது எத்திணையைச் சாரும் என அறிதற்கு அவை துணை புரியும். முதற்பொருள் கருப்பொருள்களைக் கொண்டு இன்ன திணை என ஒரு பாடலைக் கூறமுடியும் என்றாலும் அப்பாட லில் வரும் பொருள் (கருத்து) கொண்டே இன்ன திணை என வரையறுக்கப்படும். ஏன் எனின் முதற்பொருளோ கருப் பொருளோ இல்லாமல் வரும் பாடலையும் அதன் கருத்துப் பொருள் கொண்டு இன்ன திணை என வரையறுக்கலாம். அன்றியும், 'உரிப்பொருளல்லன மயங்கவும் பெறும்.' (தொல் பொருள். அக 13) எனவே திணை வரையறைக்குக் கருத்துப் பொருளே உரிமையாக்கப் பட்டது. அதனால் கருத்துப் பொருள் உரிப்பொருள் எனப்பட்டது

உரிச்சீர் உரிப்பொருள் போலவே உரிச்சொல்லுக்கும் காரணம் காணுதல் வேண்டும். பெயர்ச்சொல்லும் வினைச் சொல்லும் தெளிவாகப் பொருள் தருவன. உரிச்சொல்

---

* எனக்கு, டாக்டர் அ. நா. பெருமாள் மூலம் அனுப்பி வைத்த உரிச்சொல் பற்றிய கட்டுரையில் உள்ள விளக்கம் இது.

தெளிவுப் பொருள் தருவதில்லை. அதனால் அதனைப் பொருளுக்கு உரியதாக்குதல் வேண்டும். அப்போது, அதனைப் பெயரிலோ வினையிலோ சார்த்தி — அல்லது பெயர்போலவோ வினைபோலவோ திரித்துப் பொருளுக்கு உரிமைப்படுத்தல் வேண்டும். அப்படி உரிமைப் படுத்தப்படும் சொற்களே உரிச்சொற்களாம். எனவே உரிச்சொல்லாவது பெயர்ப்பொருளுக்கோ வினைப் பொருளுக்கோ உரிமைப்படுத்தப்படும் சொல் என்பதாம். ஆசிரியரும் 'பெயரினும் வினையினும் மெய் தடுமாறிப் பொருளுக்கு உரிமை தோன்றினும்' எனப் பொருளுக்குரிமை தோன்றுவது உரிச்சொல் என்றார் என்க. பொருளுக்கு உரிமைப்படுத்தியவற்றை 'உறுதவ நனியென வரூஉம் மூன்றும் மிகுதி செய்யும் பொருளஎன்ப (உரி. 3) என்னும் சூத்திர முதலாயினவற்றிற் காண்க. *

## உரிச்சொற் பொதுவிலக்கணம்

292. உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
யிசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்
பெயரினும் வினையினு மெய்தடு மாறி
யொருசொற் பல்பொருட் குரிமை தோன்றினும்
பலசொல் லொருபொருட் குரிமை தோன்றினும்
பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்த மரபின் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல் (1)

*(உரிச்சொல் கிளவி விரிக்கும் காலை*
*இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்*
*பெயரினும் வினையினும் மெய்தடு மாறி*
*ஒருசொல் பல்பொருட்கு உரிமை தோன்றினும்*
*பலசொல் ஒரு பொருட்கு உரிமை தோன்றினும்*
*பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்*
*தம்தம் மரபின் சென்றுநிலை மருங்கின்*
*எச்சொல் ஆயினும் பொருள்வேறு கிளத்தல்.)*

### ஆங்கில மொழி பெயர்ப்பு

**இலக்குவனார் :**

If 'uriccol' is defined, it will be found to have originated from sound, suggestion and quality. Its form may be changed

---

* *தமிழ்க் கல்வி இயக்கக் கட்டுரைகள்*
தொகுப்பு : ஆவுடை நாயகம், உலகத்தமிழ்க் கல்வி இயக்கம், தமிழூர் 627808 (1986)

into noun or verb. Though either one word stands for many senses or many words stand for one sense the unused word being combined with that which is often used, each in its traditional form, which ever the word may be it will denote its own sense.

### டாக்டர் D. ஆல்பர்ட்

Description of a free morpheme. It takes its origen from sound, appelation and attributes. As noun and as verb it gives different meanings. Though one word claims a number oe meanings and number of words claim one meaning, if a morf frequently used word is added to it in the place of a less frequently used one in the accepted way then every word will show its specific meaning.

### பிற்கால இலக்கண நூல்கள்

**நேமிநாதம் : 55**

ஒண்பேர் வினையோடும் தோன்றி உரிச்சொல் இசை
பண்பு குறிப்பாற் பரந்தியலும் — எண்சேர்
பலசொல் ஒருபொருட் கேற்றும் ஒரு சொல்தான்
பலபொருட் கேற்றவும் பட்டு.

**நன்னூல் : 442**

பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணம் தழுவிய பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்

**பிரயோக விவேகம் : 18**

மண்டலத்துப் பதினெண் தேசிகச்சொல் வடசொலெனப்
பண்டை வழக்கொரு பாராட் டுரிச்சொல் பலபொருட்கே
ஒண்டொடியாய் பின்ஒரு மொழியாய் மற்றொரு
பொருட்கே
கொண்டியல் பன்மொழியாய் சத்தியாற்றலும்
கொண்டெழுமே.

**இலக்கண விளக்கம் : 280**

குறிப்பும் பண்பும் இசையும் தோற்றிப்
பெயரும் வினையும் போன்றவை யிரண்டற்கும்
அடியு மாகி அவற் றேற் புழி நின்று
ஒரு பொருட் குரிமையும் பலபொருட் குரிமையும்
உடைய வாகி உணரா தவற்றை
உணர்ந்தவை சார்த்தி உணர்வன உரிச்சொல்.

**தொன்னூல் விளக்கம் : 138**

உரிச்சொல் என்ப உரியியல் குணசொல்
லாகிப் பெயர்வினை இணைந்து வருமே.

**முத்துவீரியம். ஒழிபியல். 26**

உரிச்சொற் கிளவிவை விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
ஒருசொல் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும்
பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்.

## இளம்பூரணர்

என்பது சூத்திரம். இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், உரிச்சொற்கெல்லாம் பொதுவாயதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

உரை : உரிச்சொற்கள் தோன்றுமிடத்து இசையும் குறிப்பும் பண்பும் பற்றிப் பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் சென்று பொருள்களை விளக்கும், என்றவாறு.

மெய் என்பது பொருள்; தடுமாறுதல் என்பது பெயர் பற்றியும் வினைபற்றியும் வரும் வரவினை நோக்கி; அவ்வாறு தடுமாறுங்கால் ஒரு சொல் பல் பொருட்கு உரிமைப்பட்டுத் தடுமாறுதலும், பலசொல் ஒருபொருட்கு உரிமைப்பட்டுத் தடுமாறுதலும் உடைய. அவை அவ்வாறு தடுமாறித் தோன்றுதல் அவற்றிற்கு இலக்கணம்; அவ்வாறு தோன்றுங்கால் பயிலாத உரிச்சொற்களைப் பயின்ற உரிச்சொல்லோடு சார்த்தி உணரப்படும். அவ்வாறு சார்த்திச் சொல்லவே எவ்வகைப்பட்ட சொல்லாயினும் பொருள் விளங்கும்.

'உறுகால்' (நற்.300) என்றக்கால், உறு என்பதனை வழக்கி னுள்ளார் பயிலாமையின், 'மிகுகால்' என்று சொல்லுப. மிகு என்பதூஉம் உரிச்சொல், அதனை நடையுள்ளார் பயின்றாரா தலான், அந்நிகரனவற்றாற் பொருத்திச் சொல்ல அவை விளங்கித் தோன்றும் என்பது.

இசைபற்றி நிற்பனவற்றிற்கு 'இசை சென்று நிலை மருங்கு' எனவும், குறிப்புப் பற்றித் தோன்றுவனவற்றிற்குத் 'தத்தங் குறிப்புச் சென்று நிலை மருங்கு' எனவும் படும் என்பது.

[2]இசைபற்றித் தோன்றின, 'துவைத்தலும் சிலைத்தலும்' (உரியியல் 61) என்னுந் தொடக்கத்தன.

[3]குறிப்புப்பற்றி வந்தன, 'கறுப்பும் சிவப்பும்' (உரி.75) என்னுந் தொடக்கத்தன. 'நிறத்துரு வுணர்த்தற்கு முரிய' (உரி.76) என்றாராகலின் ஆண்டுப் பண்பு எனவும் வரும்.

ஒரு சொல்லாகப் பல பொருட்குரியன, 'கடியென்கிளவி' (உரி.86) என்னுந் தொடக்கத்தன.

பல சொல் ஒரு பொருட்குரியன, 'உறுதவநனி' (உரி.3), என்னுந் தொடக்கத்தன.

முன்,

**இடைச் சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்**
**அவற்றுவழி மருங்கிற் றோன்றும் என்ப** (பெயரியல்.5)

என்புழி, [1]நிரனிறை வாய்பாட்டதாகலான், அது நீக்குதற்குப் பெயரினும் வினையினும் மெய்தடுமாறி' என்றார் என்பது.

---

1 நடையுள்ளார்- உலகிலுள்ளார், 2 இசை-ஒலி 3 குறிப்பு- மனத்தாற் குறித்துப் பொருளுணர்வது; கறுப்பு என்பது வெகுளியைக் குறிப்பதாக இடம் நோக்கி யுணர்வது.

1. முன் சூத்திரம், "சொல்லெனப்படுப பெயரே வினை யென்று ஆயிரண்டு என்ப" (பெய 4) என்று கூறிப் பின் இச்சூத்திரம் கூறப்படுதலின் பெயர் வழி இடைச் சொல்லும் வினைவழி உரிச்சொல்லும் தோன்றும் என நிரல் நிறைப்பொருள் கொள்ளுமாறு அமைந்தமை காண்க.

## சேனாவரையர்

இதன் பொருள் ; உரிச்சொல்லை விரித்துரைக்குமிடத்து, இசை குறிப்புப் பண்பு என்னும் பொருண்மேற்றோன்றிப் பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் தம்முருபு தடுமாறி, ஒரு சொற் பல பொருட்குரித்தாய்வரினும், பல சொல் ஒரு பொருட் குரித்தாய்வரினும் கேட்பானாற் பயிலப்படாத சொல்லைப் பயின்றவற்றோடு சார்த்திப் பெயரும் வினையுமாகிய தத்தமக் குரிய நிலைக்களத்தின்கண் யாதானும் ஒரு சொல்லாயினும் வேறு வேறு பொருளுணர்த்தப்படும்' என்றவாறு.

என்றது' இசைகுறிப்புப் பண்பு என்னும் பொருளவாய்ப் பெயர்வினை போன்றும் அவற்றிற்கு முதனிலையாயும் தடுமாறி ஒரு சொல் ஒரு பொருட் குரித்தாதலேயன்றி, ஒரு சொற் பல பொருட்கும் பல சொல் ஒரு பொருட்கும் உரியவாய் வருவன உரிச்சொல் என்றும், அவை பெயரும் வினையும் போல் ஈறு பற்றிப் பொருளுணர்த்தலாகாமையின், வெளிப்படாதவற்றை வெளிப்பட்டவற்றோடு சார்த்தித் தம்மையெடுத்து ஓதியே அப் பொருளுணர்த்தப்படும் என்றும், உரிச் சொற்குப் பொதுவிலக் கணமும் அவற்றிற்குப் பொருளுணர்த்தும் முறைமையும் உணர்த்தியவாறு.

குறிப்பு : மனத்தாற் குறித்துணரப்படுவது. பண்பு : பொறியான் உணரப்படும் குணம்.

[1] கறுப்பு, தவ என்பன பெயர் வினைப்போலி. துவைத்தல் துவைக்கும் என்பன பெயர் வினைக்கு முதனிலையாயின.

[2] உறு முதலாயின மெய்தடுமாறாது வருதலின், 'பெயரினும் வினையினும் மெய்தடுமாறி' யென்றது' பெரும்பான்மை பற்றி

---

1. பெயரெனவும் படாது வினையெனவும் படாது பெயர் போலவும் வினைபோலவும் ஆளப்படுதலின் பெயர் வினைப் போலியாம். கறுப்பு பெயர்ப்போலி. தவ வினைப் போலி.

2. உறு என்பது திரியாது. உற்றான் என்பதில் வரும் உறு என்பது பகுதி; அது உற்றான் என வினைப்பட்டது. ஆனால் உறு பொருள் என்பதில் உறு என்பது மிகுதி என்னும் பொருள்பட்டுத் திரியாது வந்தது; இது எங்கும் திரியாமல் உறு என்றே வரும். உற்றான் என் பதில் உள்ள உறு வினைச் சொல் பகுதி. தெய்வச்சிலை யார் இரண்டும் ஒன்றென்பர்.

யெனக் கொள்க. அவை கூறியவாற்றாற் பொருட்குரியவாய் வருமாறு முன்னர்க் காணப்படும்.

[3] மெய்தடுமாறலும்'ஒரு சொற் பல பொருட்குரிமையும், பல சொல் ஒரு பொருட் குரிமையும் உரிச்சொற்கு உண்மையான் ஓதினாரேனும், உரிச்சொற்கு இலக்கணமாவது இசை குறிப்புப் பண்பென்னும் பொருட்குரியவாய் வருதலேயாம்.

ஒரு சொல் ஒரு பொருட்குரித்தாதல் இயல்பாகலாற் சொல்லாமையே முடியும் என்பது.

## தெய்வச்சிலையார்

இதன் தலைச் சூத்திரம் என்னுதலிற்றோவெனின், உரிச்சொற்கெல்லாம் உரியதோர்பொது இலக்கணமும், அவற்றிற்குப் பொருளுணர்த்துந் திறனும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : 'உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை என்பது உரிச்சொல்லாகிய சொல்லை விரித்து உரைக்குங் காலத்து, என்றவாறு.

'இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி' என்பது' [1]சொல்லானும் குறிப்பானும் பண்பானும் புலப்பட்டு, எ—று. சொல்லாற் புலப்பட்டது உறு என்பது. 'இதனின் அஃதுறும்' என்ற வழி 'மிகும்' என்னும் பொருள் புலப்பட்டது.

[2] குறிப்பாற் புலப்பட்டது 'கறுத்தான்' என்பது. ஒருவன் மாட்டுக் கருமையாகிய நிறத்தைக் குறியாது, அவனது வெகுட்சியைக் குறித்தலிற் குறிபபாயிற்று.

---

3. பெயர் வினை இடைச்சொற்களும் ஒரு சொற் பல பொருளிலும் பல சொல் ஒரு பொருளிலும் வருதலின் இவ்வாறு எழுதினார். அன்றியும் எல்லாவுரிச்சொற்களும் இப்படியமைவனவல்ல. மெய்தடுமாறல் என்பது பெயர் வினைகளாகத்திரிதலை.

1. இசை என்பதற்கு இவர் சொல் எனப் பொருள் கொண்டார்; பிறர் ஒலி எனக் கொண்டனர்.

2. குறிப்பு என்பது மனத்தாற் குறித்துணரப்படுவது எனப் பிறர் கூற, இவர் குறிப்பாற் பொருள் உணர்த்துவது எனக் கொண்டார்.

[3] பண்பாற் புலப்பட்டது. 'வெகுட்சிக்குக் கண் சிவக்கும்' என்பது. கண்ணின் சிவப்பு அது சிவத்தற்குக் காரணமாகிய வெகுட்சியின்மேல் வந்தது.

[4] இவையிற்றை வடநூலாசிரியர் முக்கியம், இலக்கணை, கௌணம் என்ப.

சொற் பொருள்படும் வழிச் சொல்லானும் குறிப்பானும் குணத்தானும் பொருள்படும் எனபதூஉம், ஈண்டுக் கூறப்படுகின்ற உரிச்சொல் இம்மூவகையானும் பொருள் வேறுபடும் என்பதூஉம் கூறியவாறாம்.

'பெயரினும் வினையினும் மெய் தடுமாறி' என்பது உரிச்சொல்லாகிய உருபு பெயரின் கண்ணும் வினையின் கண்ணும் தடுமாறி எ-று. அவை தடுமாறுங்கால், பெயர் வினைகளைச் சார்ந்தும் அவற்றிற்கு [5] அங்கமாகியும் வரும். 'உறுவளி' என்பது பெயரைச் சார்ந்து வந்தது. 'உறக் கொண்டான் என்பது வினையைச் சார்ந்து வந்தது. 'உறுவன்' என்ற வழிப் பெயர்க்கு அங்கமாயிற்று. 'உற்றான்' என்ற வழி வினைக்கு அங்கமாயிற்று.

'ஒரு சொற் பல் பொருட் குரிமை தோன்றினும், 'பலசொல் ஒரு பொருட் குரிமை தோன்றினும்' என்பது ஒரு சொல் பல பொருட்குரித்தாகித் தோன்றினும், பல்சொல் ஒரு பொருட் குரித்தாகித் தோன்றினும், எ-று.

ஒரு சொல் ஒரு பொருட் குரித்தாகி வருதல் சொல்லாமல் முடிந்ததாம்.

'பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தித், தத்த மரபிற் சென்று நிலை மருங்கின்' என்பது, உரிச் சொற்கள் தத்தம்

---

3. பண்பாவது பொறியான் உணரப்படும் குணம் என்பர் பிறர். இவர் பண்பு கொண்டு ஒன்றன் பொருள் உணர்வது என்றார். வெகுட்சிக்குக் கண் சிவக்கும் ஆதலின் அச்சிவப்புப் பண்பு கொண்டு சிவந்தான் என்பதற்கு வெகுண்டான எனப் பொருள் உணரப் படும் என்பது இவர் கருத்து.

4. முக்கியம் - இன்றியமையாச் சொல், இலக்கணை - ஏற்றிச் சொல்வது, கௌணம் - குணமுடையது.

5. அங்கமாகி வருதல் பகுதியாகி வருதல். சேனாவரையர் உரையில் 2ன் குறிப்புக் காண்க.

மரபினாற் சென்று நிற்குமிடத்து. வழக்கின்கட் பயின்று நடவாத சொற்களைப் பயின்ற சொற்களோடு சேர்த்தி, எ-று.

[6] பயிலாத சொல்லாவன : உறு, தவ, நனி; பயின்ற சொல்லாவன : மிகுதல், உட்கு, உயர்வு என்பன. சார்த்துதலாவது இச்சொற்கள் இச்சொல்லின் பொருள்படும் எனக் கூட்டுதல்.

[7] 'எச்சொல்லாயினும் பொருள் வேறு கிளத்தல்' என்பது, யாதானும் ஒரு சொல்லாயினும் பொருள் வேறுபடுத்திக் காட்டுக, எ-று.

தோன்றித் தடுமாறி என்னும் செய்தென் எச்சம் உரிமை தோன்றினும் என்னும் செயின் எச்சத்தினோடு ஒன்றிக் 'கிளக்க' என்னும் வியங்கோளோடு முடிந்தது.

---

6. உறு எனும் சொல் மிகுதல் எனும் பொருள்படும் எனக் கூறுதல் உட்கு (அச்சம்) எனும் பயின்ற சொல்லுடன் 'உரு எனும் பயிலாத சொல்லைச் சார்த்தி 'உருவுட் காகும்'என ஆசிரியர் கூறியது காண்க.

"வேறொரு முறையிலும் விளக்கலாம். தட, கய, நனி என்பன பெருமையுணர்த்தும். அப்பொருளே பயின்ற பொருள். தட என்பது கோட்டமும் ஆகும்; கய என்பது மென்மையும் ஆகும். நனி என்பது செறிவும் ஆகும் என்பார். இவை அதிகம் பயிலாத பொருள் எனலாம். அதனால் பயின்ற பொருளோடு பயிலாத பொருளையும் பார்க்க முடிகிறது." -ஆண்டியப்பன்.

இக்கூற்று ஏற்பதாகாது. தட என்பதற்குப் பயின்ற பொருளாகிய பெருமையைக்கூறிய ஆசிரியர் கோட்டம் என்னும் பயிலாத பொருளைக் கூறியதுபோல மாலை, ஒ, வம்பு, மாதர் போலும் சொற்களுக்கும் முன்னர்ப் பயின்ற பொருள்களைக் கூறிப் பின்னர் பயிலாத பொருள்களைக் கூறியிருக்க வேண்டும். அவ்வாறு கூறாமை காண்க—சிவ.

7. பொருள் வேறுபடுத்திக் காட்டுதல் பல பொருள் ஒரு சொல்லுக்கே பெரிதும் ஆம். கடி என்பது கடிமலர் என்னும் போது மணமலர் என்றும் 'கடியென்றார் கற்றறிந்தார்' (குறள்) என்னும்போது நீக்குதல் என்றும் பொருள் வேறுபடுத்திக் காட்டுதலாம்.

உரிச் சொற்கள் கிளவியை விரித்துரைக்குங் காலத்துச் சொல்லானும் குறிப்பானும் பண்பானும் பொருள் புலப்பட்டுப் பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் உருபு தடுமாறி, ஒரு சொற் பல பொருட்கு உரிமையாகித் தோன்றினும், பல சொல் ஒரு பொருட்கு உரிமையாகித் தோன்றினும், தத்தம் மரபிற் சென்று நிற்குமிடத்துப் பயிலாத சொற்களைப் பயின்ற சொற்களோடு சேர்த்தி யாதானும் ஒருசொல்லாயினும் பொருள் வேறு படுத்து உரைக்க, அறிவோர், எ—று.

## நச்சினார்க்கினியர்

என்பது சூத்திரம். இச் சூத்திரம் உரிச் சொற்கு எல்லாம் பொது இலக்கணம் கூறுகின்றது.

இதன் பொருள்: உரிச் சொற் கிளவி விரிக்குங் காலை—உரிச்சொல்லாகிய சொல்லை விரித்து உணர்த்துமிடத்து, ஒரு சொல் பல் பொருட்கு உரிமை தோன்றினும் பல சொல் ஒரு பொருட்கு உரிமை தோன்றினும்—அஃது ஒரு சொல் ஒரு பொருட்கு உரித்தாய் வாராது பல பொருட்கு உரித்தாய் மயங்கி வரினும் பல சொல் ஒரு பொருட்கு உரியவாய் மயங்கி வரினும், இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப் பெயரினும் வினையினும் மெய் தடுமாறித் தத்த மரபிற் சென்று நிலை மருங்கின்—இசைப் பொருண்மைக் கண்ணும் மனத்தாற் குறித்துவரும் பொருண்மைக் கண்ணும் பண்புப் பொருண்மைக் கண்ணும் வெளிப்பட்டுப் பெயர் வினைகள் போன்றும் அவற்றிற்கு முதல் நிலையாயும் தம் உருபு தடுமாறித் தத்தமக்கு உரிய முறைமையாற் சென்று நிற்கும் நிலைக்களங் களாலே, எச்சொல்லாயினும் பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்திப் பொருள் வேறு கிளத்தல்—கேட்போனால் பொருள் உணரப்படாத எவ்வகைப்பட்ட சொல்லாயினும் பயிலப்படாத சொல்லைப் பயின்றவற்றோடு சேர்த்திப் பொருளை வேறு வேறு சொல்லுக என்றவாறு.

'அது மயங்கிவரினும், [1]நிலைக் களங்களாலே சேர்த்தி வேறு வேறு கிளத்தல்' என வினை முடிபு செய்க.

கறுப்பு, பெயர்ப் போலி
தவ, வினைப் போலி
துவைத்தல், பெயர்க்கு முதல் நிலை
தாவாத, வினைக்கு முதல் நிலை

[1] நிலைக்களங்கள் = பெயர் வினைகள்.

பலவும் ஓதினாரேனும், உரிச்சொற்கு இலக்கணம் மூவகைப் பொருளும் பற்றி வருதலேயாம்.

## வெள்ளைவாரணனார்

இச்சூத்திரம் உரிச் சொற்கெல்லாம் பொதுவிலக்கணம் உணர்த்துகின்றது.

இதன் பொருள் : உரிச் சொல்லை விரித்துக் கூறுமிடத்து, இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள் மேல் தோன்றி, பெயரிடத்தும் வினையிடத்தும் தம்முருபு தடுமாறி, ஒரு சொல் பல பொருட்கு உரித்தாய் வரினும். பல சொல் ஒரு பொருட்கு உரித்தாய் வரினும், வழக்கிற் பெருக வழங்காத சொல்லைப் பயின்று வழங்குஞ் சொல்லோடு சார்த்திப் பெயரும் வினையும் ஆகிய தத்தமக்குரிய நிலைக் களத்தின்கண் யாதானும் ஒரு சொல்லாயினும் வேறு வேறு பொருளுணர்த்தப்படும் என்றவாறு.

இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருளையுடையனவாய்ப் பெயரையும் வினையையும் போன்றும் அவற்றிற்கு முதனிலை யாகியும் தம்முருபு தடுமாறி.ஒரு சொல்ஒரு பொருட்குரித்தாதலே யன்றி, ஒரு சொல் பல பொருட்கும் பல சொல் ஒரு பொருட்கும் உரியவாய் வருவன உரிச் சொல்லாம் என்றும், அவை பெயரும் வினையும் போல ஈறுபற்றிப் பொருளுணர்த்தலாகாமையின், வெளிப்படப் பொருளுணர்த்தாதனவற்றை வெளிப்படப் பொருளுணர்த்துஞ் சொற்களோடு சார்த்தித் தம்மையே எடுத் தோதிப் பொருளுணர்த்தப்படும் என்றும் உரிச் சொற்கெல்லாம் பொதுவிலக்கணமும் அவற்றிற்குப் பொருளுணர்த்தும் முறை யும் உணர்த்தியவாறு.

........................

கறுப்பு தவ என்னும் உரிச் சொற்கள் முறையே பெயராயும் வினையாயும் தம்முருபு தடுமாறின. துவைத்தல், துவைக்கும் என்பன முறையே பெயர்க்கும் வினைக்கும் முதனிலையாயின.

## ஆதித்தர்

உரிச் சொற் பொருளை விளக்குவோமாயின்,

ஒலி பற்றியும் குறிப்புப் பற்றியும் பண்பு பற்றியும் தோன்றும் பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களும் தம்

உண்மைப் பொருள் மாறி வரும். ஒரு சொல் பல பொருள் தந்தும் பல சொல் ஒரு பொருள் தந்தும் வரும்; செய்யாததைச் செய்ததுபோல் கற்பிக்கும்; இஃது மரபு தழுவிப் பயிலப் பெற்று எல்லாச் சொற்களும் வேறு பொருள் தந்து நிற்கும்.

இயம்பல்—சொல்லுதல்
அதிர்வு—முழக்கம்
சிலைத்தல்—ஒலித்தல்
முரஞ்சல்—ஒலித்தல்

இவை ஒலி பற்றி வருவன. ஆயின் பிற உரிப் பொருள் தருவன பின்னர்க் காண்போம்.

விறப்பு—அச்சம், உறப்பு—கிள்ளியெடுத்தல்

அலமரல்—அங்கலாய்த்தல்—இவை குறிப்பு. ஆயின் பிற பொருள் தரும்.

கறுப்பு—கருமை, சிவப்பு — செம்மை, சிறுமை—சிறிய, செழுமை—செழிப்பு—இவை பண்பு பற்றியவை; பிற பொருள் தரும்.

பெயர்ச் சொல் மாறிவரல்: பிணை-மான், (உரி) விருப்பமான
வம்பு—அக்கிரமம் (உரி) நிலையில்லா
வாள்—கத்தி (உரி) நெளிபெற்ற

வினைச்சொல் மாறிவரல்: வை—திட்டு (உரி) கூர்மை
விழு—விழுதல் (உரி) சிறந்த
வீழ்—விழுதல் (உரி) விரும்புகிற
கடி—கடிக்கின்ற (உரி) காவல் பெற்ற

ஒரு சொல் பல பொருள் தரல்: கடி—காவல், மணம், நீக்கு, கூர்மை, அச்சம், விளக்கம், புதுமை.

பல சொல் ஒரு பொருள தரல்: சால, உறு, தவ, நனி, கூர் கழி—மிகுதி.

பயிலாதவற்றைப் பயின்றதாக்கல்: இப்பாதை மதுரைக்குப் போகிறது. பாதை போகவில்லை; நீளக் கிடக்கிறது; அதனைப் போவதாகச் சொல்வது உரிச் சொல். அதனைப் பயிலும் சொல்லோடு சேர்த்தல். நாகு—இளங்கன்று

மழகளிறு—மரபன்று

சொல்வேறு பொருள்தரல் :

கருவி - ஆயுதம் (உரி) தொகுதி
உரு - உருவம் (உரி) அச்சம்
மாதர் - பெண் (உரி) காதல்
மாலை - மாலைப்பொழுது (உரி) வரிசை

**சுப்பிரமணிய சாஸ்திரியார்**

பொருள் : உரிச்சொற்கள் தோன்றுமிடத்து இசையும் குறிப்பும் பண்பும் பற்றிப் பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் சென்று பொருள்களை விளக்கும், என்றவாறு. மெய் என்பது பொருள்; தடுமாறுதல் என்பது பெயர் பற்றியும் வினைபற்றியும் வரும் வரவினை நோக்கி; அவ்வாறு தடுமாறுங்கால் ஒருசொல் பலபொருட்கு உரிமைப்பட்டுத் தடுமாறுதலும் பல சொல் ஒரு பொருட்டு உரிமைப்பட்டுத் தடுமாறுதலும் உடைய. அவை அவ்வாறு தடுமாறித் தோன்றுதல் அவற்றிற்கு இலக்கணம்; அவ்வாறு தோன்றுங்கால் பயிலாத உரிச்சொற்கள் பயின்ற உரிச்சொல்லோடு சார்த்தி உணரப்படும். அவ்வாறு சார்த்திச் சொல்லவே எவ்வகைப்பட்ட சொல்லாயினும் பொருள் விளங்கும்.

உரைகாரர்கள் நால்வரும் இச்சூத்திரம் உரிச்சொல்லின் இலக்கணத்தை உணர்த்துகின்றது என்றனர். பொருள் கூறுமிடத்து 'மெய்' என்பதற்கு உரையாசிரியர் 'பொருள்' என்றும், ஏனையோர் 'உருவம்' என்றும் கொண்டனர். 'உயிரும் புள்ளியும் இறுதியாகி' (எழுத். குற்றி. 76) என்ற சூத்திரத்தில் புணர்ச்சியில் உரிச்சொல் எவ்வாறு மாறும் என்பது உணர்த்தப் படவில்லை என்பதனால் சேனாவரையர் முதலியோர் கூறுவதே பொருந்தும்.

இச்சூத்திரம் உரிச்சொல்லின் இலக்கணங் கூறியதாயின் 'உரிச்சொற்கிளவி—இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றும்' என்றே ஆசிரியர் கூறியிருப்பர். ஏனையவற்றைச் சேர்த்திருத்தலால் இச்சூத்திரம் உரிச்சொல்லின் இலக்கணத்தைக் கூறாது அதன் தன்மையைக் கூறிற்று என்றலே பொருந்தும். அவ்வாறாயின் அதன் இலக்கணம் எதனாற் பெறுதும் எனின், பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல் இவற்றின் இலக்கணம் அவ்வக் குறியாற் பெறப்பட்டன என்றது போலவே உரிச்சொல் என்ற தொல்லோர் குறியானே அது பெறப்பட்டது எனல் வேண்டும். உரிச்சொல் என்பதற்குப் "பெயரினும் வினையினும் இன்றியமையாதுரிய பகுதியை யுணர்த்துங் கிளவி" என்பது பொருளாகும். அப்பகுதியைத் தெய்வச்

சிலையார் தாது என்பர். அவரது கொள்கையில் வடமொழி யிலக்கணவாசிரியரான சாகடாயனரைப்போல்எல்லாப்பெயரும் தாதுவிலிருந்து வந்தன என்று கொள்ளல் வேண்டும். செயலைக் குறிக்கும் பகுதிகளுக்கே தாது எனப் பெயராதலானும், மழவு, குழவுமுதலிய சிலபெயர்கள்தாதுவிலிருந்துபெறப்பட்டன என்று கொள்ளுவது எளிதன்று ஆகலானும், எல்லாப் பெயர்களும் தாதுவிலிருந்து பிறந்தன எனக்கொள்ளாது பெரும்பான்மையன தாதுவிலிருந்தும், சிறுபான்மையன அவ்வாறன்றியும் பிறந்தன என்று வடமொழியிலக்கணவாசிரியரான கார்க்கியரைப் போல் கொள்ளுவது பொருத்தமாகும். அவ்வாறாயின் சில பெயர் களின் பகுதியும் உரிச் சொல் என்னலாம் என்பது என் கருத்து. ஆதலின் உரிச் சொல் என்பது பெயர், வினை இவற்றின் பகுதி என்னலாம்.

**சிவ.**

இச்சூத்திரம் உரிச்சொல் இலக்கணம் கூறவில்லை; உரிச் சொல்லின் தன்மை கூறிற்று எனச் சுப்பிரமணிய சாத்திரியார் கூறினும் இலக்கணம் கூறிற்றென்றலே நன்று. "பெயரெனப்படு பவை" (பெய. 6) எனப் பெயர்க்கும், "வினையெனப்படுவது" (வினை. 1) என வினைக்கும், "இடையெனப்படுப" (இடை 1) என இடைச் சொற்கும் இலக்கணம் கூறியவாறே உரிச்சொற்கும் இலக்கணம் கூறினார் எனக் கொள்வதே பொருத்தம். உரிச் சொல்லின் தன்மையும் இலக்கணத்தின் பாற்படுவதே.

### பொருள் கூறப்படும் உரிச்சொற்கள்

**293.** வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா வுரிச்சொன் மேன. (2)
(வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா உரிச்சொல் மேன)

**ஆ. மொ. இல.**

The discussion concerns words rarely used and difficult to understand; not words often used and easily understood.

**ஆல்.**

Since there is no need for the enumeration of the morphemes that can be clearly identified, free morphemes that are not clear brought to our notice.

**இளம்.**

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இருவகைய உரிச்சொல், வெளிப்படுவனவும் வெளிப்படாதனவும் என; *அவற்றுள் வெளிப்பட்ட உரிச்சொற்களது பொருள் சொல்ல வேண்டா; அறிந்த பொருட் பெற்றியான் பொருட் செல்லுதல் என்பது உணர்த்தியவாறு.

அவ்வாறு வெளிப்பட்ட உரிச்சொற்களாவன: கலித்தது, குழைத்தது என்னுந் தொடக்கத்தன.

இனி வெளிப்பட வாராதனவற்றை விரிக்கின்றார்.

**சேனா.**

இ-ள்: வெளிப்பட்ட உரிச்சொல் கிளந்ததனாற் பயன் இன்மையின் கிளக்கப்படா; வெளிப்பட வாரா உரிச்சொல் மேற்றுக் கிளந்தோதல், எ-று.

'பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தி' எச்சொல்லாயினும் பொருள் வேறு கிளத்தல்' என்றதனால் பயிலாதவற்றைப் பயின்றவற்றோடு சார்த்தியும், பயின்றவற்றைப் பிறிதொன்றனோடு சார்த்தாது தம்மையே கிளந்தும் எல்லா வுரிச்சொல்லும் உணர்த்தப்படும் என்பது பட்டு நின்றதனை விலக்கி,பயனின்மையாற் பயின்ற உரிச்சொற் கிளக்கப்படாது பயிலாத உரிச்சொல்லே கிளக்கப்படும் என வரையறுத்தவாறு. 'மேல' என்பது 'மேன' என நின்றது.

**தெய்.**

ஈண்டு ஓதுகின்ற உரிச்சொல் இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: வழக்கின்கண் எல்லாரானும் அறியப்பட்ட சொல் ஈண்டு எடுத்து ஓத வேண்டா; அறியப்படாத உரிச்சொல் மேன, வருகின்ற சூத்திரங்கள், எ-று.

---

* "அவற்றுள் வெளிப்பட்ட உரிச் சொற்களது பொருள் சொல்ல வேண்டா, அவை தாமே யறியப்படுதலின்; ஈண்டு அறியப்படாத உரிச் சொற்களுக்கே பொருள் சொல்லப்படும் என்பது உணர்த்தியவாறு" என்றிருப்பின் நன்று என்பர், கு. சுந்தரமூர்த்தி.

*உ-ம்: வெளிப்படு சொல்லாவன உண்டல் என்பதற்கு அயிறல், மிசைதல் எனவும்; உறங்குதல் என்பதற்குத் துஞ்சல் எனவும், இணைவிழைச்சு என்பதற்குப் புணர்தல், கலத்தல், கூடல் எனவும், அச்சம் என்பதற்கு வெரூஉதல் எனவும் இவ்வாறு வருவன. இனி வெளிப்பட வழங்காதன கூறப்படுகின்றன.

**நச்**

இஃது உரிச்சொற்களுள் யான் கூறப்படுவன இவை என்கின்றது.

இ-ள்: வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா— பொருள் புலப்பட்ட உரிச்சொற்கள் எல்லாரும் அறிதலின் எடுத்து ஓதிப் பொருள் உணர்த்துதல் வேண்டா, வெளிப்பட வாரா உரிச்சொல் மேன—பொருள் புலப்பட வாராத உரிச் சொல் மேலன யான் பொருள் புலப்பட ஓதுதல், எ-று.

**வெள்.**

இஃது உரிச்சொற்களுள் இவ்வியலிற் கூறப்படுவன இவை யென வுணர்த்துகின்றது.

இ-ள்: வழக்கின்கண் எல்லாரானும் அறியப் பொருள் வெளிப்பட வழங்கும் உரிச்சொற்களை ஈண்டு எடுத்துக்கூறுதல் வேண்டா; எல்லாரானும் வெளிப்படப் பொருள் அறியப்படாத உரிச்சொல் மேலன பின்வரும் சூத்திரங்கள், எ—று.

வழக்கினுள் எல்லாரானும் அறிந்து பயிலப்படும் உரிச் சொற்களை மீண்டும் எடுத்துரைத்தலாற் பயனின்மையின் அச் சொற்கள் இவ்வியலில் எடுத்துரைக்கப்பட மாட்டா; பலராலும் பயிலப்படாத உரிச்சொல்லே இவ்வியலில் எடுத்துரைக்கப்படும் என ஆசிரியர் வரையறை செய்து கொண்டவாறு. மேல் என்பது மேன எனத் திரிந்து நின்றது. பொருள் வெளிப்பட வாரா உரிச் சொற்களைப் பின்வரும் நூற்பாக்களில் ஆசிரியர் கிளந்தோதி விரிக்கின்றார்.

---

* அயிறல், மிசைதல் என்னும் உரிச்சொற்கள் உண்டல் எனனும் பொருளை வெளிப்படையாக உணர்த்துவன. அதனால் அவ்வுரிச்சொற்கள் பற்றிக் கூறாமல் வெளிப் படையாகப் பொருள் உணர்த்தல் ஆற்றா உரிச்சொற் களே கூறப்படும் என விளக்கம் காண்க. துஞ்சல் முதலியவற்றுக்கும் இப்படியே காண்க.

**ஆதித்தர்**

வெளிப்படையாகத் தெரியும் சொற்கள் பற்றி இங்குக் கூறற்கில்லை. வெளிப்படையாக இல்லாச் சொற்களே இங்கு மேவிஉற்றன. மேன—மேல் உற்றன.

வெளிப்படையான சில சொற்கள்—புலி அறப்பசித்தும் புல் தின்னாது. அற—முற்றும். அவள் இறை நாணி நின்றாள்—இறை—சிறிது. துவரப் பசித்தாலும்—துவர—முற்றும். வான் கோழி—வான்—பெரிய. வால்எயிறு — வால் — வெண்ணிற. கோடித்துணி—கோடி—புதிய. மடஅன்னம்—மட—இளமை-கொண்ட. ஆற்றவும் கற்றார்—ஆற்ற—முற்றும். படுகுழி—படு—பெரிய. கம்பியை நீட்டிவிட்டான்—ஓடிவிட்டான். நறுமலர்—நறு—மணக்கும்.

**சுப்.**

எச்சொற்களுக்குப் பொருள் எல்லோருக்கும் இனிது விளங்குமோ அவை வெளிப்படு சொல்லாகும்; எவற்றிற்குப் பொருள் இனிது விளங்காவோ அவை வெளிப்படாச் சொல்லாகும்.

உறு, தவ, நணி.

294. *அவைதாம்
உறுதவ நனியென வரூஉ மூன்று
மிகுதி செய்யும் பொருள வென்ப (3)

(அவைதாம்
உறுதவ நனிஎன வரூஉம் மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப)

**ஆ.மொ.இல.**

They are
uṛu, thava and ṉani—these three
stand to denote the sense of either
many, or abundance or fullness

**ஆல்.**

They are three Uru, Tava, Naṉi which gave a sense of plenty.

---

* 'அவைதாம்' என்பது தெய்வசசிலையார் பாடத்தில் இல்லை.

பி.இ.நூ:

நன். 456:

சால வுறுதவ நனிகூர் கழிமிகல்

இல.வி.281:

''உறுதவ நனியென வரூஉம் மூன்றும்
மிகுதி செய்யும் பொருள ஆகலும்''

முத்து.ஒ.27

உறுதவ நனிமிகுதிப் பொருளு ணர்த்தும்

**இளம்.**

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், குறிப்புப் பற்றித் தோன்றும் உரிச்சொற்கள் பலவாகலான் அவற்றுப் பகுதி முற் கூறிய தொடங்கினார்.

உரை: இக்கூறப்பட்ட மூன்று உரிச்சொல்லும் மிகுதிப் பொருண்மையை விளக்கும், எ-று.

[1] 'உறுகால் ஒற்ற ஒல்கி' (நற். 300)
என்பது மிகு கால் ஒற்ற ஒல்கி என்பதாம்.

'தவச்சேய் நாட்டாராயினும்' (நற். 115) என்பது மிகச் சேய நாட்டார் என்பதாம்.

[2]'நனிசேய்த் தன்றவன் பழவிறல் மூதூர்' என்பது மிகச் சேய்த்தன்று அவன் பழவிறல் மூதூர் என்பதாம்.

**சேனா**

வெளிப்பட வாரா உரிச்சொற்களைக் கிளந்தோதி விரிக் கின்றார்.

'அவைதாம்' என்றது, வெளிப்பட வாரா உரிச்சொற்றாம் என்றவாறு. அதற்கு முடிவு 'அவைதாம் அம்மாம் எம்மேம் என்னும் கிளவியும்' (வினை. 5) என்புழி உரைத்தாங்குரைக்க

---

1 பொருள்: மிக்க காற்றுத் தாக்கத் தளர்ந்து

2. பொருள்: மிக நெடுந்தொலைவிலுள்ளதன்று அவன் பழைய வெற்றி கொண்ட மூதூர்.

இ-ள: [3]'உறுபுனல் தந்துல கூட்டி' (நாலடி. 185) எனவும், ''ஈயாது வீயும் உயிர்தவப் பலவே' (புறம். 236) எனவும், 'வந்துநனி வருந்தினை வாழியென் நெஞ்சே' (அகம். 19) எனவும், உறு, தவ, நனி என்பன மிகுதி என்னும் குறிப்புப் பொருள் உணர்த்தும், எ-று.

குறிப்புச் சொற் பரப்புடைமையான் முற்கூறினார்.

**தெய்**

இஃது உரிச் சொற்களிற் சில சொற் பொருளுணர்த்துமாறு உணர்த்துதல் நுதலிற்று. இக்கருத்து வருகின்ற சூத்திரங்கட்கும் ஒக்கும்.

இ-ள்: உறு தவ நனி என்று சொல்லப்பட்ட மூன்று சொல்லும் மிகுதி என்னும் சொல்வான் அறியப்படும் பொருளை யுணர்த்தும், எ-று.

உ-ம்: 'உறுபுனல் தந்துல கூட்டி' (நாலடி. 185) 'ஈயாது வீயும் உயிர்தவப் பலவே' (புறம். 235) 'வந்து நனி வருந்தினை வாழியென் நெஞ்சே' (அகம். 19)-இவை மிகுதி உணர்த்திய வாறு கண்டு கொள்க.

**நச்**

இது, குறிப்புப் பற்றி வரும் உரிச் சொல் பொருள்படுமாறு கூறுகின்றது.

இ-ள்: அவைதாம்—வெளிப்பட வாராத உரிச்சொற்கள் தாம் யாவை எனின், உறு தவ நனி என வரூஉம் மூன்றும்— உறுவெனத் தவவென நனியென வருகின்ற மூன்று உரிச்சொற் களும், மிகுதி செய்யும் பொருள் என்ப—மிகுதி யென்னும் உரிச் சொல் காட்டும் குறிப்புப் பொருளை உடைய என்று கூறுவர் ஆசிரியர், எ-று.

குறிப்புச் சொல் பரப்பு உண்மையின் முற்கூறினார்.

உ-ம்: உறுகால் ஒற்ற ஒல்கி ஆம்பல்' (நற். 300)

'ஈயாது வீயும் உயிர்தவப்பலவே' (புறம். 235)

'வந்து நனி வருந்தினை வாழியென் நெஞ்சே' (அகம்: 19) எனவரும்.

---

3. பொருள்: 'மிக்க நீர் (மழை) தந்து உலகை உண்பித்து

4. பொருள்: கொடாது அழியும் மக்கள் மிகப்புலர்,

**வெள்**

(உரை வேறுபாடில்லை).

**ஆதீ**

உறு தவ நனி மூன்று சொற்களும் மிகுதி என்னும் பொருள் தருவன. உறுபுகழ்—மிகப்புகழ் (உற்ற அல்ல) தவப்பலர்—மிகப்பலர் (தவஞ்செய்கிற அல்ல) நனி நொந்து—மிக நொந்து.

**சுப்**

அவை தாம் என்பதனை அதிகாரச் சூத்திரமாகக் கொள்க.

உரு, புரை.

**295.** * **உருவுட் காகும் புரையுயர் பாகும்** (4)
(உரு உட்கு ஆகும் புரை உயர்பு ஆகும்)

**ஆ. மொ. இல.**

'Uru' means fear and 'Purai' greatness.

**ஆல்.**

'Uru' means fear and 'Purai' means greatness.

**பி. இ. நூ.**

**நேமி. சொ. 59**

புரை யுயர்பாகும்.

**முத்து. ஒ. 28**

புரையுயர் பாகும் உருவுட்கா கும்மே

**இளம் :**

இச் சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இதுவும் குறிப்பு.

வரலாறு : உருவக் குதிரை (அகம் 1) என்றக்கால் [1]உட்கத் தக்க குதிரை என்பதாம். 'புரைய மன்ற புரையோர் கேண்மை' (நற். 1) என்பது உயர்ந்துயர்ந்தோர் கேண்மை என்பதாம்.

---

* இதனை இரு சூத்திரமாகக் கொள்வர் தெய்வச் சிலையார்.

1 உட்கு — அச்சம்

**சேனா.**

இ-ள் : 'உருகெழு கடவுள்' எனவும், 'புரைய மன்ற புரை யோர் கேண்மை' (நற். 1) எனவும் உருவும் புரையும் உட்கும் உயர்பும் உணர்த்தும், எ-று.

**தெய்.**

(உருவுட்காகும்)

இ-ள் : உரு என்னுஞ்சொல் உட்கு என்பதன் பொருள் படும், எ-று.

உ-ம் : உருகெழு கடவுள்; உட்குமிக்க கடவுள் என்றவாறு.

(புரையுயர்பாகும்)

இ-ள் : புரை என்பது உயர்வு என்னும் பொருள்படும், எ-று.

உ-ம் : புரையமன்ற புரையோர் கேண்மை (நற்-1.)

**நச்.**

இதுவுமது.

இ-ள் : உரு உட்கு ஆகும்—உரு என்னுஞ் சொல் உட்குதல் என்னும் உரிச்சொல்லது குறிப்புப் பொருட்டாம், புரை உயர்வு ஆகும் — புரை என்னும் உரிச்சொல் உயர்வு என்னும் உரிச் சொல்லது குறிப்புப் பொருட்டாம், எ-று.

உ-ம் : 'உருகெழு ஞாயிற்று ஒண்கதிர் மிசைந்த' (புறம். 160)

'புரைய மன்ற புரையோர் கேண்மை' (நற். 1)

என வரும்.

'உருவக் குதிரை மழவர் ஓட்டிய' (அகம். 1)
'உருவமென் றுரைத்தி யாயின்' (சீவக. 1585)

என உரு வடிவழகையும்,

'புரை தீர் கேள்விப் புலவரான'

எனப் புரை குற்றத்தையும் உணர்த்துதல், 'கூறிய கிளவிப் பொருள்நிலை யல்ல (உரி. 92) என்னுஞ் சூத்திரத்தாற் கொள்க.

**வெள்.**

(உரை வேறுபாடில்லை)

**ஆதி.** *

உரு — உருவம் — அச்சம்

புரை — ஒப்பு, குற்றம் — உயர்வான

குரு, கெழு

**296.** குருவுங் கெழுவு நிறனா கும்மே. (5)

(குருவும் கெழுவும் நிறன் ஆகும்மே)

**ஆ. மொ. இல.**

'Kuru' and 'Keḷu' denote Colour

**ஆல்.**

'Kuru' and 'Keḷu' mean Colour

**பி. இ. நூ.**

**இல. வி. 283 :**

குருவும் கெழுவும் நிறனா குதலும்.

**இளம்.**

வ-று : [1] 'குருத்துளி பொழிந்தது'

[2] 'கேழ்கிளர் அகலத்து' (மதுரைக்காஞ்சி. 493)

என்றக்கால் அவையிரண்டினும் நிறம் சொன்னவாறு.

---

* ஆதித்தர் உதாரணம் காட்டும்போது முதலில் உரிச்சொல்லையும், அடுத்து அது தரும் வெளிப்படைப் பொருளையும் பின்னர் அது உரிச்சொல் நிலையில் தரும் பொருளையும் காட்டுவர். அவர் காட்டும் வெளிப்படைப் பொருள் பொருந்துவதும் பொருந்தா ததும் ஆங்காங்கே அறிக. புரை என்பதற்குக் காட்டப் பட்ட ஒப்பு, குற்றம் என்னும் பொருள்கள் வெளிப் படையாக மக்களால் உணரப்படுவனவல்ல.

1. பொருள் : நிறத்தையுடைய (மழைத்)துளி பொழிந்தது.
2. பொருள் : நிறம் விளங்கு மார்பில்.

**சேனா.**

இ-ள் : 'குருமணித்தாலி', 'செங்கேழ் மென்கொடி' (அகம். 80) எனக் குருவும் கெழுவும் நிறம் என்னும் பண்புணர்த்தும், எ-று.

**தெய்.**

இ-ள் : குரு என்பதூஉம், கெழு என்பதூஉம் நிறம் என்பதன் பொருள்படும்.

உ-ம் : [3] 'குருமணித்தாலி', 'செங்கேழ் மென்கொடி' (அகம். 80) கெழு என்பது கேழ் எனவும் வரும்.

**நச்.**

இது, பண்பு.

இ-ள் : குருவும் கெழுவும் நிறன் ஆகும்மே — குரு என்னும் உரிச்சொல்லும், கெழு என்னும் உரிச்சொல்லும் நிறன் என்னும் உரிச்சொல்லது பண்புப் பொருளாம், எ-று.

உ-ம் : 'குருமணித்தாலி', [4] 'நறுஞ்சாந்து புலர்ந்த கேழ்கிளர் அகலம்' (மதுரைக். 493) என வரும்.

'குரூஉத் துளி பொழிந்த'
குரூஉக்கண் இறடிப் பொம்மல்' (மலைபடு. 169)

எனக் குரு நீடலும், கெழு கேழ் என நீடலும் ஈறு கெடுதலும்,

'எழுத்துப் பிரிந் திசைத்தல் இவணியல் பின்றே' (உரி 97) என்பதனாற் கொள்க. கெழு என்று வரும் இடம் உளதாயின் கொள்க. இக் கெழு பொருத்தத்தை உணர்த்துதலும், கெழு முதல் என்னும் வழக்கிற்கு முதல் நிலையாய் நிற்றலும் 'கூறிய கிளவி' (உரி. 92) என்பதனால் கொள்க. மேல்வரும் சூத்திரங் கட்கும் இவ்வாறே பொருள் கூறுக.

**வெள்.**

இது பண்பு பற்றி வரும் உரிச்சொல் உணர்த்துகின்றது.

இ-ள் : குரு என்னும் சொல்லும் கெழு என்னும் சொல்லும் நிறம் என்னும் பண்புணர்த்தும், எ-று.

---

3. பொருள் : நிறம் உள்ள மணி பதித்த தாலி, செந்நிற மென்கொடி.
4. பொருள் : மணமிக்கசந்தனம் புலர்ந்த நிறம் விளங்கும் மார்பு.

உ-ம் : 'குருமணித்தாலி' எனவும் 'செங்கேழ் மென்கொடி' எனவும் வரும்.

**ஆதி.**

உ-ம் : குரு — * ஆசான் — நிறமான
கெழு — செறிந்த — விளக்கமான

செல்லல், இன்னல்.

**297. செல்ல லின்ன லின்னா மையே. (6)**

(செல்லல் இன்னல் இன்னா மையே)

**ஆ. மொ. இல.**

'Sellal' and 'innal' mean distress

**ஆல்.**

'Cellal' and 'iṉṉal' mean distress.

**பி. இ. நூ.**

**இல. வி. 281.**

செல்லல் இன்னல் இன்னாமை செப்பலும்.

**முத்து. ஒ. 29.**

செல்லலும் இன்னலும் இன்னா மையே.

**இளம்.**

இச்சூத்திரம்என்னுதலிற்றோவெனின் இதுவும் குறிப்பு.

உரை : இவை இரண்டும் நோய்ப் பொருண்மைய ஆகும், எ-று.

வ-று : [1] 'மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்' **(அகம். 22)**

என்புழி நோய் என்பதாம்.

---

* தொல்காப்பியர் காலத்தில் குரு என்பது ஆசானுக்கு வழங்கப்படவில்லை.

1. பொருள் : மணங்கமழும் அகன்ற மார்பு வருத்திய துன்பம்.

[2] 'வெயில் புறந்தரூஉம் இன்னல் இயக்கம்'
(மலை படு. 374)

என்றவிடத்தும் அதுவாம்.

## சேனா

இ-ள் : 'மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்' (அகம். 22) எனவும். 'வெயில் புறந்தரூஉம் இன்னல் இயக்கத்து' (மலைபடு. 374) எனவும் செல்லலும் இன்னலும், இன்னாமையென்னும் குறிப்புணர்த்தும், எ-று.

## தெய்

இ-ள் : செல்லல் என்னும் சொல்லும் இன்னல் என்னும் சொல்லும் இன்னாமைப் பொருளில் வரும், எ-று.

உ-ம் : 'மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்'' 'வெயில் புறந்தரூஉம் இன்னல் இயக்கத்து'

## நச்

இது, குறிப்பு

இ-ள் : செல்லல் இன்னல் இன்னாமையே—செல்லலும் இன்னலும் இன்னாமை என்னும் குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்'
(அகம் 22)

'வெயில் புறந்தரூஉம் இன்னல் இயக்கத்து'
(மலைபடு. 374)

என வரும்.

## வெள்

இது குறிப்பு பற்றிவரும் உரிச்சொல்உணர்த்துகின்றது.

இ-ள் : செல்லல் இன்னல் என்னும் உரிச்சொற்கள் இன்னாமை யென்னும் குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம் : 'மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்'
'வெயில் புறந்தரூஉம் இன்னல் இயக்கத்து'

---

2. பொருள் : குளிர்ச்சி வாராமல் வெயில் பாதுகாக்கும் இன்னர்மை செய்யும் வழியிடத்தில் போம் பொழுது.

**ஆதி**

உ-ம் :

செல்லல் — செல்லுதல் — துன்பம்
*இன்னல்— [1]இனிமை + நல் — துன்பம்
மல்லல், ஏ

298. ***மல்லல் வளனே யேபெற் றாகும்.** (7)
(மல்லல் வளனே ஏ பெற்று ஆகும்)

**ஆ. மொ.**

'Mallal' means fertility; **'Ē'** means abundance

**ஆல்.**

'Mallal' means fertilit and 'E' means abundance

**பி. இ. நூ.**

**நேமி. சொ. 58.**

ஏ ஏற்றம் மல்லல் வளமை

**முத்து. ஒ. 30.**

மல்லல் வளனே ஏ பெற்றாகும்.

**இளம்**

வ-று : 'மல்லல் மாமலை. என்றக்கால் வளனுடைய பாமலை என்பதாம். 'ஏகலடுக்கம்' (நற். 116) என்றக்கால் [1] பெற்றிய கல்லடுக்கம் என்பதாம்.

**சேனா**

இ-ள் : 'மல்லல் மால்வரை' (அகம் 52) எனவும், 'ஏகல் லடுக்கம்' (நற். 116) எனவும் மல்லலும் ஏவும், வளமும் பெற்று மாகிய குறிப்புணர்த்தும், எ-று.

---

* இன்னல் என்பது இனிமை + நல் எனப்பிரிக்கப்பட்டுப் பொருள் உணர்த்தும் என்பது வலிந்து கூறுதலாம்.

1. இனிமை + நல் எனப் பிரிப்பது தவறு; ஒரு சொல் லாதலின்.

* இதை இரண்டு சூத்திரமாகக் கொள்வர் சேனா வரையரும் தெய்வச்சிலையாரும். உரை எழுதும்போது இரண்டற்கும் சேர்த்து ஒரே சூத்திரம் போலக் கொண்டு உரையெழுதினார் சேனாவரையர்.

1. பெற்றிய—பெருகிய.

பெற்று — பெருக்கம். இது அக்காலத்துப் பயின்றது போலும். இவை இரண்டு சூத்திரம்.

**தெய்.**

(மல்லல் வளனே)

இ-ள் : மல்லல் என்னும் சொல் வளப்பம் என்னும் பொருள் தரும், எ-று.

உ-ம் : மல்லல் மால்வரை (அகம் 52)
(ஏ பெற்றாகும்)

இ-ள் : ஏ என்னும் சொல் பெற்றுதல் என்னும் பொருள் படும், எ-று.

உ-ம் : 'ஏகலடுக்கம்' (நற். 116) [1]பெற்றுதல் என்பது இக்காலம் பற்றுதல் என வரும்.

**நச்**

இதுவுமது.

இ-ள் : மல்லல் வளனே — மல்லல் செல்வம் என்னும் குறிப்பினையும், ஏ பெற்று ஆகும்—ஏ என்பது பெருக்கம் என்னும் குறிப்பினையும் உணர்த்தும், எ-று.

பெற்று அடுக்குதலுமாம்.

உ-ம் : 'மல்லல் மார் படுத்தனன் புல்லுமா றெவனோ
'ஏகல்லடுக்கத்து இருளளைச் சிலம்பின்' (அகம் 52)

என வரும்.

**வெள்**

இவையும் குறிப்புப் பொருள் பற்றி வரும் உரிச்சொல் உணர்த்துகின்றன.

இ-ள் : மல்லல் என்னுஞ் சொல் வளமும், ஏ என்னுஞ் சொல் பெருக்கமும் ஆகிய குறிப்புணர்த்துவன எ-று, பெற்று—பெருக்கம்.

---

1. ஒன்றையொன்று பெற்று (பற்றி)த் தொடர்ச்சியாதல் என்பது இதன் பொருள் போலும்—சிவ

உ-ம் : 'மல்லல் மால்வரை' எனவும், 'ஏகல்லடுக்கம்' எனவும் மல்லல் ஏ என்பன முறையே வளமும் பெருக்கமும் ஆகிய குறிப்புணர்த்தின.

**ஆதீ.**

உ-ம் : மல்லல் — * பலத்த, வலிய — வளமான
ஏ — அம்பு — பெருகிய

**உகப்பு, உவப்பு.**

**299.** * உகப்பே யுயர்த லுவப்பே வுவகை (8)
(உகப்பே உயர்தல் உவப்பே உவகை)

**ஆ.மொ.இல.**

'Ukappu' means rising and 'uvappu', joy.

**ஆல்.**

'Ukappu' means rising 'uvappu' means joy.

**பி.இ.நூ:**

**முத்து. ஒ. 31**

உகப்பே யுயர்தல் உவப்பே வுவகை.

**இளம்.**

வ-று: 'நாடு காண மேன்மே லுகமின்' என்பது நாடு காணக் கன்மே லேறினான் மேன்மேல் உயர்மின் என்பதாம். 'உவக்குந ளாயினும் ஊடின ளாயினும்' (அகம். 203) என்புழி உவந்தனளாயினும் என்பதாம்.

---

* மல்லல் என்பதற்குப் பலத்த, வலிய எனப் பொதுப் பொருள் ஆட்சி காணப்படவில்லை.

* இதனை இரு சூத்திரமாகக் கொள்வர் தெய்வச் சிலையார்.

**சேனா.**

இ–ள்: [1] 'விசும்புகந் தாடாது எனவும், [2] 'உவந்துவந் தார்வ நெஞ்சமொடு ஆய்நல னளைஇ' (அகம். 35) எனவும், உகப்பும் உவப்பும், உயர்தலும் உவகையுமாகிய குறிப்பு உணர்த்தும், எ–று.

**தெய்.**

(உகப்பேயுயர்தல்)

இ-ள்: உகப்பு என்னும் சொல் உயர்தல் என்னும் பொருள் படும், எ-று.

உ-ம்: விசும்புகந் தாடாது
(உவப்பே உவகை)

இ-ள்: உவப்பு என்னும் சொல் உவகை என்னும் பொருள் படும், எ-று.

உ-ம்: உவந்துவந் தார்வ நெஞ்சமொடு (அகம். 35)

**நச்.**

இதுவுமது.

இ-ள்: உகப்பே உயர்தல் உவப்பே உவகை-உகப்பு உயர்வு என்னும் குறிப்பினையும் உவப்பு உவகை என்னும் குறிப்பினை யும் உணர்த்தும், எ-று.

உ-ம்: 'விசும்புகந் தாடாது இரைதேர்ந் துண்ணாது,
'உவந்துவந் தார்வ நெஞ்சமொடு ஆய்நலன் அளைஇய'
(அகம் 35)

என வரும்.

**வெள்.**

இதுவுமது.

இ–ள்: உகப்பு என்னுஞ் சொல் உயர்தலும், உவப்பு என்னுஞ் சொல் உவகையும் ஆகிய குறிப்புணர்த்துவன, எ-று.

உ-ம்: 'விசும்புகந் தாடாது' என உகப்பு உய்வுணர்த்தியது. 'உவந்துவந் தார்வ நெஞ்சமொடு ஆய்நல னளைகி' என உவப்பு உவகையுணர்த்தியது.

---

1. பொருள்: விண்ணில் உயர்ந்து பறவாமல். 2. விரும்பி விரும்பி ஆர்வ நெஞ்சமொடு ஆய்ந்த அழகைக் கலந்துண்டு.

**ஆதீ**

பொருள்: உகப்பு—*உகந்தது—உயர்ந்தது
உவப்பு— * தகுதி —உள்மகிழ்ச்சி

பயப்பு

300. **பயப்பே பயனாம்** (9)
(பயப்பே பயன் ஆம்)

**ஆ.மொ.இல.**

'Payappu' means usefulness

**ஆல்.**

'Payappu' means usefulness

**பி.இ-நூ:**

முத்து. ஒ. 32
பயப்பே பயனாம்

**இளம்.**

இச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், * இவ்வெயெல்லாங் குறிப்பு.

வ-று: [1]'ஆன்பயமுந் தூக்கினென்' என்புழிப் பயன் கூறிய வாறு.

**சேனா.**

(இதனையும் அடுத்த சூத்திரத்தையும் சேர்த்து உரை எழுதி னர். இதன் உரை அடுத்த சூத்திரத்துக் காண்க.)

**தெய்.**

இ-ள்: பயப்பு என்னும் சொல் பயன் என்னும் பொருள் படும், எ-று.

---

* உகந்தது தகுதி என்பன வெளிப்படையாக வழங்கும் பொருள்கள் அல்ல.

* இது தவறு. 'இது குறிப்பு பற்றி வந்தது' என்றிருத்தல் வேண்டும். அடுத்த சூத்திரங்களைப் பார்க்க.

1 பொருள்: பசுவின் பயனையும் ஆராய்ந்தனன்

உ-ம்: [1] 'பயவாக் களரனையர் கல்லா தவர்' (குறள் 406)

**நச்.**

இதுவுமது

இ-ள்: பயப்பே பயனாம்—பயப்புப் பயன் என்னும் குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம்: 'பயவாக், களரனையர் கல்லா தவர்' (குறள் 406)

**வெள்.**
**ஆதி.** } அடுத்த சூத்திரத்துக் காண்க.

பசப்பு

*301.* **பசப்பு நிறனாகும்** *(10)*
**(பசப்பு நிறன் ஆகும்)**

**ஆ.மொ.இல.**

'Pasappu' denotes colour

**ஆல்.**

'Pasappu' means colour

**பி.இ.நூ.**

**நேமி. சொ. 56**

பொன்மை நிறம் பசலை யென்ப

**முத்து ஒ. 32**

பயப்பே நிறம்

**இளம்.**

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், இது பண்பு பற்றி வந்தது.

வ-று: [2]'பசப்பித்துச் சென்றார்' என்புழி நிறம் கூறிய வாறு.

---

1 பொருள்: பயன் தராத களர் நிலம் போல்பவர் கல்லாதவர்.

2 பசப்பித்துச் சென்றார்—பசலை நிறத்தையுண்டாக்கிச் சென்றார்.

**சேனா.**

(பயப்பே பயனாம், பசப்பு நிறனாகும்)

இ-ள்: 'பயவாக் களரனையர் கல்லாதவர்' (குறள் 406) எனவும், [1] 'மையில் வாண்முகம் பசப்பூ ரும்மே(கலி. 7) எனவும் பயப்பும் பசப்பும், பயனும் நிற வேறுபாடுமாகிய குறிப்பும் பண்பும் உணர்த்தும், எ-று.

**தெய்.**

இ-ள்: பசப்பு என்னும் சொல் நிறத்தை உணர்த்தும், எ-று.

உ-ம்: மையில் வாண்முகம் பசப்பூ ரும்மே (கலி. 7)

**நச்.**

இது, பண்பு.

இ-ள்: பசப்பு நிறன் ஆகும்—பசப்பு நிறன் என்னும் பண்பு உணர்த்தும், எ-று.

உ-ம்: 'மையில் வாண்முகம் பசப்பூ ரும்மே' (கலி. 7) என வரும்.

**வெள்.**

(பயப்பே பயனாம், பசப்பு நிறனாகும்)

இ-ள்: பயப்பு என்னுஞ் சொல் பயன் என்னும் குறிப் புணர்த்தும்; பசப்பு என்னுஞ் சொல் பசலை நிறம் என்னும் பண் புணர்த்தும்.

உ-ம்: பயவாக் களரனையர் கல்லாதவர்' எனவும், 'மையில் வாண்முகம் பசப்பூ ரும்மே' எனவும் வரும்.

**ஆதி**

உ-ம்: பயப்பு—ஈனுதல்—பயன்
பசப்பு—பாசாங்கு—பசலை நிறம்

---

1 பொருள்: குற்றமில்லாத ஒளியுடைய முகம் பசலை நிறம் பரவும்.

இயைபு

**302. இயைபே புணர்ச்சி (11)**

ஆ. மொ. இல.

'Iyaipu' means joining

ஆல்.

'Iyaipu' means joining

பி. இ. நூ.

முத்து. ஒ. 33

...இயைபே புணர்ச்சி யாகும்மே.

**இளம்**

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், இதுவும் குறிப்பு.

வ-று: 'இயைந் தொழுகும்' என்றக்கால், பொருந்தி யொழுகும் என்பதாம்.

**சேனா**

(அடுத்த சூத்திரத்திற் காண்க)

**தெய்**

இ-ள்: இயைபு என்னுஞ் சொல் புணர்தல் என்பதன பொருள்படும், எ-று.

உ-ம்: 'இயைந் தொழுகும்'

**நச்**

இது குறிப்பு.

இ-ள்: இயைபே புணர்ச்சி—இயைபு கூட்டம் என்னும் குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : [1]"வளன் வலியுறுக்கும் உளமி லாளரொடு
இயைந்த கேண்மை இல்லா கியரோ" (புறம் 190)

என வரும்.

---

1. பொருள்: தம் செல்வத்தைப் பிறர்க்குதவாது வைத் திருக்கும் முயற்சியில்லாரொடு பொருந்திய நட்பு இல்லையாகுக.

வெள். } (அடுத்த சூத்திரத்திற் காண்க)
ஆதி.

இசைப்பு

**303.** இசைப் பிசை யாகும் (12)
(இசைப்பு இசை ஆகும்)

ஆ. மொ. இல.

'Isaippu' means tune

**ஆல்.**

'Isaippu' means music

பி. இ. நூ.

முத்து ஒ. 33

இசைப்பு இசை

**இளம்.**

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இஃது இசை பற்றி வந்தது.

வ-று: 'இசைந் தொழுகும்' என்றக்கால், இசையத்தோன்றி விடும் என்பதாம்.

**சேனா**

(இயைபே புணர்ச்சி, இசைப்பு இசையாகும்)

இ-ள்: 'இயைந் தொழுகும்' எனவும், 'யாழிசையூப் புக்கும்' எனவும், இயைபும் இசைப்பும், புணர்ச்சிக் குறிப்பும் இசைப் பொருண்மையும் உணர்த்தியவாறு.

**தெய்.**

இ-ள்: இசைப்பு என்னுஞ் சொல் இசைத்தல் என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம்: 'யாழிசையூப் புக்கு', 'இசைத்தலுமுரிய', 'வாயிலிசை' என ஒலிப் பொருட்கண் வந்தன.

**நச்**

இஃது, இசை கூறுகின்றது.

இ-ள்: இசைப்பு இசையாகும்—இசைப்பு இசைப் பொருண்மையை யுணர்த்தும், எ-று.

உ-ம்: 'வாயிற் றோன்றி யாழிசையூப் புக்கு' என வரும்.

**வெள்**

(இயைபே புணர்ச்சி, இசைப்பு இசையாகும்)

இ-ள்: இயைபு என்னுஞ் சொல் புணர்ச்சி என்னும் குறிப் புணர்த்தும், இசைப்பு என்னுஞ் சொல் இசைப் பொருண்மை யுணர்த்தும், எ-று.

உ-ம்: 'இயைந் தொழுகும்' எனவும், 'யாழிசையூப் புக்கும்' எனவும் வரும்.

**ஆதி.**

உ-ம்: இயைபு—ஒப்பம், பொருத்தம்—புணர்ச்சிமுறை
இசைப்பு—சேர்மானம்—இசைப்போக்கு.

**சிவ.**

'இசைப்பு என்பதற்குப் பொருத்தம் என்னும் பொருள் ஆகும்' என்பது இளம்பூரணர் கருத்து. இசை என்பதைப் பொருத்தம் எனக் கொண்டார். அதனால் அவர் உதாரணமாக "இசைந்தொழுகும் என்றக்கால் இசைய (பொருந்த)த் தோன்றி விடும்" என்பதைக் காட்டினார். இசை என்பது இசை (ஓசை) என்னும் பொருள் தருவது வெளிப்படையாதலின் இளம்பூரணர் கருத்தே நன்று.

அலமரல் தெருமரல்

**304.** அலமர றெருமர லாயிரண்டுஞ் சுழற்சி (13)

(அலமரல் தெருமரல் ஆஇரண்டும் சுழற்சி)

**ஆ. மொ. இல.**

'Alamaral' and 'therumaral'—these two
denote the state of trubled mind

**ஆல்.**

'Alamaral' and 'Terumaral' the two mean unsleadiness

பி. இ. நா.

இல.வி. 281—4

அலமரல் தெருமரல் சுழற்சி சாற்றலும்

முத்து. ஒ. 34

அலமரல் தெருமரல் ஆகும் சுழற்சி

**இளம்.**

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இதுவும் குறிப்பு.

வ-று: 'அலமர லாயம்' (ஐங். 64) என்றக்கால், சுழன்று வால் [1]ஆயம் என்பதாம். 'தெருமர லுள்ளம்' என்பது சுழன்று வரும் உள்ளம் என்பதாம்.

**சேனா.**

இ-ள்: 'அலமர லாயம்' (ஐங். 64) எனவும், 'தெருமர லுள்ள மோடு அன்னை துஞ்சாள்' எனவும், அலமரலும் தெருமரலும் சுழற்சியாகிய குறிப்புணர்த்தும், எ-று.

**தெய்.**

இ-ள்: அலமரல் என்னும் சொல்லும், தெருமரல் என்னும் சொல்லும் சுழலல் என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம்: அலமர லாயம் (ஐங். 64), 'தெருமர லுள்ளமோடு அன்னை துஞ்சாள்'.

**நச்.**

இது, குறிப்பு.

இ-ள்: அலமரல் தெருமரல் ஆயிரண்டுஞ் சுழற்சி—அலமரல் தெருமரல் ஆகிய அவ்விரண்டும் மனத் தடுமாற்றமாகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம்: 'அலமரல் ஆயம்' (ஐங். 64)
தெருமரல் உள்ளமோ டன்னையுந் துஞ்சாள்'

என வரும்.

**வெள்.**

இ-ள்: அலமரல் தெருமரல் என்னும் இரண்டு உரிச்சொற்களும் சுழற்சியாகிய குறிப்புணர்த்தும், எ-று.

1. ஆயம்—தோழியர் கூட்டம்.

உ-ம்: 'அலமர லாயம்' எனவும், 'தெருமர லுள்ளமொடு அன்னை துஞ்சாள்' எனவும் வரும்.

ஆதி.

உ-ம்: அலமரல்—திகைத்தல்—சுழல்தல்
தெருமரல்—திண்டாட்டம்—சுழல்தல்

மழ, குழ.

305. மழவுங் குழவு மிளமைப் பொருள (14)
(மழவும் குழவும் இளமைப் பொருள)

ஆ. மொ. இல.

'Maḷa' and 'Kuḷa' mean youth.

ஆல்.

'Maḷa' and 'Kuḷa' mean the young.

பி. இ. நா.

இல. வி. 281-5

மழவும் குழவும் இளமைக் கேற்றலும்.

முத்து. ஒ. 35

மழவும் குழவும் இளமைப் பொருள

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், இதுவும் குறிப்பு.

வ-று : 'குழக்கன்று கடிதி யாத்தாள்' என்றக்கால், இளங்கன்று கடிது யாத்தாள் என்றதாம். 'மழகளிறு' என்றக்கால், இளங்கன்று என்றவாறாம்.

சேனா

இ-ள் : 'மழகளிறு' (புறம். 38) எனவும், 'குழக்கன்று' (நாலடி 101) எனவும், மழவும் குழவும் இளமைக் குறிப்புப் பொருள் உணர்த்தும், எ-று.

தெய்

இ-ள் : மழ என்னுஞ் சொல்லும் குழ என்னுஞ் சொல்லும் இளமை என்பதன் பொருள்படும், எ-று.

உம் : 'மழகளிறு' (புறம். 38) குழக்கன்று (நாலடி. 101)

**நச்**

இதுவுமது.

இ-ள் : மழவும் குழவும் இளமைப் பொருள்—மழவும் குழவும் இளமை என்பதன் குறிப்புப் பொருண்மையையுடைய, எ-று.

உ-ம் : [1] வரைபுரையும் மழகளிற்றின் மிசை (புறம். 38)
'தடமருப் பெருமை மடநடைக் குழவி' (நற். 120)

**வெள்**

இ-ள் : மழ என்னும் சொல்லும் குழ என்னும் சொல்லும் இளமையென்னும் குறிப்புணர்த்து, எ-று.

உ-ம் : மழ களிறு, குழக்கன்று என வரும்.

**ஆதி.**

உ-ம் : மழ } மழமழப்பு — இளமையான
குழ } — ,,

சீர்த்தி

306. சீர்த்தி மிகு புகழ் (15)

**ஆ. மொ. இல.**

'Sīrthi' means great fame

**ஆல்.**

'Cīrti' means great fame.

**பி. இ. நூ.**

**முத்து. ஒ. 36**

சீர்த்தி மிகுபுகழ்

**இளம்.**

வ-று : [2] 'வயக்கஞ்சால் சீர்த்தி' என்றக்கால் மிக்கபுகழ் என்பதாம்.

---

1. பொருள் : மலைபோலும் இளம் யானை மீது. பெரிய கொம்புடைய எருமையது இளமையான நடையுடைய கன்று.
2. வயக்கம்—விளக்கம்.

**சேனா.**

(அடுத்த சூத்திரத்தில் காண்க)

**தெய்.**

இ-ள் : சீர்த்தி என்னுஞ் சொல் மிகுபுகழ் என்பதன் பொருள் படும், எ-று.

உ-ம் : வயக்கஞ்சால் சீர்த்தி.

**நச்**

(இதனையும் அடுத்த சூத்திரத்தையும் ஒரு சூத்திரமாகக் கொள்வர். உரை அடுத்த சூத்திரத்திற் காண்க)

**வெள்.**
**ஆதி.** } (அடுத்த சூத்திரத்திற் காண்க)

மாலை

307. மாலை யியல்பே (16)

(மாலை இயல்பே)

**ஆ. மொ. இல்.**

'Mālai' means nature

**ஆல்**

'Mālai' means the nature

**பி. இ. நூ.**

**முத்து. ஒ. 36.**

மாலை யியல்பே

**இளம்**

வ-று : [1] இரவரல் மாலையன்; (குறிஞ்சிப். 239)என்ற வழி இரவில் வரும் இயல்பினன் என்றதாம்.

**சேனா**

(சீர்த்தி மிகுபுகழ்; மாலையியல்பே)

---

1. இரவரல் மாலையன்—இரவில் வரும் இயல்பினன்.

இ-ள் : 'வயக்கஞ்சால் சீர்த்தி' எனவும், 'இரவரல் மாலையனே' (குறிஞ்சி. 239) எனவும், சீர்த்தியும் மாலையும், பெரும் புகழும் இயல்புமாகிய குறிப்புணர்த்தும், எ-று.

**தெய்**

இ-ள் : மாலையென்னும் சொல் இயல்பு என்னும் பொருள் படும், எ—று,

உ—ம் : [1] 'குறிப்பேவல் செயல் மாலைக் கொளை நடையந்தணீர்' (கலி. 9)

**நச்**

(சீர்த்தி மிகுபுகழ் மாலை யியல்பே)

இதுவுமது;

இ-ள் : சீர்த்தி மிகுபுகழ் மாலை இயல்பே — சீர்த்தி மிகு புகழும் மாலை இயல்புமாகிய குறிப்பு உணர்த்தும், எ—று.

உ-ம் : 'வயக்கஞ்சால் சீர்த்தி,'

'இரவரல் மாலையனே' (குறிஞ்சிப். 239)

என வரும்.

**வெள்**

(சீர்த்தி மிகுபுகழ் மாலையியல்பே)

இ-ள் : சீர்த்தி என்னுஞ்சொல் பெரும்புகழ் என்னும் குறிப் புணர்த்தும்; மாலை யென்னுஞ் சொல் இயல்பு என்னும் குறிப் புணர்த்தும், எ—று.

உ—ம் : 'வயக்கஞ்சால் சீர்த்தி' எனவும், 'இரவரல் மாலையனே எனவும், சீர்த்தி மாலை என்னும் சொற்கள் முறையே பெரும் புகழும் இயல்பும் ஆகிய குறிப்புணர்த்தின.

**ஆதி**

உ-ம் : சீர்த்தி — சிறப்பு — மிக்கபுகழ்
மாலை— பொழுது, பூமாலை — வரிசை, இயல்பு.

---

1. பொருள் : ஐம் பொறியும் நுமக்கு ஏவல் செய்தலை இயல்பாகவுடைய கோட்பாட்டையும் ஒழுக்கத்தையும் உடைய அந்தணீர்.

கூர்ப்பு, கழிவு

**308.** கூர்ப்புங் கழிவு முள்ளது சிறக்கும் (17)

(கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்)

**ஆ.மொ.இல.**

'Kūrppu' and 'Kaḻivu' denote excess

**ஆல்**

'Kūrppu' and 'Kaḻivu' mean superiority

**பி.இ.நூ:**

இல.வி. 381-6

கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறத்தலும்.

முத்து. ஒ. 37

கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்,

**இளம்**

வ-று: 'உப்புக் கூர்ந்தது', உப்புக் கழிந்தது என்பன சிறப்புச் சொல்லாயவாறாம்.

**சேனா**

இ-ள்: 'துனிகூர் எவ்வமொடு' (சிறுபாண். 39) எனவும், 'கழி கண்ணோட்டம்' (பதிற். 22) எனவும் கூர்ப்பும் கழிவும் ஒன்றனது சிறத்தலாகிய குறிப்பை யுணர்த்தும், எ-று.[1]

உள்ளது என்றது முன்சிறவா துள்ளது என்றவாறு.

**தெய்**

இ-ள்: கூர்ப்பு என்பதூஉம், கழிவு என்பதூஉம் முன்புள்ள தன்கண் மிகுதியைக் குறித்து வரும், எ-று.

உ-ம்: 'துனிகூர் எவ்வமொடு' (சிறுபாண். 39) 'கழி கண்ணோட்டம்' (பதிற். 22)

**நச்**

இதுவுமது.

இ-ள்: கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்—கூர்ப்பும் கழிவும் முன் சிறவாது உள்ளது ஒன்று சிறத்தலாகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

---

1. சிறப்ப—மேல்மேல் உயர்தல்.

உ-ம்: [1]'இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇத்
துனிகூர் எவ்வமொடு' (சிறுபாண். 38, 39)
[2]'சினனே காமம் கழிகண் ணோட்டம்' (பதிற். 22)
எனவரும்.

**வெள்**

இ-ள்: கூர்ப்பு கழிவு என்னும் உரிச்சொற்கள் இரண்டும், முன்சிறவாது உள்ளது சிறத்தலாகிய குறிப்பு உணர்த்துவன, எ-று.

உ-ம்: 'துனிகூர் எவ்வமொடு' எனவும், 'கழி கண்ணோட்டம்' எனவும், கூர்ப்பு கழிவு என்பன ஒன்றனது சிறத்தலாகிய குறிப்பை யுணர்த்தின. உள்ளது சிறத்தல் என்றது, முன்சிறவாது சுருங்கியுள்ளது பின் சிறந்து பெருகுதல் என்னும் குறிப்பினதாகும். இதனை மிகுதி என்னும் பொருளில் அடக்குவர் நன்னூலார். (நன். சொல். 455)

**ஆதி**

உ-ம்: கூர்ப்பு—கூர்மை—முன்னினும் சிறந்த
கழிவு —தள்ளுபடி—சிறந்த.

கதழ்வு, துனைவு.

309. கதழ்வுந் துனைவும் விரைவின் பொருள. (18)

(கதழ்வும் துனைவும் விரைவின் பொருள)

**ஆ. மொ. இல.**

'Kathaḷvu' and 'thunaivu' mean fastness.

**ஆல்**

Kataḷvu and tuṉaivu mean being fast

---

1. பொருள்: வள்ளியோர் இன்மையின் பரிசிலர் செல்லாத உலகத்தே பரிசில் தருவாரை விரும்பி, தன்னை வெறுத்தல் மிக்க வருத்தத்தோடே
2. சினமும் காமமும் முன்னிலும் சிறந்து வரும் கண்ணோட்டமும்.

## பி. இ. நூ.

நேமி. 59-2.

விரைவாம் கதழ்வும் துனைவும்.

இல. வி. 281-7.

கதழ்வும் துனைவும் விரைவு காட்டலும்.

## இளம்

வ-று: [1]'அண்டர்
கயிறரி யெருத்திற் கதழுந் துறைவன்' (குறுந்.117)

என்றக்கால், விரையுந் துறைவன் என்பதாம்.

[2]'துனைபறை நிவக்கும் புள்ளின்மான' (மலைபடு.55)

என்றக்கால், விரைந்து பறக்கும் என்றவாறாம்.

## சேனா

இ-ள்: 'கதழ்பரி நெடுந்தேர்' (நற். 203) எனவும், ,துனை பறை நிவக்கும் புள்ளின்மான' (மலைபடு.55) எனவும், கதழ்வும் துனைவும் விரைவாகிய குறிப்புணர்த்தும், எ-று.

## தெய்

இ-ள்: கதழ்வு என்னும் சொல்லும் துனைவு என்னும் சொல்லும் விரைவு என்பதன் பொருள்படும், எ-று.

[3]கதழ், துனை என்னும் சொற்களை இனிது விளக்குதற்குப் பெயராக்கி ஓதினார். மேற்சொல்லப்பட்டவற்றினும், இனி வருவனவற்றினும் [4]குறைச் சொல்லாகி இவ்வாறு வருவன அறிந்து கொள்க.

---

1. பொருள்: இடையராற் பிணிக்கப்பட்ட கயிற்றை அறுத்துச் செல்லும் எருத்தைப்போல விரைந்து செல்லுதற்கிடமாகிய கடல் துறைவன்.
2. பொருள்: விரைந்த பறத்தல் தொழிலில் ஓங்கும் பறவைத்திரள் போல
3. கதழ், துனை என்பனவே உரிச்சொற்கள். அவற்றை தொழிற்பெயர் விகுதியாகிய 'வு' என்பதைச் சேர்த்துக் கதழ்வு, துனைவு என ஓதினார் ஆசிரியர்.
4. குறைச்சொல்லாகி இவ்வாறு வருவன—உரிச்சொல்லாகி இவ்வாறு தொழிற்பெயர்ப்படுத்து வருவன.

உ-ம்: 'கதழ்பரி நெடுந்தேர்' (நற். 203), 'துனைபரி துரக்கும் துஞ்சாச் செலவின்' (அகம். 9)

**நச்**

இதுவுமது.

இ-ள்: கதழ்வும் துனைவும் விரைவின் பொருள—கதழ்வும் துனைவும் விரைவு என்னும் சொல்லினது குறிப்புடைய, எ-று.

உ-ம்: அண்டர்,
கயிறரி யெருத்தின் கதழுந் துறைவன்' (குறுந். 117)
'துனைபரி துரக்கும் துஞ்சாச் செலவின்' (அகம். 9)

எனவரும்.

**வெள்**

இ-ள்: கதழ்வு துனைவு என்னும் உரிச்சொற்கள் இரண்டும் விரைவாகிய குறிப்பினைப் பொருளாக வுடையன, எ-று.

உ-ம்: 'கதழ்புரி நெடுந்தேர்' எனவும், 'துனைபரி நிவக்கும் புள்ளின்மான' எனவும் கதழ்வும் துனைவும் விரைவென்னும் குறிப்புணர்த்தின.

**ஆதி**

உ-ம்: கதழ்வு............ ............ விரைவான

அதிர்வு, விதிர்ப்பு

**310.** அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும். (19)

(அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்)

**ஆ. மொ. இல.**

'Athirvu' and 'Vithirpu' mean trembling

**ஆல் :**

'Atirvu' and 'Vitirppu' mean trembling

**பி. இ. நூ.**

இல. வி. 281–8

அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்தலும்

முத்து.ஒ. 38

அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கப் பொருள.

**இளம் :**

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், இவையெல்லாம் குறிப்பு.

வ-று : 'அதிர்கண் முரசம்' என்றக்கால் நடுங்குகண் முரசம் என்பதாம்.

'விதிர்ப்புற்றுக் கண்ணிமையார்' என்றக்கால் நடுக்குற்று என்பதாம்.

**சேனா.**

இ-ள் : 'அதிர வருவதோர் நோய்' (குறள் 429) எனவும்,[1] விதிர்ப்புற வறியா வேமக் காப்பினை' (புறம் 20) எனவும் அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கமாகிய குறிப்புணர்த்தும், எ-று.

* 'அதிழ்வு' என்று பாடம் ஓதி, 'அதிழ்கண் முரசம்' என்று உதாரணங் காட்டுவாரும் உளர்.

**தெய் :**

இ-ள்: அதிர்வு என்பதூஉம், விதிர்வு என்பதூஉம் நடுக்கம் என்பதன் பொருள் உணர்த்தும், எ-று.

உ-ம்: [2]"எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்' (குறள். 429)'.
'விதிர்ப்புற வறிய வேமக் காப்பினை' (புறம். 20)

**நச்.**

இதுவுமது.

இ-ள் : அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ் செய்யும்—அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கமாகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : அதிர வருவதோர் நோய்

விதிர்ப்புற வறியா ஏமக் காப்பினை (புறம். 20) என வரும்.

---

1. பொருள் : நடுக்கமுறுதலறியாத சேமமாகிய காவ லுடையை.

* யார் என்பது அறியக்கூடவில்லை.

2. பொருள் : எதிர்காலத்து வரக் கடவதாகிய ஒன்றை முன்னதாக அறிந்து காக்கவல்ல அறிவுடையார்க்கு நடுங்கும்படி வரக் கூடிய துன்பம் இல்லையாம்.

வெள்.

இ-ள் : அதிர்வு விதிர்ப்பு என்னும் உரிச்சொற்கள் இரண்டும் நடுக்கமாகிய குறிப்பு உணர்த்துவன, எ-று.

உ-ம் : 'அதிர வருவதோர் நோய்' எனவும், 'விதிர்ப்புற வறியா ஏமக் காப்பினை' எனவும், நடுக்கமாகிய குறிப்புணர்த் தின.

ஆதி.

உ-ம் : அதிர்வு — அதிர்ச்சி — நடுக்கம்
விதிர்வு — கலக்கம் — நடுக்கம்.
வார்தல், போகல், ஒழுகல்.

**311** **வார்தல் போக லொழுகன் மூன்றும்**
**நேர்பு நெடுமையுஞ் செய்யும் பொருள.** **(20)**

(வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்
நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள).

ஆ. மொ: இல.

'Vārthal' 'Pōkal' and 'Oḷukal' — these three mean order and length.

ஆல்.

The three 'Vārtal' ,Pōkal' Oḷukal mean straight-forwardness and length.

பி. இ. நூ.

இல. வி. 284

வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்
நேர்வும் நெடுமையும் நிலவக் காட்டலும்

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இது பண்பு பற்றி வந்தது.

வ-று : 'வார்கயிற் றொழுகை' (அகம் 172) என்றக்கால், நேர்கயிற் றொழுகை என்பதூஉம், நெடுங்கயிற் றொழுகை என்பதூஉமாம்.

போகுகொடி, ஒழுகு கொடி என்புழியும் அவ்விரு பொருளும் படும்.

**சேனா.**

இ—ள். [1] வார்ந்திலங்கு வையெயிற்று (குறுந். 14), வார்கயிற் றொழுகை' (அகம் 172) எனவும், போகுகொடி மருங்குல் 'வெள்வேல் விடத்தரோடு காருடைபோகி' (பதிற். 13) எனவும் 'ஒழுகு கொடி மருங்குல்', 'மால்வரை யொழுகிய வாழை, (சிறுபாண். 21) எனவும், வார்தல் போகல் ஒழுகல் என்று மூன்று சொல்லும் நேர்மையும் நெடுமையுமாகிய பண்புணர்த் தும், எ-று.

**தெய்**

இ-ள்: வார்தல் என்னும் சொல்லும், போகல் என்னும் சொல்லும் ஒழுகல் என்னும் சொல்லும் நேர்பு என்பதன் பொருண்மையும் நெடுமை என்பதன் பொருண்மையும் உணர்த்தும், எ-று.

உ-ம்: வார்ந்திலங்கு வையெயிற்று (குறுந். 14), 'போகு கொடி மருங்குல்' இவை நேர்மை. 'வார்கயிற் றொழுகை' (அகம் 173) 'வெள்வேல் விடத்தரோடு காருடைபோகி', 'மால்வரை யொழுகிய வாழை' (சிறுபாண். 21) இவை நெடுமை.

**நச்.**

இது பண்பு.

இ—ள்: வார்தல் போகல் ஒழுகல் மூன்றும் நேர்பும் நெடு மையும் செய்யும் பொருள — வார்தல் போகல் ஒழுகல் என்ற மூன்று சொல்லும் நேர்மையும் நெடுமையும் உணர்த்தும் பண்பினைத் தமக்குப் பொருளாகவுடைய, எ-று.

உ-ம்: 'வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி
யரிவையை' (குறுந்.14)

[2] 'தெள்ளறல் தழீஇய வார்மண லடைக்கரை'
(அகம்.34)

எனவும்,

---

1. பொருள் : வார்ந்து இலங்கு வைஎயிறு =
நேர்மையாகி விளங்கும் கூரிய பல்
வார்கயிற்று ஒழுகை = நீண்ட கயிற்றின்
வெள்வேல்...போகி =
மால்வரை ஒழுகிய வாழை = பெருமலையில்
நீண்டவாழை

2. பொருள் : தென்றல் தழுவிய மணலடைந்த நீண்ட கரை.

'போகு கொடி மருங்குல்'
[1] 'திரிகாய் விடத்தரொடு காருடைபோகி' (பதிற்.13)

எனவும்,

'ஒழுகு கொடி மருங்குல்'
'மால்வரை யொழுகிய வாழை' (சிறுபாண். 21)

எனவும் வரும்.

பெரு

இ-ள்: வார்தல் போகல் ஒழுகல் என்னும் மூன்று சொல்லும நேர்மையும் நெடுமையும் ஆகிய பண்புணர்த்தும், எ-று.

உ-ம்: 'வார்ந்திலங்கு வையெயிற்று' எனவும், 'வார்கயிற் றொழுகை' எனவும, வார்தல் என்னும் உரிச்சொல் முறையே நேர்மையும் நெடுமையும் உணர்த்தியது. 'போகு கொடி மருங்குல்' எனவும், 'வெள்வேல் விடத்தரோடு காருடைபோகி' எனவும் போகல் என்னும் உரிச்சொல் முறையே நேர்மையும் நெடுமையும் உணர்த்தியது. 'ஒழுகுகொடி மருங்குல்' எனவும், 'மால்வரை யொழுகிய வாழை' எனவும் ஒழுகல் என்னும் உரிச்சொல் முறையே நேர்மையும் நெடுமையும் உணர்த்தியது.

ஆதி.

உ-ம்: வார்தல் — தலை வாருதல் — நீண்ட (வார்சிலை)
போகல் — போகுதல் — நீளுதல்
ஒழுகல் — ஒழுக்கமுறை — நீளம்

தீர்தல், தீர்த்தல்

312. தீர்தலுந் தீர்த்தலும் விடற்பொருட் டாகும் (21)
(தீர்தலும தீர்த்தலும் விடல்பொருட்டு ஆகும்).

ஆ.மொ.இல.

'Thirthal' and 'thirththal' mean separation and being separated respectively.

ஆல்.

'Tirtal' and 'Tirttal' mean separation.

பி. இ. நூ.

முத்து. ஒ. 39
தீர்தல் தீர்த்தல் விடற்பெயர்க் கிளவி

---

[1] வெள்வேல் விடத்தரொடு எனவும் பாடம். திரிகாய்... போகி = முறுக்கிய காயுடைய விடத்தர் மரத்துடனே கரிய உடைமரமும் நீண்டு.

**இளம்**

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இதுவும் குறிப்பு.

வ-று: 'ஊரின் தீர்ந்தான்' என்றக்கால், ஊரிற்பற்று விட்டான் என்பதாம். 'பேய் தீர்த்தான்' என்றக்கால், பேய் விடுவித்தான் என்பதாம்.

**சேனா.**

இ-ள்: தீர்தலும் தீர்த்தலும் என்னும் இரண்டும் விடுதலாகிய குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம்: 'துணையிற் தீர்ந்த கடுங்கண் யானை' (நற். 108) என வரும். தீர்த்தல் விடுதற் பொருண்மைக்கண் வந்தவழிக் கண்டு கொள்க.

[1] தீர்த்தல் என்பது செய்வித்தலை யுணர்த்தி நின்ற நிலைமையெனின், செய்வித்தலை யுணர்த்து நிலைமை வேறோதின், 'இயைபே புணர்ச்சி' (உரி. 12) என்புழியும் 'இயைப்பு' என வேறு ஓதல் வேண்டும்; அதனால் தீர்த்தலும் செய்தலை யுணர்த்துவதோர் உரிச்சொல் எனவேபடும் என்பது.

[2] 'விடற்பொருட்டாகும்' என்பதனை இரண்டனோடும் கூட்டுக. பன்மையொருமை மயக்கம் எனினும் அமையும்.

**தெய்.**

இ-ள்: தீர்தல் என்னும் சொல்லும், தீர்த்தல் என்னும் சொலலும் விடுதல் என்னும் பொருள்படும், எ-று.

---

1. இயைபு இயைப்பு என்னும் இரண்டும் புணர்ச்சி என்னும் ஒரு பொருளையே தரும். அதனால் இயைப்பு என்பதை இயைபு என்பதில் அடக்கி இயைபேபுணர்ச்சி யென்றார். தனித்தனிப் பொருளாயின் தனித்தனிச் சூத்திரம் செய்தல் வேண்டும். அவ்வாறே, தீர்தலும் தீர்த்தலும் ஆகிய இரண்டுமே 'விடல்' எனும் ஒரே பொருளைத் தருவன. தன்வினை பிறவினை நிலையில் வேறுவேறு பொருளைத்தரின் தனித்தனிச் சூத்திரம செய்தல் வேண்டும்.
2. பொருட்டு என ஒருமையிற் கூறியதால் இவ்வாறு எழுதினார். 'தீர்தலும் தீர்த்தலும் விடற் பொருள வாகும்'' எனப் பன்மயிற் கூறியிருத்தல் வேண்டும். ஒருமையிற் கூறியதால் தீர்தல் விடற் பொருட்டாகும் தீர்த்தல் விடற் பொருட்டாகும் எனத் தனித்தனிக் கூடல் வேண்டும் என்பதாம்.

உ-ம்: 'துணையிற் றீர்ந்த கடுங்கண்யானை' (நற். 108) இது தன்வினை. நோய் தீர்த்தான் என்பது பிறவினை — விடுத்தான் எனப்படும். இவ்வேறுபாட்டான் இரண்டாக ஓதினார்.

**நச்.**

இது, குறிப்பு

இ-ள்: தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட்டு ஆகும்— தீர்தலும் தீர்த்தலும் விடல்' என்னும் உரிச்சொல்லது குறிப்புப் பொருண்மையுடைத்தாம், எ-று.

உ-ம்: 'துணையிற் றீர்ந்த கடுங்கண் யானை' (நற். 108)
'நங்கையைச் செற்ற தீங்குத் தீர்த்துநீர் கொண்மின்' (சீவக. 1275) எனவரும.

இதனானே விடல் என்னும் உரிச்சொல் அடியாகப் பிறக்கும் பெயரும் வினையும் தன்வினையும் பிறவினையும் பற்றிப் பிறக்கும் என்பது உணர்த்தற்கு 'விடற்பொருட்டு' என்றார். 'இயைபு' என்பதற்கு 'இயைப்பு' என வழங்காது 'இயைக்க', 'இயைவிக்க' என வேறுபட்டு வழங்குதலின் தன்வினை பிறவினையுடன் ஓதாராயினர்.

ஒன்றென முடித்தலால், பிளத்தல், அணங்கல் என்றாற் போலத் தன்வினை பிறவினைக்குப் பொதுவாய் வருவனவும் கொள்க. இப்பிறவினை 'தீர்வித்தல்', 'தீர்ப்பித்தல்' என வாய்பாடு வேறுபட்டு இக்காலத்து வழங்குமாறும் உணர்க.

**வெள்.**

இ-ள்: தீர்தல் தீர்த்தல் என்னும் இரண்டுரிச் சொற்களும் விடுதலாகிய குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம்: 'துணையிற் றீர்ந்த கடுங்கண் யானை' (நற். 108)
'நங்கையைச் செற்ற தீங்கு தீர்த்தனர் கொண்மின்'. (சீவக. 1275)

**ஆதி**

உ-ம்: தீர்த்தல், தீர்த்தல் — முடித்துவிடல் — நீங்குதல்.

**சிவ.**

தீர்தல் தீர்த்தல் இரண்டுமே தன்வினைப் பொருளன என்பது சேனாவரையர் கருத்து. மற்றையோர் முறையே தன்வினை பிறவினைகளுக்குரியன எனக் கொண்டனர், ஆசிரியர் 'விடற்பொருட்டு' என்றது சிறப்புடையது. 'விடு' என்பது தன்வினைப் பகுதியாகவும் பிறவினைப் பகுதியாகவும் வரும். விடல்

எனும் தொழிற் பெயர்க்குத் தீர்தல் எனும் தன்வினைக்கேற்ப விடுதல் என்றும், தீர்த்தல் என்னும் பிற வினைக்கேற்ப விடுத்தல் என்றும் பொருள் கொள்ளலாம். அவ்வாறு கொண்டே சேனாவரையரை யொழிந்தோர் உதாரணம் தந்தனர். சேனாவரையர் மட்டும் தீர்த்தலும் தன்வினை யென்றார். உதாரணம் காட்டவில்லை. நச்சினார்க்கினியர் அவரை மறுத்தார்.

இயைபு என்பது தன்வினை இயைப்பு என்பது பிற வினை. இரண்டையும் ஒரு சூத்திரத்திற் கூறவில்லை யாசிரியர். ஏன் எனின் இயைபு என்பதையே இயைக்க இயைவிக்க எனப் பிற வினைப்படுத்தலாம். இயைப்பு என்பதை அவ்வாறு பிறவினைப் படுத்த இயலாது. ஆதலின் சேனாவரையர் கூற்று ஆய்தற் குரியது.

கெடவரல், பண்ணை

**313,** கெடவரல் பண்ணை யாயிரண்டும் விளையாட்டு (22)

(கெடவரல் பண்ணை ஆஇரண்டும் விளையாட்டு)

**ஆ. மொ. இல.**

'Kedavaral' and 'Paṇṇai' —these two mean games.

**ஆல்**

The two 'Ketavaral' and Paṇṇai mean games.

**பி.இ.நூ:**

இல. வி. 281-9.

கெடவரல் பண்ணை விளையாட் டுணர்த்தலும்.

**இளம்**

வ-று : [1] 'கெடவர லாயம்' என்றக்கால், விளையாட்டாயம் என்பதாம்.

[2] 'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்' என்றக்கால், விளையாட்டுள் தோன்றிய பொருள் என்பதாம்,

---

1. கெடவரல் ஆயம்—விளையாட்டுத் தோழியர்கூட்டம்.
2. பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருள் —விளையாட்டுப் பொருளாகத் தோன்றிய முப்பத்திரண்டு பொருள்.

**சேனா**

இ-ள்: 'கெடவர லாயமொடு' எனவும், 'பண்ணைத் தோன் றிய வெண்ணான்கு பொருளும்'' (மெய்ப். 1) எனவும் கெட வரலும் பண்ணையும் விளையாட்டாகிய குறிப்புணர்த்தும், எ-று.

**தெய்**

இ-ள் : கெடவரல் என்னுஞ் சொல்லும், பண்ணை என்னுஞ் சொல்லும் விளையாட்டு என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம் : 'கெடவர லாயம்', பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருளும்' (மெய்ப். 1).

**நச்**

இதுவும் அது,

இ-ள் : கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு— கெடவரல் பண்ணை என்னும் அவ்விரண்டும் விளையாட்டாகிய குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம் : 'கெடவர லாயமொடு'

'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்'

என வரும். விளையாட்டு என்றது விளையாட்டுக் கருத்தினை.

**வெள்**

இ-ள் : கெடவரல் பண்ணை என்னும் அவ்விரண்டு சொற் களும் விளையாட்டு என்னும் குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம் : 'கெடவர லாயமொடு' எனவும், 'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்' எனவும் அவ்விரு சொற் களும் விளையாட்டாகிய குறிப்புணர்த்தின.

**ஆதி**

உ-ம் : கெடவரல் — கேடுநேரல் —விளையாட்டு
பண்ணை —திரட்டிக் கூட்டல் —விளையாட்டு

பாத்தி

தட, கய, நளி

**314. தடவுங் கயவு நளியும் பெருமை (23)**

**(தடவும் கயவும் நளியும் பெருமை)**

ஆ. மொ. இல.

'Tada' 'Kaya' and naḷi mean bigness

ஆல்.

Tata Kaya Naḷi mean bigness

பி.இ.நூ.

முத்து. ஒ. 40

தடவொடு கயநளி பெருமைப் பொருள.

இல. வி. 284-3, 4, 5.

தடவே பெருமையும்...... சாற்றலும்
கயவே பெருமையும்...... கருதலும்
நளியே பெருமையும்...... நவிற்றலும்

இளம்.

வ-று : 'தடந்தோள்'
'கயவெள் ளருவி' (அகம். 38)
'நளிமலை நாடன்' (புறம். 150)

என வரும்.

சேனா

இ-ள்: [1]'வலி துஞ்சு தடக்கை வாய்வாட் குட்டுவன்' (புறம். 294): [2]'கயவாய்ப் பெருங்கை யானை' (அகம். 118), நளிமலை நாடன்' (புறம். 150) எனத் தடவும் கயவும் நளியும் பெருமையாகிய பண்பு புணர்த்தும், எ-று.

தெய்

இ-ள்: தட என்னும் சொல்லும் கய என்னுஞ் சொல்லும் நளியென்னுஞ் சொல்லும் பெருமை என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம்: 'தடக்கை' (புறம். 294), 'கயவாய்' (அகம் 118) 'நளி மலை' (புறம். 150).

---

1. பொருள் : வலிமை பொருந்திய பெரிய கையையும் கூர்மை வாய்ந்த வாளையும் உடைய குட்டுவன்.
2. பொருள் : பெரிய வாயையும் பெரிய கையையும் உடைய யானை.

**நச்**

இது, பண்பு

இ-ள்: தடவும் கயவும் நளியும் பெருமை—தடவும் கயவும் நளியும் பெருமையாகிய பண்புணர்த்தும், எ-று

உ-ம்: [1]'வலி துஞ்சு தடக்கை வாய்வாட் குட்டுவன், (புறம். 394).

[2]'இரும்பிடி கன்றொடு விரைஇய கயவாய்ப்
பெருங்கை யானை' (அகம். 118)

[3]'நளிமலை நாடன் நள்ளியவன் எனவே' (புறம். 150) எனவரும்.

[4]'கயவர்' (குறள். 1076) என்பது வழக்கு.

**வெள்**

இ-ள்: தட கய நளி என்னும் மூன்றுரிச் சொற்களும் பெருமை யென்னும் பண்புணர்த்துவன, எ-று,

உ-ம்: 'வளிதுஞ்சு தடக்கை வாய்வாட் குட்டுவன்' (புறம். 394) எனவும், 'கயவாய்ப் பெருங்கை யானை' (அகம் 118 எனவும், 'நளிமலை நாடன் நள்ளி' (புறம். 150) எனவும் பெருமையாகிய பண்புணர்த்தின.

**ஆதி**

பொருள் : தட கய நளி — பெரிய.
தட—(மேலும் ஒரு பொருள்)

**315. அவற்றுட்
டடவென் கிளவி கோட்டமுஞ் செய்யும். (24)**

(அவற்றுள்
தடஎன் கிளவி கோட்டமும் செய்யும்).

---

1. பொருள் : வன்மை தங்கிய பெரிய கையையும் கூரிய வாளையும் உடைய குட்டுவன்.

2. பொருள் : கரிய பெண் யானையுடனும் கன்றுடனும் விரைந்து சென்ற பெரிய வாயையும் பெரிய கையையும் உடைய ஆண் யானை.

3. பொருள் : அவன் பெரிய மலை நாடனாகிய நள்ளி என்று

4. கயவர் என்பது சிறுமையுடையார் என்னும் பொருளில் வழங்கும் உலக வழக்குச் சொல். (அது பின்னர் இலக்கிய வழக்காகவும் ஆகியது)

**ஆ. மொ. இல.**

Of them, 'tada' means curve also

**ஆல்**

Among them 'tata' may also mean curve.

**பி. இ. நூ.**

இல வி. 284-3.

தடவே...கோட்டமும் சாற்றலும்.

**இளம்.**

உரை : தட என்பது பெருமையே யன்றிக் [1]கோட்டப் பொருளினையும் விளக்கும், எ-று.

வ-று : 'தட மருப்பு எருமை' (நற். 120) எனவரும்.

**சேனா**

*(315, 316, 317* எண்கள் உள்ள மூன்று சூத்திரங்களுக்கும் சேர்ந்து உரை எழுதுதலின் இச்சூத்திரவுரையினை *317* ஆம் சூத்திரத்திற் காண்க.)

**தெய்.**

*(315, 316, 317* ஆம் சூத்திரங்களை ஒரே சூத்திரமாகக் கொண்டு உரை செய்வர். *317* ஆம் சூத்திரம் பார்க்க.)

**நச்**

இஃது எய்தியதன் மேல் சிறப்பு விதி.

இ-ள் : அவற்றுள் தட என் கிளவி கோட்டவும் செய்யும்—முற்கூறிய மூன்றனுள் தட என்னும் சொல் கோட்டம் என்னும் பண்பினையும் உணர்த்தும், எ-று.

உ-ம் : 'தடமருப்பு எருமை' (நற். 120) எனவரும்.

**வெள்**

இ-ள் : அம்மூன்றுரிச் சொற்களுள் தட என்னுஞ் சொல் வேற்றுமையே யன்றிக் கோடுதல் என்னும் பண்பையும் உணர்த்தும், எ-று.

உ-ம் : 'தடமருப் பெருமை' எனவரும்.

**ஆதி.**

பொருள் : தட—அகன்ற—கோடிய, வளைந்த

---

1. கோட்டம்—வளைவு.

கய (மேலும் ஒரு பொருள்)

**316. கயவென் கிளவி மென்மையுஞ் செய்யும்** (25)

(கய என் கிளவி மென்மையும் செய்யும்)

**ஆ. மொ. இல.**

'Kaya' means tenderness also

**ஆல்.**

The morpheme 'Kaya' means tenderness also.

**பி. இ. நூ.**

இல.வி. 284—4

கயவே பெருமையும் மென்மையும் கருதலும்

**இளம்**

உரை : கய என்னும் சொல் பெருமையே யன்றி மென்மைப் பொருளும்படும், எ-று.

வ-று : 'கயந்தலை மடப்பிடி' (நற். 137) எனவரும்.

**சேனா.**
**தெய்.** } (317 ஆம் சூத்திரத்திற் காண்க)

**நச்.**

இதுவுமது.

இ-ள் : கய என் கிளவி மென்மையும் செய்யும்— கய என்னும் சொல் மென்மை என்னும் பண்பினையும் உணர்த்தும், எ—று.

உ-ம்: 'கயந்தலை மடப்பிடி' (நற். 137) எனவரும்.

**வெள்.**

இ-ள் : கய என்னும் உரிச்சொல் பெருமையே யன்றி மென்மையாகிய பண்பையும் உணர்த்தும், எ-று.

உ-ம் : 'கயந்தலை மடப்பிடி' (நற். 137) எனவரும். மெல்லியோர் என்ற பொருளிற் 'கயவர்' என்னும் சொல் கீழோரைக் குறித்து வழங்குதலை உலக வழக்கிற் காணலாம்.

**ஆதி.**

பொருள் : கய—கீழ்த்தர—மெல்லிய.

நளி (மேலும் ஒரு பொருள்)

**317. நளியென் கிளவி செறிவு மாகும் (26)**

(நளி என் கிளவி செறிவும் ஆகும்)

**ஆ.மொ.இல.**

'Nali' means denseness also

**ஆல்.**

The morpheme Naḻi means being dense too.

**பி. இ. நூ.**

**நேமி. சொ. 58**

நளி செறிவாம்.

**இல.வி 284—5**

நளியே.........செறிவும் நவிற்றலும்

**இளம்.**

உரை : நளி என்னும் சொல் பெருமையே யன்றிச் செறிவுப் பொருளும் படும், எ-று.

வ-று : 'நளியிருள்' என்றக்கால் செறியிருள் என்பதாம். முன்றிடத்து உம்மையும் இறந்தது தழீஇயின.

**சேனா**

***(315, 316, 317 ன் உரை)***

இ-ள் : 'தடமருப் பெருமை' (நற். 120) 'கயந்தலை மடப்பிடி' (நற். 137), நளியிருள் எனத் தடவென் கிளவி முதலாயின பெருமையே யன்றிக் கோட்டமும் மேன்மையுமாகிய பண்பும், செறிவாகிய குறிப்பும் உணர்த்தும், எ-று.

**தெய்.**

***(315, 316, 317ன் உரை)***

இ-ள் : மேற் சொன்னவற்றுள், தட என்னுஞ் சொல் கோடுதல் என்பதன் பொருண்மையும், கய என்னும சொல் மென்மை என்பதன் பொருண்மையும், நளிதல் என்பது செறிதல் என்பதன் பொருண்மையும் படும், எ-று.

உ-ம் : 'தடமருப் பெருமை', 'கயந்தலை மடப்பிடி' 'நளியிருள்'.

**நச்.**

இதுவுமது.

இ-ள் : நளி என் கிளவி செறிவும் ஆகும். நளி என்னும் சொல் செறிவு என்னும் குறிப்பினையும் உணர்த்தும், எ-று.

உ-ம் : [1] 'சிலைப்பு வல்லேற்றிற் றலைக்கைத் தந்துநீ
நளிந்தனை வருதல் உடன்றன ளாகி' (பதிற். 52)

என வரும்.

**வெள்.**

இ-ள் : நளி யென்னும் உரிச்சொல் பெருமையேயன்றிச் செறிவு என்னும் குறிப்பினையும் உணர்த்தும், எ-று.

உ-ள் : 'நளியிருள்' என வரும்.

**ஆதி**

பொருள் : நளி — ........ — செறிந்த, அடர்ந்த.

பழுது

**318. பழுது பயமின்றே** (27)

(பழுது பயம் இன்றே)

**ஆ. மொ. இல.**

'Paḷuthu' means, uselessness.

**ஆல்**

Paḷutu means uselessness.

**இளம்**

வ-று : 'பழுதே வந்தார்' என்றக்கால், பயமின்றியே வந்தார் என்பதாம்.

**சேனா**

(இது முதல் மூன்று சூத்திரங்களுக்கு 320-ல் உரை காண்க).

**தெய்.**

இ-ள் : பழுது என்னும் சொல் பயனின்மை யுணர்த்தும். எ-று.

உ-ம் : 'பழுதுகழி வாழ்நாள்."

---

1. பொருள் : சிலைக்கும் (=தலை நிமிர்ந்து ஒலி செய்யும்) வலிய ஆனேற்றைப் போன்று இருந்த தலைக்கை கொடுத்து நீ மகளிர் கூட்டத்தில் நெருங்கியவனாய் வருதற்கு மாறுபட்டவளாய்

நச்

இது குறிப்பு.

இ-ள் : பழுது பயம் இன்றே— பழுது பயம் இன்மையாகிய் குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'பழுது கழி வாழ்நாள்' என வரும்.
பழுது குற்றத்தை யுணர்த்துதல் வழக்கு.

வெள்

(சூ. 320-ல் காண்க)

ஆதி

பொருள்: பழுது — ஊனமுற்ற — பயன்படா

சாயல்

319. சாயன் மென்மை (28)

(சாயல் மென்மை)

ஆ. மொ. இல.

'Sāyal' means tenderness

ஆல்.

'Cāyal' means softness.

இளம்

வ-று : 'சாரல் நாடன் சாயல் மார்பு' (பதிற். 16) என்றக் கால், மெல்லிய மார்பு என்பதாம்.

சேனா இ-ள் :

(320-ல் காண்க)

தெய்.

இ-ள் : சாயல் என்னும் சொல் மென்மை என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம் : 'சாயல் மார்பு'

நச்

இது பண்பு.

இ-ள் : சாயல் மென்மை — சாயல் என்னும் சொல் 'மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம் பொறியான் நுகரும் மென்மையை யுணர்த்தும், எ-று.

உ-ம் : [1] 'மயிற் சாயல் மகள் வேண்டிய'
'சாயல் மார்பு நனியலைத் தன்றே' (பதிற். 16)

என இவை [2] ஒளியானும் ஊற்றானும் பிறந்த மென்மை உணர்த்தின.

'அமிர்தன்ன சாயல்' (சீவக. 8)

என்பது தன்னை நுகர்ந்தார் பிறிது நுகராமல் தடுக்கும் மென்மையை யுணர்த்தவே [3] பல மென்மையும் அடங்கின. ஒழிந்தன வந்துழிக் காண்க.

**வெள்** இ-ள் :
(320-ல் காண்க.)

**ஆதி**
பொருள் : சாயல் — தோற்றம் — மெல்லிய.

முழுது

320. முழுதென் கிளவி யெஞ்சாப் பொருட்டே (29)
(முழுது என் கிளவி எஞ்சாப் பொருட்டே)

**ஆ. மொ. இல.**
'Muluthu' means completeness.

**ஆல்.**
'Mulutu' means being complete

**இளம்.**
வ-று : 'முழுக்கறை பெய்தான்' என்றக்கால் எஞ்சாமை பெய்தான் என்பதாம்.

**சேனா.**
(318, 319, 320 ஆம் சூத்திரங்களின் உரை)

---

1. பொருள் : மயில் போலும் ஒளியால் மென்மையுடைய மகள்
மென்மையான மார்பு மிக அலைத்தது.
2. மயிற்சாயல் என்பதில் மயிலின் ஒளி மென்மையும் சாயல் மார்பு என்பதில் தொடுவுணர்ச்சி மென்மையும் உணர்த்தியது காண்க.
3. பல மென்மையாவன ஐம்பொறி நுகர்வுக்காகும் மென்மைகள்.

இ-ள் : 'பழுது கழி வாழ்நாள்', 'சாயல் மார்பு', மண்முழு தாண்ட எனப் பழுது முதலாயின பயமின்மையாகிய குறிப்பும் மென்மையாகிய பண்பும் எஞ்சாமையாகிய குறிப்பும் உணர்த்தும், எ-று.

**தெய்**

இ-ள்: முழுது என்னுஞ்சொல் ஒழியாமையை உணர்த்தும், எ-று.

உ-ம் : உலக முழுதாண்ட (சிலப். அந்தி 1.)

**நச்**

இது குறிப்பு.

இ-ள் : முழுது என் கிளவி எஞ்சாப் பொருட்டே—முழுது என்னும் சொல் எஞ்சாமையாகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'மண் முழுதாண்ட நின் முன்னோர் போல' என வரும்.

**வெள்**

(சூ. 318, 319, 320ன் உரை).

இ-ள் : பழுது என்னும் சொல் பயனின்மையாகிய குறிப்பு உணர்த்தும்; சாயல் என்னும் சொல் மென்மையாகிய பண் புணர்த்தும்; முழுது என்னும் சொல் எஞ்சாமையாகிய குறிப் புணர்த்தும், எ-று.

உ-ம் : 'பழுது கழி வாழ்நாள்' எனவும், 'சாயல் மார்பு' எனவும் 'மண்முழுதாண்ட' எனவும் அவை முறையே பயனின் மையும், மென்மையும், எஞ்சாமையும் உணர்த்தின. பயனின்மை யைக் குறிக்கும் பழுது என்னுஞ் சொல் குற்றத்தை யுணர்த்து தலை உலக வழக்கிற் காண்க.

**ஆதி**

பொருள் : முழுது — முற்றும் — மீதியின்றி, குறைவின்றி.
வம்பு

**321. வம்பு நிலையின்மை.** (30)

**ஆ. மொ. இல.**

'Vambu' means nucertainty

**ஆல்.**

'Vambu' means uncertain

**பி. இ. நூ.**

**நேமி. சொ. 56**

வம்பு நிலையின்மை.

**இளம்.**

வ-று : 'வம்ப வடுகர்', (அகம். 375) 'வம்ப நாரை' (அகம், 190) என்றக்கால் நிலையில்லாமை கூறியவாறாம்.

**சேனா.**

இ-ள்: (சூ. 323-ல் காண்க).

**தெய்**

இ-ள் : வம்பு என்னும் சொல் நிலையின்மையை உணர்த்தும், எ-று.

உ-ம்: 'வம்ப மாரி' (குறுந். 66).

**நச்**

இதுவுமது,

இ-ள்: வம்பு நிலையின்மை—வம்பு நிலையின்மையாகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'வம்பு மாரியைக் காரென மதித்தே' (குறுந். 66) எனவரும்.

**வெள்.**

பொருள் (சூ. 323-ல் காண்க)

**ஆதி.**

பொருள். வம்பு — அக்கிரமம் — நிலையற்ற (வாசனை, புதிய)

மாதர்

**322. மாதர் காதல். (31)**

**ஆ.மொ.இல.**

'Māthar' means love

**ஆல் :**

Mātar means love

**இளம்.**

வ-று: 'மாதர் வண்டொடு சுரும்பு பிசைத்தது' என்றக்கால் காதல் கொண்டு என்பதாம்.

**சேனா.**

இ-ள் : (323-ல் காண்க)

**தெய்.**

இ-ள் : மாதர் என்னும் சொல் காதல் என்னும் பொருள் படும், எ-று.

உ-ம் : 'மாதர் நோக்கு'

**நச்.**

இதுவுமது.

இ-ள்: மாதர் காதல் — மாதர் காதல் என்னும் குறிப்பினை யுணர்த்தும், எ-று.

உ-ம்: 'மாதர் கொள் மானோக்கின் மட நல்லாய்'(கலி-56) எனவரும்.

**வெள்.**

இ-ள் : (சூ. 323-ல் காண்க).

**ஆதி.**

பொருள் : மாதர் — பெண்கள் — காதலுறு, அழகிய.

நம்பு, மே.

**323. நம்பு மேவு நசையா கும்மே.** (32)

(நம்பும் மேவும் நசை ஆகும்மே).

ஆ. மொ. இல.

'Nambu' and 'mēvu' mean desire

**ஆல்.**

'Nampu' and 'Mēvu' mean desire.

பி. இ. நூ.

**நேமி. சொ. 56**

நம்பொடு மேவு நசையாகும்.

**இல. வி. 281-10**

நம்பும் மேவும் நசையின ஆகலும்.

**இளம்.**

வ-று : [1]'நயந்து நாம் விட்ட நன்மொழி நம்பி' (அகம். 198) என்றக்கால், நச்சி என்பதாம். 'பேரிசை நவிர மே எ

---

1. பொருள் : விரும்பி நாமே வெளிப்படையாகக் கூறி விட்ட இனிய நமது மொழியை விரும்பி.

யுறையும்' (மலைபடு. 82) என்றக்கால், நய'ந்து உறையும் என்பதாம்.

**சேனா.**

(சூ. 321, 322, 323-ன் உரை)

இ-ள் : 'வம்புமாரி' (குறுந். 66), 'மாதர் நோக்கு' (அகம் 130), 'நயந்து நாம் விட்ட நன்மொழி நம்பி' (அகம். 198) [1]பேரிசை நவிர மேஎ யுறையும்' (மலைபடு 82) என வம்பும் மாதரும் நிலையின்மையும் காதலுமாகிய குறிப்புணர்த்தும்; நம்பும் மேவும் நசையாகிய குறிப்புணர்த்தும், எ-று.

மே — நசையாக

**தெய்.**

இ-ள் : நம்பு என்னும் சொல்லும் மேவு என்னும் சொல் லும் நசை என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம் : 'நயந்து நாம் விட்ட நன்மொழி நம்பி' (அகம்.198) 'பேரிசை நவிர மேஎ யுறையும்' (மலைபடு. 82).

**நச்:**

இதுவுமது

இ—ள் : நம்பும் மேவும் நசை ஆகும்மே — நம்பும் மேவும் நசை என்னும் குறிப்பினை உணர்த்தும், எ—று.

உ-ம் : 'நயந்து நாம் விட்ட நன் மொழிநம்பி' (அகம்.198 எனவும்,

'பேரிசை நவிரம் மேஎய் உறையும்
காரி யுண்டி' (மலைபடு. 82)

எனவும் வரும்.

**வெள்**

(321, 322, 323 - ன் உரை)

இ-ள் : வம்பு என்னும் உரிச்சொல் நிலையின்மை என்னும் குறிப்புணர்த்தும்; மாதர் என்னும் சொல் காதல் என்னும் குறிப்புணர்த்தும்; நம்பு, மேவு என்பன இரண்டும் நசை என்னும் குறிப்புணர்த்தும், எ-று.

---

1. பொருள் : பெரிய புகழையுடைய நவிரம் என்னும் மலையைப் பொருந்தியுறையும்.

உ-ம் : 'வம்பு மாரி' எனவும், 'மாதர் நோக்கு' எனவும், 'நயந்துநாம் விட்ட நன்மொழி நம்பி' எனவும், பேரிசை நவிர மேஎ யுறையும்' எனவும் வரும்.

**ஆதி.**

பொருள் : நம்பு — விசுவாசி — விரும்புகிற
மேவு — முன்வரு — விழையும்
ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாய்.

**324.** **ஓய்த லாய்த னிழத்தல் சாஅ**
**யாவயி னான்கு முள்ளத னுணுக்கம்** **(33)**

(ஓய்தல் ஆய்தல் நிழத்தல், சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்)

**ஆ. மொ. இல.**

'Ōythal' 'Āythal', 'nilaththal' and 'sāy' — these four indicate decrease

**ஆல்**

The four 'ōytal', 'Āytal', 'Nilathal', Caay mean getting reduced.

**பி .இ. நூ.**

**இல. வி. 281 - 11, 12**

ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாய்தல்
உள்ளதன் நுணுக்கம் உணரக் காட்டலும்

**இளம்**

வ-று : 'ஓய்கலை யொருத்தல்' என்றக்கால், நுணுகிய கலை யொருத்தல் என்பதாம்.

'கையும் மெய்யும் ஆய்ந்திருந்தார்' என்றக்கால், சுருங்கி யிருந்தார் என்பதாம்.

'நிழத்த யானை மேய்புலம் படர' (மதுரைக். 303) என்றக் கால், மெலிந்து நுணுகிய என்பதாம்.

[1] 'கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்' (நெடுநல். 18) என்றக்கால், சுருங்கி என்பதாம்.

---

1. பொருள் : மீன்கள் யாவும் கருமணலை எதிர்த்துச் செல்லுமாறு மிக்க நீர் சுருங்கி.

**சேனா**

இ-ள் : [1] 'வேனிலுழந்த வறிதுயங் கோய் களிறு' (கலி. 7), [2] 'பாயந்தாய்ந்த தானைப் பரிந்தானா மைந்தினை' (கலி. 96), 'நிழத்த யானை மேய்புலம் படர' (மதுரைக். 303), 'கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்' (நெடுநல். 18) என ஒய்தல் முதலாயின நுணுக்கமாகிய குறிப்புணர்த்தும், எ-று,

ஆய்ந்த தானை — [3] பொங்குதல் விசித்தலான் நுணுகிய தானை. உள்ளதென்றது முன்னுணுகா துள்ளது என்றவாறு.

**தெய்.**

இ-ள் : ஒய்தல் என்னும் சொல்லும், ஆய்தல் என்னும் சொல்லும், நிழத்தல் என்னும் சொல்லும், சாஅய் என்னும் சொல்லும் ஆகிய அந்நான்கு சொல்லும் ஒரு பொருட்குள்ள அளவின் நுணுக்கத்தைக் காட்டும், எ-று.

உ-ம் : 'வேனிலுழந்த வறிதுயங்கு ஓய்களிறு' (கலி. 7), 'பாய்ந்தாய்ந்த தானைப் பரிந்தானா மைந்தினை' (கலி. 96), 'நிழத்த யானை மேய்புலம் படர (மதுரைக். 303), 'கயலரு லெதிரக் கடும்புனற் சாஅய்' (நெடுநல். 18).

**நச்**

இதுவுமது.

இ-ள் : ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய் ஆவயின் நான்கும் — ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய் என்னும் உரிச்சொல் முதனிலையாகிய அவ்விடத்து வந்த குறிப்புப் பெயர் நான்கும், உள்ளதன் நுணுக்கம் — பண்டு உள்ளது ஒன்றனது நுணுகுதலை யுணர்த்தும், எ-று.

[4]சாய்தல் விகாரப்பட்டது.

---

1. பொருள் : முதுவேனிற் காலத்தால் வருந்தின உடல் சிறிதாக வருந்தும் ஓய்ந்த களிறுகள்
2. பொருள் : பரிந்து பாய்ந்து ஆய்ந்த தானை எனக் கூட்டுக. கரை நீங்கி விரிந்து நுணுகிய புடைவையுடை கெடாத வலியினை யுடையாய்.
3. பரந்து விரிவதை இறுக்கிக் கட்டுதலான் நுணுகிய (சுருங்கிய) தானை.
4. சாய்தல் என்பது சாஅய் என விகாரப்பட்டது என்பது கருத்து.

உ-ம் : 'வேனி லுழந்த வறிதுயங் கோய்களிறு'
'பாய்ந் தாய்ந்த தானைப் பரிந்தானா மைந்தினை'
'நிழத்த யானை மேய்புலம் படர'
'கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்'

என வரும்.

ஆய்ந்த தானை என்றது [1] பொங்குதல் ஆவிதலான் நொசிந்த துகில் என்றவாறு.

**வெள்**

இ-ள் : ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய் என்னும் அந் நான்கு உரிச்சொற்களும் முன் நுணுகாது உள்ளதன் நுணுக்கம் என்னும் குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம் : 'வேனிலுழந்த வறிதுயங் கோய்களிறு' எனவும், 'பாய்ந் தாய்ந்த தானைப் பரிந்தானா மைந்தினை, எனவும், 'நிழத்த யானை மேம்புலம் படர' எனவும், 'கயலற லெதிர்ந்த கடும் புனல் சாஅய்' எனவும் ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய் என்னும் உரிச்சொற்கள் முன் உள்ளதன் நுணுக்கமாகிய குறிப்புணர்த்தின. ஆய்ந்த தானை—பொங்குதல் விசித்தலால் நுணுகிய ஆடை.

**ஆதி**

பொருள் : ஒய்—ஓய்வுறல்—இருந்த நிலையினும் சுருங்குதல்
ஆய்—ஆய்தல்— ,,
நிழ—நிழத்தல்— ,,
சாய்—சாய்தல்— ,,

புலம்பு

325. புலம்பே தனிமை. (34)

**ஆ. மொ. இல.**

'Pulambu' means loneliness

**ஆல்**

Pulampu means loneliness.

**இளம்**

வ-று : 'புலம்பு விட் டிருந்தார்' (மலைபடு. 49) என்றக் கால், தனிமை துறந்திருந்தார் எனபதாம்.

---

1. பரத்தல் அடங்குதலான் நுணுகிய துகில்

**சேனா.**

இ-ள் : (325, 326, 327, 328 ஆகிய எண்களுள்ள சூத்திரங்களுக்குச் சேர்த்து 328-ல் உரை காண்க)

**தெய்**

இ-ள் : புலம்பு என்னும் சொல் தனிமை என்னும் பொருள் படும், எ-று.

உ-ம் : [1] 'புலிப்பற் கோத்த புலம்பு மணித் தாலி' (அகம்5)

**நச்**

இதுவுமது

இ-ள் : புலம்பே தனிமை — புலம்பு தனிமை என்னும் குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'புலிப்பல் கோத்த புலம்பு மணித்தாலி' (அகம். 5) என வரும்.

[2] 'தமி' என்பது சொற் புறனடையாற் கொள்க.

**வெள்**

இ-ள் : (325, 326, 327, 328 ஆகிய எண்களுள்ள சூத்திரங்களுக்குச் சேர்த்து 328ல் உரை காண்க)

**ஆதி**

பொருள் : புலம்பு — அழு — தனிமை.

துவன்று

**326.** துவன்று நிறை வாகும் **(35)**

(துவன்று நிறைவு ஆகும்)

**ஆ. மொ. இல.**

'Thuvanru' means fullness

**ஆல்.**

'Tuvanṟu means fullness.

---

1. பொருள் : புலிப்பல் கோர்க்கப்பட்ட தனிமையான அழகிய தாலி.
2. தனிமைப் பொருள்தரும் 'தமி' என்பதைப் புறனடைச் சூத்திரத்தாற் கொள்க. (உரி. 92). சொற் புறனடை-உரிச்சொல் பற்றிய புறனடை.

**பி.இ.நூ.**

**நேமி. சொ. 59**

......துவன்று நிறைவாகும்

**இளம்.**

வ-று : 'ஆரியர் துவன்றிய பேரிசை யியமம்' (பதிற்று. 11) என்றக்கால், நிறைந்த மூதூர் என்பதாம்.

**சேனா.**

இ-ள் : (சூ. 328-ல் காண்க)

**தெய் :**

இ-ள் : துவன்று என்பது நிறைவு என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம் : 'ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்' (நற். 170)

**நச்.**

இதுவுமது.

இ-ள் : துவன்று நிறைவு ஆகும் — துவன்று நிறைவு என்னும் குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'ஆரியர் துவன்றிய பேரிசை யியமம்' (பதிற்று. 11) என வரும்.

**வெள்**

இ-ள் : (சூ. 328-ல் காண்க)

**ஆதி**

பொருள் : துவன்று — * சீக்கிரம் — நிறைவான

முரஞ்சல்

**327.** முரஞ்சன் முதிர்வே **(36)**
(முரஞ்சல் முதிர்வே)

**ஆ. மொ. இல.**

'Muranjal' means maturity

**ஆல்.**

'Murañcal' means maturity

---

* இப்பொருள் வழக்கில் இல்லை.

**இளம் :**

வ-று : [1] 'கோடு பல முரஞ்சிய கோளி யாலம்' (மலைபடு. 268) என்றக்கால், முதிர்ந்த ஆலம் என்பதாம்.

**சேனா**

இ-ள் : (சூ. 328-ல் காண்க)

**தெய்**

இ-ள் : முரஞ்சல் என்னும் சொல் முதிர்வு என்னும் பொருள்படும், எ-று.

உ-ம் : 'கோடு பல முரஞ்சிய கோளி யாலம் (மலைபடு' 268)

**நச்**

இதுவுமது.

இ-ள் : முரஞ்சல் முதிர்வே — முரஞ்சல் முதிர்வு என்னும் குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'கோடு பல முரஞ்சிய கோளி யாலத்து' (மலைபடு. 268) என வரும்.

**வெள்**

இ-ள் : (சூ. 328-ல் காண்க)

**ஆதி**

பொருள் : முரஞ்சல்—ஒலித்தல்—முதிர்தல்.

வெம்மை

**328. வெம்மை வேண்டல்** (37)

**ஆ.மொ.இல.**

'Vemmai' means desire

**ஆல்.**

'Vemmai' means desire

**பி. இ. நூ.**

**நேமி. 58.**

வெம்மை விருப்பாம்

---

1. பொருள் : கிளைகள் பல முதிர்ந்த பேராலமரம்.

**இளம்.**

வ-று: 'நீ வெம்மையள்' என்றக்கால், நீ வேண்டப் படுவாள் என்பதாம்.

**சேனா**

(சூ 325, 326, 327, 326-ன் உரை.)

இ-ள்: 'புலிப்பற் கோத்த புலம்பு மணித்தாலி' (அகம்.7) எனவும், 'ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்' (நற். 170) எனவும், [1]'சூல்முரஞ் செழிலி' எனவும், 'வெங்காமம் (அகம். 15) எனவும் புலம்பு முதலாயின தனிமையும் நிறைவும் முதிர்வுமாகிய குறிப்பும் விரும்புதலாகிய பண்பும் உணர்த்தும், எ-று.

**தெய்.**

இ-ள்: வெம்மை என்னும் சொல் 'வேண்டல்' என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம்: 'நீ வெய்யோ ளொடு' (அகம். 6).

**நச்.**

இது பண்பு.

இ-ள்: வெம்மை வேண்டல்—வெம்மை விரும்புதலாகிய பண்பை யுணர்த்தும், எ-று.

உ-ம்: [2]'எம் வெங்காமம் இயைவ தாயினும்' (அகம். 15) எனவரும். இது, [3]'குழைமாண் ஒள்ளிழை நீ வெய்யோளொடு' எனத் திரிந்தும் நிற்கும். [4]வெம்மை வெப்பம் உணர்த்துதல் வழக்கு.

**வெள்**

(சூ. 325, 326, 327, 328-ன் உரை).

இ-ள்: புலம்பு என்னுஞ் சொல் தனிமை என்னும் குறிப்பு உணர்த்தும்; துவன்று என்னுஞ் சொல் நிறைவு என்னும் குறிப்பு

---

1. சூல் முரஞ்சு எழிலி—சூல் முதிர்ந்த மேகம்.
   வெங்காமம் - விரும்பும் காமம்.
2. பொருள் : எம்மால் விரும்பப்படும் காமம் நிறைவுறுவ தாயினும்.
3. பொருள் : காதணியையும் மாட்சிப்பட்ட அழகிய பிற அணிகளையும் உடைய நீ விரும்பிய வளுடன்.
4. பொருள் : வெம்மை என்னும் சொல் வெப்பம் எனும் பொருள் உணர்த்துதல் உலக வழக்கு.

உணர்த்தும்; முரஞ்சல் என்னுஞ்சொல் முதிர்வு என்னும் குறிப்பு உணர்த்தும்; வெம்மை என்னுஞ் சொல் விரும்புதலாகிய பண்பு உணர்த்தும்.

உ-ம்: 'புலிப்பற் கோத்த புலம்பு மணித் தாலி' எனவும்,
'ஆரியர் துவன்றிய பேரிசை யியமம்' எனவும்,
'சூல்முரஞ் செழிலி' எனவும்,
'எம் வெம்காமம்' எனவும் வரும்.

**ஆதி.**

பொருள் : வெம்மை — வெப்பம் — வேண்டிய, விருப்பமான.

பொற்பு

**329. பொற்பே பொலிவு (38)**

**ஆ. மொ. இல.**

'Poṟpu means magnificence

**ஆல்.**

Poṟpu means beauty

**இளம்**

வ-று: 'அணிகலம் பொற்ப' என்றக்கால் பொலிய என்பதாம்.

**சேனா**

இ-ள்: (329, 330, 331 ஆம் எண்கள் உள்ள சூத்திரங்களுக்குச் சேர்த்து 331-ல் உரை காண்க).

**தெய்**

இ-ள்: பொற்பு என்னுஞ் சொல் பொலிவு என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம்: பெருவரை யடுக்கம் பொற்ப' (நற். 34).

**நச்.**

இது குறிப்பு.

இ-ள்: பொற்பே பொலிவு — பொற்பு பொலிவு என்னும் குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம்: 'பெருவரை யடுக்கம் பொற்பச் சூர் மகள்' (நற் 34) எனவரும்,

**வெள்.**

இ-ள்: (329, 330, 331 ஆம் எண்களுள்ள சூத்திரங்களுக்குச் சேர்த்து 331-ல் உரை காண்க.

**ஆதி.**

பொருள் : பொற்பு — பொன் இயல் அழகு — பொலிவு.

வறிது

**330.** வறிது சிறிதாகும். (39)

(வறிது சிறிது ஆகும்)

**ஆ.மொ.இல.**

'Varithu' means a little

**ஆதி.**

'Varitu means small

**இளம்**

வ-று: 'வறிது நெறி யொரீஇ' என்றக்கால், சிறிது நெறி ஒரீஇ என்பதாம்.

**சேனா**

இ-ள்: (சூ. 331-ல் காண்க.)

**தெய்**

இ—ள்: வறிது என்னுஞ் சொல் சிறிது என்பதன் பொருளாகும், எ-று.

உ-ம்: 'வடிது நெறி யொரீஇ'

**நச்**

இதுவுமது.

இ-ள்: வறிது சிறிது ஆகும் — வறிது சிறிது என்னும் குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம்: [1]'வறிது வடக்கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி (பதிற்று. 24) எனவரும்.

**வெள்.** இ—ள். (சூ 331—ல் காண்க)

**ஆதி.** பொருள் : வெறுமையான — சிறிய.

---

1. பொருள் : சிறிது வடக்கே தாழ்ந்த சிறப்பமைந்த வெள்ளிக் கோள்.

ஏற்றம்

331. *ஏற்ற நினைவுந் துணிவு மாகும். (40)
(ஏற்றம் நினைவும் துணிவும் ஆகும்)

ஆ. மொ இல.

'Ē̤ṟṟam' means rememberance and determination.

ஆல்

Eṟṟam means remembering and determination.

பி. இ. நூ.

இல.வி. 282—1
ஏற்றம் நினைவும் துணிவு இயம்பலும்

இளம்

வ-று: 'ஏற்றத்திருந்தார்' என்றக்கால், நினைத்திருந்தார் என்பதூஉம், துணிந்திருந்தார் என்பதூஉம் ஆம்.

சேனா

(சூ. 329, 330, 331ன் உரை)

இ-ள்: 'பெருவரை யடுக்கம் பொற்ப (நற். 34) எனவும், வறிது வடக்கிறைஞ்சிய' (பதிற். 24) எனவும், 'கானலஞ் சேர்ப்பன் கொடுமையேற்றி (குறுந். 145), 'எற்றேற்ற மில்லாருள் யானேற்ற மில்லாதேன்' எனவும், பொற்பு முதலாயின முறை யானே பொலிவும், சிறிது என்பதூஉம், நினைவும் துணிவு மாகிய குறிப்பும் உணர்த்தும், எ-று.

தெய்

இ-ள்: ஏற்றம் என்னும் சொல் நினைவு துணிவு என்பவற்றின் பொருள்படும், எ-று.

உ-ம்: 'கானலஞ் சேர்ப்பன் கொடுமை யேற்றி' (குறுந். 145) இது நினைவு. 'ஏற்றென் றிரங்குவ செய்யற்க' (குறள்: 655) இது துணிவு.

நச்

இதுவுமது.

---

* எற்ற—நச். பாடம்.

இ-ள்: எற்றம் நினைவும் துணிவும் ஆகும் — எற்றம் நினைவும் துணிவும் ஆகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம்: 'கானலஞ் சேர்ப்பன் கொடுமை யேற்றி' (குறுந். 145)

'[1]எற்றமி லாட்டியென் ஏமுற்றாள்' (கலி. 144) எனவரும்.

**வெள்**

(சூ. 329, 330, 331-ன் உரை)

இ-ள்: பொற்பு என்னுஞ் சொல் பொலிவு என்னும் குறிப்பு உணர்த்தும்; வறிது என்னுஞ் சொல் சிறிது என்னும் குறிப்பு உணர்த்தும்; ஏற்றம் என்னுஞ் சொல் நினைவும் துணிவுமாகிய குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம்: 'பெருவரை யடுக்கம் பொற்ப' எனவும்,
'வறிதுவடக் கிறைஞ்சிய' எனவும்,
'கானலஞ் சேர்ப்பன் கொடுமை யேற்றி' எனவும்,
'எற்றேற்ற மில்லாருள் யானேற்ற மில்லாதேன்'
எனவும் பொற்பு பொலிவு என்னும் குறிப்பிலும், வறிது சிறிது என்னும் குறிப்பிலும், ஏற்றி-நினைந்து, ஏற்றம்-துணிவுஎன்னும் குறிப்பிலும் வந்தவாறு காண்க.

**ஆதி.**

பொருள்: ஏற்றம் — துலா, முன்னேற்றம் — நினைவு, துணிவு.

குறிப்பு: ஏற்றம், எற்றம் என்பன நினைவு துணிவு எனும் இரண்டு பொருளுக்கும் உரியவாக வேறுபாடின்றி ஆளப் பட்டுள்ளன. நச்சினார்க்கினியர் நீங்கலாக மற்றையோர் ஏற்றம் என்ற பாடமே கொண்டனர்.

பிணை, பேண்

**332. பிணையும் பேணும் பெட்பின் பொருள (41)**

**ஆ. மொ. இல.**

'Piṇai' and 'Pēṇ' mean great desire and protection

**ஆல்.**

'Piṇai' and Pēṇ mean desire

**பி. இ. நூ.**

**முத்து. ஒ. 41**

பிணையும் பேணும் பெட்பா கும்மே.

---

1. பொருள்: மனதில் துணிவில்லாதாள் என்னபித்தேறி னாள்.

**இளம்**

உரை : பெட்டல் என்பது புறந்தருதல், எ-று.

வ-று : [1] 'அரும்பிணை பய்க்கற்ற வேட்ட ஞான்று' என்றக்கால், அரும் புறந்தரு வரவிற்றாகி வேட்டபோழ்து என்பதாம்.

[2] 'பேணின னல்லனோ மகிழ்ந' (அகம். 16) என்றக்கால், பெட்டேனல்லனோ மகிழ்ந என்பதாம்.

**சேனா**

இ-ள் : 'அரும்பிணை யகற்றி வேட்ட ஞாட்பினும்' எனவும், 'அமரர்ப் பேணியும் ஆகுதி யருத்தியும்' (புறம். 99) எனவும் பிணையும் பேணும் பெட்பின் பொருளாகிய புறந் தருதல் என்னும் குறிப்புணர்த்தும், எ-று.

'பெட்பின் பொருள' வென்றதனால், பெட்பின் பொரு ளாகிய விரும்புதலுணர்த்தலும் கொள்க. [3] அது வந்த வழிக் கண்டு கொள்க.

**தெய்.**

இ-ள் : பிணை என்னும் சொல்லும் பேண் என்னும் சொல்லும் பெட்பு என்பதன் பொருள்படும், எ-று,

உ-ம் : 'அரும்பிணை யகற்றி வேட்ட ஞாட்பினும்', அமரர்ப் பேணியும் ஆகுதி யருத்தியும்' (புறம். 99).

**நச்.**

இது குறிப்பும் பண்பும் உணர்த்துகின்றது.

இ-ள் : பிணையும் பேணும் பெட்பின் பொருள — பிணை யும் பேணும் பெட்பு என்னும் உரிச்சொல்லினது பொருளை யுடையவாம், எ-று.

---

1. இப் பகுதி விளக்கமில்லை. 'அரும்பிணை யகற்றிவேட்ட ஞாட்பினும் என்பதே நன்று. ''அரிய பாதுகாவலைப் பெருக்கி வெள்ளி செய்த காலத்தும்'' என்பது பொருள்.
2. பொருள் : பாதுகாத்தேன் அல்லனனோ மகிழ்ந.
3. 'அமரர்ப்பேணி' என்பதில் விருப்பம் எனும் பொருள் இருப்பதாக நச்சினார்க்கினியர் கூறுவர் காண்க.

பெட்பு என்பது, புறந்தருதலும் விரும்புதலுமாகிய குறிப்பும் பண்பும் உணர்த்தும்; சிறுப ன்மை [1] 'பெட்ப நகும்' (சீவக. 1662) எனப் பெருமையும் உணர்த்தும்.

உ-ம் : [2] 'அரும்பிணை யகற்றி வேட்ட ஞாட்பினும்'
[3] 'யானும் பேணின னல்லனோ மகிழ்ந' (அகம். 16

இவை புறந்தருதல் உணர்த்தின.

'பெற்றோட் பெட்கும் பிணையை யாகென' என்புழிக் 'கணவனைப் புறந்தரும் விருப்பத்தையுடையை யாவாய்' எனப் பிணை விருப்பத்திற்கு வந்தது.

'அமரர்ப் பேணியும் ஆவுதி யருத்தியும்' (புறம். 99) இது விருப்பம் உணர்த்திற்று.

'பெட்ட வாயில்பெற் றிரவு வலியுறுப்பினும் (களவி. 11)

'காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்' (கற்பி.6) என ஆசிரியர் பெட்பின் பகுதியாகிய 'பெட்டு' என்னும் உரிச் சொல்லை [4] உடம்போடு புணர்த்து ஓதியவாறும் காண்க.

**வெள்.**

(நச்சினார்க்கினியர் உரையே)

**ஆதி**

பொருள் : பிணை — பெண்மான் — பெட்பு, அழகு
பேண் — ஓம்புக — " கவர்ச்சி

---

1. பொருள் : அரிய காவலை நீக்கிச் செய்த போரில்
2. பெட்ப நகும் — பெரிதாக நகும்.
3. பொருள் : மகிழ்ந, யானும் பாதுகாத்தேன் அல்லனோ'
4. உடம்பொடு புணர்த்தல் — சொல்லவேண்டிய ஒன்றைச் சொல்லவேண்டிய இடத்துச் சொல்லாமல் பொருத்திக் கொள்ளுமாறு வேறோர் இடத்துக் கூறுதல். உடம்பு— இடம், உடம்பொடு புணர்த்தல்—ஓரிடத்திற்சேர்த்தல் பெட்பு என்னும் உரிச்சொல் விருப்பம் என்னும் பொருள் தரும். இதனை ஆசிரியர் உரியியலிற் கூற வேண்டும். கூறாமல் விருப்பம் என்னும் பொருளில் பெட்பின் பகுதியாகிய பெட்டு என்பதை, "பெட்ட வாயில் பெற்று இரவு வலியுறுப்பினும்" எனவும், "காய்தலும் உவத்தலும், பிரித்தலும் பெட்டலும்" எனவும் பிற இடங்களில் ஆண்டுள்ளார் ஆசிரியர் இது உடம்பொடு புணர்த்தலாம்.

பணை

333. பணையே பிழைத்தல் பெருப்பு மாகும். (42)

(பணையே பிழைத்தல் பெருப்பும் ஆகும்)

ஆ. மொ. இல.

'Paṇai', means missing and flourishing

ஆல். 'Paṇai' means being lost and becoming stout

பி. இ. நூ.

இல.வி. 282-3

பணையே பிழைத்தலும் பெருத்தலும் இசைத்தலும்

**இளம்.**

இச்சூத்திரம் என்னுதற்றோவெனின், இவையெல்லாங் குறிப்புச் சொல்.

வ-று : 'பணைத்துப் போய் வீழ்ந்தது' என்றக்கால், பிழைத்துப்போய் வீழ்ந்தது என்பதாம்.

'பணைத்தோள்' என்றக்கால், பெருந்தோள் என்பதாம்.

**சேனா.**

இ-ள் : 'பணைத்துவீழ் பகழி எனப் பணையென்பது பிழைத்தலாகிய குறிப்புணர்த்தும்; அதுவேயன்றி 'வேய்மருள் பணைத்தோள்' (அகம். 1) எனப் பெருப்பாகிய குறிப்பும் உணர்த்தும், எ-று.

பெருமையாகிய பண்புணர்த்தாது [1] பெருத்தலாகிய குறிப்பு உணர்த்தும் என்பார் 'பெருப்பு' என்றார்.

**தெய்.**

இ-ள் : பணை யென்னுஞ் சொல் பிழைத்தல் என்பதன் பொருளும், பெருமை என்பதன் பொருளும் படும், எ-று.

உ-ம் : 'பணைத்து வீழ் பகழி' இது பிழைப்பு. 'பணைத் தோள்' (அகம். 1) இது பெருமை.

---

1. பெருத்தலாகிய குறிப்பு — முன்னிருந்த நிலையின் வளர்ச்சியுற்றதாகிய செயல். இச்செயல் புலப்படுவ தன்றாதலின் குறிப்பு என்றார். பிறர் யாவரும் பெருமையும் பெருத்தலும் ஒன்றாகவே கருதினர். ஆனால் நச்சினார்க்கினியர் இவர் கருத்தையே ஏற்றார்.

நச்.

இது, குறிப்பு

இ-ள் : பணையே பிழைத்தல் பெருப்பும் ஆகும்—பணை பிழைத்தலாகிய குறிப்பு உணர்த்துதலேயன்றிப் பெருப்பு ஆகிய குறிப்பும் உணர்த்தும்,எ-று,

பெருமையாகிய பண்பு உணர்த்தாது பெருத்தலாகிய குறிப்பு உணர்த்துதற்குப் 'பெருப்பு' என்றார்.

உ-ம்: அமர்க்க ணாமா னருநிற மூழ்காது
பணைத்துவீழ் பகழிப் போக்கு நினைந்து கானவன்'
(நற். 165)

'வேய்மருள் பணைத்தோள் நெகிழச் சேய்நாட்டு'
(அகம். 1)

எனவரும். [1]இப்பணை மூங்கிலினை யுணர்த்தல் உரிச்சொல் அன்மையுணர்க.

வெள்

(நச்சினார்க்கினியர் உரையே).

ஆதி

பொருள் : பணை—திரண்ட—பிழைத்தல், தவறுதல்.
பெருப்பு—பெரிதாக.

படர்

334 படரே யுள்ளல் செலவு மாகும் (43)
(படரே உள்ளல் செலவும் ஆகும்).

ஆ. மொ. இல.

'Padar' means reflection and passing

ஆல்

'Patar' means thinking and moving away.

பி.இ.நூ:

இல.வி. 282—4

படரே வுள்ளலும் செலவும் சொல்லலும்

---

1. பணை என்பது மூங்கிலையும் உணர்த்தும். அப்போது அது பெயர்ச்சொல்; பிழைத்தலையும், பெருத்தலையும் உணர்த்துமிடத்தே உரிச்சொல்லாம்.

**இளம்**

வ-று : 'படர் மலி வெற்பர்' என்றக்கால்,[1] உள்ளல்மலி வெற்பர் என்பதாம்.

'ஆறு படர்ந்தார்' என்றக்கால், சென்றார் என்பதாம்.

**சேனா.**

இ-ள் : [2]'வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி'(புறம்47) கறவை கன்று வயிற் படர'[3] (குறுந். 108) எனப் படர் என்பது உள்ளுதலும் செலவுமாகிய குறிப்புணர்த்தும், எ-று.

**தெய்**

இ-ள்; படர் என்பது நினைத்தல் என்பதன் பொருளும், செலவு என்பதன் பொருளும்படும், எ-று.

உ-ம்: 'வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற்போகி' (புறம். 47) இது நினைவு, [3]'கறவை கன்றுவயிற் படர' (குறுந். 108) இது செலவு.

**நச்**

இதுவுமது.

இ-ள்: படரே உள்ளல் செலவும் ஆகும்—படர் உள்ளுதல் என்னும் குறிப்பு உணர்த்துதலேயன்றிச் செலவு என்னும் குறிப்பும் உணர்த்தும், எ-று.

[4]உள்ளல், வருத்தக்குறிப்பான் உள்ளுதலும் வருத்தக் குறிப்பின்றி உள்ளுதலும் என இருவகைத்து ஆகலின், செலவுப் பொருட்டாகிய படரும் இவ்விருவகையும் உடைத்து.

உ-ம்:'வள்ளியோர்ப் படர்க்குவர் புலவர் யானும்(புறம்.154.

[5] 'பசந்த மேனியொடு படரட வருந்தி' (புறம்.159)

எனவும்.

---

1. உள்ளல்—நினைத்தல்
2. பொருள்: வள்ளல்களை நினைந்து பறவைக்கூட்டம் போலச் சென்று.
3. பொருள் : கறவை கன்று இருக்குமிடம் செல்ல
4. ஒருவரை நினைத்தலும் ஒருவரிடம் செல்லுதலும் தன்னிடத்து நிகழும் வருத்தத்தால் அதை நீக்கிக் கொள்ள வேண்டி நிகழ்வன ஆதலின் இவ்வாறு எழுதினார்.
5. பொருள்: பசலையுற்ற உடம்பொடு நினைவு வருத்த வருந்தி.

'கறவை கன்றுவயின் படர' (குறுந். 108)

எனவும் வரும்.

**தெய்வச்.**

இ-ள்: படர் என்னுஞ் சொல் உள்ளுதல் என்னும் குறிப்பு உணர்த்தும்; அதுவேயுமன்றிச் செல்லுதல் என்னும் குறிப்பும் உணர்த்தும், எ-று.

உ-ம்: 'வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி' எனவும், 'கறவை கன்றுவயற் படர' எனவும் படர் என்பது முறையே உள்ளுதல் செல்லுதல் என்னும் குறிப்புணர்த்தியவாறுணர்க.

**ஆதி**

பொருள்: படர்—துன்பம் } —நினைத்தல்
பரவுதல் } செல்லுதல்

பையுள், சிறுமை.

335. **பையுளுஞ் சிறுமையு நோயின் பொருள** (44)
(பையுளும் சிறுமையும் நோயின் பொருள)

**ஆ. மொ: இல.**

'Paiyuḷ' and 'sirumai' mean suffering

**ஆல்**

'Paiyuḷ' and 'ciṟumai' mean disease

**இளம்**

வ-று: 'பையுள் நல்யாழ்' என்றக்கால், [1] நோய் செய்யும் நல்யாழ் என்பதாம்.

[2] 'சிறுமையுறுபவோ செய்பறி யலரே' (நற். 1)

என்றக்கால், நோயுறுப செய்யார் என்பதாம்.

**சேனா**

இ-ள்: 'பையுள்மாலை' (குறுந். 195) எனவும், 'சிறுமை யுறுபவோ செய்பறியலரே' (நற். 1) எனவும் பையுளும் சிறுமையும் நோயாகிய குறிப்புணர்த்தும், எ-று.

---

1. நோய் — துன்பம்.
2. பொருள் : செய்வதறியாதார் துன்பம் உறுவரோ?

**தெய்**

இ-ள் : பையுள் என்னும் சொல்லும் சிறுமை என்னும் சொல்லும் நோய் என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம் : 'பையுள் மாலை' (குறுந். 195) 'சிறுமை யுறுபவோ செய் பறியலரே' (நற். 1).

**நச்**

இதுவுமது.

இ-ள் : பையுளும் சிறுமையும் நோயின் பொருள—பையுளும் சிறுமையும் நோயாகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : பையுள் மாலைப் பழுமரம்படரிய' (களவியல். 4 உரை மேற்கோள்)

'சிறுமையுறுப செய்பறியலரே' (நற். 1)

வரும்.

**வெள்**

இ-ள் : பையுள் சிறுமை என்னும் உரிச்சொற்கள் நோய் என்னும் குறிப்புணர்த்துவன, எ-று

உ-ம் 'பையுள் மாலை' எனவும், சிறுமையுறுபவோ செய் பறியலரே' எனவும் வரும்.

**ஆதி**

பொருள் : பையுள் — துன்பம் — நோய்ப்பட்ட
சிறுமை — சிறியது

எய்யாமை

**336. எய்யாமையே யறியாமையே (45)**

(எய்யாமை அறியாமை)

**ஆ. மொ. இல.**

'Eyyāmai' is ignorance.

**ஆல்.**

'Eyyāmai' means ignorance

**பி. இ. நூ**
**நேமி. சொ, 58**

எய்யாமை அறியாமை

**இளம்**

வ-று : எய்யா மையலை, (குறிஞ்சிப். 8) என்றக்கால் அறியாமையலை, என்றவாறாம்.

**சேனா**

இ-ள் : 'எய்யா மையலை நீயும் வருந்துதி' (குறிஞ்சிப். 8) என எய்யாமை அறிவின்மையாகிய குறிப்புணர்த்தும், எ-று.

[1] அறிதற் பொருட்டாய எய்தல் என்றானும் எய்த்தல் என்றானும் சான்றோர் செய்யுட்கண் வாராமையின் எய்யாமை எதிர்மறை யன்மையறிக.

**தெய்.**

இ-ள் : எய்யாமை என்னுஞ்சொல் அறியாமை யென்னும் பொருள்படும், எ-று.

உ-ம் : 'எய்யா மையலை நீயும் வருந்துதி' (குறிஞ்சிப். 8)

**நச்.**

இதுவுமது.

இ-ள் : எய்யாமையே அறியாமையே—எய்யாமை அறியாமையாகிய குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம் : 'எய்யா மையலை நீயும் வருந்துதி' (குறிஞ்சிப். 8) என வரும்.

அறிதல் என்னும் உடம்பாட்டிற்கு மறையாகிய அறியாமை என்னும் உரிச்சொல்லான் எய்யாமையை உணர்த்தவே அவ்வெய்யாமை மறைச்சொல் என்பதூஉம், அதற்கு எய்த்தல் என்னும் உடம்பாட்டுச் சொல் உளது என்பதூஉம் பெற்றாம். அவ்வுடம்பாட்டை ஓதாது மறையை ஓதினார், மறைச்சொல்லும் உரிச் சொல்லாய் வரும் என்றற்கு.

[2] 'எய்த்து நீர்ச்சிலம் பின்குரை மேகலை' (சீவக. 2481) என்புழி எய்த்து என்பது அறிந்து என்னும் பொருள் உணர்த்திற்று.*

---

1. இப்பகுதிக்கு நச். மறுப்புப் பார்க்க.

* எய்த்து எனும் உடன்பாட்டுச் சொல்லைச் சிவப்பிரகாசரும் ஆண்டுள்ளார்.

புத்தனிச்சம் படினும் பொறாமையை
எய்த்து மற்றை யிருமணத் தம்மியில்
அத்தன் வைத்த அடிக்கம லங்களில்
முத்த ரிச்செஞ் சிலம்பு முழங்குற.
(பிரபுலிங்கலீலை.)

2. பொருள் உணர்ந்து நல்ல நீர்மையுடைய சிலம்பும் இனிய ஒலியையுடைய மேகலையும்.

**வெள்.**

இ-ள்: எய்யாமை என்னும் உரிச்சொல் அறியாமை என்னும் குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம்: எய்யாமை யல்லை நீயும் வருந்துதி' என வரும்.

**ஆதி.**

பொருள்: எய்யாமை—அம்பு எய்யா நிலை—அறியாமை.

நன்று

**337. நன்று பெரிதாகும்** **(46)**

(நன்று பெரிது ஆகும்)

**ஆ.மொ.இல.**

'Nanru' means great

**ஆல்.**

'Nanru' means big

**இளம்.**

(உரையும் உதாரணமும் அடுத்த சூத்திரத்திற் காண்க)

**சேனா.**

இ-ள்: 'நன்று மரிதுற்றனையாற் பெரும' (அகம். 10) என நன்று என்பது பெரிது என்னும் குறிப்புணர்த்தும், எ-று.

*பெருமை என்னாது பெரிது என்றதனான் நன்று என்பது வினையெச்சமாதல் கொள்க.

**தெய்.**

இ-ள்: நன்று என்பது பெரிது என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம்: 'நன்றும் அரிதுற்றனையாற் பெரும' (அகம். 10)

---

* நன்று என்பதற்குப் பெரிது என்னும் பொருள் கூறின மையால் அதாவது பெருமை என்று பண்புப் பெயர்ப் பொருள் கூறாமையால் நன்று என்பதை உரிச்சொல் லாகவே கொள்ளவேண்டும். நல்லது என்னும் பொருள் படும் குறிப்பு வினைமுற்றன்று இது. 'பெரிதாக' என வினையெச்சப் பொருளில் வரும் உரிச்சொல் இது.

நச்.

இதுவுமது.

இ-ள்: நன்று பெரிது ஆகும்—நன்று பெரிது என்னும் குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம்: 'நன்று மரிதுற்றனையாற் பெரும' (அகம். 10) என வரும்.

பெருமை என்னாது பெரிது என்றதனான், நன்று என்பது வினையெச்சம் ஆயிற்று.

வெள்.

இ-ள்: நன்று என்பது பெரிது என்னும் குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம்: நன்று மரிதுற்றனையாற் பெரும (அகம். 10) என வரும்.

ஆதி.

பொருள்: நன்று—நல்லது—பெரிய

தெவு

338. தெவுக் கொளற் பொருட்டே (47)

(தெவு கொளல் பொருட்டே)

ஆ.மொ.இல.

'Tevu' is used to denote taking in

ஆல்.

'Tevu' means receiving

இளம்.

(நன்று பெரிதாகும், தெவுக் கொளற் பொருட்டே) இவ்விரண்டு சூத்திரமும் உரை நோககி ஒன்றாய் எழுதப்பட்டது.

வ-று: 'நன்றும் அரிதுற்றனையாற் பெரும' என்றக்கால், பெரிதுற்றனையால் என்பதாம். [1]'நீர்த்தெவு நிரைத்தொழுவர்' (மதுரைக். 89) என்றக்கால், நீர் கொள்ளும் நிரைத் தொழுவர்' என்பதாம்.

1. பொருள் : நீரை இடாவால் முகந்து கொள்ளும் வரிசையாகவுள்ள தொழில் செய்வோர்.

சேனா.

(இச்சூத்திரவுரையைத் 'தெவ்வுப் பகையாகும்' எனும் சூத்திரத்தோடு சேர்த்து எழுதுவர். ஆண்டுக்(340) காண்க)

தெய்.

இ-ள்: தெவு என்னும் சொல் கொள்ளுதல் என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம்: 'நீர்த்தெவு நிரைத் தொழுவர்' (மதுரைக். 89)

நச்.

இதுவுமது.

இ-ள்: தெவு கொளல் பொருட்டே—தெவு கொள்ளுதலாகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம்: நீர்த்தெவு நிரைத் தொழுவர்' (மதுரைக். 89) என வரும்.

வெள்.

இ.ள்: (உரை சூ. 340ல் சேர்த்துக் காண்க)

ஆதீ.

பொருள்: தெவுதா—......—கொள்கிற

(47) தா

339. தாவே வலியும்வருத்தமு மாகும். (48)

(தாவே வலியும் வருத்தமும் ஆகும்)

ஆ.மொ.இல.

'Tā means strengtn and atliction.

ஆல்.

'Tā means strength and sorrow

பி.இ.நா.

இல. வி. 282-5

தாவே வலியும் வருத்தமும் தழுவலும்

முத்து. ஒ. 42

தாவே வலியும் வருத்தமும் தரும்

இளம்.

வ-று : 'கருங்கட் டாக்கலை' (குறுந். 69) என்றவழி வருந்திய கலை என்பதாம். 'தாவில் நன்பொன்' (அகம். 212) என்றக்கால் வலியின்ன பொன் என்பதாம்.

**சேனா**

இ-ள் : [1] 'தாவி னன்பொன் தைஇய பாவை' (அகம். 212) எனவும், [2] 'கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றென' (குறுந். 69) எனவும் தாவென்பது வலியும் வருத்தமும் ஆகிய குறிப் புணர்த்தும், எ-று.

**தெய்.**

இ-ள் : தாவு என்னும் சொல் வலி என்பதன் பொருண்மையும் வருத்தம் என்பதன் பொருண்மையும் படும், எ-று.

உ-ம் : 'தாவி னன்பொன் தைஇய பாவை' (அகம். 212) இது வலி. 'கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றென' (குறுந். 69) — இது வருத்தம்.

**நச்.**

இதுவுமது.

இ-ள் : தாவே வலியும் வருத்தமும் ஆகும் — தா வலியும் வருத்தமும் ஆகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'தாவில் நன்பொன் தைஇய பாவை', 'தாவாக் கொள்கைத் தகைசால் சிறப்பின்' எனவரும். தாவாக் கொள்கை வருத்தமில்லாத விரதம்.

இனி,

'கருங்கண் தாக்கலை பெரும்பிறிதுற்று' (குறுந். 69) எனத் தாவுதலும், 'தாவாத இல்லை வலிகளும்' எனக் கேடும் உணர்த்துதல் கூறிய கிளவி (உரி. 92) என்பதனாற் கொள்க.

**வெள்.**

இ-ள் : தா வென்னுஞ்சொல் வலியும் வருத்தமு மாகிய குறிப்புணர்த்தும், எ-று.

---

பொருள் : 1. வலியில்லாத நல்ல பொன்னாற் செய்யப் பட்ட பாவை.

2. கரிய கண்ணையும் வருத்தத்தையும் உடைய கலைமான் இறந்ததாக. தாக்கலை என்பதற்கு வருத்தத்தையுடைய கலை என இவர் பொருள் கொள்ள நச்சினார்க்கினியர் தாவுகின்ற கலை எனப் பொருள் கொண்டு தா என்பதற்குத் தாவுதல் என்னும் பொருளும் உண்டு எனக் கொண்டதை அவர் உரையிற் காண்க.

உ-ம் : 'தாவினன் பொன்தைஇய பாவை' எனவும், 'தாவாக் கொள்கை தகைசால் சிறப்பினின்' எனவும் தா என்னும் உரிச்சொல் முறையே வலியும் வருத்தமும் ஆகிய குறிப்புணர்த்தியது.

பொருள். தாவு — பள்ளம் — வலி, வருத்தம்.

தெவ்வு

340. * தெவ்வுப் பகையாகும் (49)

ஆ. மொ: இல.

'Tevvu' is enmity

ஆல்.

'Tevvu' means enmity

**இளம்.**

வ-று : 'தெவ்வர் தேயத்து' என்றக்கால், பகைவர் தேயத்து என்பதாம்.

**சேனா.**

(தெவுக்கொளற் பொருட்டே, தெவ்வுப் பகையாகும்)

இ-ள் : 'நீர்த்தெவு நிரைத் தொழுவர்' (மதுரைக். 89) எனவும், 'தெவ்வுப் புலம்' எனவும், தெவுந் தெவ்வும், முறை யானே கொள்ளுதலும் பகையுமாகிய குறிப்புணர்த்தும், எ-று.

**தெய்.**

இ-ள் : தெவ்வு என்னுஞ்சொல் பகை என்னும் பொருள் படும், எ-று.

உ-ம் : தெவ்வுப் புலம்.

**நச்.**

இதுவுமது.

இ-ள் : தெவ்வு பகை ஆகும் — தெவ்வு பகையாகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : [1] 'தெவ்வுப் புலம் சிதைய வெய்கணை சிதறி' என வரும்.

---

* தெவ்வு என்றிருப்பினும் 'தெவ்' எனும் சொல்லே கொள்க. (தெவ் + உ) உகரம் சாரியை.

1. பொருள் : பகைப்புலம் சிதையும்படி எய்யக்கூடிய கணைகளைச் சிதறி

**வெள்.**

(தெவுக் கொளற் பொருட்டே, தெவ்வுப் பகையாகும்)

இ-ள் : தெவு என்னும் உரிச்சொல் கொள்ளுதலாகிய குறிப்புணர்த்தும். தெவ்வென்னுஞ் சொல் பகையாகிய குறிப் புணர்த்தும், எ-று.

உ-ம் : 'நீர்தெவு நிரைத்தொழுவர்' எனவும், 'தெவ்வுப் புலம் சிதைய வெய்கணைசிதறி' எனவும் வரும்.

**ஆதி.**

பொருள் : தெவு — ......... — கொள்கிற.

விறப்பு, உறப்பு, வெறுப்பு

**341.** விறப்பு முறப்பும் வெறுப்புஞ் செறிவே. (50)

(விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே)

**ஆ.மொ:இ.**

'Viṛappu' 'uṛappu' and 'Veṛuppu' mean density.

**ஆல்.**

'Viṛappu' 'uṛappa' and 'Veṛuppu' mean density.

**பி.இ.நூ.**

இல.வி. 282-2

விறப்பே செறிவும்...விளக்கலும்.

**இளம்.**

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், இவையெல்லாம் குறிப்பு.

வ-று : 'விறந்த காப்பொடு' என்றக்கால், செறிந்த காப்பொடு என்பதாம்.

'உறந்த விஞ்சி யுயர்நிலைமாடம்' என்புழி, செறிந்த இஞ்சி என்பதாம்.

'வெறுத்தார்' (புறம்-53) என்றக்கால், செறிந்தார் என்பதாம்.

**சேனா.**

இ-ள் : 'விறந்த காப்போ டுண்ணின்று வலியுறுத்தும்' எனவும், '[1]உறந்த விஞ்சி' எனவும், [2]'வெறுத்த கேள்வி விளங்கு

1 பொருள் : செறிந்த மதிலும் உயர்ந்த நிலையை யுடைய மாடமும்.

2 பொருள் : செறிந்த கேள்வியறிவுடைய விளங்கும் புகழையுடைய கபிலன்.

புகழ்க் கபிலன்' (புறம்.53) எனவும், விறப்பு முதலியன செறிவு என்னும் குறிப்புணர்த்தும், எ-று.

தெய்.

இ-ள் : விறப்பு என்னுஞ் சொல்லும் உறப்பு என்னுஞ் சொல்லும், வெறுப்பு என்னும் சொல்லும் செறிவு என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம் : 'விறந்த காப்போ டுண்ணின்று வலியுறுத்தும்'' ''உறந்த விஞ்சி', 'வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்' (புறம்.53).

நச்.

இதுவுமது.

இ-ள் : விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே—விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவு என்னும் குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'விறந்த காப்போ டுண்ணின் று வலியுறுத்து'
'உறந்த இஞ்சி யுயர்நிலை மாடத்து'
'வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்' (புறம்.53) எனவரும்.

வெள்.

இ-ள் : விறப்பு உறப்பு வெறுப்பு என்னும் உரிச்சொற்கள் செறிவு என்னும் குறிப்புணர்த்துவன எ-று.

உ-ம் : 'விறந்த காப்போடு உண்ணின் று வலியுறுத்தும், எனவும், 'உறத்த இஞ்சியுயர் நிலை மாடத்து' என்வும், வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்' எனவும் வரும்.

ஆதி.

பொருள் : விறப்பு—திமிர்—செறிவு.

உறுப்பு— } கிள்ளியெடு / உராய் – செறிவு

வெறுப்பு—?

விறப்பு (மேலும் ஒரு பொருள்)

**342.** அவற்றுள்
விறப்பே வெரூஉப் பொருட்டு மாகும். 51)

(அவற்றுள்
விறப்பே வெரூஉப் பொருட்டும் ஆகும்.

ஆ.மொ:இல.

Of them 'Viṛappu' dread also

ஆல்.

Among them 'Viṛappu' means, also dread.

பி.இ.நா.

இல.வி.282—2

விறப்பே... வெருவலும் விளக்கலும்.

இளம்

வ-று : [1]'கோடு முற்றி யளந்த காரொடு விறந்தே' என்றக்கால், வெரீஇ என்பதாம்.

சேனா.

இ-ள் : [2]'அவலெறி யுலக்கைப் பாடு விறந்தயல (பெரும் பாண். 226) என விறப்பு என்பது செறிவே யன்றி வெருவுதற் குறிப்பும் உணர்த்தும், எ-று.

தெய்.

இ-ள் : அவற்றுள் விறப்பு என்னுஞ்சொல், வெரூஉதல் என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம் : 'அவலெறி யுலக்கைப் பாடு விறந்தயல (பெரும் பாண்-226).

நச்.

இஃது எய்தியதன் மேற் சிறப்பு வீதி கூறுகின்றது.

இ-ள் : அவற்றுள் விறப்பே வெரூஉப் பொருட்டும் ஆகும். —அம் மூன்றனுள் விறப்புச் செறிவேயன்றி வெருவுதற்குறிப்பும் உணர்த்தும், எ-று.

உ-ம் : 'அவலெறி உலக்கைப் பாடுவிறந் தயல' (பெரும் பாண்-226) எனவரும்.

வெள்.

இ-ள் : (நச். உரையே).

---

1 பொருள் : கொம்புமுதிர்ந்து அமைந்த கரியகாளை யொடு அஞ்சி.

2 பொருள் : அவலைக்குற்றும் உலக்கைப் பாட்டுக்கு அஞ்சி, அயல.

**ஆதீ.**

பொருள் : விறப்பு—திமிர்—அச்சம்.
கம்பலை, சும்மை, கலி, அழுங்கல்.

**343. கம்பலை சும்மை கலியே யழுங்க
லென்றிவை நான்கு மரவப் பொருள** (52)

(கம்பலை சும்மை கலி அழுங்கல்
என்ற இவை நான்கும் அரவப் பொருள)

**ஆ.மொ: இ**

'Kambalai', 'summai', 'Kali' and 'aḻungal these four give the meaning of noise.

**ஆல்,**

'Kampalai', 'cummai', Kali', Aḻuṇkal mean noise.

**பி. இ. நூ**

**நேமி. சொ. 56**

கம்பலை சும்மை கலி அழுங்கல் ஆர்ப்பு அரவம்.

**நன். 459.**

......கலி...அமுங்கு...சும்மை...கம்பலை... இன்னன ஓசை

**இலவி285-1, 286**

கம்பலை சும்மை அரவம் கண்ணலும்
கலியே அரவமும்......... காட்டலும்...
அழுங்கல் அரவமும்

**முத்து. ஒ. 43.**

கம்பலை சும்மை கலியே அழுங்கல்
என் றிவை நான்கும் அரவப் பொருள.

**இளம்.**

இவை [1] இசை பற்றி வந்தன.

வ-று : 'ஊர் கம்பலை யுடைத்து' என்றக்கால், அரவம் உடைத்து என்பதாம். 'ஊர்சும்மை யுடைத்து' என்பதும் அது. 'கலிகெழுமூதூர்' (அகம். 11), 'அழுங்கல் மூதூர்' (நற். 203) என்பனவும் ஒக்கும்.

---

1. இசை—ஒலி.

**சேனா.**

இ-ள் : 'கம்பலை மூதூர்' (புறம். 54) எனவும், 'ஒரு பெருஞ் சும்மையொடு' எனவும். [1] 'கலிகொ ளாய மலிபு தொகுபு எடுத்த' (அகம். 11) எனவும். [2] 'உயவுப் புணர்ந் தன் றிவ் வழுங்க லூரே' (நற். 203) எனவும், கம்பலை முதலாகிய நான்கும் அரவமாகிய இசைப் பொருண்மை யுணர்த்தும், எ-று.

**தெய்.**

இ-ள் : கம்பலை என்னும் சொல்லும், சும்மை என்னும் சொல்லும், கலி என்னும் சொல்லும், அழுங்கல் என்னும் சொல்லும் இவை நான்கு சொல்லும் அரவம் என்னும் பொருளையுடைய, எ-று.

உ-ம் : 'கம்பலை மூதூர்' (புறம்- 54), 'ஒலி பெருஞ் சும்மை யொடு', 'கலி கொ ளாயம்' (அகம்.11), உயவுப் புணர்ந் தன் றிவ் வழுங்கல் ஊரே' (நற். 203).

**நச்.**

இஃது இசை.

இ-ள் : கம்பலை சும்மை கலியே அழுங்கல் என்று இவை நான்கும் அரவப் பொருள—கம்பலை சும்மை கலி அழுங்கல் என்று சொல்லப்பட்ட இந்நான்கும் அரவமாகிய இசைப் பொருண்மையை உணர்த்தும், எ-று.

உ-ம் : [3] 'களிறுகவர் கம்பலை போல' (அகம். 96)
[4] 'தனிமழை பொழியும் தண்பரங் குன்றில்
கலிகொள் சும்மை ஒலிகொள் ஆயம்'
(மதுரைக் 263, -4)

'கலி கொ ளாயம்மலி தொகுபு எடுத்த' (அகம். 11)
'உயவுப் புணர்ந் தன் றிவ் வழுங்க லூரே' (நற். 203)

என வரும். 'கலிகொள் சும்மை' என்பதனுள் 'கலி' செருக்கினை யுணர்த்துதல் 'கூறிய கிளவி' என்பதனால் கொள்க.

---

1. பொருள் : ஒலிமிக்க தோழியர் கூட்டம் மிகுந்து கூடி எடுத்த
2. பொருள் : இவ்வொலி மிக்கவூர் வருத்தம் மேலிட்டது.
3. பொருள் : யானையைக் கவரும் ஓசை போல
4. பொருள் : துளிகளையுடைய மேகம் தங்கும் குளிர்ந்த திருப்பரங்குன்றில் விழாக்கொள்ளும் ஆரவாரம், ஒலி கொண்ட மகளிர் கூட்டம்.

**வெள்**

(நச். உரையே).

**ஆதி**

பொருள் : கம்பலை — அழுகை — ஒலி
சும்மை — ...... — ,,
கலி — கலியன் காலம் — ,,
அழுங்கல்— அழுந்துதல் — ,,
அழுங்கல் (மேலும் இருபொருள்)

344. **அவற்று**
**ளழுங்கல விரக்கமுங் கேடு மாகும்** (53)

(அவற்றுள்
அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும்)

**ஆ.மொ: இ**

Of them, 'aḷungal' means compassion and loss.

**ஆல்.**

Among them Aḷuṅkal means also compassion and loss.

**பி. இ. நூ**

**இல. வி. 286.**

அழுங்கல் ...... இரக்கமும் கேடும்

**இளம்**

வ-று : 'மகனை யிழந் தழுங்கினார்' என்றக்கால் இரங்கினார் என்பதாம். 'செல வழுங்கினார்' என்றக்கால் செலவு கெடுத்தார் என்பதாம். இவை குறிப்புப் பற்றி வந்தன.

**சேனா**

இ-ள்: [1]'பழங்கண் ணோட்டமும் நலிய வழுங்கினன் அல்லனோ' (அகம். 66) எனவும், [2]'குணனழுங்கக் குற்ற முழை நின்று கூறுஞ் சிறியவர்கட்கு' (நாலடி. 353) எனவும், அழுங்கல்

---

1. பொருள் : பழைய கண்ணோட்டமமைந்த சூளுரை தன் நெஞ்சைச்சுட இரக்கம் கொண்டான் அல்லனோ.

2. பொருள் : குணம்கெடக் குற்றத்தைப் பக்கத்திருந்து கூறும் சிறியவர்.

அரவமேயன்றி இரக்கமும் கேடுமாகிய குறிப்பும் உணர்த்தும், எ-று.

**தெய்.**

இ-ள்: மேற்சொல்லப்பட்டனவற்றுள், அழுங்கல் என்னுஞ் சொல் இரக்கம் என்பதன் பொருண்மையும், கேடு என்பதன் பொருண்மையும்படும், எ-று.

உ-ம்: 'மகவீழ்ந், தழுங்கிய' — இஃது இரக்கம். 'குணை வழுங்கக் குற்றமுழை நின்று கூறும் (நாலடி. 353)—இதுகேடு.

**நச்.**

இஃது எய்தியதன்மேற் சிறப்பு விதி

இ-ள்: அவற்றுள் அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும்-அந் நான்கனுள் அழுங்கல் அரவமேயன்றி இரக்கமும் கேடுமாகிய குறிப்பும் உணர்த்தும், எ-று.

உ-ம் : 'பழங்கண் ணோட்டமும் நலிய'

'அழுங்கின னல்லனோ அயர்ந்தனன் மனனே' (அகம். 66)

'குணனழுங்கக் குற்றம் உழைநின்று கூறும் சிறியவர்கட்கு' (நாலடி. 353) எனவரும்.

**வெள்.**

(நச். உரையே)

**ஆதி**

பொருள் : அழுங்கல் — அழுத்துதல் — இரக்கம், கேடு துன்பம்.

கழுமு

345. கழுமென் கிளவி மயக்கஞ் செய்யும் (54)
(கழுமு என் கிளவி மயக்கம் செய்யும்).

**ஆ. மொ. இல.**

The word, Kaḷum, gives the meaning of intermingling.

**ஆல்.**

Kaḷum means a state of confusion.

**இளம்**

வ-று : [1]'கழுமிய ஞாட்பினுள் மைந்திகழ்ந்தார் இட்ட' (களவழி. 11) என்றக்கால்; மயங்கிய ஞாட்பு என்பதாம்.

---

1. பொருள் : பலர் மயங்கிய (கலந்த) போரில் தன் வலியை யிகழ்ந்தார் அஞ்சி விட்டுச் சென்ற

**சேனா**

'கழுமிய ஞாட்பு' (களவழி. 11) எனக் கழும் என்பது மயக்கமாகிய குறிப்புணர்த்தும், எ-று.

**சேனா**

இ-ள்: கழும் என்பது மயக்கம் என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம்: 'கழுமிய ஞாட்பின்' (களவழி. 11)

**நச்.**

இதுகுறிப்பு.

இ-ள்: கழுமு என்கிளவி மயக்கம் செய்யும் — கழுமு என்னும் சொல் மயக்கமாகிய குறிப்புணர்த்தும். எ-று.

உ-ம்: 'கழுமிய ஞாட்பினுள் மைந்திகழ்ந்தா ரிட்ட' (களவழி. 11) எனவரும். இது, [1]'கழும் முடித்துக் கண்கூடு கூழை' (கலி. 56.3) எனத் திரட்சியை யுணர்த்துதல் 'கூறிய கிளவி' என்பதனால் கொள்க.

**வெள்**

இ-ள்: கழும் என்பது மயக்கமாகிய குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம்: 'கழுமிய ஞாட்பு' எனவரும்.

**ஆதி**

பொருள்: கழு — ஈட்டிமுனை — மயக்கம் தரு.

செழுமை

46. செழுமை வளனுங் கொழுப்பு மாகும். (55)

(செழுமை வளனும் கொழுப்பும் ஆகும்).

**ஆ. மொ. இல.**

'Selumai' means fertility and fat

**ஆல்**

Celumai means being fertile and fat

**இளம்.**

வ-று: 'செழுஞ் செந்நெல்' என்றக்கால், வளஞ் செந்நெல் என்பதாம். வளம் என்பது ஆக்கம்.

---

1. பொருள்: பூவும் மயிரும் தம்முள் மயங்கும்படி முடித்து, வாரி முடிக்கும்படித் தலை கூடின மயிர்.

'செழுந்தடி தின்ற செந்நாய் ஏற்றை' என்பது, [1]கொழுந்தடி தின்ற என்பதாம்; கொழுப்பு என்பது ஊன் பற்றிய நிணம்.

**சேனா.**

இ–ள்: 'செழும்பல் குன்றம்' எனவும், 'செழுந்தடி தின்ற செந்நாய்' எனவும், செழுமை வளனும், கொழுப்புமாகிய பண் புணர்த்தும், எ-று.

**தெய்.**

இ–ள்: செழுமை என்பது வளன் என்பதன் பொருளும் கொழுப்பு என்பதன் பொருளும்படும், எ-று,

உ-ம்: செழும்பல் குன்றம்' — இது வளம். செழுந்தடி தின்ற செந்நாய்' — இது கொழுப்பு.

**நச்.**

இதுவுமது.

இ–ள்: செழுமை வளனும் கொழுப்பும் ஆகும்—செழுமை வளனும் கொழுப்புமாகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ–ம்: 'செழுஞ்செய் நெல்லின் சேயரிப் புனிற்றுக் கதிர்'
'செழுந்தடி தின்ற செந்நாய் ஏற்றை' எனவரும்.

**வெள்.**

இ–ள்: செழுமை என்பது வளனும் கொழுப்புமாகிய பண்பு உணர்த்தும், எ-று.

உ–ம்: 'செழும்பல் குற்றம்' எனவும், 'செழுந்தடி தின்ற செந்நாய் ஏற்றை' எனவும் முறையே வளமும் கொழுப்பும் உணர்த்தியது.

**ஆதி.**

பொருள்: செழுமை — செழிப்பான — வளமான கொழுப்பான.

விழுமம்

347. விழுமஞ் சீர்மையு மிடும்பையுஞ் செய்யும் (56)

(விழுமம் சீர்மையும் இடும்பையும் செய்யும்)

**ஆ. மொ இல.**

'Viḻumam' means eminence, honour and distress.

**ஆல்.**

'Viḻumam' means fame, honour and distress.

---

1. பொருள்: கொழுவிய' தசையைத் தின்ற ஆண் செந்நாய்.

**பி. இ. நூ.**

**இல. வி. 282.7**

விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்

**இளம்**

வ-று : 'விழுமியர்' என்றக்கால், சீரியர் என்பதாம்.

'விழும முற்றிருந்தார்' என்றக்கால், இடும்பையுற்றிருந்தார் என்பதாம்.

**சேனா**

* (பாடம் : விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையுமாம்)

இ-ள் : [1] 'விழுமியோர்க் காண்டொறும் செய்வர் சிறப்பு' (நாலடி. 159) எனவும், [2] வேற்றுமையில்லா விழுத்திணைப் பிறந்து' (புறம். 27) எனவும், [3] 'நின்னுறு விழுமம் களைந்தோள்' (அகம். 170) எனவும், விழுமம் முறையானே சீர்மையும் சிறப்பும் இடும்பையுமாகிய குறிப்புணர்த்தும், எ-று.

**தெய்**

பாடம் ; விழுமம்,

சீர்மையும் சிறப்பும் இடும்பையும் செய்யும்)

இ-ள் : விழுமம் என்பது சீர்மை என்பதன் பொருளும் சிறப்பு என்பதன் பொருளும் இடும்பை என்பதன் பொருளும் படும், எ-று.

உ-ம் : 'விழுமியோர், காண்டொறும் செய்வர் சிறப்பு' (நாலடி. 159) — இது சீர்மை. 'வேற்றுமையில்லா விழுத்திணைப் பிறந்து (புறம். 27) — இது சிறப்பு. 'நின்னுறு விழுமம் களைந்தோள்' (அகம். 170) — இது இடும்பை.

**நச்**

(பாடம் : விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்)

இதுவுமது.

---

* இளம்பூரணரை யொழிந்தோர் சீர்மைக்கும் சிறப்புக்கும் வேறுபாடுண்டு எனக் கொண்டமையின் இப்படிப் பாடம் கொண்டனர்.

பொருள் : 1. சீரியோரைக் காணுந்தொறும் சிறப்புச் செய்வர்.

2. வேறுபாடில்லாத சிறந்த குலத்திற் பிறந்து.

3. நினக்குற்ற துன்பத்தைப் போக்கினவள்.

இ-ள் : விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும் — விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையுமாகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'விழுமியோர், காண்டொறும் செய்வர் சிறப்பு' (நாலடி 159)

வேற்றுமையில்லா விழுத்திணைப் பிறந்து' (புறம். 27)

'நின்னுறு விழுமம் களைந்தோள்' (அகம். 170)

என வரும்.

**வெள்**

பாடம் : விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்)

இ-ள் : விழுமம் என்னுஞ் சொல் சீர்மை சிறப்பு இடும்பை என்னும் குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம் : 'விழுமியோர்க் காண்டொறும் செய்வர் சிறப்பு (நாலடி 159) எனவும், 'வேற்றுமையில்லா விழுத்திணைப் பிறந்து' எனவும், 'நின்னுறு விழுமம் களைந்தோள்' எனவும் முறையே சீர்மையும் சிறப்பும் இடும்பையும் உணர்த்தியது.

**ஆதி**

(பாடம் : விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்)

பொருள் : விழு — விழுதல் — விழுமம் — துன்பம்
விழுப்பம் — சிறப்பு

கருவி

**348.** கருவி தொகுதி (57)

**ஆ. மொ. இல.**

'Karuvi' is Collection.

**ஆல்.**

'Karuvi' means Collection.

**இளம்**

வ-று : 'கருவி வானம் கதழுறை சிதறி' (அகம். 4) என்றக்கால், ஈண்டு மின்னும் முழக்கும் காற்றும் என இத் தொடக்கத் தனவாயிற்று.

**சேனா**

இ-ள் : (அடுத்த சூத்திரத்து இணைத்து எழுதப்பட்டுள்ளது)

**தெய்**

இ-ள் : கருவி என்னுஞ் சொல் தொகுதி என்னும் பொருள் படும், எ-று.

உ-ம் : 'கருவி வானம்' (புறம். 159)

**நச்.**

**இதுவுமது**

இ-ள் : கருவி தொகுதி — கருவீ தொகுதியாகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உணர்த்துங்கால் பலவற்றது கூட்டத்தை விளக்கும்.

உ-ம் : 'கருவீ வானம் கதழுறை சிதறி' (அகம். 4) என வரும். ஆண்டு மின்னும் முழக்கும் காற்றும் என்பன இத்தொகுதி.

**வெள்**

இ-ள்: (அடுத்த சூத்திரத்து இணைத்து எழுதப்பட்டுள்ளது)

**ஆதி**

பொருள் : கருவி — ஆயுதம் — தொகுதி, கூட்டம்

கமம்

349. கம நிறைந் தியலும் (58)

(கமம் நிறைந்து இயலும்)

**ஆ. மொ. இல.**

'Kamam' means fullness

**ஆல்.**

'Kamam' means fullness

பி .இ. நூ.

நேமி. சொ. 59.

கமமும்...நிறைவாகும்

**இளம்**

வ-று: 'கமஞ்சூல் மாமழை' (திருமுருகு. 7) என்றக்கால்' நிறைந்த சூல் மாமழை என்பதாம்.

**சேனா**

(கருவி தொகுதி, கமம் நிறைந்தியலும்)

இ-ள் : 'கருவி வானம்' (புறம். 159) எனவும், 'கமஞ்சூல் மாமழை' (அகம். 43) எனவும், கருவியும் கமமும், தொகுதியும் நிறைவுமாகிய குறிப்புணர்த்தும், எ-று.

கருவி வானம் என்புழிக் கருவீ-மின்னு முழக்கு முதலாய வற்றது தொகுதி.

**தெய்.**

இ-ள் : கமம் என்னுஞ்சொல் நிறைந்து என்பதனோடு இயலும், எ-று.

உ-ம் : 'கமஞ்சூல் மாமழை' (அகம். 43)

**நச்.**

இதுவுமது.

இ-ள் : கமம் நிறைந்து இயலும்—கமம் நிறைவாகிய குறிப் புணர்த்தும், எ—று.

சொல்லொடு பொருட்கு ஒற்றுமை கருதி 'நிறைந்தியலும்' எனப் பொருளின் தொழிலைச் சொல் மேல் ஏற்றினார்.

உ-ம் : [1]'கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை' (திருமுருகு. 7) எனவரும்.

**வெள்**

(கருவி தொகுதி, கமம் நிறைந்தியலும்)

இ-ள் : கருவி என்னும் உரிச்சொல் தொகுதி என்னும் குறிப் புணர்த்தும். கமம் என்பது நிறைவாகிய குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம் : 'கருவி வானம்' எனவும், 'கமஞ்சூல் மாமழை' எனவும் வரும். மின் இடி முதலாயவற்றின் தொகுதியாகிய மேகம் என்பார் 'கருவி வானம்' என்றார்.

**ஆதி.**

பொருள் : கமம்—நிறைவுற்ற.

அரி

**350.** அரியே யைம்மை **(59)**

(அரியே ஐம்மை)

**ஆ. மொ. இல.**

'Ari' ' is beauty

---

பொருள் : 1. கடலில் முகந்ததனால் நிறைந்த சூலுடைய பெரிய மேகம்.

**ஆல்**

'Ari' means the beautiful

**பி.இ.நா.**

**நேமி. சொ. 58**

அரி ஐம்மை

**இளம்**

வ-று : 'அரிமயிர்த் திரள் முன்கை' (புறம். 11) என்றக்கால், [1]ஐம்மயிர்த் திரள் முன்கை என்றவாறாம்.

**சேனா.**

இ-ள் : (அடுத்து சூத்திரத்தில் இணைத்து எழுதப் பட்டுள்ளது).

**தெய்**

இ-ள் : அரி என்னுஞ்சொல் ஐது என்னும் பொருள்படும், எ-று.

உ-ம் : 'அரிமயிர்த்திரள் முன்கை' (புறம். 11).

**நச்**

இதுவுமது.

இ—ள : அரியே ஐம்மை—அரி ஐம்மையாகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'அரிமயிர்த்திரள் முன்கை' (புறம். 11) என வரும்.

**வெள்**

இ-ள் : (அடுத்த சூத்திரத்தில் இணைத்து எழுதப் பட்டுள்ளது).

**ஆதி**

பொருள்-அரி.—அரிசி, ரேகை—அழகான.

கவவு

**351.** கவ வகத்திடுமே. **(60)**

(கவவு அகத்திடுமே).

**ஆ. மொ. இல.**

'Kavavu' is having close to body or embracing;

---

1. ஐம்மை-நொய்மை, மென்மை.

**ஆல்.**

'Kavavu' means embracing.

**இளம்.**

இவையெல்லாம் குறிப்பு.

வ-று: [1] 'கொடும்பூண் கவைஇய கோல மார்பு' என்றக்கால், கொடும்பூண் அகத்திட்ட கோல மார்பு என்பதாம்.

**சேனா**

(அரியே ஐம்மை, கவவகத்திடுமே).

இ-ள் : 'அரிமயிர்த் திரள் முன்கை" (புறம். 11) எனவும், [2] 'கழூஉ வீளங் காரம் கவைஇய மார்ப' (புறம். 19) எனவும், அரியும் கவவும், ஐம்மையும் அகத்தீடுமாகிய குறிப்புணர்த்தும், எ-று.

**தெய்.**

இ-ள் : கவவு என்னுஞ்சொல் அகத்திடுதல் என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம்: 'கழூஉ விளங்காரம் கவைஇய மார்பே' (புறம். 19)

**நச்**

இதுவுமது.

இ-ள் : கவவு அகத்திடுமே—கவவு அகத்தீடாகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'கவவுக் கடுங் குரையள் காமர் வனப்பினள்" (குறுந். 132) எனவரும். இது 'கழூஉ விளங்காரம் கவைஇய மார்பே' (புறம். 19) என எச்சமாங்கால் திரிந்து நிற்கும்.

**வெள்.**

(அரியே யைம்மை, கவவகத் திடுமே)

---

1. பொருள் : வளைந்த அணிகள் தழுவிய அழகிய மார்பு. அகத்தீடுதல் என்பது தழுவுதல். இருகைகளாலும் தழுவும் போது தழுவப்படும் பொருள் அவற்றின் உட்படுதல் அகத்திடுதலாம். cover எனும் ஆங்கிலச் சொல்லை ஒப்பு நோக்குக.

2. பொருள : கழுவப்பட்டு விளங்கும் மாலையால் தழுவப்பட்ட மார்பு.

இ-ள் : அரி என்னும் சொல் ஐம்மையாகிய குறிப்புணர்த்தும்; கவவு என்பது அகத்திடுதலாகிய குறிப்புணர்த்தும், ஐம்மை—அழகுடைமை.

உ-ம் : அரிமயிர்த் திரள் முன்கை' எனவும், 'கழுவிளங் காரம் கவைஇய மார்பே' எனவும் வரும்.

ஆதீ.

பொருள் : கவவு—வளைத்துப்பிடி—தன்னுட் கொள்ளுதல் தன்மேற் கொள்ளுதல்

துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல்

352. துவைத்தலுஞ் சிலைத்தலு மியம்பலு மிரங்கலு
மிசைப் பொருட் கிளவி யென்மனார் புலவர் (61)

(துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும்
இசைப் பொருட் கிளவி என்மனார் புலவர்).

ஆ.மொ.இல.

The poets say that 'tuvaiththal' 'silaiththal', 'iyambal' and 'irangal' are words, which denote noise.

ஆல்.

Scholars tell us that 'tuvaittal' cilaittal, 'iyampal' and 'irankal' mean what these sounds suggest.

பி. இ. நூ.

இல. வி. 285-2

துவைத்தல் சிலைத்தல் இயம்பல் இசைசுட்டலும்

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், இவை நான்கும் இசை பற்றி வந்தன.

வ-று : [1]'வரிவளை துவைப்ப' என்றக்கால், சங்கு இசைப்ப என்பதாம்.

[2]'கலையி னிரலை சிலைப்ப' என்றக்கால், அதனது குரலிசைப்பைச் சொல்லிற்றாம்.

'ஏறு சிலைக்கும்' என்பதும் அது.

---

பொருள் : 1. வரிகளையுடைய சங்கு ஒலிப்ப.
2. கலைமானொடு இரலைமான் ஒலிப்ப.

[1]'இயமரம் இயம்பும்' எனவே ஒலிக்கும் என்பதாம்.

[2]'முரஞ்சிரங்கு முற்றம்' என்றக்கால், இசைக்கும் என்பதாம்.

## சேனா.

இ-ள்: 'வரிவளை துவைப்ப' எனவும், [3] 'ஆமா நலலேறு சிலைப்ப' (முருகு. 315) எனவும், [4] கடிமரந்தடியுமோசை தன் னூர், நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப' (புறம். 36) என்வும், [5] 'ஏறிரங் கிருளுடை' (கலி. 46) எனவும், துவைத்தல் முதலாயின இசைப் பொருள் உணர்த்தும், எ-று.

## தெய்

இ-ள்: துவைத்தல் என்னும் சொல்லும் சிலைத்தல் என்னும் சொல்லும் இரங்கல் என்னும் சொல்லும் இயம்பல் என்னும் சொல்லும் ஓசைப் பொருண்மையுடைய சொல், எ-று.

உ-ம்: 'வரிவளை துவைப்ப' 'ஆமா நல்லேறு சிலைப்ப' 'ஏறிரங் கிருளுடை', 'கடிமரந் தடியுமோசை தன்னூர்—நெடு மதில் வரைப்பிற் கடிமனை யியம்ப.'

## நச்

இஃது இசை.

இ-ள்: துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங் கலும் இசைப்பொருட்கிளவி என்மனார்புலவர்—துவைத்தல் முதலிய நான்கும் இசைப் பொருளை உணர்த்தும் சொல்லாம் என்று கூறுவர் புலவர், எ-று.

உ-ம்: 'முரசு கடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவும்' (புறம் 158)

'ஆமா நல்லேறு சிலைப்ப (முருகு. 315)

'கடிமரந்தடியு மோசை தன்னூர்,
நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப, (புறம் 36)

---

பொருள்: 1. வாத்தியம் ஒலிப்ப.
2. முரஞ்சு ஒலிக்கும் முற்றம்.
3. காட்டுப் பசுவும் ஏறும் ஒலிப்ப
4. காவல் மரத்தை வெட்டும் ஓசை தன் ஊரில் நெடுமதிலகத்துள்ள அரண்மனைக் கண் ஒலிக்க.
5. ஆனேறு ஒலிக்கும் இருளில்

'ஏறிரங் கிருளிடை இரவினிற் பதம் பெறா அன்'
(கலி. 46) எனவரும்

**வெள்**

இ-ள்: துவைத்தல் சிலைத்தல் இயம்பல் இரங்கல் என்னும் உரிச் சொற்கள் இசைப் பொருளுணர்த்தும், எ—று.

உ-ம்: 'வரிவளை துவைப்ப', 'ஆமா நல்லேறு சிலைப்ப', 'கடிமரந்தடியுமோசை தனனூர்—நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப', 'ஏறிரங் கிருளிடை' எனவரும்.

**ஆதி**

பொருள்: துவைத்தல்—துணிதுவைத்தல்—ஒலிக்குறிப்பு
சிலைத்தல் —......... — ,,
இயம்பல் —சொல்லுதல் — ,,
இரங்கல் —இரக்கப்படல் — ,,
இரங்கல் (மேலும் ஒரு பொருள்)

353. அவற்று
ளிரங்கல் கழிந்த பொருட்டு மாகும் (62)

(அவற்றுள்
இரங்கல் கழிந்த பொருட்டும் ஆகும்)

ஆ. மொ. இல.
of them,
'irangal' means repentance also

ஆல்.
Among them 'irankal' will also mean repentance

**இளம்.**

உம்மை யிறந்தது தழீஇ யிற்று.

[1] 'உடையதிகழ்ந் துயிரிரங்கி யிருந்தார்' என்றக்கால், கழிவினை விளக்கும், ஈண்டு இரக்கம்.

**சேனா.**

இ-ள்: [2] 'செய்திரங்கா வினை' (புறம் 10) என இரங்கல் இசையே யன்றிப் பொருளது கழிவாகிய குறிப்பும் உணர்த்தும், எ-று.

---

1 பொருள்: உடையதை இகழ்ந்து உயிர்கழிந்ததற்கு இரங்கி யிருந்தார்.

2 பொருள்: செய்து பின் அது கழிந்ததற்கு இரங்கா வினை (தொழில்)

கழிந்த பொருள்பற்றி வரும் கவலையைக் கழிந்த பொருள் என்றார்.

**தெய் :**

இ-ள்: மேற் சொல்லப்பட்டவற்றுள் இரங்கல் என்பது கழிந்தது என்னும் பொருளையும் உடைத்தாகும், எ-று.

உ-ம்: 'செய்திரங்கா வினை' (புறம் 10)

**நச்.**

இஃது எய்தியதன் மேற்சிறப்பு விதி.

இ-ள்: அவற்றுள் இரங்கல் கழிந்த பொருட்டும் ஆகும்— அந்நான்கனுள் இரங்கல் இசையே யன்றி ஒரு பொருளது கழிவால் பிறந்த வருத்தமாகிய குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம்: 'செய்திரங்கா வினைச், சேண் விளங்கும் புகழ்' (புறம் 10, 11) என வரும். இஃது

'இனி நினைந் திரக்க மாகின்று' (புறம் 243) என இரக்கம் எனவும் நிற்கும்.

**வெள்.**

இ-ள்: மேற்குறித்த உரிச் சொற்களுள் இரங்கல் என்பது இசையே யன்றிப் பொருளது கழிவாகிய குறிப்பும் உணர்த்தும், எ-று.

கழிந்த பொருள்பற்றி வரும் கவலையைக் கழிந்த பொருள் எனக் குறித்தார்.

உ-ம்: 'செய்திரங்கா வினை' எனவரும்.

**ஆதி.**

பொருள்: இரங்கல்—இரக்கப்படல்—ஒலிக்குறிப்பு.

இலம்பாடு, ஒற்கம்

354. இலம்பா டொற்க மாயிரண்டும் வறுமை. (63)

(இலம்பாடு ஒற்கம் ஆ இரண்டும் வறுமை).

**ஆ. மொ. இல.**

'Ilambādu' and 'oṛkam' — these two denote poverty.

**ஆல்.**

'The two 'ilampātu' and 'oṛkam' mean poverty.

**இளம்.**

வ-று: 'இலம்படு புலவர்' (மலைபடு. 576) என்றக்கால், வறுமைப்படும் புலவர் என்பதாம். 'ஊரை ஒற்கம் தீர்க்கும்' என்றக்கால் வறுமை தீர்க்கும் புலவர் என்பதாம்.

**சேனா.**

இ-ள் : 'இலம்படுபுலவர் ஏற்ற கை நிறைய' (மலைபடு. 576) எனவும், [1]'ஒற்கல் ஒற்கம் சொலிய' (புறம். 327) எனவும் இலம்பாடும் ஒற்கமும் வறுமையாகிய குறிப்புணர்த்தும், எ-று.

இலம் என்னும் உரிச்சொல் பெரும்பான்மையும் பாடு என்னுந் தொழில் பற்றியல்லது வாராமையின் இலம்பாடு என்றார்.

**தெய்.**

இ-ள் : இலம்பாடு என்னும் சொல்லும் ஒற்கம் என்னும் சொல்லும் வறுமை என்னும் பொருள்படும், எ-று.

உ-ம் : 'இலம்படு புலவர் ஏற்றகை நிறைய' (மலைபடு. 576), 'ஒற்கல் ஒற்கஞ் சொலிய' (புறம். 327).

**நச்.**

இதுவுமது.

இ-ள் : இலம்பாடு—இலம் என்னும் சொல் குறிப்புச்சொல் தன்மைப்பட்டு இன்மை என்னும் உரிச்சொல்லாய் நின்றதும், ஒற்கம்—ஒற்கம் என்னும் உரிச்சொல்லும், ஆயிரண்டும் வறுமை—ஆகிய அவ்விரண்டும் வறுமை என்னும் உரிச்சொற் பெயரது குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'இலம்படு புலவர் ஏற்ற கைநிறைய' (மலைபடு.576)
'ஒற்கல் ஒற்கம் சொலியத் தன்னூர்' (புறம். 327)

எனவரும்.

'இலம்படுபுலவர்' என்பதற்கு 'இல்லாமையுண்டாகின்ற புலவர்' என அல்வழியாகப் பொருள் உரைக்க. இதற்கு உரையாசிரியர் 'இலத்தாற் பற்றப்படும் புலவர்' என வேற்றுமையாகப் பொருள் கூறினாரால் எனின், ஆசிரியர்.

'அவ்வழியெல்லாம் மெல்லெழுத்தாகும்' (எழு. புள்ளி. 19) என அவ்வழியே கூறத் தொடங்கி,

'அகமென் கிளவிக்குக் கைமுன் வரின்' (எழு. புள்ளி. 20) எனப் பண்புத் தொகையும்

'இலமென் கிளவிக்கு' (எழு. புள்ளி. 21)

---

1. பொருள் : சுற்றத்தின் வறுமை நீங்க. இலம் என்பது வறுமை எனும் பொருள்தரின் உரிச்சொல். இல்லேம் எனும் பொருள்தரின் குறிப்பு வினைமுற்றுச் செ. ல்.

என அல்வழிக்கண் வரும் உரிச்சொல்லும் கூறிப் பின்னர் எண்ணுப் பெயரும் அளவுப் பெயரும் நிறைப் பெயரும் கூறிப் 'படர்க்கைப் பெயரும்' (எழு. புள்ளி. 25) என்னுஞ்சூத்திரத்தின் 'வேற்றுமையாயின் என மீட்டும் வேற்றுமையையெடுத்து ஓதினமையின், 'இலம்' என்பதனை வேற்றுமையென்றல் பொருந்தாமை யுணர்க.

இலம் என்னும் சொல் 'யாம் பொருள் இலம்' என முற்றுச் சொல்லாயும், ஒருகால் உரிச்சொல்லாயும் நிற்கும் என்பது உணர்த்துதற்கு 'இலத்திற்கு உரிச்சொல் தன்மைப்பட்டு நிற்குமிடத்து' என்றார்.

'இலமென் கிளவிக்குப் படுவருகாலை'

என நிலைமொழி வருமொழி செய்து முன்னர் ஆசிரியர் புணர்த்தமையின் 'இலம்பாடு என ஒரு சொல்லாக ஓதாமை யுணர்க.

'இலம்பாடு நாணுத்தரும்' (சிலப். 9. 11)

என்றதோ எனின் 'இல்லாமை யுண்டாதல் நாணுத்தரும்' எனப் பொருள் கூறிக் கொள்க.

**வெள்.**

இ-ள் : இலம்பாடு ஒற்கம் என்னும் அவ்விரண்டு சொற்களும வறுமை என்னும் குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம் : 'இலம்படு புலவர் ஏற்றகை நிறைய' எனவும்,
'ஒக்கல் ஒற்கம் சொலிய' எனவும் வரும்.

**ஆதி.**

பொருள் : இலம்பாடு—இல்லையென்னும் நிலை—வறுமை
ஒற்கம் —தளர்ச்சி —வறுமை
ஞெமிர்தல், பாய்தல்

**355. ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள (64)**

(ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தல் பொருள)

**ஆ.மொ.இல.**

'N̄emirthal' and Pāythal' mean spreading

**ஆல் :**

'N̄emirtal' and 'Pāytal' mean spreading.

**பி. இ. நூ.**

இல. வி. 281-17

ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தலை யுரைத்தலும்

**இளம்**

வ-று : 'தண்பெரும் பந்தர்த் தருமணன் ஞெமிரிய' (நற். 143)

என்றக்கால், பரப்பிய என்பதாம்.

'புண்ணுமிழ் குருதிப் புனல் பாய்ந்து' என்றக்கால், பரந்து என்பதாம்.

**சேனா**

இ-ள்: ' தருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து' (நெடு நல். 90) எனவும், 'பாய் புனல்' எனவும், ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தலாகிய குறிப்புணர்த்தும், எ-று.

**தெய்**

இ-ள் : ஞெமிர்தல் என்னுஞ் சொல்லும் பாய்தல் என்னுஞ் சொல்லும் பரத்தல் என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம்: 'தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து'(நெடு நல்.90) 'பாய்புனல்'.

**நச்**

இதுவுமது.

இ—ள் : ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள— ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தலாகிய குறிப்புப் பொருண்மை யுடைய, எ—று.

உ-ம் : 'தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து'
'புண்ணுமிழ் குருதி முகம் பாய்ந் திழிதர'
(குறிஞ்சிப். 172)

என வரும்.

**வெள்**

இ-ள் : ஞெமிர்தல் பாய்தல் என்னும் உரிச்சொற்கள் பரத்தலாகிய குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம் : தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து' எனவும், 'பாய்புனல்' எனவும் வரும்.

**ஆதி.**

பொருள் : ஞெமிர்தல்—ஒடித்தல், நெரித்தல்—பரப்பிய பாய்தல் —துள்ளிப் பாய்தல் —பரப்பிய

கவர்வு

**356. * கவர்வு விருப்பாகும்** (65)

(கவர்வு விருப்பு ஆகும்)

**ஆ. மொ. இல.**

'Kavarvu' is desire.

**ஆல்**

'Kavarvu' means desire

**இளம்.**

வ-று : [1] 'கொள்ளை மாந்தரின் ஆனாது கவரும்' (அகம். 3) என்றக்கால் விரும்பும் என்பதாம்.

**சேனா.**

இ-ள் : (சூ. 356, 357, 358 ஆம் சூத்திரங்களுக்குச் சேர்த்து உரை எழுதப்பட்டுள்ளது. 358-ல் காண்க)

**தெய்.**

இ-ள் : கவர்பு என்னுஞ் சொல் விருப்பு என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம் : [2] 'கவர் நடைப் புரவி' (அகம் 130)

**நச்:**

இதுவும் அது.

இ-ள் : கவர்வு விருப்பாகும்—கவர்வு விருப்பாகிய குறிப் புணர்த்தும், எ-று.

உ-ம் : 'கவர் நடைப் புரவி' (அகம் 130) என வரும். இனி, 'கொள்ளைமாந்தர் இன் இன்னாது கவரும்' எனக் கைக்கொள் ளுதல் 'கூறிய கிளவி' (உரி. 92) என்பதனாற் கொள்க.

---

* கவர்பு-தெய். பாடம்.

பொருள் : 1. கள்வர்போல ஒழியாது விரும்பும்

2. விருப்பந்தரும் நடையினையுடைய குதிரை.

[1] 'கருமறிக் காதிற் கவையடிப் பேய் மகள்' (சிறு பாண்.197) எனக் கவைத்தல் சொற்புறனடையாற்கொள்க'.

**வெள்**

இ-ள் : (சூ. 356, 357, 358 ஆம் சூத்திரங்களுக்குச் சேர்த்து உரையெழுதப்பட்டுள்ளது. 358 ஆம் சூத்திரத்திற் காண்க)

**ஆதி.**

பொருள் : கவர்வு—பிளவு, கிளைத்த—விருப்பு.

சேர்

**357. சேரே திரட்சி** *(66)*

**ஆ. மொ. இல.**

'Sēr' is round or Collection.

**ஆல்.**

'Cēr' means gathering.

**இளம் :**

வ-று : [2] 'சேர்ந்து செறிகுறங்கு' (நற். 170) என்றக்கால், திரண்டு செறிகுறங்கு என்பதாம்.

**சேனா**

இ-ள் : (358-ல் காண்க)

**தெய்.**

இ-ள் : சேர் என்னுஞ் சொல் திரட்சி என்பதன் பொருள் படும், எ-று.

உ-ம் : 'சேர்ந்து செறிகுறங்கு' (நற். 170)

**நச்**

இதுவுமது.

இ-ள் : சேரே திரட்சி — சேர் திரட்சியாகிய குறிப் புணர்த்தும், எ-று.

---

1. கருத்த மறிந்த காதினையும் கவைத்த அடியினையும் உடைய பேய்ப் பெண். கவை எனும் உரிச்சொல் கவைத்தல் எனும் பொருளில் வருவதை புறனடையாற் கொள்க. (உரி. 98)

பொருள் : 2. திரண்டு செறிந்த துடை.

உ-ம் : சேர்ந்து செறிகுறங்கின்' (நற். 170) எனவரும்.

**வெள்.**

இ-ள் : (358-ல் காண்க.)

**ஆதி.**

பொருள் : சேர் — சேர்ந்துள்ள — திரட்சியான.

வியல்

**358.** வியலென் கிளவி யகலப் பொருட்டே (67)

(வியல்என் கிளவி அகலப் பொருட்டே).

**ஆ.மொ.இல.**

The word 'Viyal' means width

**ஆல்.**

'Viyal' means broad.

**பி. இ. நூ.**

**நேமி-சொ. 58**

வியல் அகல மாகும்.

**இளம்**

வ-று : 'வியலிரு வானம்' என்றக்கால், அகலிருவானம் என்பதாம்.

**சேனா.**

(356, 357, 358-ன் உரை)

இ-ள் : 'கவர் நடைப் புரவி' (அகம். 130) எனவும்' 'சேர்ந்து செறிகுறங்கு' (நற். 170) எனவும், 'வியலுலகம், எனவும், கவர்வு முதலாயின முறையானே விருப்பும் திரட்சியும் அகலமுமாயின குறிப்புணர்த்தும், எ-று.

**தெய்.**

இ-ள் : வியல் என்னுஞ் சொல் அகலம் என்பதன் பொருள் படும், எ-று.

உ-ம் : வியலுலகம்.

**நச்.**

இதுவுமது.

இ-ள் : வியல் என் கிளவி அகலப் பொருட்டே — வியல் என்னும் சொல் அகலமாகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'இருங்கல் வியலறைக் கிடப்பி வயிறு தின்று என வரும். இது, 'வியன்தானை விறல் வேந்தே' எனத் திரிந்தும் வரும்.

**வெள்.**

*(356, 357, 358-ன் உரை)*

இ-ள் : கவர்வு என்பது விருப்பு என்னும் குறிப்புணர்த்தும்; சேர் என்பது திரட்சி என்னும் குறிப்புணர்த்தும்; வியல் என்பது அகலம் என்னும் குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம் : 'கவர்நடைப் புரவி' எனவும், 'சேர்ந்து செறி குறங்கு' எனவும், 'வியலுலகம்' எனவும் கவர்வு, சேர், வியல் என்பன முறையே விருப்பு, திரட்சி, அகலம் என்னும் குறிப் புணர்த்தின.

**ஆதி.**

பொருள் : வியல் —— ...... —— அகன்ற.
பேம், நாம், உரும்

*** 359. பேநா முருமென வரூஉங் கிளவி
யாமுறை மூன்று மச்சப் பொருள** **(68)**

(பேம் நாம் உரும் என வரூஉம் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப் பொருள)

**ஆ. மொ. இல.**

'Pēm', nām', and 'urum' — these three words give the sense of fear.

**ஆல்**

The three that are 'Pēm' 'Nām' and 'urum' give the sense of fear.

**பி.இ.நூ.**

**இல. வி. 281-18, 19.**

பேநாம் உருமென வரூஉம் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சம் கூறலும்

* பே — இளம், சேனா. பாடம்
பேஎ — தெய். ,,
பேம் — நச். ,,

**இளம்.**

வ-று : [1] 'மன்ற மராஅத்த பேஎழுதிர் கடவுள்' (குறுந். 87) என்பது அச்சம் முதிர் கடவுள் என்பதாம்.

[2] 'நாம்வருந் துறை சேர்ந்து' என்பது அச்சமுடைய துறை போந்து என்பதாம்.

[3] 'உருமில் சுற்றம்' (பெரும்பாண். 447) என்பது அச்சமில் சுற்றம் என்பதாம்.

இவையெல்லாம் குறிப்பு.

**சேனா.**

இ-ள் : 'மன்ற மராஅத்த பேமுதிர் கடவுள்' (குறுந். 87) எனவும், 'நாமநல்லார்' எனவும், 'உருமில் சுற்றம் (பெரும்பாண். 447) எனவும், பே முதலாகிய மூன்றும் அச்சமாகிய குறிப் புணர்த்தும், எ-று.

**தெய்.**

இ-ள்: பேஎ என்னுஞ் சொல்லும், நாம் என்னும் சொல்லும் உரும் என்னும் சொல்லுமாகிய அம்முறைமையையுடைய மூன்று சொல்லும் அச்சப் பொருண்மையையுடைய, எ-று.

உ-ம் : 'மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்' (குறுந். 87), [4]'நாம நல்லராக் கதுவியாங்கு', 'உருமில் சுற்றமோ டிருந்தோற் குறுகி' (பெரும்பாண். 447).

**நச்**

இதுவுமது.

இ-ள் : பேம் நாம் உரும் என வருஉம் கிளவி ஆ முறை மூன்றும் அச்சப் பொருள—பேம் நாம் உரும் என்று சொல்ல வருகின்ற கிளவியாகிய அம்முறைமையினையுடைய மூன்றும் அச்சம் என்னும் உரிச்சொல்லது குறிப்புப் பொருண்மையை யுடைய, எ-று.

உ-ம் : 'மன்ற மராஅத்த பேஎமுதிர்கடவுள்' (குறுந். 87). 'நாம நல்லராக் கதிர்பட வமிழ்ந்த,

'உருமில் சுற்ற மொடு' (பெரும்பாண். 447) எனவரும். நாம் நாமம் எனத்திரிந்து வழங்கிற்று.

---

பொருள் : 1. ஊர்ப் பொதுமன்றத்துள்ள மராமரத்தின் கீழ் அச்சம் மிக்க கடவுள்.
2. அச்சம்வரும் துறை சேர்ந்து
3. அச்சமில் சுற்றம்
4. அச்சம் தரும் நல்ல பாம்பு கதுவியது போல

**வெள்**

இ-ள் : பே, நாம் , உரும் என்னும் மூன்று சொற்களும் அச்சம் என்னும் குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம் : 'மன்ற மராஅத்த பேமுதிர் கடவுள்' எனவும், 'நாம நல்லரா' எனவும், 'உருமில் சுற்றம்' எனவும் அச்சமாகிய குறிப்பு உணர்த்தின.

நாம் நாம எனத்திரிந்து வழங்கிற்று.

**ஆதி**

பொருள் : பேம்—பேய்— அச்சம்தரு
நாம்—நாம்—அச்சம்தரு
உரும்—இடி—அச்சம்தரு

குறிப்பு : அஞ்சி விழிப்பவனைப் பார்த்துப் பேபே என விழிக்கிறான், பேந்தப்பேந்த விழிக்கிறான் என்பதும், அச்சப்படுத்துதலின் 'பேஎய்'க்கு அப் பெயர் வந்தது என்பதும் இங்கு நினைவு கூரலாம்.

வய

**360.** வய வலியாகும் (69)

ஆ.மொ:இல.

'Vaya' means strength

**ஆல்.**

'Vaya' means strength

**பி.இ.நூ.**

**நேமி. சொ. 58**

வயம் வலியாகும்

**இளம்**

வ-று : [1]'வாள்வரி வேங்கை வயப்புலி' (அகம் 69) என்பது, வலியுள்ள புலி என்பதாம்.

**சேனா.**

இ-ள் : (360, 361, 362 எண்கள் உள்ளவற்றிற்குச் சேர்த்து உரை எழுதப்பட்டுள்ளது. 362ல் பார்க்க)

---

1. பொருள் : ஒளியுள்ள கோடுகளையுடைய வேங்கை யாகிய வலிய புலி.

**தெய்.**

இ-ள் : வயவென்னுஞ் சொல் வலியென்பதன் பொருள் படும், எ-று.

உ-ம் : 'வயக்களிறு' (மதுரைக். 15)

**நச்.**

இதுவுமது.

இ-ள் : வயவலி ஆகும் —வய வலியாகிய குறிப்பு உணர்த்தும் எ-று.

உ-ம் : 'துன்னருந் துப்பின் வயமான் தோன்றல்' (புறம் 44 என வரும்.

**வெள்.**

இ-ள் : (சூ. 362ல் பார்க்க)

**ஆதி.**

பொருள் : வய—வசப்பட்ட—பலமான

வாள்

**361.** வாளொளி யாகும் (70)

(வாள் ஒளி ஆகும்)

**ஆ.மொ:இ.**

Vāl' means brightness

**ஆல்.**

Vāl means brightness.

**பி.இ.நூ.**

**நேமி. சொ. 56**

வாள் ஒளியாம்

**இளம்.**

வ-று : 'கண்ணே, நோக்கி நோக்கி வாளிழந் தனவே (குறுந்.44) என்பது ஒளியிழந்தன என்பதாம்.

**சேனா.**

இ-ள் : (362ல் பார்க்க)

**தெய்.**

இ-ள் : வாள் என்னும் சொல் ஒளி யென்பதன் பொருள் படும், எ-று.

உ-ம் : 'வாள்நுதல்' (முருகு. 6)

**நச்.**

இது பண்பு.

இ-ள் : வாள் ஒளியாகும் — வாள் ஒளியாகிய பண்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'கண்ணே, நோக்கி நோக்கி வாளிழந்தனவே' (குறுந். 44) என வரும்.

**வெள்.**

இ-ள் : (சூ. 362ல் பார்க்க)

**ஆதி.**

பொருள் : வாள்—வெட்டும் வாள்—ஒளிர்கிற

துயவு

**362.** துயவென் கிளவி யறிவின் றிரிவே **(71)**

(துயவு என் கிளவி அறிவின் திரிவே)

**ஆ.மொ.இல.**

The word 'thuya' means confusion of knowledge or losing balance of mind.

**ஆல்.**

'Tuyavu' means confusion in the mind

**இளம்.**

வ-று : 'அறிவு துயவுறுத்தார்' என்பது, அறிவு திரிவுறுத்தார் என்பதாம்.

**சேனா.**

(சூ, 360, 361, 362ன் உரை)

இ-ள் : [1]'துன்னருந் துப்பின் வயமான்' (புறம் 44) எனவும், 'வாண்முகம்' (புறம். 9) எனவும், 'துயவுற்றேம் யாமாக' எனவும் வய முதலாயின வலியும் அறிவு வேறுபடுதலாகிய குறிப்பும் ஒளியாகிய பண்பும் உணர்த்தும், எ-று.

---

1. பொருள் : கிட்டுதற்கரிய வலியையும் வலியகுதிரையையும் உடைய தோன்றலே.

**தெய்.**

இ-ள் : துயவு என்னும் சொல் அறிவின் திரிபாகிய பொருள் படும், எ-று.

உ-ம் : 'துறவுற்றேம் யாமாக'

**நச்.**

இது குறிப்பு.

இ-ள் : துயவு என் கிளவி அறிவின் திரிபே-துயவு என்னும் சொல் அறிவினது திரிதலாகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'துயவுற்றேம் யாமாக' என வரும்.

**வெள்.**

(சூ. 360, 361, 362ன் உரை)

இ-ள் : வய என்னும் சொல் வலியாகிய குறிப்புணர்த்தும்; வாள் என்னும் சொல் ஒளியாகிய பண்புணர்த்தும்; துய வென்னும் சொல் அறிவு வேறுபடுதலாகிய குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம் : 'துன்னருந் துப்பின் வயமான்' எனவும், 'வாண் முகம்' எனவும், 'துயவுற்றேம் யாமாக' எனவும் வரும்.

**ஆதி**

பொருள் : துயவு—...—அறிவு மாறுபட்ட

உயா

**363.** **உயாவே யுயங்கல்** **(72)**

*(உயாவே உயங்கல்)*

**ஆ.மொ.இல.**

'uya' is distress or suffering

**ஆல்.**

'uya' means sufferings

**இளம்.**

வ-று : 'பருந்திருந் துயாவிளி பயிற்று மியாவுயர் நனந் தலை' (அகம். 19) என்றக்கால், உயங்குவிளி பயிற்று என்பதாம்.

1 பொருள்: பருந்துதங்கி வருத்தத்துடன் கூவிப்பயிற்றும் யாமரம் உயர்ந்த அகன்ற இடம்.

**சேனா.**

இ-ள் : (363, 364, 365 ஆம் சூத்திரங்களுக்குச் சேர்த்து உரை எழுதப்பட்டுள்ளது. 365 ஆம் சூத்திரம் பார்க்க)

**தெய்**

இ-ள் : உயா என்னுஞ் சொல் உயங்கல் என்பதன் பொருள் படும், எ-று.

உ-ம் : 'பருந்திருந் துயாவிளி பயிற்றும்' (அகம். 19)

**நச்**

இதுவுமது.

இ-ள் : உயாவே உயங்கல்—உயா வருத்தமாகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'பருந்திருந் துயாவிளி பயிற்றும் யாவுயர் நனந் தலை' (அகம். 19) எனவரும்.

**வெள்.**

இ-ள் : (சூ. 365-ல் பார்க்க)

**ஆதி**

பொருள்: உயா — கர்ப்ப காலமயக்கம் — விருப்ப மிகுதி.

உசா

**364. உசாவே சூழ்ச்சி (73)**

**ஆ. மொ: இல.**

'Usā' in Consultation in secret

**ஆல்.**

'Ucā' means ploting in secracy

**இளம்**

வ-று : நாமுசாக் கொள்ளாமோ' என்பது நாம் சூழ்ந்து கொள்ளாமோ என்பதாம்.

இவை குறிப்பு,

**சேனா.**

இ-ள் : (சூ.365-ல் பார்க்க)

**தெய்.**

இ-ள் : உசா என்பது சூழ்ச்சி என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம் : 'யானொன்று சாவுகோ வைய சிறிது' (கலி.7)

**நச்.**

இதுவுமது.

இ-ள் : உசாவே சூழ்ச்சி—உசா சூழ்ச்சியாகிய குறிப் புணர்த்தும், எ-று.

உ-ம் : 'உசாத்துணை' (திருக்கோ.400 உரை) எனவரும்.

**வெள்.**

இ-ள் : (சூ. 365-ல்-பார்க்க)

**ஆதி.**

பொருள் : உசா—

வயா

**365.** வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம் (74)

(வயா என் கிளவி வேட்கைப் பெருக்கம்)

**ஆ. மொ. இல.**

The word 'Vaya' means ardent desire

**ஆல்**

'Vaya' means ardent desire

**இளம்.**

வ-று : 'கூழ்கண்டு வயாவினார்' என்றவழி, வேட்கை யாயினார் என்பதாம்.

**சேனா.**

(363, 364, 365-ன் உரை)

இ-ள் : 'பருந்திருந் துயாவிளி பயிற்றும் யாவுயர் நனந் தலை' (அகம் 19) எனவும், 'உசாத்துணை' (குறுந்.207) எனவும், 'வயவுறு மகளிர்' (புறம்,20) எனவும், உயா முதலியன முறை யானே உயங்கலும் சூழ்ச்சியும் வேட்கைப் பெருக்கமுமாகிய குறிப்புணர்த்தும், எ-று.

**தெய்.**

இ-ள் : வயா என்னுஞ்சொல் வேட்கைப் பெருக்கத்தினை யுணர்த்தும், எ-று.

உ-ம் : [1]'தொடீஇய செல்வார்த் துமித்தெதிர் மண்டுங்
கடுவய நாகுபோல் நோக்கி' (முல்லைக்கலி. 16)

---

பொருள் : 1. தன்னைத் தீண்டச் செல்வார்களை இடையே விலக்கி எதிரே நெருங்கிச் செல்லும் கடிய வலியினையுடைய நாகுபோல் கோபித்து நோக்கி.

வயா என்றது கன்றின்மேற் காதல் குறித்து நின்றது.

**நச்.**

இதுவுமது,

இ-ள் : வயா என்கிளவி வேட்கைப் பெருக்கம்—வயா என்னுஞ் சொல் வேட்கையினது பெருக்கமாகிய குறிப்புணர்த்தும், எ—று.

உ—ம் : "வயாவும் வருத்தமும் ஈன்றக்கால் நோவும்" (நாலடி.21) எனவரும். 'இது, வயவுறு மகளிர்' (புறம்.20) எனத்திரிந்தும் நிற்கும்.

ஈண்டு வேட்கை என்றது கருப்பம் தங்கி வருத்தமுற்று நுகரப்படும் பொருள்மேல் செல்லும் வேட்கையை,

**வெள்.**

*(363, 364, 365-ன் உரை)*

இ-ள் : உயா என்னும் உரிச்சொல் உயங்கல் (வருந்துதல்) என்னும் குறிப்புணர்த்தும்; உசா என்னுஞ்சொல் சூழ்ச்சியாகிய குறிப்புணர்த்தும்; வயா எனனும் சொல் வேட்கைப் பெருக்கமாகிய குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம் : 'பருந்திருந் துயா விளிபயிற்றும் யாஅயர் நனந் தலை' எனவும், 'உசாத்துணை' எனவும், 'வயவுறு மகளிர், எனவும் வரும்.

**ஆதி.**

பொருள் : வயா—...—...?

கறுப்பு, சிவப்பு

**366. கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள.** (75)

(கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள).

**ஆ. மொ: இல.**

'Kaṛuppu' and 'Sivappu' mean anger

**ஆல்.**

'Kaṛuppu and civappu mean anger

**பி. இ. நூ**

**இல.வி.281- 20**

கறுப்பும் சிவப்பும் வெகுளி சுட்டலும்.

**முத்து. ஒ. 44.**

கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள.

**இளம்.**

வ-று : 'கறுத்து வந்தார்' என்பது, வெகுண்டு வந்தார் என்பதாம்.

'சிவந்து நோக்கினார்' என்பது வெகுண்டு நோக்கினார் என்பதாம்.

**சேனா**

இ-ள் : [1]'நிற்கறுப்பதோர் அருங்கடி முனையள்' எனவும் [2]'நீ சிவந்திறுத்த நீரழி பாக்கம்' (பதிற். 13) எனவும், கறுப்பும் சிவப்பும் வெகுளியாகிய குறிப்புணர்த்தும், எ-று.

கருமை செம்மை யென்னாது கறுப்புச் சிவப்பு என்றதனான் தொழிற்பட்டுழியல்லாது அவை வெகுளியுணர்த்தாமை கொள்க.

**தெய்.**

இ-ள் : கறுப்பு என்பதும் சிவப்பு என்பதும் வெகுளி என்பதன் பொருளையுடைய, எ-று.

உ-ம் : [3]நிற்கறுத்தோர்—அரும் அரணம் போல, 'நீ சிவந்திறுத்த நீரழிபாக்கம் (பதிற். 13).

**நச்.**

இதுவுமது.

இ-ள் : கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள—கறுப்பும் சிவப்பும் வெகுளியாகிய குறிப்புப் பொருண்மையை யுடைய, எ-று.

உ-ம்: 'நிற்கறுத்தோர் அருங்கடி முனையரணம் போல'
'நீசிவந் திறுத்த நீரழி பாக்கம்' (பதிற். 13)

எனவரும்.

கருமை செம்மை யென்னாது கறுப்பு சிவப்பு எனத் தொழிற் படுத்தினார்; அவை வெகுளியை யுணர்தினமையின்.

**வெள்**

இ-ள்: கறுப்பு சிவப்பு என்னும் உரிச்சொற்கள் இரண்டும் வெகுளியாகிய குறிப்புணர்த்துவன, எ-று.

---

பொருள் : 1. நின்னை வெகுள்விப்பதோர் அரிய காவலமைந்த போர் முனையிடத்தான்
2. நீ வெகுண்டு தானையுடன் தங்கி முற்றுகையிட்டதனால் நீர்மையழிந்த பேரூர்கள்.
3. நின்னைக் கோபித்தோரது அரிய அரணம் போல.

உ-ம்: 'நிற்கறுப்பதோர் அருங்கடி முனையள்' எனவும், 'நீ சிவந்திறுத்த நீரழிபாக்கம்' எனவும் வரும்.

**ஆதீ**

பொருள் : கறுப்பு—நிறம்—சினத்தின் குறிப்பு
சிவப்பு—நிறம்— ''

**367.** **நிறத்துரு வுணர்த்தற்கு முரிய வென்ப** **(76)**
(நிறத்து உரு உணர்த்தற்கும் உரிய என்ப)

**ஆ. மொ. இல.**

The scholars say that they mean colour also

**ஆல்.**

It is said that they mean Colour also.

**இளம்.**

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், அதுவேயன்றிப் பண்புப் பொருளும்படும் என்றவாறு.

'உடம்பு கறுத்தது'
'கண் சிவந்தன'

என்பன நிறத்தின்மேலும் செல்லும்.

**சேனா**

இ-ள் : 'கறுத்த காயா', 'சிவந்த காந்தள்' (பதிற். 15) என அவை வெகுளியேயன்றி நிற வேறுபாடுணர்த்தற்கும் உரிய, எ-று.

* இவை வெளிப்படும் சொல்லாயினும் 'கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள' என்றதனால், கருங்கண், செவ்வாய் எனப் பண்பாய வழியல்லது தொழிலாய வழி நிற வேறுபாடுணர்த்தா வென்பது படுதலின் அதனைப் பாதுகாத்தவாறு.

---

* கறுப்பு, சிவப்பு எனும் சொற்கள் கரும், செம் எனப் பண்பு நிலையில் இருந்தால் நிறத்தையுணர்த்தும்; கறுத்த, சிவந்த என்பனவாகத் தொழில் நிலையில் இருந்தால் வெகுளியை யுணர்த்தும் எனக் கொள்ள நேருமோ என ஐயங் கொண்டமையால் கறுத்த கண், சிவந்த வாய் எனத் தொழில் நிலையில் இருந்தாலும் நிறத்தை யுணர்த்தும் என அவ்வையத்தைப் போக்க இச்சூத்திரம் கூறினார். நச். உரையும் பார்க்க.

தெய்

இ-ள் : மேற்சொல்லப்பட்ட கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருட்கண் வருதலன்றி நிறத்தரு உணர்த்தற்கும் உரிய, எ-று.

உ-ம் : 'கறுத்த காயா', 'சிவந்த காந்தள்' (பதிற். 15)

நச்.

இஃது எய்தியதன் மேற் சிறப்பு விதி.

இ-ள் : நிறுத்து உரு உணர்த்தற்கும் உரிய என்ப— கறுப்பு சிவப்பு எனத் தொழிற்படுத்துக் கூறிய சொற்கள் வெகுளியேயன்றி நிற வேறுபாடாகிய பண்பு உணர்த்துதற்கும் உரிய என்று கூறுவர் ஆசிரியர், எ-று.

இவை தொழிற்பட்டுழியும் பண்பு உணர்த்தும் என வெளிப்படு சொல்லையும் கூறினார், ஐயம் அகற்றுதற்கு.

உ-ம் : 'கறுத்த காயா'
'சிவந்த காந்தள்' (பதிற். 15)

என வரும். முதல் சினைமுதல்.

வெள்.

இ-ள் : கறுப்பு சிவப்பு என்பன வெகுளியே யன்றி நிற வேறுபாடுணர்த்தற்கும் உரிய, எ-று.

உ-ம் : 'கறுத்த காயா' 'சிவந்த காந்தள்' என வரும்.

நொசிவு, நுழைவு, நுணங்கு.

**368.** நொசிவு நுழைவு நுணங்கு நுண்மை **(77)**
(நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை)

ஆ.மொ.இல.

'Nosivu', 'nuḻaivu' and 'ṉuṇaṅgu' mean minuteness

ஆல்

'Nocivu', 'Nuḻaivu' and Nuṇanku' mean minutness

பி.இ.நூ.

இல.வி. 283-2, 3

நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மைப்
பொருள வாகலும் பொருந்தும் என்ப.

இளம்

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இவை பண்பு பற்றி வந்தன.

'நொசி மருங்குல்' என்பது, நுண்மருங்குல் என்பதாம்.

'நுழை மருங்குல்' என்பதும் அது.

'நுணங்கு மருங்குல்' என்பதும் அது.

## சேனா

இ-ள் : 'நொசிமட மருங்குல்' (கலி. 60) எனவும், 'நுழை நூற்கலிங்கம்' (மலைபடு. 561) எனவும், 'நுணங்கு துகில் நுடக்கம் போல' (நற். 15) எனவும், நொசிவு முதலாயின நுண்மையாகிய பண்புணர்த்தும், எ-று.

## தெய்

இ-ள் : நொசிவு என்பதூஉம் நுழைவு என்பதூஉம் நுணங்கு என்பதூஉம் நுண்மை என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம் : 'நொசி மருங்குல்' (குறிஞ்சிக்கலி. 24) 'நுழை நூற் கலிங்கம்' (மலைபடு. 561) 'நுணங்கிய கேள்வியர்' (குறள். 416).

## நச்

இதுவுமது.

இ-ள் : நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை— நொசிவு முதலியன நுண்மையாகிய பண்புணர்த்தும், எ-று.

உ-ம் : 'நொசிபடு மருங்குல் கசிவுறக் கைதொழா'
'இழைமருங்கறியா நுழைநூற் கலிங்கம்'
(மலைபடு. 561)
'நுணங்கு துகில் நுடக்கம் போல' (நற். 15)

எனவரும்.

'நுணங்கு மின்கொடி மின்னார் மழைமிசை' என நுணங்கு [1]நுடக்கத்தை யுணர்த்துதல் 'கூறிய கிளவி' (உரி. 92) என்பதனாற் கொள்க.

## வெள்

இ-ள் : நொசிவு நுழைவு நுணங்கு என்னும் உரிச்சொற்கள் நுண்மையாகிய பண்புணர்த்துவன, எ-று.

உ-ம் : 'நொசி மருங்குல்' எனவும், 'நுழைநூற் கலிங்கம்' எனவும், 'நுணங்கு துகில் நுடக்கம் போல' எனவும் வரும்.

1. நுடக்கம்—அசைவு, வளைவு

ஆதி

பொருள் : நொசிவு—ஒடிகின்ற நிலை— | நுழைவு—நுழைந்துசெல் — | நுணங்கு—கூர்மை — } நுட்பமான சிறிய.

புனிறு

369. புனிறென் கிளவியீன் றணிமைப் பொருட்டே (78)
(புனிறுஎன் கிளவி ஈன்ற அணிமைப் பொருட்டே)

ஆ.மொ.இல.

The word 'Puniru' means the state of having recently calved.

ஆல்.

The morpheme 'Puniṟu' gives the sense of the time immediately after giving birth to.

பி. இ. நூ.

நேமி.சொ. 59

புனிறு ஈன்றணிமை

இளம்.

வ-று : [1]'புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி' (அகம் 56) என்பது, ஈன்றணிய வாய்ப்பாய்தென என்பதாம்.

சேனா.

இ-ள் ; 'புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி' (அகம் 56) எனப் புனிறு என்பது ஈன்றணிமையாகிய குறிப்புணர்த்தும், எ-று.

தெய்.

இ-ள் : புனிறு என்பது ஈன்றணித்து என்னும் பொருள் பட்டு நிற்கும், எ-று.

உ-ம் : 'புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி' (அகம் 56)

நச்.

இது குறிப்பு.

இ-ள் : புனிறு என் கிளவி ஈன்றணிமைப் பொருட்டே—புனிறு என்னும் சொல் ஈன்றணிமையாகிய குறிப்புப் பொருளுடைத்து, எ-று.

1. பொருள் : ஈன்ற அணிமையுடைய பசு பாய்ந்ததாகக் கலங்கி.

உ-ம் : [1]'புனிறுதீர் குழவிக் கிலிற்றுமுலை போல'(புறம் 68)
'புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி' (அகம் 56)

என வரும்.

**வெள்**

இ-ள் : புனிறு என்னும் உரிச்சொல் ஈன்றணிமையாகிய குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம் : 'புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி' என வரும். புனிற்றா—ஈன்று அணிய கன்றினையுடைய பசு.

**ஆதி**

பொருள் : புனிறு—...—அண்மையின் ஈன்ற

நனவு

**370.** நனவே களனு மகலமுஞ் செய்யும் (79)
(நனவே களனும் அகலமும் செய்யும்)

**ஆ. மொ. இல.**

'Nanavu' denotes area and extensiveness.

**ஆல்.**

'Naṉavu' means arena and extensiveness.

**பி. இ. நூ.**

இல. வி. 282-8

நனவே களனும் அகலமும் செய்தலும்

**இளம்.**

வ-று : 'நனவுப் புகு விறலியிற் றோன்று நாடன்'(அகம் 82) என்றால், களம்புகு விறலியிற் றோன்று நாடன் என்பதாம்.

'நனந் தலை யுலகு' (குறுந். 6) என்றக்கால், அகன்றலை யுலகு என்பதாம்.

**சேனா.**

இ-ள் : 'நனவுப் புகு விறலியிற் றோன்று நாடன்'(அகம் 82) எனவும், 'நனந்தலை யுலகம்' (பதிற். 63)எனவும், நனவு களனும் அகலமுமாகிய குறிப்புணர்த்தும், எ-று.

---

1. பொருள் : ஈன்றணிமை நீங்கிய குழந்தைக்குச் சுரக்கும் முலை போல.

**தெய்.**

இ-ள் : நனவென்பது களன் என்பதன் பொருண்மையும் அகலம் என்பதன் பொருண்மையும் உணர்த்தும், எ-று.

உ-ம் : 'நனவுப் புகு விறலியிற் றோன்று நாடன்' (அகம்82) இது களம். 'நனந்தலை யுலகம்' (பதிற். 63)—இது அகலம்.

**நச்.**

இதுவுமது.

இ-ள் : நனவே களனும் அகலமும் செய்யும்-நனவு களனும் அகலமுமாகிய குறிப்புப் பொருண்மையையுணர்த்தும், எ-று.

உ-ம் : 'நனவுப் புகு விறலியிற் றோன்று நாடன்'(அகம் 82)
'நனந்தலை யுலகம் வளைஇ' (முல்லை-1)

என வரும்.

**வெள்.**

இ-ள் : நனவு என்னும் உரிச்சொல் களன் அகலம் ஆகிய குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம் : 'நனவுப் புகு விறலியிற் றோன்று நாடன்' எனவும், 'நனந்தலை யுலகம்' எனவும் களனும் அகலமுமாகிய குறிப்புணர்த்தியது.

**ஆதி.**

பொருள் : நனவு—விழிப்பு—ஆட்டமாடும் இடம்,விரிவான

மத

**371. மதவே மடனும் வலியு மாகும் (80)**
(மதவே மடனும் வலியும் ஆகும்)

**ஆ. மொ: இல.**

'Mathavu' means youth and strength

**ஆல்.**

'Matavu' means youth and strength

**பி. இ. நூ.**

**இல.வி. 282-9**

மதவே மடனும் வலியும்

**இளம்.**

வ-று : [1]'மாதர் வாண்முகம் மதைஇய நோக்கே (அகம் 130) என்பது, மடம்பட்ட நோக்கு என்பதாம்.

1. பொருள் : காதல் உள்ள ஒளிமிக்க முகத்தில் மடமையான பார்வை

'மத களிறு' என்றக்கால் வலிய களிறு என்பதாம்.

**சேனா.**

இ-ள் : [1]'பதவு மேய்ந்த மதவு நடை நல்லான்' (அகம் 14) எனவும், [2]'கயிறிடு கதச்சேப் போல மதமிக்கு'(அகம் 36)எனவும் மதவென்பது மடனும் வலியுமாகிய குறிப்புணர்த்தும், எ-று.

**தெய்.**

இ-ள் : மதவென்னும் சொல் மடம் என்பதன் பொருண்மையும் வலி என்பதன் பொருண்மையும் உணர்த்தும், எ-று.

உ-ம் : பதவு மேய்ந்த மதவு நடை நல்லான் (அகம் 14) —இது மடம். 'கயிறிடு கதச்சேப் போல மதமிக்கு (அகம் 36) —இது வலி.

**நச்.**

இதுவுமது.

இ-ள் : மதவே மடனும் வலியும் ஆகும்—மத மடனும் வலியுமாகிய குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம் : 'பதவு மேய்ந்த மதவு நடை நல்லான்' (அகம் 14)
'கயிறிடு கதச்சேப்போல மதமிக்கு' (அகம் 36)

என வரும். 'மதவுநடை' எனபதில் மத மதவு என ஈறு திரிந்து நின்றது.

**வெள்.**

இ-ள் : மதவென்னும் உரிச்சொல் மடம், வலி ஆகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'பதவு மேய்ந்த மதவு நடை நல்லான்' எனவும், 'கயிறிடு கதச் சேப்போல மதமிக்கு' எனவும் மடனும் வலியுமாகிய குறிப்புணர்த்தியது.

**ஆதி.**

பொருள் : மதவு—மதங்கொண்ட—வலிய

---

1. பொருள் : புல் மேய்ந்த மடமை (இளமை)யான நல்ல பசு.

2. பொருள் : மூக்கில் கயிறு இட்டு இழுக்கப்படும் கோபமிக்க எருது போல வலி மிகுந்து

**372.** மிகுதியும் வனப்பு மாகலு முரித்தே (81)

(மிகுதியும், வனப்பும் ஆகலும் உரித்தே).

**ஆ.மொ.இல.**

They denote excess and beauty also.

**ஆல்.**

It means plenty and beauty also.

**பி. இ. நூ.**

**இல. வி. 282-10**

மதவே...மிகுதியும் வனப்பும் ஒருவழி விளக்கலும்.

**இளம்**

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், அவையேயன்றி இவ்விரு பொருளும்படும் என்றவாறு.

'மதகளிறு' என்றக்கால் மிகுகளிறு என்பதாம்.

[1]'இளம் பாண்டில்
தேரூரச் செம்மாந் ததுபோல் மதைஇயினன்' (கலி. 109)

என்பது, வனப்புடையள் ஆயினள் என்பதாம்.

**சேனா**

இ-ள்: 'மதவிடை' (பெரும்பாண். 43) எனவும், 'மாதர் வாண்முகம் மதைஇய நோக்கே' (அகம். 130) எனவும் மடனும் வலியுமேயன்றி மிகுதியும் வனப்புமாகிய குறிப்பும் சிறுபான்மை யுணர்த்தும், எ-று.

'மதவிடை' என்புழி மிகுதி உள்ள மிகுதி.

**தெய்**

இ-ள்: மேற்சொல்லப்பட்ட மத என்னுஞ் சொல் மிகுதி என்பதன் பொருளும் வனப்பு என்பதன் பொருளும்படும், எ-று.

உ-ம்: 'பொருநா கிளம்பாண்டில் தேரூரச் செம்மாந்தது போன் மதை இயினன்'—இது மிகுதி. 'மாதர் வாண்முகம் மதை இய நோக்கே' (அகம். 130) — இது வனப்பு.

---

1. பொருள் : இளைய எருது பாண்டில் என்னும் தேரை ஊரத் தன் இளமையால் இறுக்குமாறு போல இறுமாந்து அழகாலும் இளமையாலும் மிகுதியுடையளாய்

**நச்**

இது எய்தியதன்மேற் சிறப்புவிதி.

இ-ள்: மிகுதியும் வனப்பும் ஆகலும் உரித்தே — மத மடனும் வலியுமே யன்றி மிகுதியும் வனப்புமாகிய குறிப்பும் சிறுபான்மை உணர்த்தும், எ-று.

உ-ம்: 'பேராரா ஏற்றின் பொருநா கிளம்பாண்டில்
தேரூரச் செம்மாந் ததுபோல் மதைஇயினன் (கலி.109)

'மாதர் வாண்முகம் மதைஇய நோக்கே' (அகம். 130)

எனவரும். இவையும் ஈறு திரிந்தன.

**வெள்.**

இ-ள்: மத வென்னுஞ் சொல் மடனும் வலியுமேயன்றி மிகுதியும் வனப்புமாகிய குறிப்பும் சிறுபான்மை யுணர்த்துதற் குரியதாம், எ-று.

உ-ம்: 'மதவிடை' எனவும். 'மாதர் வாண்முகம் மதைஇய நோக்கே' எனவும் மத வென்பது மிகுதியும் வனப்புமாகிய குறிப் புணர்த்தியது. 'மதவிடை என்புழி மிகுதி' என்றது உள்ள மிகுதியினை.

**ஆதி.**

பொருள்: மதவு — மதத்தைத்தழுவிய — மிகுதி, வனப் புடைய.

யாணர்

**373. புதிது படற் பொருட்டே யாணர்க் கிளவி (82)**

**ஆ.மொ:** இல.

They word 'yāṇar' means new income.

**ஆல்.**

The morpheme 'yāṇar' gives the sense of newness.

**இளம்.**

வ-று: [1] 'அறாஅ யாணர் அகன்றலை நன்னாடு' (அகம் 44) என்றக்கால், அறாத புது வருவாயை யுடைய நாடு என்ப தாம்.

---

1. பொருள்: நீங்காத புது வருவாயுடைய அகன்ற இட முடைய நல்ல நகர்.

**சேனா.**

இ-ள் : [1]'மீனொடு பெயரும் யாணரூர' (நற். 210) என யாணர் என்பது வாரி புதிதாகப் படுதலாகிய குறிப்புணர்த்தும், எ-று.

**தெய்.**

இ-ள்: யாணர் என்னுஞ் சொல் புதியது படுதல் என்னும் பொருண்மையை யுடைத்து, எ-று.

உ-ம்: [2]'வித்தொடு சென்ற வட்டி பற்பல, மீனொடு பெயரும் யாணரூர' (நற். 210) நாடோறும் புதியது படுகின்றவூர்.

**நச்**

இதுவுமது.

இ-ள் : யாணர்க்கிளவி புதிது படற் பொருட்டே—யாணர் என்னும் சொல் வருவாய் புதிதாகப் படுதலாகிய குறிப்பை யுடைத்து, எ-று.

உ-ம்: 'வீகொடு சென்ற வட்டிற் பற்பல
மீனொடு பெயரும் யாணரூர' (நற். 130).

எனவரும்.

**வெள்.**

இ-ள்: யாணர் என்பது, வருவாய் புதிதாகப் படுதலாகிய குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம்: 'மீனொடு பெயரும் யாணரூர' எனவரும்.

**ஆதி.**

பொருள் : யாணர் ——.........—— புதிதான.

அமர்தல்

**374. அமர்தல் மேவல் (83)**

**ஆ. மொ. இல.**

'Amarthal' is joining joyfully

**ஆல்.**

'Amarthal' means the joy of Companianship.

---

1. பொருள் : மீனொடு திரும்பி வரும் புது வருவாயுடைய ஊர்.
2. பொருள்: விதைப்பதற்காக விதையுடன் சென்ற கூடை பற்பல வகையான மீனொடு திரும்பும் புது வருவாயுடைய ஊரனே.

**இளம்**

வ-று : 'கூழமர்ந் துண்டாள்' என்பது கூழை [1]மேவியுண் டாள் என்பதாம்.

**சேனா**

இ-ள்: (வரும் சூத்திரத்தோடு சேர்த்துக் கூறப்பட்டுள்ளது.

**தெய்**

இ-ள் : அமர்தல் என்பது மேவல் என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம் : [2] அகனமர்ந்து செய்யா ளுறையும்' (குறள். 84)

**நச்.**

இதுவுமது.

இ-ள் : அமர்தல் மேவல் — அமர்தல் மேவுதலாகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'அகனமர்ந்து செய்யா ளுறையும்' (குறள். 84) என வரும்.

**வெள்**

இ-ள் : வரும் சூத்திரத்தோடு சேர்த்துக் கூறப்பட்டுள்ளது.

**ஆதி.**

பொருள் : அமர்தல் — உட்கார்தல் — மேவிவரல்.

யாண்

**375. யாணுக் கவினாம்** (84)

(யாணு கவின் ஆம்)

**ஆ. மொ. இல.**

'Yānu' means grace.

**ஆல்**

'Yāṇ' means gracefulness.

**இளம்.**

வ-று : [3] 'யாணது பசலை என்றனன்' (நற். 50) என்றக்கால் வனப்பின் கண்ணது பசலை என்பதாம்.

1. மேவி — விரும்பி.
2. உள்ளம் விரும்பி இலக்குமி வாழ்வாள்.
3. யாணது பசலை — அழகிது பசலை.

**சேனா**

(அமர்தல் மேவல், யாணுக்கவினாம்)

இ-ள் : 'அகனமர்ந்து செய்யாளுறையும்' (குறள். 84) எனவும், 'யாணது பசலை' (நற். 50) எனவும் அமர்தலும் யாணும் முறையானே மேவுதலும் கவினுமாகிய குறிப் புணர்த்தும், எ-று.

**தெய்.**

இ-ள் : யாணு என்னுஞ்சொல் கவின் என்பதன் பொருள் படும், எ-று.

உ-ம் : யாணு விசும்பின் அமரருளப்படப் பேணிப் பேணிப் பெரிதெனைப் பெட்டபின் — அழகிய விசும்பு என்றவாறு.

**நச்.**

இதுவுமது

இ-ள் : யாணுக்கவின் ஆகும் — யாண் என்னும் சொல் கவினாகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : யாணது பசலை என்றனன் (நற். 50)

**வெள்**

(அமர்தல் மேவல், யாணுக் கவினாகும்)

இ-ள் : அமர்தல் என்னும் சொல் மேவுதல் என்னும் குறிப் புணர்த்தும்; யாணு என்னுஞ் சொல் கவின் என்னும் குறிப் புணர்த்தும், எ-று.

உ-ம் : 'அகனமர்ந்து செய்யாள் உறையும்,' என அமர்தல் மேவுதல் என்னும் குறிப்புணர்த்தியது. 'யாணது பசலை' என யாணு என்பது கவின் என்னும் குறிப்புணர்த்தியது.

**ஆதி**

பொருள் : யாண் — ...... — அழகு.

பரவு, பழிச்சு

**376.** பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள (85)

**ஆ. மொ. இல.**

'Paravu and 'Paḷichchu' give the sense of worship,

**ஆல்.**

'Paravu' and 'Paḷiccu' mean worship.

பி. இ. நூ.

இல. வி. 281-21

பரவும் பழிச்சும் வழுத்தின் குறிப் புணர்த்தலும்

முத்து. ஒ. 45

பரவும் பழிச்சும் வழுத்தல் மேன

**இளம்**

வ—று : 'கடவுட் பரவினார்' என்றக்கால், வழுத்தினார் என்பதாம்.

'கைதொழூஉப் பழிச்சி' (மதுரைக் 664) என்றக்கால் வழுத்தி என்பதாம்.

**சேனா**

இ-ள் : 'நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே (புறம். 335) எனவும், 'கைதொழூஉப் பழிச்சி' (மதுரைக். 664) எனவும், பரவும் பழிச்சும் வழுத்தலாகிய குறிப்புணர்த்தும், எ-று.

**தெய்.**

இ-ள் : பரவலும் பழிச்சுதலும் வாழ்த்தலின் பொருள் படும், எ-று.

உ-ம் : 'கடவுட் பரவிக் கைதொழூஉப் பழிச்சி' (மலைபடு 538).

**நச்.**

இதுவுமது.

இ-ள் : பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள — பரவும் பழிச்சும் வழுத்துதல் என்னும் சொல்லினது குறிப்புப் பொருளை யுடைய, எ-று.

உ-ம் : [1] 'கல்லே பரவின் அல்லது
நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே'
(புறம். 335)

'செறிவளை வீறலியர் கைதொழூஉப் பழிச்சி
வறிதுநெறி ஒரீஇ'

எனவரும்.

---

பொருள் 1. நடுகல்லை வழுத்துவதல்லது நெல் சொரிந்து வழுத்தும் கடவுள் இல்லை.

**வெள்**

இ-ள் : பரவு பழிச்சு என்னும் உரிச்சொற்கள் இரண்டும் வழுத்துதலாகிய குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம் : 'நெல்லுகுத்துப் பரவும் கடவுளுமிலவே' எனவும், 'கைதொழூஉப் பழிச்சி' எனவும் வழுத்துதலாகிய குறிப் புணர்த்தின.

**ஆதி**

பொருள் : பரவு — பரவிவரல் — வணக்கம்
பழிச்சல் — பழித்தல் — வணங்கல்,போற்றுதல்

கடி

377 **கடியென் கிளவி**
**வரைவே கூர்மை காப்பே புதுமை**
**விரைவே விளக்க மிகுதி சிறப்பே**
**யச்ச முன்றேற் றாயீ ரைந்து**
**மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே.** (86)

(கடி என் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே
அச்சம் முன்தேற்று ஆ ஈரைந்தும்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டு ஆகும்மே.)

**ஆ. மொ. இல.**

The word 'kadi' is used in the ten senses of excluding, sharpness, protection, newness, fastness, light, excess, excellence, fear and vow.

**ஆல்.**

The morpheme Kati means the follo wing ten exclusion

sharpness, protection, newness, fastness, light, excess, excellence, fear and vow.

**பி. இ. நூ.**

**நேமி. சொ. 57.**

விரைவு விளக்கம் மிகுதி சிறப்பு
வரைவு புதுமையுடன் கூர்மை —புரைதீர்
கரிப்பும் காப்பச்சம் தேற்றம் ஈராறும்
தெரிக்கிற் கடிச்சொற் றிறம்.

நன். 457

கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்கம் அச்சம் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்
வரைவே மன்றல் கரிப்பின் ஆகும்.

இல. வி. 282: 11-15

கடியென் கிளவி வரைவே கூர்மை
காப்பே புதுமை விரைவே விளக்கம்
மிகுதி சிறப்பே அச்சமுந் தேற்றொடு
மணமும் அறைதலும்
முறையென மொழிப முறையுணர்ந்தோரே.

முத்து. ஒ. 46.

கடியென் கிளவி காப்பே கூர்மை
விரைவே விளக்கம் மிகுதிப் பொருள.

இளம்

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், இதுவும் குறிப்பு.

உரை: கடி என்பது இப்பத்துப் பொருளும் படும், எ-று.

வ-று: 'வாள் வாய் கடிது' என்றக்கால், வாள் வாய் கூரிது என்பதாம்.

'ஊர் கடிந்தார்' என்றக்கால், ஊரை [1]வரைந்தார் என்பதாம்.

'கடிகா' (களவழி. 29) என்பது காப்புடைய கா என்பதாம்

'கடித் தளிர்' என்பது, புதுத்தளிர் என்பதாம்.

'கடிது வந்தார்' என்றக்கால் விரைந்து வந்தார் என்பதாம்.

'கடும்பகல்' என்றக்கால் (கலி. நெய். 28) விளங்கு பகல் என்பதாம்.

'கடும் புனல்' (குறுந். 103) என்றக்கால், மிக்க புனல் என்பதாம். அது சிறந்த புனல் என்பதூஉமாம்.

'கடுங்கண்யானை' என்றக்கால், அஞ்சத்தக்கயானை என்பதாம்.

[2]'கடுஞ்சூள் தருகுவன்' (அகம் 110) என்றக்கால் முன்னின்று தேற்றம் தருவன் என்பதாம்.'

---

1. வரைந்தார்—நீங்கினார், நீக்கினார்.
2. கடுஞ்சூள்—கடியசூளுறவு. இங்குக் கடி என்பதன் பொருள் முன்னின்றுதேற்றுதல் என்பதாம்.

**சேனா**

இ-ள் : கடியென்னும் உரிச்சொல் வரைவு முதலாகிய பத்துக் குறிப்பும் உணர்த்தும், எ-று.

உ-ம் : 'கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு' (குறள் 658) எனவரைவும்,

'கடி நுனைப்பகழி' எனக் கூர்மையும்,
'கடிகா' (கள வழி. 29) எனக் காப்பும்,
'கடிமலர்' எனப்புதுமையும்,
'கடுமான்' (அகம் 134) என விரைவும்,
'கடும் பகல்' (அகம் 148) என விளக்கமும்,
'கடுங்கா லொற்றலின்' (பதிற். 25) என மிகுதியும்,
'கடுநட்பு' எனச் சிறப்பும்,
'கடியையால் நெடுந்தகை செருவத்தானே' (பதிற். 61) என அச்சமும்,

'கொடுஞ்சுழிப் புகார்த் தெய்வ நோக்கிக்
'கடுஞ்சூள் தருகுவன் நினக்கே' (அகம். 10) எனமுன் தேற்றும் உணர்த்தியவாறு கண்டு கொள்க. முன்றேற்று—புறத்திலன்றித் தெய்வமுதலாயினவற்றின் முன்னின்று தெளித்தல்.

**தெய் :**

இ-ள் : கடி என்னுஞ் சொல் வரைவு முதலாக முன்றேற் றீறாக ஓதப்பட்ட பத்துச் சொல்லினும் தெளியத் தோன்றும் பொருளை யுடைத்து, எ-று.

உ-ம் : 'கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்' (குறள். 658)

— இது வரைவு.

'கடிநுனைப்பகழி'—இது கூர்மை. கடி என்னும் சொற்றானே கடு எனத்திரிந்து வந்தது.

'கடியில் புகூஉம் கள்வன் போல'—இது காவல்

'கடியுண் கடவுட் கிட்ட சிறு குரல்
அறியா துண்ட மஞ்ஞை' (குறுந. 105)–இது புதிதுண் கடவுள்.

'கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்' (புறம் 15)– இது விரைவு.

'கடும் பகல்' (அகம் 148)—இது விளக்கம்

'கடுங்கால் ஒற்றலின்' (பதிற். 25)—இது மிகுதி

'கடிகாவிற் பூச்சூடினன்'—இது சிறப்பு.

'கடும் பாம்பு வழங்குந் தெரு'—இஃது அச்சம்.

'கடுஞ்சூள் தருகுவன் நினக்கே' (அகம் 110)— நீ தெளியுமாறு சூளுறுகின்றேன்—இது முன்தேற்று

**நச்.**

இது, பெரும்பான்மை குறிப்பும் சிறுபான்மை பண்பும் உணர்த்துகின்றது.

இ-ள் : கடி என் கிளவி வரைவே கூர்மை காப்பே புதுமை விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே அச்சம் முன்தேற்று ஆயீரைந்தும் மெய்ப்படத் தோன்றும் பொருட்டாகும்மே—கடி என்னும் சொல் வரைவு கூர்மை காப்பு புதுமை விரைவு விளக்கம் மிகுதி சிறப்பு அச்சம் தெய்வ முதலியவற்றை முன்னின்று தெளிவித்தல் என்று கூறப்படுகின்ற அப்பத்துச் சொல்லும் மெய்ம்மைப்படத் தோன்றும் பொருண்மையினை யுடைத்து, எ-று.

உ-ம் : 'கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு' (குறள் 658)
'கடிநுனைப் பகழி'
'கடிமரம் தடியும் ஓசை' (புறம் 36)
'கடியுண் கடவுட்கிட்ட செழுங்குரல்' (குறுந். 105)
'கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்' (புறம். 15)
'கடும்பகல் ஞாயிறு' (கலி. 145)
'கடுங்கால் ஒற்றலின் சுடர் சிறந்துருத்து' (பதிற்.25)
'அம்பு துஞ்சும் கடியரணால்'
'கடியுருமின் உரறிக் கடிப்புச் சேர்பு
கடிய மன்ற நின் தழங்கு குரல் முரசம்'
'கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வ நோக்கிக்
கடுஞ்சூள் தருகுவன் நினக்கே கானல்' (அகம். 110)

என வரும். இவ்வுரிச்சொல் பெரும்பான்மை திரிந்து நிற்கும்.

**வெள்.**

இ-ள்: கடி என்னும் உரிச்சொல் வரைவு கூர்மை காப்பு புதுமை விரைவு விளக்கம் மிகுதி சிறப்பு அச்சம் முன்தேற்று ஆகிய பத்துக் குறிப்பும் தன்கண் புலப்படத் தோன்றும் பொருண்மையினையுடையதாகும், எ-று.

உ-ம்: 'கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு' என வரைவும்
'கடிநுனைப் பகழி' எனக் கூர்மையும்,
'கடிகா' எனக் காப்பும்,
'கடிமலர்' எனப் புதுமையும்,
'கடுமான்' என விரைவும்'
'கடும்பகல்' என விளக்கமும்,
'கடுங்கால் ஒற்றலின்' என மிகுதியும்,

'கடு நட்பு' எனச் சிறப்பும்,
'கடியையால் நெடுந்தகை செருவத்தானே' என
அச்சமும்,

'கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வ நோக்கிக்
கடுஞ்சூள் தருகுவன் நினக்கே' என முன்தேற்றும்
பற்றிக் கடி என்னும் உரிச்சொல் வந்தவாறு காண்க.

**ஆதீ**

பொருள் : கடி—கடித்தல்—விரைவு முதலிய பத்துப் பொருள்களில் வரும்.

**378. ஐயமுங் கரிப்பு மாகலு முரித்தே (87)**
**(ஐயமுங் கரிப்பும் ஆகலும் உரித்தே)**

**ஆ. மொ. இல.**

'Doubt' and 'pungency' also may be denoted by it.

**ஆல்.**

It may also mean doubt and pangency.

**பி. இ. நா**

**நேமி. சொ. 57**

கரிப்பு ஐயம்... கடி சொற்றிறம்.

**நன்.457**

கடி... கரிப்பின் ஆகும்.

**இல. வி. 282.**

ஐயமும் கரிப்பும்... அறைதலும்

**இளம்**

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின்,இவ்விரு பொருளும் படுதற்கும் உரித்து. எ-று.

வ-று : [1] 'கடுத்தன ளல்லளோ வன்னை' என்றக்கால், ஐயுற்றனள் என்பதாம்.

[2] 'கடிமிளகு தின்ற கல்லா மந்தி' என்றக்கால், கரிப்பு ஆர் மிளகு தின்ற என்பதாம்.

**சேனா**

இ-ள் : 'கடுத்தனள் அல்லளோ வன்னை' (ஐங். 194) எனவும், 'கடிமிளகு தின்ற கல்லா மந்தி' எனவும், கடியென்

பொருள் : 1. அன்னையானவள் ஐயப்பட்டாள் அல்லளோ
2. கரிப்புடைய மிளகு தின்ற கல்லாக் குரங்கு

கிளவி மேற் கூறப்பட்ட பொருளேயன்றிச் சிறுபான்மை ஐய மாகிய குறிப்பும் கரிப்பாகிய பண்பும் உணர்த்துதற்கும் உரித்து, எ–று.

**தெய்**

இ–ள் : மேற் சொல்லப்பட்ட கடி என்னும் சொல் ஐயப் பொருண்மையும் கரித்தற் பொருண்மையும் ஆகலும் ஆம், எ–று,

உ–ம்: [1] 'போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது' (குறள் 192) — இது ஐயம்.

'கடி மிளகு தின்ற கல்லா மந்தி'—இது கரிப்பு.

**நச்**

இஃது எய்தியதன் மேற் சிறப்பு விதி.

இ–ள் : ஐயமும் கரிப்பும் ஆகலும் உரித்தே – கடி என்னும் சொல் முற்கூறிய பத்துமே யன்றிச் சிறுபான்மை ஐயமாகிய குறிப்பும் கரிப்பாகிய பண்பும் உணர்த்துதற்கும் உரித்து, எ–று.

உ–ம் : 'கடுத்தனள் அல்லளோ அன்னை'
'கடிமிளகு தின்ற கல்லா மந்தி'

எனவரும்.

**வெள்**

இ–ள் : (நச். உரையே)

**ஆதி**

பொருள் : கடி—... ...—ஐயுறல், கரிப்பு.

ஐ

**379.** ஐ வியப்பாகும் (88)

**ஆ. மொ இல.**

'Ai' is wonder.

**ஆல்**

'Ai' is expresses the sense of wonder.

---

1. பொருள் : "அமைச்சர் தம்மைப் பாதுகாக்கக் கருதின் அரிய பிழைகள் தங்கண் வாராமைக் காக்க; அவற்றை வந்தனவாகக் கேட்டு அவ்வரசர் ஐயுற்றால் அவரைப் பின் தெளிவித்தல் யாவர்க்கும் அரிதாகலான்" —பரிமேலழகர்.

**இளம்**

வ-று : 'ஐதே காமம் யானே' (நற். 143) என்றக்கால். வியக்கத்தக்கது என்பதாம்.

**சேனா.**

இ-ள் : (சூ. 379, 380, 381, 382 எண்களுள்ளவற்றுக்குச் சேர்த்து 382ல்உரை எழுதப்பட்டுள்ளது. ஆண்டுக் காண்க)

**தெய்.**

இ-ள் : ஐ என்பது வியப்பு என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம் : 'ஐ யென விம்மி யவற்கது கூறிய
பொய்யில் புகழோன் புகழடி கைகூப்பி' —வியப்பு என்றது விம்மி என்றவாறு.

**நச்.**

இது குறிப்பு.

இ-ள் : ஐ வியப்பு ஆகும் — ஐ வியப்பாகிய குறிப்பு உணர்த்தும், எ-று.

உ-ம் : 'ஐதே காமம் யானே' (குறுந். 217;

**வெள்**

இ-ள் : (சூ. 382-ல் காண்க),

**ஆதி.**

பொருள் : ஐ — ஐந்து, அழகு —வியப்பு.

முனைவு

**380.** முனைவு முனிவாகும் (89)

(முனைவு முனிவு ஆகும்)

**ஆ. மொ. இல.**

'Munaivu' means contempt.

**ஆல்.**

'Muṉaivu' means dislike

**இளம்.**

வ-று: [1]'சேற்று நிலை முனைஇய' (அகம். 46) என்றக்கால், சேற்றுநிலை முனிந்த என்பதாம்.

---

1, பொருள் : சேற்றில் நிற்பதை வெறுத்த சிவந்த கண்ணையுடைய எருமை.

**சேனா.**

இ-ள் : (சூ. 382-ல் காண்க).

**தெய்**

இ-ள் : முனைவு என்பது முனிதல் என்பதன் பொருள் படும், எ-று.

உ-ம் : 'சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்' (அகம். 46).

**நச்.**

இதுவுமது.

இ-ள் : முனைவு முனிவு ஆகும் — முனைவு என்னுஞ்சொல் முனிவாகிய குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம் : [1]'சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்' (அகம் 46) எனவரும்.

**வெள்.**

இ-ள் : (சூ. 382-ல் காண்க).

**ஆதி**

பொருள் : முனைவு — சிறப்பு, கூர் — வெறுப்பு.

வை

**381. வையே கூர்மை (90)**

**ஆ. மொ. இல.**

'Vai' means sharpness

**ஆல்.**

'Vai' means sharpness

**இளம்**

வ-று: 'வையிலை நெடுவேல்' என்றக்கால், கூரிலைவேல் என்பதாம்

**சேனா.**

இ-ள்: (சூ. 382-ல் காண்க).

**தெய்.**

இ-ள் : வை என்னுஞ் சொல் கூர்மை என்பதன் பொருள் படும், எ-று.

உம் : 'வைந்துனைப் பகழி (முல்லை 73)

---

1. பொருள் : சேற்றில் நிற்பதை வெறுத்த சிவந்த கண்ணையுடைய எருமை.

**நச்**

இதுவுமது.

இ-ள்: வையே கூர்மை — வை கூர்மையாகிய குறிப்புணர்த்தும், எ-று.

உ-ம் : 'வைந்நுனைப் பகழி மூழ்கலின் செவி சாய்த்து (முல்லை 73) என வரும்.

**வெள்**

இ-ள்: (சூ. 382-ல் காண்க).

**ஆதி**

பொருள் : வை — திட்டு, அங்குவை — கூர்மையான.

எறுழ்

**382. எறுழ் வலி யாகும் (91)**

**ஆ.மொ:இல.**

'Eṛuḷ' means strength

**ஆல்**

'Eṛuḷ means strength

**இளம்.**

வ-று : வாளுடை யெறுழ்த்தோள்' என்றக்கால், வலியுடைய தோள் என்பதாம்.

**சேனா.**

(சூ. 379, 380, 381, 382-ன் உரை)

இ-ள் : 'ஐதே காமம் யானே' (நற். 143) எனவும், 'சேற்று நிலை முனைஇய செங்கட்காரான்' (அகம். 46) எனவும், 'வைநுனைப் பகழி' (முல்லை. 73) எனவும், 'போரெறுழ்த் திணிதோள' (பெரும்பாண். 63) எனவும் ஐ முதலாயின முறையானே வியப்பும் முனிவும் கூர்மையும் வலியுமாகிய குறிப்புணர்த்தும், எ—று.

**தெய்.**

இ-ள்: எறுழ் என்பது வலி என்பதன் பொருள்படும், எ-று.

உ-ம்: 'போரெ நுழ்த் திணிதோள்' (பெரும்பாண். 63).

**நச்.**

இதுவுமது.

இ-ள்: எறுழ் வலி ஆகும் — எறுழ் வலியாகிய குறிப்புணர்த்தும், எ—று.

உ-ம்: [1]'சிலை நவில் எறுழ்ந்தோள் ஓச்சி வலன் வளையூ' எனவரும்.

**வெள்.**

(சூ. 379, 380, 381, 382-ன் உரை)

இ-ள் : ஐ என்பது வியப்பு உணர்த்தும், முனைவு என்பது முனிவு உணர்த்தும்; வை என்பது கூர்மை யுணர்த்தும்; எறுழ் என்பது வலியுணர்த்தும், எ-று.

உ-ம்: 'ஐதே காமம் யானே' எனவும், 'சேற்று நிலை முனை இய செங்கட்காரான்' எனவும், 'வைநுனைப் பகழி' எனவும், 'போரெறுழ்த் திணிதோள்' எனவும், ஐ, முனைவு, வை, எறுழ் என்னும் உரிச்சொற்கள் முறையே வியப்பு, முனிவு, கூர்மை, வலி ஆகிய குறிப்புணர்த்தின.

**ஆதி.**

பொருள் : எறுழ் — ...... — பலத்த வலிய.

உரிச்சொற்களுக்குப் புறனடை

**383.** மெய்ப்பெறக் கிளந்த வுரிச்சொ லெல்லா
முன்னும் பின்னும் வருபவை நாடி
யொத்த மொழியாற் புணர்த்தன ருணர்த்த
றத்த மரபிற் றோன்றுமன் பொருளே. **(92)**

(மெய்ப்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்
முன்னும் பின்னும் வருபவை நாடி
ஒத்த மொழியால் புணர்த்தனர் உணர்த்தல்
தம்தம் மரபின் தோன்றும்மன் பொருளே)

**ஆ. மொ. இல.**

All the semantemes, which are discussed to be understood, denote their meanings with the help of the suitable words which appear before and after them in accordance with the usage.

**ஆல்**

All the free morphemes whose meanings have been indicated should be understood by examining what comes following and preceding them and thus the appropriate meaning should be taken. Then the meaning would appear in the proper perspective.

---

1. பொருள் : மலையை யொத்த வலிய தோள் ஓச்சி வலமாக வளைத்து.

பீ.இ.நூ.

இல. வி. 287

மெய்பெறக் கிளந்த வுரிச்சொல் எல்லாம்
முன்னும் பின்னும் வருபவை நாடி
ஒத்த மொழியால் புணர்த்தன ருணர்த்தல்
தத்த மரபிற் றோன்றுமன் பொருளே.

**இளம்**

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இது புறனடை

உரை : பொருள்மேற் சொல்லப்பட்ட உரிச்சொல் எல்லா வற்றையும் முன்னைச் சொல் பின்னைச் சொல் நோக்கி, அதற்கு இயைந்த மொழிநாடி, அவற்றொடு புணர்த்து உணர்த்துக. அவ்வாறு உணர்த்தவே தத்தம் மரபிற்றிரியாப் பொருள் வாய்த் தோன்றும்; அவ்வாறு தெரிந்து உணராக்கால் கொள்ளா தாம் கருதிய பொருள் என்பது.

யாதோ கொள்ளாதவாறெனின், 'கடியுடை வியனகர்' (புறம் 95) என்றக்கால், கடி என்பது கூர்மையும் விரைவும் படுமால் என்று. நகரத்துக்கண் அவை யேற்றற்க; காப்புடை நகர் என்று கொள்க, அதற்கு ஒத்த மொழியாகலின் என்பது.

**சேனா**

இ-ள் : இச்சொல் இப்பொருட் குரித்தென மேற்கூறப் பட்ட உரிச்சொல் எல்லாவற்றையும், அவற்று முன்னும் பின்னும் வரும் மொழிகளை ஆராய்ந்து, அம்மொழிகளுள் தக்க மொழி யானே ஒரு பொருள் உணர்த்துக; இவ்வாறுணர்த்தவே, வரலாற்று முறைமையாற்றத்தமக்குரித்தாய் பொருள் விளங்கும், எ-று.

இஃது என் சொல்லியவாறோவெனின், 'உறுதவ நனியென வரூஉ மூன்றும் மிகுதி செய்யும் பொருள வென்ப' (உரி. 3) எனவும், 'செல்ல லின்ன லின்னா மையே' (உரி. 6) எனவும் ஓதிய வழி, அவை வழக்கிடைப் பயின்ற சொல்லன்மையான் இவை மிகுதியும் இன்னாமையும் உணர்த்தும் என்று ஆசிரியராணை யாற் கொள்வதல்லது வரலாற்றாற் பொருளுணர்த்தும் எனப் படாவோ எனறு ஐயுறுவார்க்கு, 'உறுகால்' (நற்.37), 'தவப்பல' (புறம் 235), 'நனி சேய்த்து' (ஐங். 443) எனவும், 'மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்' (அகம் 22) எனவும், முன்னும் பின்னும் வரும் சொல் நாடி அவற்றுள் இச்சொல்லோடு இவ் வுரிச் சொல் இயையும் என்று கடைப்பிடிக்கத், தாம் புணர்த்த சொற்கேற்ற பொருள் விளங்குதலின், உரிச்சொல்லும்

வரலாற்றாற் பொருளுணர்த்தும் என்பது பெறப்படும் என ஐயமகற்றிய வாறெனக்கொள்க. வரலாற்றாற் பொருளுணர்த்தா வாயின், குழூவின் வந்த குறிநிலை வழக்குப்போல இயற்கைச் சொல்லெனப்படாவென்பது.

**தெய்.**

எடுத்து ஓதப்பட்ட உரிச்சொல் எல்லாவற்றிற்கும் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : பொருள் பெறச் சொல்லப்பட்ட உரிச்சொல் எல்லாவற்றினையும் முன்னும் பின்னும் வருமொழிகளின் பொருண்மையை யாராய்ந்து அவற்றிற்கியைந்த மொழியாற் புணர்ந்துரைக்கவே தத்தம் மரபினாற் பொருள் தோன்றும், எ-று.

எனவே, பல பொருள் ஒரு சொல் வந்துழி, முன்னும்பின்னும் வந்த மொழியறிந்து அதற்கொப்பப் பொருளுரைக்க என்ற வாறாம். உதாரணம் மேற்காட்டப்பட்டன.

**நச்.**

இஃது உரிச் சொற்கெல்லாம் புறனடை கூறுகின்றது.

இ-ள் : மெய் பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்—ஒரு சொற் பல பொருட் குரிமை தோன்றியும், பல சொல் ஒரு பொருட் குரிமை தோன்றியும் வரும் என இருகூறு செய்து பொருள் பெறக் கூறப்பட்ட உரிச் சொல எல்லாவற்றையும், முன்னும்பின்னும் வருபவை நாடி—தத்தமக்கு முன்னும்பின்னும் வருமொழிகளை ஆராய்ந்து, ஒத்த மொழியால் புணர்த்தனர் உணர்த்தல்—அம் மொழிகளுள் தமக்குப் பொருந்தின மொழி யோடு கூட்டிப் பொருள் உணர்த்துக; மரபின்—அங்ஙனம் உணர்த்திய வரலாற்று முறைமை யானே, தத்தம் பொருள்மன் தோன்றும். தத்தமக்குரிய பொருள் விளங்கித் தோன்றும், எ-று.

எனவே, 'உரிச் சொல் ஆணையால் பொருள் உணர்த்தாது' வரலாற்று முறைமையால் பொருள் உணர்த்தும் என்றார்.

உ-ம் : 'போகு கொடிம ருங்குல்' என்பதில் 'போகல்' என்பது முன் வரும் சொல்லான் நேர்மையை யுணர்த்திற்று.

'திரிகாய் விடத்தரொடு காருடை போகி' (பதிற். 13) என்பதில் போகல் என்பது பின்வரும் சொல்லான் நெடுமையை யுணர்த்திற்று.

'உறுகால்' (நற். 37) என்பது முன் வரும் கால் என்னும் சொல்லான் மிகுதியை யுணர்த்திற்று.

'அணங்கிய செல்லல்' (அகம் 22) என்பது பின்வரும் 'அணங்கிய' என்னும் சொல்லான் இன்னாமையை யுணர்த்திற்று.

இங்ஙனம் கூறவே, 'முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்' (இடை. 3) என இடைச்சொற்கு ஓதிய விதி இதற்கும் கூறினாராயிற்று.

## வெள்

இஃது இவ்வியலிற் கூறப்பட்ட உரிச்சொற்கெல்லாம் புறனடை கூறுகின்றது.

இ-ள் : இச்சொல் இப்பொருட்கு உரித்து எனமேற் பொருள் பெறக் கூறப்பட்ட உரிச்சொல் எல்லாவற்றையும அவற்றின் முன்னும் பின்னும் வரும் மொழிகளை ஆராய்ந்து, அவற்றுள் பொருளுக்குத்தக்க மொழியாலே ஒரு பொருளு ணர்த்துக; இவ்வாறு உணர்த்தவே வரலாற்று முறைமையால் தத்தமக்குரிய பொருள் விளங்கும், எ-று.

ஒரு சொல் பல பொருட்கும் பல சொல் ஒரு பொருட்கும் உரியவாய் வரும்உரிச்சொற்களால்ஒருபொருளைவரைந்துணர்த் துங்கால் அவற்றின் முன்னும் பின்னும் வருகின்ற சொற்களை நாடி வரலாற்று முறைமையால் அப்பொருள் உணர்த்துக என்பதாம்.

உ-ம் : (நச்சினார்க்கினியர் கூறியனவே.)

## ஆதீ

உரிப் பொருள் தந்து நாம் கூறிய சொற்களையும் அவற் றுக்கு முன்னும் பின்னும நிற்கும் சொற்களையும் ஆய்ந்து பொருத்தமான முறையிற் பொருள் சேர்த்து உணர்க. இவ்வுரிச் சொற்கள் மரபு தழுவி வருவனவாகுக.

ஆயிரம் லட்சம் கோடி — கோடி ஒரு எண்.

அன்று கோடித்துணி உடுத்தான் — கோடி புதிது.

பின் உற்ற சொற்களால் அப்பொருள்.

மரபு தழுவலும் ஒத்த மொழியும் : மழ குழ இரண்டும் இளமைப் பொருள் உணர்த்தும் சொற்கள். குழக்கன்று மரபு, ஆயின் மழக்கன்று முறை கேடாகும்.

மடப்பிடி — மரபு; மடக் களிறு முறை கேடு.

தட, கய இரண்டும் பெரிய என்னும் பொருள. தடங் கடல் — மரபு; கயக்கடல் முறைக்கேடு. இதனையே மரபுதழுவல் வேண்டும் என்றார்,

**384.** **கூறிய கிளவிப் பொருணிலை யல்லது**
**வேறுபிற தோன்றினு மவற்றொடு கொளலே** **(93)**

(கூறிய கிளவிப் பொருள்நிலை அல்லது
வேறுபிற தோன்றினும் அவற்றொடு கொளலே)

ஆ. மொ. இல.

If such other means other than those described here appear, they may be accepted.

**ஆல்**

The meanings so far given are not restrictive. If there are other meanings we must take them.

**பி. இ. நூ**

**இல.வி. 288**

கூறிய கிளவிப் பொருள்நிலை யல்ல
வேறுபிற தோன்றினும் அவற்றொடுங் கொளலே.

**இளம்.**

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், இதுவும் புறனடை,

உரை : சொல்லிப் போந்த உரிச்சொற்கள் அவ்வுரிய எனப் பட்ட பொருளின் ஆகாது வேறு வேறுபட்ட பொருளினவாய்த் தோன்றினும் அச்சொல்லப்பட்ட பொருளொடு படுத்துப் பொருள்படுயாறு அறிந்து கொள்க என்பதாம்.

'புரைபட்ட' என்புழிப் புரை என்பது ஈண்டுப் பிளவுப் பொருண்மையை விளக்கிற்றாகலின் இதனையும் உயர்வுப் பொருண்மையோடு புணர்த்து இருபொருளும் அச்சொற்குப் பொருள் என்று கொள்க என்பதாம். இனிக்

'கண் கதழ வெழுதினார்'

என்புழி ஆண்டு விரைந்தெழுதினார் என்று விரைவிற் பொருள் கொள்ளற்க; சிறப்ப எழுதினார் என்று கொள்க. பிறவும் அன்ன.

**சேனா**

இ-ள் : முன்னும் பின்னும் வருபவை நாடிய வழி, உரிச் சொற்குக் கூறப்பட்ட பொருளே யன்றிப் பிறபொருள் தோன்று மாயினும் கூறப்பட்ட வற்றோடு அவற்றையும் கொள்க, எ-று.

உ-ம் : 'கடி நாறும் பூந்துணர்' என்ற வழிக் கடி என்பது முன்னும் பின்னும் வருபவை நாட, வரைவு முதலாயின பொருட்

கேலாது மணப்பொருட்டாயினவாறு கண்டு கொள்க. பிறவு மன்ன.

**தெய்**

இதுவுமது.

இ-ள் : மேல் ஓதப்பட்ட உரிச்சொற்கு ஓதப்பட்ட பொருணிலையல்லது பிற பொருள் தோன்றினும் சொல்லப் பட்டனவற்றோடு ஒரு நிகரனவாகக் கொள்க, எ-று.

உ-ம் : [1] 'பேஎ நாறுந் தாழ்நீர்ப் பனிச்சுனை' என்ற வழிப், 'பேஎ' என்பது மிகுதி குறித்து நின்றது.

'பொய்கை துவன்ற புனிறுதீர் பனுவல்' என்ற வழிப்புனிறு என்பது புதுமையின் கண் வந்தது.

'கடிமலர்' என்ற வழி மணத்தின் கண் வந்தது.

'மேன் முறைக் கண்ணே கடியென்றார் கற்றறிந்தார்' என்ற வழிக் கடி யென்பது வதுவையின் கண் வந்தது.

'தூவற் கலித்த தேம்பாய் புன்னை' (புறம் 24) என்ற வழிக் கலித்தல் தழைப்பின்கண் வந்தது.

'அடர்பொன் அவிர் ஏய்க்கும் அவ்வரி வாட' (பாலைக்கலி, 22) என்ற வழி அரி என்பது நிறத்தின் கண் வந்தது. பிறவும் இவ்வாறு வருவன அறிந்து கொள்க.

**நச்**

இதுவுமது

இ-ள் : கூறிய கிளவிப் பொருள் நிலை அல்ல வேறுபிற தோன்றினும்—முன்னும் பின்னும் வருபவை நாடியவழி முற்கூறிய உரிச் சொற்களின் பொருள் நிலைமை அல்லாத வேறு பிற பொருள் தோன்றுமாயினும், அவற்றொடு கொளல்— அக் கூறப்பட்டனவற்றோடே அவற்றையும் உரிச்சொல்லாகக் கொள்க, எ-று.

உ-ம் : 'கடிநாறும் பூந்துணர்' என்றால், முற்கூறிய வற்றிற்கு ஏலாது மணப் பொருட்டு ஆயிற்று.

'மரம் புரை பட்டது' என்பது உயர்வுப் பொருள் குறித்தது என்று கொள்ளற்க; பொந்து பட்டது என்னும் பொருட்டா யிற்று.

---

1. பொருள் : மிகுதியாகத் தேன் நாறும் ஆழ்ந்த நீருடைய குளிர்ந்த சுனை

இவையே யன்றி வேறு பிற தோன்றினவை அவ்வச் சூத்திரங்களுள் காட்டிப் போந்தாம்; அவற்றான் உணர்க.

**வெள்**

இ-ள் : (உரிச்சொற்களின் முன்னும் பின்னும் வரும் சொற்களை நாடிய வழி) முற்கூறிய உரிச் சொற்களின் பொருள் நிலைமை யல்லாது வேறு பிற பொருள் தோன்றுமாயினும் முற்கூறப்பட்டவற்றோடு அவற்றையுங் கொள்க, எ-று.

உ-ம் : 'கடி நாறும் பூந்துணர்' என்றவழிக் கடி என்பது நாறும் என்ற சொல்லின் சார்பால் முற்கூறப்பட்ட பொருள் பயவாது நறுமணம் என்ற பொருள் தந்தது.

'மரம் புரைபட்டது' என்புழிப் புரைபட்டது என்பது உயர்வு பொருள் தராது பொந்துபட்டது என்ற பொருள் தந்தது. இவ்வாறே இங்குக் கூறிய உரிச் சொற்கள் கூறப்படாத வேறு பொருளும் தருதலை இடம் நோக்கியுணர்ந்து கொள்க.

**ஆதி.**

முன் கூறிய சொற் பொருள் இத்துணை என்று கட்டுப்பாடு அல்ல பிற பொருள் தோன்றினும் அவற்றோடு கொள்க.

வெறுப்பு—செறிவு எனப் பொருள். அஃது வெறுக்கை யாகிச் செல்வம் எனப் பொருள் தரும். இஃதே பிற பொருள் தோன்றல்.

பொருட்குப் பொருள்

**385. பொருட்குப் பொரு டெரியி னதுவரம் பின்றே (94)**

(பொருட்குப் பொருள் தெரியின் அது வரம்பு இன்றே)

**ஆ. மொ. இல.**

There is no limit if we begin to know the meaning of the word given as meaning.

**ஆல்**

There will be no limit if one tries to know the meaning of the meaning.

**பி. இ. நா.**

**இல.வி. 291**

பொருட்குப் பொருள்தெரியின் அதுவரம் பின்றே.

**இளம்**

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இதுவும் புறனடை.

*உரை :* மேற்குறிப்பிட்ட உரிச்சொல்லுள் உளவன்றே, அப்பொருட்கும் இப்பொருட்கும் உரியவென்று ஓதப்பட்டன. அவை உறுதவ நனி என்னுந் தொடக்கத்தன. மற்று அவற்றை மிகுதிப் பொருள் என்றார். அது பற்றி மிகுதி என்னை? என்றாற்கு, ஒன்றுவிடப் பெரிதாக என்பவால் எனின், அதனைக் கேட்டு ஒழியான், பெரிது எனப் படுவது என்னை யென்றான் எனச், சாலவாதல் என்றான்; என்பதனானும் ஒழியான் சால வாதல் எனப்படுவது என்னை என்றான்; என, எத்துணையும் இறங்குதல் என்றான்; என, அத்துணையும் என்னை என்று இவ்வாறு பிரித்துச் சொற்களால் தெரிபு கூறுமேல் அது வேண்டா என விலக்கியவாறு.

**சேனா.**

பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்திப் பொருளுணர்த்துங் காற்படும் முறைமை யுணர்த்துகின்றார்.

இ-ள் : ஒரு சொல்லை ஒரு சொல்லாற் பொருளுணர்த்திய வழி அப்பொருளுணர்த்த வந்த சொற்கும் பொருள் யாதெனப் பொருட்குப் பொருள் தெரியுமாயின், மேல் வருவனவற்றிற் கெல்லாம் ஈதொத்தலின், அவ்வினா இறை வரம்பின்றியோடும், அதனாற் பொருட்குப் பொருள் தெரியற்க, எ-று.

ஒரு சொற்குப் பொருள் உரைப்பது பிறிதோர் சொல்லா னன்றே? அச் சொற் பொருளும் அறியாதானை உணர்த்துமா றென்னை யெனின், அது வருகின்ற சூத்திரத்தாற் பெறப்படும்.

**தெய்.**

உரிச்சொற்கு உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : பொருட்குப் பொருள் தெரியின் எல்லையின்று, எ-று.

அஃதாவது உறு என்பதற்குப் பொருள் மிகுதி என்றால், மிகுதி என்பதற்குப் பொருள் யாதெனின் அதற்கும் ஒரு வாய் பாட்டாற் பொருளுரைப்பின் அதற்குப் பொருள்யாதெனப் பின்னும் வினாவும்; அவ்வாறு வினாவ, அவ்வாராய்ச்சி முற்றுப் பெறாதாம். அதனால் வினாவுவானும் அவ்வாறு வினாவற்க; செப்புவானும் அவ்வாறு செப்பற்க, எ-று.

வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனால் இவ் வாராய்ச்சி பெயர்ச் சொற்கும் ஒக்கும் என்று கொள்க. அஃதேல் அப்பொருண்மை யுணராதான் அதனை யுணருமாறு என்னை யெனின், அது வருகின்ற சூத்திரத்தான் விளங்கும் என்க.

**நச்.**

இச்சூத்திரம் முதல் 'எழுத்துப் பிரிந்திசைத்தல்' (உரி. 97) என்னுஞ் சூத்திரத் தளவும் முற்கூறிய நால்வகைச் சொல்லையும் உணருமாறும், உணர்த்துமாறும் அவற்றின் தன்மையும் உணர்த்துகின்றார், மேற்கூறுகின்ற பொது இலக்கணமாகிய எச்ச இயற்கு ஏற்ப அதிகாரப்பட்டமை கருதி.

இ-ள் : பொருட்குப் பொருள் தெரியின்—ஒரு சொல்லை ஒரு சொல்லானும் பல சொல்லானும் உணர்த்தியவழிப் பொருள் உணர்த்த வந்த சொற்கும் பொருள் யாது எனப் பொருள் தெரியுமாயின், அது வரம்பு இன்று—அங்ஙனந் தெரிதல் வரம்பின்றோடும்; அதனால் பொருட்குப் பொருள் தெரியற்க, எ-று.

ஒரு சொற்கு ஒரு சொல்லானும் பல சொல்லானும் பொருள் உணர்த்தினாலும் உணரும் உணர்வு இல்லாதானை உணர்த்து மாறு மேற்கூறுகின்றார்.

**வெள்.**

இது பயிலாத சொற்களைப் பயின்ற சொற்களோடு சார்த்திப் பொருளுணர்த்துங்காற்படும் முறைமை யுணர்த்து கின்றது.

இ-ள் : ஒரு சொல்லை ஒரு சொல்லாற் பொருளுணர்த்திய வழி அப் பொளுணர்த்த வந்த சொற்கும் பொருள் யாது? எனப் பொருளுக்குப் பொருள் தெரிய வினவுமாயின் அவ்வினா, வீடை கூறுதற்குரிய வரம்பின்றியோடும்; ஆதலால் பொருட்குப் பொருள் தெரியற்க, எ-று.

உறு தவ நனி என்பனவற்றை மிகுதிப் பொருள என்றார், ஆசிரியர். மிகுதியாவது யாது? என ஒருவன் வினாவின், ஒன்றை விடப் பெரியது என்னலாம். அதனைக் கேட்டு அமையாது, பெரிது எனப்படுவது யாது? என அவன் மீண்டும் வினவின் அவனுக்கு மேலும் மேலும் சொற்களால் பொருள் விளக்குதல் வரையறை யில்லாமற் போம் என்பதாம்

ஒரு சொற்கு ஒரு சொல்லாலும் பல சொல்லாலும் பொருள் உணர்த்தினாலும் உணரும் உணர்வில்லாதானை உணர்த்து மாறு வருஞ்சூத்திரத்தாற் கூறப்படும்.

**ஆதி.**

கண்ட பொருளுக்கு விரிவாகப் பொருள் பார்த்து நிற்பின் அது வரம்பு மீறிப் போய்விடும்.

கடி—விளக்கம் கடிமார்பு.

வாள்—ஒளி பொருந்திய

இரண்டு பொருளையும் இணைத்து வாள் மார்பு என்னலாமோ ஆகாது; இது வரம்பற்ற செயல்.

**386. பொருட்குத் திரிபில்லை யுணர்த்த வல்லின் (95)**

(பொருட்குத் திரிபு இல்லை உணர்த்த வல்லின்)

**ஆ.மொ.இல.**

If taught clearly, there will be no confusion in knowing the meaning of the word.

**ஆல் :**

The meaning will not get confused if the listener gets the sense of the speaker.

**பி.இ.நூ.**

**இல.வி. 292**

பொருட்குத் திரிபில்லை யுணர்த்த வல்லின்

**இளம்**

இச் சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இதுமேற் சூத்திரத்திற்குப் புறனடை.

உரை : உரிச்சொல் பிறிதலது, அது பொருள் உணருமாறு வல்லாற்குப் பிற சொற் கொணர்ந்து பொருள் உணர்த்தல் வேண்டா; திரிபின்றி அச் சொல்லினானே உணரப்படும், எ-று.

என்னை? உறு என்ற பதம் மிகுதிப் பொருட்கு என்றக்கால், அம் மிகுதியையும் அதனானே யுணரலாம்; உணருமாறு வல்லாற்குப் பிற சொற் கொணர்ந்து உரைத்தல் வேண்டா என்பது.

**சேனா.**

இ-ள் : 'உறுகால்' (நற். 37) என்புழி உறு என்னும் சொற்குப் பொருளாகிய மிகுதி என்பதன் பொருளும் அறியாத மடவோனாயின், அவ்வாறு ஒரு பொருட் கிளவி கொணர்ந் துணர்த்த லுறாது 'கடுங்காலது வலி கண்டாய், ஈண்டு உறு என்பதற்குப் பொருள்' என்று தொடர் மொழி கூறியானும், கடுங்கால் உள் வழிக் காட்டியானும் அம்மாணாக்கன் உணரும் வாயிலறிந்து உணர்தல் வல்லனாயின் அப்பொருள் திரிவு படாமல் அவன் உணரும், எ-று.

அவற்றானும் உணர்தலாற்றாதானை யுணர்த்துமாறு என்னையெனின், அதற்கென்றேவருஞ்சூத்திரமெழுந்ததென்பது.

**தெய்.**

இஃது ஆசிரியன்கட் கிடந்ததோர் இயல்புணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : பொருட்குப் பொருள் வினவிய மாணாக்கன் அவ்வாறு வினவானாம்; அவன் கொள்ளுமாறு ஆசிரியன் அஃது உணர்த்தவல்லனாயின், எ-று.

என்றது, ஈண்டுப் பயின்றனவாக எடுத்தோதப்பட்ட சொற்களைப் பயிலாதாற்கு அவன் பயின்ற வாய்பாட்டான் உணர்த்துக; உணர்த்தவே, பொருட்குப் பொருள் ஆராய்தலில்லை என்றவாறு.

அஃதேல், உறு தவ நனி யென வரூஉம் மூன்றும்—மிகுதி செய்யும் பொருள என்ப' (உரி. 3) என்பதனாற் பயனின்றாம். அஃதறியாதாற்குப் பிற வாய்பாட்டாற் பொருளுணர்த்த வேண்டுதலின் எனின், அதற்கு விடை வருகின்ற சூத்திரத்தான் விளங்கும்.

**நச்:**

இதுவும் அது,

இ-ள் : உணர்த்த வல்லின் பொருட்குத் திரிபு இல்லை—மாணாக்கன் உணருமாறு அறிந்து ஆசிரியன் உணர்த்த வல்லனாயின், இச்சொல் இப்பொருட்கு என்று தான் கூறிய பொருட்குத் திரிபு இன்றாம், எ-று.

'யாம்'என்பது படர்க்கை உளப்பாட்டுத் தன்மைப்பன்மைப் பெயர்' என்றால் உணராதானை, 'அது சேய்மைக்கண் நின்றாரைத் தன்னோடு கூட்டிக் கூறப்பட்டுப் புடைபெயர்ச்சியின்றி நின்றதோர் பொருளை உணர்த்திற்றுக் காண்' எனத் தொடர்மொழி கூறியானும், சேய்மைக்கண் நின்றாரைச் சேர்த்துக் காட்டியானும் பொருள் உணர்த்துக.

'உண்டேம்' என்பது பன்மைத் தன்மை' என்றால் பொருள் உணராதானை, 'இது யானும் இவனும் அவனும் உண்டல் தொழிலைச் செய்தேம் என்னும் பொருள் உணர்த்திற்றுக்காண்' எனத் தொடர்மொழி கூறியானும், அவரைத் தன்னோடு சேர்த்துத் தொழில் நிகழ்த்திக் காட்டியானும் பொருள் உணர்த்துக்.

'சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே' (புறம். 235)

என்புழி மன்னைச் சொல், 'இனி அது கழிந்தது' என்னும் பொருள் குறித்து நின்றது காண் என்றால் பொருள் உணராதானை அரிதாகப் பெற்ற கள்ளை எக்காலமும் தமக்குத்

தருகின்றவன் துறக்கத்துச் சேறலின், எமக்குக் கள் உண்டல் போயிற்று என்றல் இதன் பொருள் எனத் தொடர் மொழிகூறிப் பொருள் உணர்த்துக.

உறுகால் (நற். 37) என்புழி, 'உறு என்பது மிகுதி' என்றால் பொருள் உணராதானை 'கடுங்காலினது வலிகண்டாய் ஈண்டு உறு என்பதற்குப் பொருள் அஃது' என்று தொடர்மொழிகூறி யானும், கடுங்கால் உள்வழிக் காட்டியானும் உணர்த்துக.

இங்ஙனம் நால்வகைச் சொல்லையும் மாணாக்கன் உணருமாறு அறிந்து உணர்த்தவே பொருட்குத் திரிபு இன்றாம்.

இங்ஙனம் உணர்த்தவும் உணராதானை உணர்த்தற் பாலன் அல்லன் என்கின்றது மேல் வருகின்ற சூத்திரம்.

## வெள்

இது சொற் பொருள் உணர்த்துமாறு கூறுகின்றது.

இ-ள் : மாணாக்கர் உணருமாறு அறிந்து ஆசிரியன் உணர்த்த வல்லனாயின் இச்சொல் இப்பொருளினது என்று தான் கூறிய பொருட்குத் திரிபில்லை, எ-று,

உ-ம் : 'உறுகால்' என்புழி உறு என்பது மிகுதி யென்றால் உணராதானைக் 'கடுங்காற்றினது வலிகண்டாய் ஈண்டு உறு என்னும் உரிச்சொல்லால் உணர்த்தப்படுவது' என்று தொடர் மொழி கூறியோ அல்லது கடுங்காற்று வீசுமிடத்து அவனைக் கொண்டு நிறுத்தியோ மாணாக்கன் உணரும் வாயில் அறிந்து உணர்த்த வல்லனாயின் அப்பொருள் திரிபு படாமல் அவன் உணரும் என்பதாம்.

இங்ஙனம் அனுபவத்திற் காட்டி யுணர்த்தவும் உணராதா னுக்கு அறிவுறுத்த முயலுதல் பயனில் செயலாம் என உணர்த் துவது வரும் சூத்திரமாகும்.

## ஆதி.

தானும் உணர்ந்து பிறருக்கும் உணர்த்த வல்லனாயின் உரிச்சொல் பொருளில் மயக்கம் ஏற்படாது.

உறுவன்— அங்கு வந்தடைவான்.

உறுவன் திறங்கண்டு — பெரியோனுடைய ஆற்றலை யறிந்து.

உறு—மிகுதி ஆதலின், உறுவன் மிக்கோன் என உணர்ந்து கற்றவர் அறிவார்; ஐயமுறார். உணராதார் 'உற்றவன்' எனப் பிழைபட்டு நிற்பார்.

**387. உணர்ச்சி வாயி லுணர்வோர் வலித்தே (96)**

(உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே)

**ஆ.மொ:இல.**

Knowing the meaning depends upon the skill of the learner

**ஆல்.**

The meaning depends on the strength of the feelings conveyed.

**பி.இ.நூ.**

**இல வி. 293**

உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே.

**இளம்**

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இதுவும் புறனடை; யாஞ் சொல்லிய சொல் வாயிலே பற்றி யுணர்த்துக. அத் துணையால் உணர்வார்க்கு அதுவே உணர்ச்சி வாயிலாம். அல்லாக்கால் அவ்வுணர்வோரை வலித்தாமாற்றால் உணர்த்துக என்பதாம்.

என்னை?

'பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள' (உரி. 85)

என்பதனால் உணராத மடவோரை மற்றொரு வாய்பாட்டால் உணர்த்துக; அல்லாக்கால் மேல்நோக்கிச் சில மலர்கொடு தூவிக்காட்ட வுணருமேல் அஃதே உணர்ச்சி வாயிலாக அறிக என்பது.

**சேனா.**

இ-ள் : வெளிப்படத் தொடர்மொழி கூறியானும் பொருளைக் காட்டியானும் உணர்த்தவும் உணராதானை உணர்த்தும் வாயில் இல்லை; உணர்ச்சியது வாயில் உணர் வோரது உணர்வை வலியாக வுடைத்தாகலான், எ-று.

யாதானும் ஓர் ஆற்றான் உணருந்தன்மை அவற்கில்லையாயின் அவனை உணர்த்தற் பாலன் அல்லன் என்றவாறு.

**தெய்.**

மாணாக்கர்க்கு உரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : உணர்ச்சி என்பது உணர்வு. வாயில் என்பது புலன்; அஃதாவது உணரப்படுவது. உணர்வோர் வலித்து என்பது உணர்வோரது வலிமையுடைத்து, எ-று.

என்றது, பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தி உணர்த்து கின்றுழி, பயின்றவாக ஓதப்பட்டன, யாதும் அறியாதாரை நோக்கின வல்ல; உணர்வினான் உணரப்படுவனவற்றை யுணர் வாரை நோக்கிக் கூறப்பட்ட என்றவாறு. எனவே மேற்கூறிய கடா விடை பெற்றதாம்.

**நச்**

இதுவும் அது.

இ-ள் : உணர்ச்சி வாயில்—நால்வகைச் சொல்லையும் மாணாக்கன் உணர்தற்குக் கூறிய இவ்விலக்கணம், உணர்வோர் வலித்து—தன்னை உணர்வோரது உணர்வைத் தனக்கு வாயி லாக வுடைத்து, எ-று.

எனவே, தன்னை உணரும் உணர்வு இல்லாதானுக்குத் தான் சொல்வது பயன்படாது ஆகலின், அதனை அவற்கு உணர்த்தற்கு என்பது பொருளாயிற்று.

இத்துணையும் உணருமாறும் உணர்த்துமாறும் உணர்த்தி னார்.

**வெள்.**

இதுவுமது.

இ-ள் : வெளிப்படத் தொடர்மொழி கூறியோ அல்லது பொருளை நேரிற் காட்டியோ உணர்த்தவும் உணராதானை உணர்த்தும் வழியில்லை; உணர்ச்சியது வாயில் உணர்வோரது உணர்வினை வலியாகவுடைத்தாகலான், எ-று.

யாதானும் ஒருவழியானும் உணரும் தன்மை ஒருவர்க்கு இல்லையாயின் அவர்க்கு உணர்த்துதல் பயனில் செயல் என்ப தாம்.

**ஆதி**

அவரவர் அறிவின் உணர்ச்சி கொண்டே உண்மையை உணர்வோரின் திறன் அமைந்துளது.

மடஅன்னம் உணராதார் பேதைமை கொண்ட அன்னம் என்பர். உணர்திறன் உடையார் இளம்பருவத்து அன்னம் என்பர்.

**388. மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா (97)**

(மொழிப் பொருள் காரணம் விழிப்பத் தோன்றா).

**ஆ. மொ. இல.**

The origin of the world cannot be known easily

ஆல்.

The origin of the meaning of a word is
never certain Semantic units.

பி. இ. நூ.

இல. வி. 294

மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா.

இளம்

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின் இதுவும் புறனடை.

உரை : மொழிப் பொருள்கள் என்பன அச்சொல்லப்பட்ட பொருள்கள் அப்பொருட்கட்டே என்றவாறாம்.

சேனா.

இ-ள் : உறு தவ முதலாயின சொற்கு மிகுதி முதலாயின பொருளாதல் வரலாற்று முறைமையாற் கொள்வதல்லது, அவை அப்பொருளவாதற்குக் காரணம் விளங்கத் தோன்றா எ-று.

பொருளொடு சொற்கு இயைபு இயற்கையாகலான் அவ் வியற்கையாகிய இயைபாற் சொற்பொருளுணர்த்தும் என்ப ஒரு சாரார். ஒருசாரார் பிறகாரணத்தான் உணர்த்தும் என்ப. அவற்றுள் மெய்ம்மையாகிய காரணம் ஆசிரியர்க்குப் புலனாவ தல்லது நம்மனோர்க்குப் புலனாகாமையின், 'மொழிப்பொருட் காரணம் இல்லை' என்னாது, 'விழிப்பத் தோன்றா' என்றார். அக்காரணம் பொதுவகையான் ஒன்றாயினும் சொற்றொறும் உண்மையிற் சிறப்புவகையாற் பலவாம்; அதனான் 'விழிப்பத் தோன்றா' எனப் பன்மையாற் கூறினார்.

உரிச்சொற் பற்றியோதினாரேனும் ஏனைச்சொற் பொருட்கும் இஃதொக்கும்.

தெய்

உரிச் சொற்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

'வந்தது கொண்டு வாராதது முடித்தல்' என்பதனால் பெயர்ச் சொற்கு உரிய இலக்கணமும் உணர்த்திற்றென்று கொள்ளப்படும்.

இ—ள் : இச்சொற்குப் பொருள் இதுவென நியமித்தற்குக் காரணம் விளங்கத் தோன்றா, எ-று.

எனவே, காரணம் உளது என்பதூஉம், அது புலனாகா தென்பதூஉம் கூறியவாறாம். என்னை புலனாகாமையெனின், மிகுதல் என்பதற்குப் பொருளாவது முன்பு நின்ற நிலையிற் பெரிதாதல் அப்பொருண்மை அச்சொற் காட்டுதற்குக் காரணம் உரைப் பரிதாகலான். அஃதேல் காரணம் உளபோலக் கூறியவ தனாற் பயன் என்னை யெனின், பொருண்மேற் சொல் நிகழ்தல் தொன்று தொட்டு வருகின்றதாதலின், உலகினுள் மிக்கா ரெல்லாரும் காரணமின்றி வழங்குபவோ எனனும் ஐயம் குறித்துக் கூறினார்.

அஃதேல், இன்ன எழுத்து இப்பொருள்படும் எனவும், இத் தன்மைத்து எனவும், இப்பயன்தரும் எனவும் மற்றை நூல கத்தும் பிறாண்டும் உரைக்கப்படு மாகலான், காரணம் உரைப் பரிது என்பது குற்றம் எனின், அதற்கு விடை வருகின்றசூத்திரத் தான் விளங்கும்.

நச்.

இது, சொற் பொருள் உணர்த்துங் காரணம் ஆசிரியர்க்கே புலப்படும் என்கின்றது.

இ-ள்: மொழிப் பொருட் காரணம்— நால்வகைச் சொல் லுக்கும் பொருளை அறிவித்து நிற்கின்றதோர் காரணம் உண் டாந் தன்மை, விழிப்பத் தோன்றா — நுண்ணுணர்வு இல்லா தோர்க்கு மரபு என்று கொள்வது அல்லது விளங்கத் தோன்றா, எ-று.

எனவே, நுண்ணுணர்வுடையோர்க்கு க்காரணம் உண்டாம் தன்மை விளங்கத் தோன்றும் என்பது பொருளாயிற்று.

இது மரபு என்று கோடல் 'நிலந்தீ நீர்வளி' ( மரபியல். 89) என்னும் மரபியற் சூத்திரத்தினாலும் ஆசிரியர் உணர்த்தினார்.

உலகத்துப் பொருள்களின் நிகழ்ச்சிக்குச் சொல் காரணம் ஆகலின், 'மொழிப் பொருட் காரணம்' என்றார். இக்காரணம் அக்காரியங்களோடு இயைந்து நிற்கின்ற தன்மை ஆசிரியர்க்கு அல்லது புலப்படாமையின், 'விழிப்பத் தோன்றா' என்றார்.

வெள்.

இது சொற்கள் காரணம் உடையன என்பது கூறுகின்றது.

இ—ள் : உறு தவ முதலாயின சொற்களுக்கு மிகுதி முதலா யின பொருளாதல் வரலாற்று முறைமையாற் கொள்வதல்லது அவை அப்பொருளினை யுடையவாதற்குரிய காரணம் விளங்கத் தோன்றா, எ-று.

.................

விழிப்பத் தோன்றுதல் — விளங்கத் தோன்றுதல்

'உரிச்சொற் பற்றியோதினாரேனும் ஏனையச் சொற் பொருட்கும் இஃது ஒக்கும்' என இச்சூத்திரத்துச்சேனாவரையர் கூறும் உரைக் குறிப்பினை யுளங்கொண்ட நச்சினார்க்கினியர் மேற் கூறுகின்ற பொதுவிலக்கணமாகிய எச்சவியற்கு ஏற்ப அதிகாரப் பட்டமை நோக்கி இவ்வியலில் 'பொருட்குப் பொருள் தெரியின்' என்பது முதல் 'எழுத்துப் பிரிந்திசைத்தல்' என்பது வரையுள்ள ஐந்து சூத்திரங்களிலும் முற்கூறிய நால்வகைச் சொல்லையும் உணருமாறும் உணர்த்துமாறும் அவற்றின் தன்மையும் உணர்த்துகின்றார் என விளக்கியுள்ளார்.

ஆதி.

சொல்லுக்கு அப்பொருள் வந்த காரணத்தை விளக்க முடியாது. 'செல்லல் இன்னல் இன்னாமையே' — செல்-போ ஆதலின் செல்லல்-போதல்.

இனிமை + நல் = இன்னல் = இனிய நல்ல; இவ்வாறு பொருள் இருக்க இன்னல் துன்பப்பொருள் தருவது எப்படி? காரணம் கிடையாது. உரிச் சொல்லைக் காரணப் பெயராக எடுத்துப் பொருள் பார்த்தல் ஆகாது.

**389.** எழுத்துப் பிரிந் திசைத்த லிவணியல் பின்றே **(98)**

(எழுத்து பிரிந்து இசைத்தல் இவண் இயல்பு இன்றே)

ஆ. மொ. இல.

The semanlemes being divided into phonemes cannot make sense.

ஆல்

It is not in the nature of this morpheme to be divided into meaningful units.

பி.இ.நூ.

இல. வி. 289.

எழுத்துப் பிரிந்திசைத்தல் இவணியல் பின்றே

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், புறனடைபோல்வதோர் விதி கூறுதல் நுதலிற்று.

உரை : எழுத்துக்கள் பிரிந்திசைக்கப்படா, எ-று.

உரிச்சொல் என்றவை பிறிதிலக்கணமும் உடைய என்பது போந்ததாம்; என்னை பிறிதிலக்கணம் எனின், 'தம் மீறு

திரிதலும் பிறிதவண் நிலையலும்' உடைய இவையும் என்பது. யாதோ எனின், கடியென் கிளவி. 'கடும்புனல்' என்றாயிற்று. நம்பு எனப்பட்டது நம்பி என்றாயிற்று. பிறவும் அன்ன.

இனி, 'உரு கெழு தேற்றம்' என்புழி உரு என்பதூஉம் கெழு என்பதூஉம் உரிச்சொல்.

**சேனா.**

இ-ள் : முதனிலையும் இறுதிநிலையுமாக எழுத்துக்கள் பிரிந்து வேறு வேறு பொருளுணர்த்தல் உரிச்சொல்லிடத் தியைபுடைத்தன்று, எ-று.

'இவணியல் பின்று' எனவே, எழுத்துப் பிரிந்து பொருளு ணர்தல் பிறாண்டு இயைபுடைத் தென்பதாம். அவையாவன :— வினைச்சொல்லும் ஒட்டுப் பெயருமாம். பிரிதலும் பிரியாமையும் பொருளுணர்த்துவனவற்றிற்கே யாதலின், [1] 'கூறை கோட் படுதல் கடவுளர்க்கு எய்தாவாறு போல, இடைச்சொற்கு இவ்வாராய்ச்சி எய்தாமையறிக.

தவ நனி என்னும் தொடக்கத்தன குறிப்பு வினையெச்சம் போலப் பொருளுணர்த்தலின், அவை போலப் பிரிக்கப்படுங் கொல்லோ வென்றையுறாமை ஐயமகற்றியவாறு.

**தெய்.**

எல்லாச் சொற்கும் உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : ஒரு சொற்கு அங்கமாகிய எழுத்துப் பிரிந்து நின்று பொருள்பட ஒலித்தல் இத்தமிழகத்தில் இல்லை, எ-று.

எனவே, மேல் எழுந்த கடா விடை பெற்றதாம். பொருட்குப் பொருள் தெரியின் என்பது முதலாக இத்துணை யும் கூறப்பட்டது உரிச்சொற்குப் பொருளுணர்த்து மாறாம.

---

1. இவ்வழிச் செல்வார் கூறை கோட்படுவர்(ஆடை கள்வ ரால் பறிக்கப்படுவர்). என்றால் கூறை கோட்படுதல் கடவுளர்க்கு ஆகாது. அவரை விட்டு மற்றை மக்க ளையே கொள்ளல் வேண்டும், அதுபோல எழுத்துப் பிரிந்து இசைத்தல் இவண் (உரிச்சொல்லுக்கு) இயல் பில்லையென்றால் பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச் சொற்களுக்கு இயல்பாம் என்பது பெறப்படும். ஆயினும் இடைச்சொல் பிரிதலும் பிரியாமையும் ஆகிய இருநிலைகள் உடையதன்றாதலின் அதை விட்டுப் பிரிதலும் பிரியாமையுமாகிய இருநிலையுடைய பெயர் வினைகளே கொள்ளப்படும்.

**நச்.**

இஃது உரிச்சொற்கு எழுத்துப் பிரிந்து இசைத்தல் இன்று என்கின்றது.

இ-ள் : எழுத்துப் பிரிந்து இசைத்தல் இவண் இயல்பு இன்று—எழுத்துக்கள் முதல் நிலையும் இறுதி நிலையுமாகப் பிரிந்து வேறு வேறு பொருள் உணர்த்தல் உரிச் சொல்லிடத்து இயல்பு உடைத்தன்று, எ-று.

எனவே எழுத்துக்கள் திரிந்து பொருள் உணர்த்துதல் உரிச் சொல்லிடத்து இயல்புடைத்து என்றவாறாம்.

எழுத்துக்கள் பிரிந்திசைத்தன வினைச் சொல்லும் ஒட்டுப் பெயரும் அவற்றுள் வினை பிரிந்தன வினையியலுள் ஈறு பற்றி ஓதிப் பிரித்துக் காட்டினார்; பெயர் பிரிந்தன. 'நம்மூர்ந்துறு வருஉம் இகர ஐகாரமும்' (பெய. 9) என்பன முதலியவற்றாற் காட்டினார். வெற்பன், பொருப்பன் என்பன முதனிலை பிரிப்பப் பிரியுமேனும், அவையும் ஒட்டுப் பெயர் என்றுணர்க.

தாமாகப் பொருளுணர்த்தாமையின் பிரிதலும் பிரியாமை யும் இடைச் சொற்கு இன்று.

இனி, உரிச்சொல் எழுத்துத் திரிந்து இசைத்தன எல்லாம் இவ்வோத்தினுள் காட்டிப் போந்தவற்றான் உணர்க.

**வெள்.**

இஃது உரிச்சொற் குரியதோர் இயல்பு கூறுகின்றது.

இ-ள் : எழுத்துக்கள் முதனிலையும் இறுதி நிலையுமாகப் பிரிந்து வேறு வேறு பொருளுணர்த்துதல் உரிச்சொல்லாகிய இவ்விடத்து இயல்புடைத்தன்று, எ-று.

முதல் நிலையும் இறுதி நிலையுமாக எழுத்துப் பிரிந்திசைத் தல் உரிச்சொல்லாகிய இவ்விடத்து இல்லை எனவே, வினையும் பெயருமாகிய பிறவிடத்து இயல்புடைதது என்பதாம். அங்ஙனம் முதல் நிலையும் இறுதி நிலையும் எனப் பிரிந்திசைப்பின் வினைச் சொல்லும் ஒட்டுப் பெயருமாம். அவற்றுள் வினையிற் பிரிந் திசைப்பன வினையியலுள் ஈறுபற்றி ஓதிப் பிரித்துக் காட்டி னார். பெயரிற் பிரிந்திசைப்பன 'நம் மூர்ந்து வரூஉம் இகர ஐகாரமும்' என்பன முதலியவற்றாற் காட்டினார். வெற்பன், பொருப்பன் எனவரும் ஒட்டுப் பெயர்கள் வெற்பு + அன் பொருப்பு + அன் என முதல் நிலையும் இறுதி நிலையுமாகப் பிரிந்திசைத்தமை காண்க.

ஆதி.

எழுத்துகளாகப் பிரிந்து (பகுபதமாக்கிப்) பார்த்தல் உரிச்சொல்லில் கிடையாது.

கெடவரல் — கெட+வரல் எனப் பிரித்துப் பார்த்தல் ஆகாது.

எய்யாமை — அறியாமையாயின், எய் — அறி எனப் பிரித்துப் பொருள் கோடல் ஆகாது.

ஆகலின் உரிச்சொற்களை அவ்வாறே பொருள் உணர்தல் வேண்டும். இஃதும் அவற்றின் தனியுரிமை.

உரியியற்புறனடை

390. அன்ன பிறவுங் கிளந்த வல்ல
பன்முறை யானும் பரந்தன வருஉ
முரிச்சொ லெல்லாம் பொருட்குறை கூட்ட
வியன்ற மருங்கி னினைத்தென வறியும்
வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்
தோம்படை யாணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற வுணர்தலென்மனார் புலவர். (99)

(அன்ன பிறவும் கிளந்த அல்ல
பல்முறை யானும் பரந்தன வரூஉம்
உரிச்சொல் எல்லாம் பொருள்குறை கூட்ட
இயன்ற மருங்கின் இனைத்து என அறியும்
வரம்பு தனக்கு இன்மையின் வழிநனி கடைப்பிடித்து
ஓம்படை ஆணையின் கிளந்தவற்று இயலான்
பாங்குற உணர்தல் என்மனார் புலவர்.

ஆ. மொ: இல.

Such others not discussed here may occur extensivly in a different way.

If we try to include them all in this discussion and give their meanings there would be no limit.

Following the way of tradition and having what have been said by way of command to preserve the tradition in mind, one should understand them clearly-so say the scholars.

ஆல்.

Scholars tell us that since it is not possible to draw a line of limilation to the semanties of these and other free morphemes which are extensive in the various ways and since it is not what we aim at either, one must come to understand them clearly by following the right method according to what is said in the body of rules which are the safeguards.

பி. இ. நூ.

இல.வி. 29)

அன்ன பிறவும் ... ... என்மனார் புலவர் (தொல்காப்பியச் சூத்திரமே).

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இதுவும் ஒரு புறனடை.

உரை : அச்சொல்லிப் போந்த உரிச்சொற்களன்றி அவை போல்வன பிறவும் உலகத்துப் பலவற்றானும் பரந்துவரும் உரிச் சொல் எல்லாவற்றையும் இசையும் குறிப்பும் பண்பும் என்னும் மூன்று வகைப்பட்ட பொருளையும் சார்த்தி யுணர்த்துதற் குறை கூட்ட அம்மூன்று பொருண்மைக் கண்ணும் அவை யித் துணையே என்று வரையறுக்கும் வரையறை யின்மையின் முன்னர் உரிச்சொற்கு ஓதப்பட்ட இலக்கணத்திற் பிழையாமல் ஓம்படை யாணையிற் கிளந்தவற்றியலான் உணர்க, எ-று.

ஓம்படையாணை என்பது பாதுகாவல் பற்றிய ஆணை.

அருமை இருமை கருமை சேண்மை என்னுந் தொடக்கத்தன வற்றைப் பிற நூலார்,

'இருமை பெருமையும் கருமையும் செய்யும்' என்றும்,

'தொன்றென் கிளவி தொழிற் பயில் வாகும்' என்றும் எடுத் தோதுப என்பதும அது.

எட்டாவது உரியியல் முற்றிற்று

சேனா.

இ-ள் : 'அன்ன பிறவும் கிளந்த வல்ல பன்முறையானும் பரந்தன வரூஉம் உரிச்சொல் எல்லாம்' என்பது, சொல்லப் பட்டனவே யன்றி அவை போல்வன பிறவும் பலவற்றானும் பரந்து வரும் உரிச்சொல் எல்லாம், எ-று.

'பொருட் குறை கூட்ட வியன்ற மருங்கின் இனைத்தென வறியும் வரம்பு தமக்கின்மையின்' என்பது, பொருளொடு புணர்த்துணர்த்த இசை குறிப்புப் பண்பு பற்றித் தாமியன்ற நிலத்து இத்துணையென வரையறுத்துணருமெல்லை தமக் கின்மையான் எஞ்சாமைக் கிளத்தலரிதாகலின், எ-று.

'வழிநனி கடைப்பிடித் தோம்படையாணையிற் கிளந்தவற் றியலாற் பாங்குறவுணர்தல்' என்பது, 'இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப், பெயரினும் வினையினும் மெய் தடுமாறி' (உரி- ) எனவும், 'முன்னும் பின்னும் வருபவை நாடி' (உரி. ) எனவும் கூறிய நெறியைச் சோராமற் கடைப்பிடித்து'எச் சொல் லாயினும் பொருள் வேறு கிளத்தல்' (உரி. ) எனவும், 'ஒத்த மொழியாற் புணர்த்தனருணர்த்தல், தத்த மரபிற் றோன்றுமன் பொருளே' (உரி. 93) எனவும், என்னாற்றரப்பட்ட பாதுகாவ லாணையிற் கிளந்த வற்றியல்பொடு மரீஇயவற்றை முறைப்பட வுணர்க, எ-று.

குறிப்புப் பொருண்மை பல வகைத்தாகலானும், பெய ரினும் வினையினும் மெய் தடுமாறியும் தடுமாறாதும் ஒரு சொல் பல பொருட் குரித்தாயும் வருதலானும், ஈறு பற்றித் தொகுத் துணர்த்தற்கு அன்னவீறு உடைய அன்மையானும், 'பன்முறை யானும் பரந்தன வரூஉம்' என்றார். பொருளைச் சொல் இன்றி யமையாமையின் அதனைக் 'குறை' என்றார். ஒருவன் வினையும் பயனும் இன்றியமையாமையின் 'வினைக்குறை தீர்ந்தாரிற் றீர்ந்தன்றுலகு' (குறள் 612), 'பயக்குறை யில்லைத் தாம் வாழு நாளே' (புறம் 188) எனறாற் போல, 'பொருட்குறை கூட்ட வரம்பு தமக்கின்மையின்' என இயையும்.

இருமை எனபது கருமையும் பெருமையுமாகிய பண் புணர்த்தும். சேண் என்பது சேய்மையாகிய குறிப்புணர்த்தும். தொன்மை என்பது பழமையாகிய குறிப்புணர்த்தும். இவை யெல்லாம் 'அன்ன பிறவும் கிளந்தவல்ல' என்பதனாற் கொள்க. பிறவும் அன்ன.

உரியியல் முற்றிற்று.

**தெய்.**

இஃது உரிச்சொற்கெல்லாம் புறனடையுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : அன்ன பிறவும்...எல்லாம் என்பது ஈண்டு எடுத்து ஓதப்பட்டனவல்லாத அத்தன்மைய பிறவுமாகிய பல்லாற் றானும் பரந்து வரும் உரிச் சொல் எல்லாம், எ-று.

'பொருட்குறை...இன்மையின் என்பது, பொருட்குறை படாமற் கூட்ட வழக்கியன்ற மருங்கின் இத்துணையென வரையறுக்கு நிலைமை தமக்கு இல்லையாகலான், எ-று. இதனானே எடுத்தோதல் அரிதாயிற்று.

'வழிநனி கடைப்பிடித்து' என்பது,சான்றோர் செய்யுட்கண் வந்த நெறியை மிகவும் கடைப்பிடித்து, எ-று.

'ஓம்படை ஆணையில்' என்பது—ஓம்படை என்பது பாதுகாவல். ஆணை என்பது விதி. பாதுகாத்தலாக எடுத்தோதப் பட்ட புறனடைச் சூத்திர விதியினால், எ-று. அஃதாவது முன்னும் பின்னும் வருபவை நாடி ஒத்தமொழியாற் புணர்த்தல் என மேற் கூறப்பட்டது.

'கிளந்தவற்றியலான்' என்பது பொருளுணர்த்துதற்குக் கருவியாகக் கூறப்பட்ட சொல்லானும்குறிப்பானும் பண்பானும் எ-று.

'பாங்குற வுணர்தல் என்மனார் புலவர்' என்பது பாங்குபட அறிக என்று சொல்லுவர் புலவர், எ-று.

இதன் பொழிப்பு:- எடுத்தோதப்படாத உரிச்சொல் எல்லாம் ஈண்டுப் பொருட்குறை படாமல் எடுத்தோதக் கருதின், அவை எல்லையிலவாதலான், அவை செய்யுளகத்து வழங்கிய நெறியைக் கடைப்பிடித்து, நாம் அதிகாரப் புறனடையாகச் சொன்ன 'முன்னும் பின்னும் வருபவை நாடி, ஒத்த மொழியாற் புணர்த்தனர் உணர்த்தல்' என்னும் விதியினாலும் குறிப்பானும் பண்பானும் பொருள்படுமாறு அறிந்து கொள்க, எ-று.

'கழுதுருவின கஞலிலையன கழி மடலின கைதை' என்ற வழிக, கஞல் என்பது நெருக்கம் குறித்து நின்றது.

'ஒல்லும் வகையான் அறவினை யோவாதே' (குறள் 33) என்ற வழி ஓவல் என்பது செய்யப்படும் என்பது குறித்து நின்றது.

'மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்' (புறம் 165)என்ற வழி மன் என்பது நிலைபெறுதல் குறித்து நின்றது.

'இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா (புறம் 44) என்ற வழி இருமை என்பது பெருமை குறித்து நின்றது.

'அஞ்செங் குவளைக் கண்போல் ஆயிதழ்' என்ற வழி அம் என்பது அழகு குறித்து நின்றது.

'வானம் ஊர்ந்த வயங்கொளி மண்டிலம், நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் அங்காட்டு' (அகம் 11) என்ற வழி வயங் கென்பதூஉம் அவிர் என்பதூஉம் விளக்கங் குறித்தன. அம்

என்பது நுணுக்கங் குறித்தது. உருப்பு என்பது வெம்மை குறித்தது.

'ஊரவர் கவ்வை யெருவாக' (குறள் 1147) என்ற வழி கவ்வை என்பது அலர் குறித்து நின்றது.

'பொருளானாம் எல்லாம்என் றீயா திவறும்' (குறள் 1002) என்ற வழி இவறு என்பது லோபம் குறித்தது.

'பின்னொன்று பெயர்த்தாற்றும் பீடுடை யாளர் போல்' என்ற வழிப் பீடு என்றது பெருமை குறித்து நின்றது.

'நொறிலியற் புரவியதிபர் கோமான்' என்ற வழி நொறில் என்பது நுடக்கத்தின்கண் வந்தது.

'நொறிலியற் புரவி கழற்கால் இளையோன்' என்ற வழி நொறில் என்பது விரைவின்கண் வந்தது.

'கவரிமான்கணம் கல்லறை தெவிட்ட'என்ற வழித் தெவிட்ட என்பது அடைய என்பது குறித்து நின்றது.

'களிறு வழங்கதர் கானத் தல்கி' (பொருந. 46) என்ற வழி அல்குதல் தங்குதற்கண் வந்தது.

'நெடும் பெருங் குன்றத் தமன்ற காந்தள்' (அகம் 4) என்ற வழி அமல்தல் நெருங்குதற்கண் வந்தது.

'மலைய நாறிய வியன் ஞாலத்து' (மதுரைக் 4) என்ற வழி, நாற்றம் என்பது தோற்றம் குறித்து நின்றது.

'நாற்ற நாட்டத் தறுகாற் பறவை' (புறம் 70) என்ற வழி நாடுதல் ஆராய்தற்கண் வந்தது.

'தணக்குங்காற் கலுழ்பானாக் கண்ணெனவும் உளவன்றோ' (கலி. 25) என்ற வழித் தணத்தல் நீக்கம் குறித்து நின்றது.

'குரலோர்த் தொடுத்த சுகிர்புரி நரம்பின் அரலை திரிவு றீகிய' (மலைபடு. 23, 24) என்ற வழி அரலை குற்றம் குறித்தது.

'மாக்கடல் நிலந்தெழு செஞ்ஞாயிற்றுக் கவினை' (புறம் 4) என்ற வழி நிவப்பு என்பது ஓக்கம் குறித்தது.

'மாகந்தி வளடி வருநீள் கொடி மாடவீதி' என்ற வழி திவள்தல் என்பது தீண்டுதல குறித்தது. இவர்தல் என்பது பரத்தல் குறித்தது.

'வாயாச் செத்தோய் என வாங்சே யெடுத்தனன்' என்ற வழிச் செத்து என்பது குறிப்புணர்த்திற்று.

பிறவும் அன்ன.

உரியியல் முற்றும்.

நச்.

இஃது உரிச் சொற்கெல்லாம் புறனடை கூறுகின்றது.

இ-ள் : கிளந்த அல்ல அன்ன பிறவும்—சொல்லப்பட்டனவே யன்றி அவை போல்வன பிறவுமாய், பன்முறையானும் பரந்தன வரூஉம் உரிச்சொல் எல்லாம்—ஈறுபற்றி உணர்த்தற்கு அடங்காது பலவாற்றானும் பரந்து வரும் உரிச்சொல் எல்லாம், பொருட்குறை கூட்ட—பொருளைச் சொல் இன்றியமையாக் குறைபாடு தீரப் பொருளை அதனோடு கூட்டி உணர்த்த, இயன்ற மருங்கின் இனைத்தென அறியும் வரம்பு தமக்கின்மையின்—இசை குறிப்பு பண்பு பற்றித் தாம் இயன்ற நிலத்து இத்துணையென வரையறுத் துணரும் எல்லை தமக்கு இன்மையான் எஞ்சாமல் கிளத்தல் அரிது ஆகலின், வழிநனி கடைப்பிடித்து—அவற்றை அறிவதற்கு ஓதிய வழிகளைச் சோராமல் மிகவும் கடைப்பிடித்து, ஓம்படை ஆணையிற் கிளந்தவற்று இயலாற் பாங்கு உற உணர்தல் என்மனார் புலவர்—பாதுகாவலாகிய ஆணையிற் கிளந்தவற்றின் இயல்பாலே அவற்றையும் பகுதியுற உணர்க என்று சொல்லுவர் புலவர், எ-று.

'ஆதலால் யானும் அவ்வாறே கூறினேன்' என்றார் எனக் குறிப்பெச்சமாக வுரைக்க.

எனவே,

'பெயரினும் வினையினும் மெய்தடுமாறி' (உரி. 1)

எனவும்,

'முன்னும் பின்னும் வருபவை நாடி' (உரி. 1)

எனவும் யான் கூறிய நெறியைச் சோராமல் கடைப்பிடித்து,

'எச்சொல் லாயினும் பொருள் வேறு கிளத்தல் (உரி. 1)

எனவும்,

'ஒத்த மொழியால் புணர்த்தனர் உணர்த்தல்
தத்த மரபின் தோன்றுமன் பொருளே' (உரி. 91)

எனவும் என்னால் தரப்பட்ட பாதுகாவலாணையால் கிளந்தவற்று இயலால் பாங்குற உணர்க' என்பது இதன் கருத்தாயிற்று.

உரிச்சொல் எல்லாம் கூட்டவரம்பு தமக்கு இன்மையின் கடைப்பிடித்து இயல்பாகவே அவற்றை உணர்க என வினை முடிபு கொள்க.

'இருமை' என்பது கருமையும் பெருமையுமாகிய குறிப்பும், 'சேண்' என்பது சேய்மையாகிய குறிப்பும், 'தொன்மை' என்பது பழமையாகிய குறிப்பும் உணர்த்தலும்; 'இவறல்' உலோபமும்,

'நொறிலியற் புரவி அதியர் கோமான்'

என 'நொறில்' நுடக்கமும்,

'நொறிலியற் புரவிக் கழற்கால் இளையோர்'

என 'நொறில்' விரைவும், 'தெவிட்டுதல்' அடைதலும், 'மலிதல்' நெருங்குதலும், 'மாலை' குற்றமும் உணர்த்தலும்; பிறவும் 'கிளந்தவல்ல' என்பதனால் கொள்க.

உரியியல் முற்றும்.

**வெள்.**

இஃது உரிச்சொற்கெல்லாம் புறனடை கூறுகின்றது.

இ-ள் : (இங்குச் சொல்லப்பட்ட உரிச்சொற்களேயன்றி) அவை போல்வன பிறவும் பல நெறியானும் பரந்து வழங்கும் உரிச்சொல் எல்லாம், பொருளொடு புணர்த்து உணர்த்த இசை குறிப்பு பண்பு பற்றித் தாம் இயன்ற நிலத்து இன்ன அளவின வென வரையறுத்துணரும் எல்லை தமக்கு இல்லாமையால் முழுவதும் எடுத்துரைத்தல் அரிதாகலின் அவற்றை யறிதற்குச் சொல்லப்பட்ட வழிகளை நெகிழாமற் கடைப்பிடித்து என்னாற் கூறப்பட்ட பாதுகாவல் ஆணையாற் சொல்லியவற்றியல் போடும் சொல்லாதொழிந்தவற்றை முறைப்பட உணர்க, எ-று.

வழி என்றது 'இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப் பெயரினும் வினையினும் மெய் தடுமாறி' எனவும், 'முன்னும் பின்னும் வருபவை நாடி' எனவும் முன்னர்க் கூறப்பட்ட சொற்பொருளுணரும் நெறியை.

'ஓம்படையாணை' என்றது 'எச்சொல்லாயினும் பொருள் வேறு கிளத்தல்' எனவும், 'ஒத்த மொழியாற் புணர்த்தன ருணர்த்தல் எனவும் முன்னர்க் கூறப்பட்ட பாதுகாவலாணை யினை.

'உரிச்சொல் எல்லாம் கூட்ட வரம்பு தமக்கு இன்மையின் வழி கடைப்பிடித்து இயலான் உணர்தல்' என வினைமுடிபு செய்க.

இருமை என்பது கருமையும் பெருமையும் உணர்த்துதலும், சேண் என்பது சேய்மையுணர்த்துதலும், இவறல் என்பது உலோபம் உணர்த்துதலும், நொறில் என்பது 'நொறிலியற்

புரவி யதியர் கோமான்' என நுடக்கமும், 'நொறிலியற் புரவிக் கழற்கால் இளையோர்' என விரைவும் உணர்த்துதலும், தொன்மை என்பது பழமையுணர்த்துதலும், தெவிட்டுதல் அடைதலும், மலிதல் நெருங்குதலும், மாலை குற்றமும் உணர்த்துதலும், பிறவும் இச்சூத்திரத்துக் 'கிளந்தவல்ல' என்பதனாற் கொள்ளப்படும்.

## ஆதீ

இத்தகைய பிற சொற்களையும் இங்குக் கூறப்பெறாமல் பல வகையாலும் தோன்றும் உரிச்சொற்களையெல்லாம் இத்துணை யென்று, வரம்பு கட்டுதல் பொருளுக்கும் குறையுண்டாக்கும்; வரம்பு கொள்ளாது; ஆதலின் மரபு முறை கடைப்பிடித்து, நல்ல அரணாக அமைந்த சூத்திரங்களிற் கூறிய முறையால் நன்கு உணர்க.

பொருள் குறை கூட்ட—உரிச்சொற்கு வரம்பு கட்டுதல் அதற்குக் குறை உண்டாக்குவதாகும்.

ஆணை—விதி; சூத்திரம்; அவை நமக்கு ஓம்படை—காக்கும் அரண். கிளந்த அல்ல—சொல்லப்படாதன :—

நறு நாகு இறை அற ஆற்றவும் நொறில் இருமை துப்புரவு அவிர் சால் துவர பம்புவெறி மட பொன் வடி வால் வான் பிற.

சுருங்கக் கூறின்,

பெயர்ச்சொல் வினைச்சொல் இரண்டும் இல்லது
பெயர் வினைகட்கு அடையாய் உள்ளதும்
பெயர்வினைச் சொற்கள் இயற்பொரு ளன்றிப்
பயில்முறை மரபோடு பிறபொருள் தருவதும்
உரிச்சொல்; அஃது உரு உறழவும் பெறுமே.

முற்றியது.

உரியியல் உரைவளம் முற்றும்.

# பயன்படுத்தப் பெற்ற நூல்கள்


1. தொல் காப்பியம் - சொல்லதிகாரம் - இளம்பூரணம்
சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை (1973)

2. தொல் - சொல் - சேனாவரையம்
கு. சுந்தரமூர்த்தி (பதிப்பு)
தெற்கு வீதி, திருப்பனந்தாள் (1966)

3. தொல் - சொல் - தெய்வச்சிலையார்
சை சி.நூ. கழகம் (1979)

4. தொல் - சொல் - நச்சினார்க்கினியம்
சை. சி. நூ கழகம் (1979)

5. தொல் - சொல் - சேனாவரையர், கணேசய்யர் பதிப்பு
வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், சுன்னாகம்
இலங்கை

6. தொல் - சொல் - சேனாவரையம், பூவராகம் பிள்ளை விளக்கத்துடன்
சை. சி. நூ. கழகம் (1970)

7. தொல் - சொல் - குறிப்புரை, பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார்
38, பாண்டியன் சந்து, தெப்பக் குளம், திருச்சி (1930)

8. தொல் - நன்னூல் - சொல்லதிகாரம், க. வெள்ளை வாரணனார்
142, கனகசபை நகர், சிதம்பரம் (1971)

9. தொல் - சொல் - ஆதித்தியம்
C. L. S. கிறித்துவ இலக்கியச் சங்கம்
பூங்கா நகர், சென்னை (1971)

10. இலக்கணத் தொகை - சொல்
ச. வே. சுப்பிரமணியன், செயகுமாரி ஸ்டோர்ஸ்
கோர்ட்டு ரோடு, நாகர் கோயில் (1972)

11. இடையும் உரியும், மோ. இசரயேல், சர்வோதயா இலக்கியப் பண்ணை, 12/1 மேல வெளி வீதி, மதுரை, (1977)

12. காப்பியர் நெறி சொல்லியல், தே. ஆண்டியப்பன். முத்துப்பதிப்பகம், மதுரை, 1977.

13. இலக்கண ஆய்வுக் கட்டுரைகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1974.

14. தொல்காப்பியம், க. வெள்ளைவாரணன், அண்ணா மலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1970.

15. Tolkappiyam with Critical Studies
Prof. S. Ilakkuvanar
Kural Neri Publishing house
Mathurai 6 (1963)

16. Tolkappiyam, Phonology & Morphology,
Dr. D. Albert
I. I. T. S. Madras 113 (1985).

# சூத்திர முதற் குறிப்பகராதி

(எண்—பக்க எண்)


அதிர்வும் 48
அமர்தல் 137
அரியே 105
அலமர 39
அவற்றுட் 58
அவற்றுட் 94
அவற்றுட் 98
அவற்றுட் 110
அவைதாம் 91
அன்ன பிறவும் 169
இசைப்பிசை 38
இயைபே 37
உகப்பே 32
உசாவே 124
உரிச்சொற் கிளவி 6
இலம்பாடு 111
உணர்ச்சி 162
உயாவே 123
உருவுட்காகும் 24
எய்யாமையே 86
எழுத்து 166
எறும் 149
ஏற்ற 78
ஐயமுங் 145
ஐ வியப்பாகும் 146
கடியென் 141
கதழ்வு 46
கம்பலை 96
கழி 104
கயவென் 60
கருவீ 103
கவ 106
கவர்வு 115
கழுமென் 99
கறுப்புஞ் 126
குருவுங் 26
கூர்ப்புங் 45
கூறிய கிளவி 154
கெடவரல் 55
சாயன் 63
சீர்த்தி 42
செல்லல் 28
செழுமை 100
சேரே 116
ஞெமிர்தலும் 113
தடவுங் 55
தாவே 90
தீர்தலுஞ் 52
துயவென் 123
துவன்று 72
துவைத்தல் 108
தெவ்வு 92
தெவு 89
நம்பு 67
நளியென் 61
நன்று 88
நனவே 132
நிறுத்துரு 128

நொசிவு 129
பசப்பு 35
படரே 83
பணையே 82
பயப்பே 34
பரவும் 139
பழுது 62
பிணையும் 79
புதிது 136
புனிறென 131
புலம்பே 71
பேநா 118
பொருட்குத் திரிபில்லை 159
பொருட்குப் பொருள் 156
பொற்பே 76
பையுளுஞ் 85
மதவே 133
மல்லல் 30
மழவுங் 41
மாதர் 66
மாலை 43
மிகுதியும் 135
முரஞ்சன் 73
முழுதென் 64
முனைவு 147
மெய்பெற 150
மொழிப்பொருட் 163
யாணு 138
வம்பு 65
வய 120
வயா 125
வறிது 77
வார்தல் 50
வாளொளி 121
வியலென் 117
விழுமஞ் 101
வீறப்பு 93
வெம்மை 74
வெளிப்படு சொல்லே 18
வையே 148

# சொல்—தொடர் அகராதி

(எண் பக்க எண்)


அகனமர்ந்து செய்யா
ளுறையும் 138
அதிர வருவ தோர் நோய் 49
அமரர்ப் பேணியும்
ஆகுதியருத்தியும் 80
அமிர்தன்ன 64
அரிமயிர்த் திரள் முன்கை 106
அரும்பிணையகற்றி வேட்ட
ஞாட்பினும் 80
அல மர லாயம் 40
அவலெறி யுலக்கைப்
பாடு விறந்தயல 95
அதிர வருவதோர் நோய் 49
ஆமா நல்லேறு சிலைப்ப 109
ஆரியர் துவன்றிய பேரிசை
யியமம் 73
ஆரியர் துவன்றிய பேரிசை
முள்ளூர் 75
ஆரியர் துவன்றிய பேரிசை
மூதூர் 73
இயங்கா வையத்து 46
இயைந் தொழுகும் 37
இரவரல் மாலையனே 43, 44
இரும்பிடி கன்றொடு 58
இலம்படு புலவரேற்ற
கைநிறைய 111
ஈயாது வீயும் உயிர்தவப்
பலவே 23
உசாத்துணை 125
உயவுப் புணர்ந்தன்றிவ்
வழுங்க லூரே 97
உருகெழு கடவுள் 25
உரு மில் சுற்றம் 119
உருவமென் றுரைத்தியாயின்
25
உருவக் குதிரை 24, 25
உவக்குநளாயினும்
ஊடினளாயினும் 32
உவந்துவந் தார்வ நெஞ்ச
மொடு ஆய்நல னளைஇய
33
உறந்த விஞ்சி 13
உறுகால் 9,22
உறுபுனல் தந்துலகூட்டி 23
எதிரதாக் காக்கும் 49
எம் வெங்காமம் 75
எய்யாமை யல்லைநீயும்
வருந்துதி 86
எற்றேற்ற மில்லாருள்
யானேற்ற மில்லாதேன் 78
ஏகல்ல டுக்கம் 30, 31
ஐதேகாமம் யானே 147
ஒலி பெருஞ் சும்மையொடு 97
ஒழுகு கொடி மருங்குல் 52
ஒற்க லொற்கஞ் சொலிய 112
கடிகா 142
கடிந்த கடிந்தொரார்
செய்தார்க்கு 143
கடிநாறும பூந்துணர் 154
கடி நுனைப் பகழி 143
கடிமரந்தடியும் ஓசை தன்னூர்
நெடுமதில் வரைப்பிற்
கடிமனை யியம்ப 109,144
கடிமலர் 143
கடிமிளகு தின்றகல்லா மந்தி145
கடியையா னெடுந்தகை
செருவத்தானே 143
கடுங்கா லொற்றலின் 143
கடுத்தன ளல்லளோ
வன்னை 145
கடுநட்பு 143
கடும்பகல் 142
கடுமான் 143
கதழ்பரி நெடுந்தேர் 47
கம்பலை மூதூர் 96
கமஞ்சூல் மாமழை 104
கருங்கட் டாக்கலை
பெரும்பிறிதுற் றெனை 90
கருவி வானம் 103
கயந்தலை மடப்பிடி 60
கயலற லெதிரக் கடும்புனற்
சாஅய் 69

கய வாய்ப் பெருங்கை
யானை 57
கயிறிடு கதச்சேப் போல
மதமிக்கு 134
கருவி வானம் 104
கவர் நடைப் புரவி 115,118
கவவுக் கடுங்குரையன் 107
கலி கொளாயம்மலிபு
தொகு பெடுத்த 97
கழி கண்ணோட்டம் 45
கழுமிய ஞாட்பு 99
கழூஉ விளங்காரம்கவைஇய
மார்பே 107
கறவை கன்றுவயிற்படர 84,
85
கறுத்த காயா 129
கார்கோள் முகந்த 105
கானலஞ் சேர்ப்பன் கொடுமை
யேற்றி குணன்முங்கக்
குற்றமுறை நின்று கூறும்
சிறியவர்கட்கு 98
குருமணித்தாலி 27
குரூஉத்துளி பொழிந்த 27
குழக்கன்று 41
குறிப்பேவல் செயல் 44
கெடவரலாய மொடு 56
சேழ்கிளர் அகலத்து 26
கோடு பல முரஞ்சிய 74
கைதொழூஉப் பழிச்சி 141
கொடுஞ்சுழிப் புகார்த்
தெய்வநோக்கிக் கடுஞ்சூள்
தருகுவன் நினக்கே 143
சாயல் மார்பு 65
சிலைப்பு வல்லேறு 62
சிவந்த கந்தள் 129
சிறுமையுறுப செய்பறியலரே
85
சினனே காமம் 46
சூன்முரஞ் செழிவி 76
செங்கேழ் மென் கொடி 27
செழுந்தடி தின்ற செந்நாய் 101
செழும்பல் குன்றம் 101
செய்திரங்கா வினை 110
சேர்ந்து செறிகுரங்கு 116
சேற்றுநிலை முனைஇய
செங்கட் காரான் 148
தடந்தோள் 57
தடமருப் பெருமை 42, 59
தருமணன் ஞெமிரிய
திருநகர் முற்றத்து 114
தவச்சேய் நாட்டாராயினும் 22
தவப்பல 151
தாவீனன் பொன்
தைஇய பாவை 91
துணையிற் றீர்ந்த
கடுங்கண் யானை 53, 54
துயவுற்றேம் யாமாக 123
துன்னருந் துப்பின்வயமான்122
துனிகூர் எவ்வ மொடு 45
துனை பரிதுரக்கும் 48
துனைபரி நிவக்கும்
புள்ளின் மான 47
துனை பறை நிவக்கும் 47
தெருமர லுள்ளமோ
டன்னை துஞ்சாள் 40
தெவ்வுப் புலம் 92
தெள்ளறல் தழிஇய 51
நங்கையைச் செற்ற 54
நயந்து நாம்விட்ட
நன்மொழி நம்பி 67
நளி மலை நாடன் 57
நளி யிருள் 61
நறுஞ்சாந்து புலர்ந்த
கேள்கிளர் அகலம் 27
நன்றுமரி துற்றனையாற்
பெரும 88
நனந்தலை யுலகம் 132
நனவுப் புகுவிறலியிற்
றோன்று நாடன் 132
நனி சேய்த்து 22
நிழத்த யானை
மேய்புலம் படர 69
நிற்கறுப்பதோர் அருங்கடி
முனையன் 127
நின்னுறு விழுமம்
களைந்தோன் 102
நீ சிவந்திறுத்த நீரழிபாக்கம்
127
நீர்த் தெவு நிரைத்
தொழுவர் 99 ,82
நுணங்கு துகில் நுடக்கம்
போல 130
நுழை நூற்கலிங்கம் 130
நெல்லுகுத்துப் பரவும்
கடவுளும் இலவே 140
நொச்சி மட மருங்குல் 130

நோய் செய்யும் நல்யாழ் 85
பண்ணைத் தோன்றிய
எண்ணான்கு பொருளும் 55
பணைத்து வீழ் பகழி 82
பதவுமேய்ந்த மதவுநடை
நல்லான் 134
பயக்குறை யில்லைதாம்
வாழுநாளே பயவாக்
களரனையர் கல்லாதவர்
35, 36
பருந்திருந்துயாவிளி பயிற்றும்
யாவுயர் நனந்தலை 123
பழங் கண்ணோட்டமு நலிய
வழுங்கின னல்லனோ 98
பழுது கழி வாழ்நாள் 65
பாய்ந்தாய்ந்த தானைப்
பரிந்தானா மைந்தினை 70
பாய்புனல் 114
புலம்பு விட்டிருந்தார் 71
புலிப்பற் கோத்த புலம்பு
மணித்தாலி 72, 75
புரைய மன்ற புரையோர்
கேண்மை 24, 25
புனிற்றாப் பாய்ந்தெனக்
கலங்கி 131
பெருவரை யடுக்கம்
பொற்ப 76
பெட்ப நகும் 81
பேணினனல்லனோ 80
பேரிசை நவிர மேவுறையுங்
காரிகை யுண்டி 68
பையுள் மாலை 85
போகுகொடி மருங்குல் 51
போரெறுழ்த்திணிதோள் 149
மண்முழு தாண்ட 165
மணங்கமழ் வியன்மார்
பணங்கிய செல்லல்
28, 29,15
மதவிடை 135
மயிற் சாயல் 64
மல்லல் மால்வரை 30
மழகளிறு 41
மன்ற மராஅத்த
பேமுதிர் கடவுள் 119
மாதர் கொள் 67
மாதர் நோக்கு 67
மாதர் வாண்முக மதைஇய
நோக்கே 133, 135
மால்வரை யொழுகிய
வாழை 51
மீனொடு பெயரும்
யாணரூர 137
மையில் வாண்முகம்
பசப் பூரும்மே 36
யாணது பசலை 138
யாழிசை புக்கும் 66
வந்துநனி வருந்தினை
வாழியென் நெஞ்சே 23
வம்பநாரை 66
வம்பு மாரி 66
வயங்கல்சால் கீர்த்தி 42, 43
வயவுறு மகளிர் 126
வரிவளை துவைப்ப 108
வரை புரையும் 42
வலி துஞ்சு தடக்கை
வாய்வாட் குட்டுவன் 57
வள்ளியோர்ப் படர்ந்து
புள்ளிற் போகி 84
வளன் வலியுறுக்கும் 37
வறிது வடக்கிறைஞ்சிய 77
வாண்முகம் 122
வார் கையிற் றொழுகை 50, 51
வார்ந்திலங்கு வையெயிற்று 51
விசும்புகந் தாடாது 33
வித்தொடு சென்ற வட்டி 137
விதிர்ப்புற வறியா வேமக்
காப்பினை 49
வியலுலகம் 117
வினைக்குறை தீர்ந்தாரிற்
றீர்ந்தன் றுலகு விழுமியோர்
காண்டொறும் செய்வர்
சிறப்பு 102
விறந்த காப்போ டுண்ணின்று
வலியுறுத்தும் வெங்காமம் 76
வெயில் புறந்தரூஉம் இன்னல்
இயக்கத்து 29
வெள்வேல் விடத்தேரோடு
காருடை போகி
வெறுத்த கேள்வி
விளங்கு புகழ்க் கபிலன் 94
வேய்மருள் பணைத் தோள் 82
வேற்றுமையில்லா விழித்
திணைப் பிறந்து 102
வேனிலுழந்த வறிதுயங்
கோய் களிறு 70
வை நுனைப் பகழி. 184

# பிழை திருத்தம்

| பக்கம் | வரிகள் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3—15 | தலைப்பு | உயிரியல் | உரியியல் |
| 7 | 6 | origen | origin |
| 7 | 8 | oe | of |
| 7 | 9 | morf | more |
| 33 | 23 | ஆய்நல னளைகி | ஆய்நல னளைஇ |
| 81 | 2 | சிறுபன்மை | சிறுபான்மை |
| 98 | நூற்பா | ளழுங்கல லிரக்கமுங் | ளழுங்க லிரக்கமுங் |
| 106 | 7 | அடுத்து | அடுத்த |
| 107 | அடிக்குறிப்பு | அகத்தீடுதல் | அகத்திடுதல் |
| 108 | 17 | துவப்ப | துவைப்ப |

# தொல்காப்பியம்
## உரைவளம்
# சொல்லதிகாரம்

# உரியியல்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

பதிப்பாசிரியர்:

ஆ. சிவலிங்கனார்